# பழந்தமிழர் கட்டடக் கலையும் நகரமைப்பும்

நா. பார்த்தசாரதி

தமிழ்ப்புத்தகாலயம்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# பழந்தமிழர் கட்டடக் கலையும் நகரமைப்பும்

நா. பார்த்தசாரதி

தமிழ்ப் புத்தகாலயம்

58, தெளிசிங்கப் பெருமாள் கோயில் தெரு
திருவல்லிக்கேணி : : விவேகானந்தர் இல்லம்
சென்னை-600 005

பழந்தமிழர் கட்டடக் கலையும் நகரமைப்பும்
முதற்பதிப்பு: டிசம்பர், 1992
விலை ரூ. 30-00

PAZANTHTAMILAR KATTADAK
KALAIYUM NAGARAMAIPPUM
Research in Tamil on Ancient Tamils'
Architecture and City Planning
First Edition : December'92
240 Pages
10 pt Letters
10.5 Kg. White Printing
Box board binding
TAMIL PUTHAKALAYAM
58, Telesingap Perumal Koil Steet
Triplicane : : VIVEKANANDAR ILLAM
Madras-600 005
Price : Rs. 30-00

அச்சிட்டோர் :
கடலோசை அச்சகம், சென்னை-24

# இந்தப் புத்தகம்

நாவலாசிரியர் அமரர் நா. பார்த்தசாரதி அவர்கள் பல கோணங்களில் பரிணமித்தவர். மிகச்சிறந்த நாவலாசிரியராகவும், சிறுகதை ஆசிரியராகவும் திகழ்ந்து பற்பல படைப்புக் களைத் தந்த தீபம் நா. பா. வித்வானாக ''சொல்லின்செல்வம்'' தமிழாசிரியராக ''தமிழ் இலக்கியக்கதைகள்'' கவிஞராக ''பூமியின் புன்னகை'' பயண நூலாசிரியராக ''புது உலகம் கண்டேன்'' நாடகாசிரியராக ''புத்த ஞாயிறு'' என்று பல முகங்கள் காட்டியவர்.

இப்படிப் பல்துறை விஷயங்களைப் பல வடிவங்களில் தந்தவர், ஆய்விலும் ஈடுபட்டுத் தம் ஆய்வுப் பணியின் பலன் கிட்டுமுன்பே இம்மண்ணுலகை விட்டு மறைந்தார்.

அவரது இறுதி முயற்சியின் வெளிப் பாடாக இந்நூல் வெளிவருகிறது.

விடாமுயற்சியின் முழு உருவமாகச் செயல்பட்ட நா. பா. வின் நினைவாக அவரது இந்நூலைக் கண்ணீருடன் காணிக்கையாக்குகிறேன் நா. பா. வின் நினைவுகளுக்கு.

**அகிலன் கண்ணன்**
தமிழ்ப் புத்தகாலயம்

# கட்டடத் தொழிலும் கலையும்

## தோற்றுவாய்

"கட்டடக் கலை கலைகளுக்கு எல்லாம் தாய்போன்றது என்பது இன்றும் உண்மையாகவே விளங்குகிறது. இது இடத்தையும் வடிவையும் இணைத்துப் பண்பாட்டின் தெளிவான புற வெளியீடாக அமைகிறது. இக் கலை சமூகத்தின் ஈடுபாட்டோடு கூடிய அக்கறையின்றி வளரவோ உயர்வு பெறவோ இயலாது என்று அறிஞர் கண்விண்டே கூறும் கூற்றை அமெரிக்கக் கட்டடக் கலை நிபுணர்களான ஜான் புச்சர்ட்டும் ஆல்பர்ட் புஷ்பிரவுனும் கூட உறுதிப்படுத்துகிறார்கள்.[1]

"கட்டடக் கலை ஒரு சமூகக் கலையாகும். எந்தக் கலையாயினும் சமூக நோக்கம் கொண்டுதான் இருக்க வேண்டும் என வாதிடப்பட்டாலும் கட்டடக் கலையைப் பொறுத்து அது தெளிவாகவே உள்ளது. கட்டடக் கலை, அக் கலைஞனுக்கு, வரையறைகளைக் கொடுக்கிறது. அத்தகைய வரையறைகளைச் சிற்பியோ ஓவியனோ கூடப் பெறுவதில்லை.[2]

புற அமைப்பு (Exterior) அக அமைப்பு (Interior) எனக் கட்டடக் கலைக்கு இரு பிரிவுகளும் உள்ளன. எல்லாக் கட்டடங்களுக்கும் இவை பொருந்தும். இரண்டு பிரிவி

லுமே அழகு செய்ய வழிகள் இருந்தன. மூன்று கூறு பாடுகள் தவிர்க்க இயலாதவை என்பதையும் மேலே கூறிய அமெரிக்கக் கட்டடக் கலை நிபுணர்களே குறிப்பிடுகின்றனர்.

“கட்டடக் கலைக்கு மூன்று கூறுபாடுகள் தேவைப்படுகின்றன. ஒரு கட்டடம் எதற்காகக் கட்டப்படுகிறதோ அதற்கான சமூகத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். பயன்படு பொருள்கள் கட்டமைப்பு ஆகியன உறுதியாகவும் பொருத்தமாகவும் நீடித்து நிற்பவையாயும் இருக்க வேண்டும். அதன்பின் கலையாகவும் இருக்கவேண்டும்”.[3]

இக் கருத்துக்களை அடிப்படையாக வைத்துக் காண்கையில் பழந்தமிழர் கட்டடக் கலையின் சீரும், சிறப்பும், பொருத்தமும் நன்குவிளங்குகின்றன. பழந்தமிழர் கட்டடங்கள் அவற்றுக்கான சமூகத் தேவைகளை நிறைவு செய்தன. உறுதியாகவும், நீடித்து நிற்பவையாகவும், பொருத்தமாகவும் இருந்தன. எல்லாவற்றிற்கும் மேலே அவை கலையாகவும் இருந்தன என்பதை மறப்பதற்கில்லை.

கிரேக்க, உரோமானியக் கட்டடக் கலைகளின் கூட்டு வளர்ச்சியின் விளைவாகவே அதன் பின் மேற்கு ஐரோப்பாவில் ‘கோதிக்’ கட்டடக் கலை உருவாயிற்று. பழைய கட்டடக் கலையில் (Classical Architecture) இது இன்றியமையாதது.

அதே போல் பழந்தமிழர் கட்டடக் கலைகளின் தொடக்க விளைவான கோயில், கோட்டை, கொத்தள அமைப்புக்களே பின்னாளில் மாபெரும் கோயில்களுக்கான அழகியற் கட்டடக் கலையை உருவாக்கிற்று என்று கூறுதல் பொருந்தும். பாதுகாப்புக்கான கோட்டை, கொத்தளம், மதில், அகழி ஆகியவற்றைக் கட்டி அமைப்

பதில் தமிழர்கள் தந்நிகரற்று விளங்கியுள்ளனர். பாதுகாப்புத் தொடர்பான கட்டடக் கலைச் சொற்களையே ஓர் அகராதியாகத் தொகுத்துப் பார்க்கமுடியும். அவ்வளவிற்கு அவை செம்மையாகவும், சிறப்பாகவும் கட்டப்பட்டுள்ளன. பொறியியல் நுணுக்கங்களோடு உருவாக்கப்பட்டுள்ளன.

கட்டடக் கலையைப் பழந்தமிழர் இலக்கியங்களுடன் சார்த்தி ஆராயும்போது மூவகைப் பிரிவுகள் தெரிகின்றன. தனியார் வீட்டுக் கட்டடக் கலை (Domestic Architecture) கோயில் அல்லது அரண்மனைக் கட்டடக்கலை (Temples and Royal Buildings) பாதுகாப்புக் கட்டடக் கலை (Defence Architecture or Military Engineering) என்பனவே அவை. தனியார் கட்டடக் கலை பற்றி அறிய முடிந்ததைவிட இரண்டாவது வகையான கோயில்கள், அரண்மனைகள் பற்றியே அறியச் சான்றுகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. கோயில் என்ற சொல்லே அரசனிருக்கை, இறைவனிருக்கை, இரண்டிற்கும் பொதுவாக வழங்கி வந்திருக்கிறது. பாதுகாப்புக்குரிய இடம் என்ற பொருளும் கிடைக்க ஏற்ற 'அரண்' என்ற முதற்சொல்லுடனேயே அரசன் அல்லது ஆட்சியாளரின் உறைவிடம் குறிப்பிடப்படுகிறது. எனினும், கோட்டை, கொத்தளங்கள், பல்வேறு மதில்கள், அவற்றில் அமைக்கப்பட்ட படை நுணுக்கங்கள் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டே மூன்றாவது கட்டடக் கலைப் பிரிவாகப் பாதுகாப்புக் கட்டடக் கலை என ஒரு பிரிவு மேற்கொள்ளப் பட்டது. படையாளர் பொறியியல் என்ற ஒரு பிரிவே பின்னாளில் ஏற்பட்டிருப்பதைக் கருத்திற் கொண்டு பார்த்தால் பாதுகாப்புக் கட்டடக் கலையின் இன்றியமையாமையை ஓரளவு விளங்கிக் கொள்ள முடியும். கட்டடங்கள் கட்டப்படுவதையும், மனை அமைப்பதையும் பற்றிய விவரங்கள் சங்க நூலாகிய பத்துப்பாட்டில் நெடுநல்வாடை தொடங்கிப் பின்னாளில் மனையடி சாத்திரம் வரை விரிவான செய்திகளைக் காணமுடிகிறது.

தனியார் வீட்டுக் கட்டடக் கலை (Domestic Architecture) பற்றிய பல்வேறு செய்திகள் மனையடி சாத்திரத்தில் கூறப்பட்டுள்ளன இன்றும் தமிழ் மக்களிடையேமனையடி சாத்திரம் நம்பிக்கைக்குரிய ஒரு நூலாக விளங்கி வருகிறது. வீட்டுக்குரிய மனையைத் தேர்ந்தெடுப்பது முதல் கட்டுவது வரை மனையடி நூலின் இலக்கணங் களை மீறாமல் பார்த்துக் கொள்ளும் பண்பைக் காண் கிறோம். இவற்றில் சில வரையறைகளாகவே ஏற்பட் டவை. வேறு சில நீடித்த நம்பிக்கைகளாகவும் நன் னிமித்தங்களாகவும் கருதப்பட்டுப் பின்புமக்களால் ஏற்கப் பட்டவை. இரண்டையும் தனித்தனியே பிரித்துப் பாகு படுத்திப் பார்ப்பது கூட இயலாத அளவு இரண்டறக் கலந்து விட்டவை என்பதைக் கற்கும் போதே விளங்கிக் கொள்ள முடியும்.

பழம் பெரும் தமிழர் நகரங்கள் பல. அவற்றுள்ளும் பூம்புகார், மதுரை ஆகிய நகரங்களின் அமைப்பைப் பற்றிச் செய்திகள் கிடைக்கிற அளவு வஞ்சிமாநகரத்தைப் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. பல்லவர் கோநக ராக இருந்த காஞ்சி நகரின் அமைப்பைப் பற்றித் தெரி யும் விவரங்கள் கூட அதனினும் முந்திய வரலாற்றுச் சிறப்பை உடைய 'வஞ்சி மாநகர்' பற்றித் தெரியவில்லை. 'வஞ்சிமாநகர்' எது என்பது பற்றியே ஆராய்ச்சியாளர்கள் நடுவே கருத்து வேறுபாடு நிலவுகிறது.

சேர நாட்டிலேயே உள்ள கடற்கரை நகரமாகிய திருவஞ்சைக்களமா அல்லது கருவூர் ஆனிலை எனப்படும் கருவூரா என்பது பற்றி நீண்ட நாள் ஆராய்ச்சி வேறு பாடுகள் இருப்பதால் நகரமைப்பைப் பற்றி மட்டுமே இவ் வாய்வில் கருத்துச் செலுத்தப்படுகிறது. எந்த நகர் என்ற வினாவிற்குச் சிலம்பு முதலிய நூல்களில் கூறிய வஞ்சி என்று கொண்டு இவ்வாய்வு மேற்செல்லும். அரசனுடைய அரண்மனையைச் சுற்றியே கோட்டையும் மதிலும் அகழி

யும் பெரும்பாலும் அமைக்கப்பட்டன என்பதை அறிய முடிகிறது. பாதுகாப்புக் கருதி அரசனின் உறைவிடம் அகநகர் என்றும் உட்கோட்டைப் பகுதி என்றும் குறிப் பிடப்பட்டது. மதில்களின் கீழே ஆழமான அகழிகளும் வெட்டப்பட்டு நீர் நிரப்பப் பட்டிருந்தன. அவற்றில் முதலைகள் வளர்க்கப்பட்டு வந்தன. அரண்மனையை மையமாக வைத்துக் கோநகரைப் பார்க்கும்போது கட்டடக்கலை நகரமைப்புடன் தொடர்புடையதாகத் தோன்றுகிறது. அகநகர் புறநகர் என்ற ஏற்பாட்டின்படி கட்டடக்கலை வளர்ந்திருக்கிறது என்ற குறிப்பு இங்கே இன்றியமையாததாகும்.

பூம்புகார், மதுரை போன்ற திட்டமிடப்பட்ட நகரங் களில் (Planned Cities—Walled Cities) இந்த ஏற்பாடு இருந்ததை நூற்சான்றுகளால் நன்கு அறிய முடிகிறது. தமிழர் புறப்பொருள் இலக்கணம், திணைகள், துறைகள் ஆகியவற்றிலேயே பாதுகாப்புக் கட்டடக் கலைக்கு முதன்மை தந்திருப்பதற்கான குறிப்புக்கள் நிறையக் காணக் கிடைக்கின்றன. சில திணை, துறைகளே அவ்வாறு அமைந்துள்ளன.

கட்டடக்கலை பற்றிய விவரங்கள், சொற்றொடர்கள் தமிழ் நூல்களில் ஆங்காங்கே பயின்று வருகின்றன. பழ மொழியில் கூடக் கட்டடம் கட்டுவதன் சிறப்பு 'வீட்டைக் கட்டிப் பார்—திருமணத்தைச் செய்து பார்' என வழங்கு கிறது.

கட்டடத்திற்கு இன்று பெரிதும் பயன்படும் பல நவீனப் பண்டங்கள் அன்று இல்லை எனினும் பழந்தமிழர் இவற்றுக்கு இணையான பல பண்டங்களைக் கண்டு பிடித்திருந்தனர். தமிழர் கட்டடங்களுக்குப் பயன் படுத் தியவை எனப் பின்வருவனவற்றை அறிஞர் மு.இராகவ ஐயங்கார் குறிப்பிடுகிறார்.

கல்லு முலோகமும் செங்கலு மரமும்
மண்ணுஞ் சுதையும் தந்தமும் வண்ணமும்

கண்ட சர்க்கரையு மெழுகு மென்றிவை
பத்தே சிற்பத் தொழிற் குறுப்பாவன[4]

சுடுமண், மச்சு, மாடம், முற்றம், முன்றில், காலதர், சாளரம் போன்ற கட்டடக் கலைச் சொற்கள் இலக்கியங்களில் நிரம்பப் பயின்று வருகின்றன. பன்னூறு ஆண்டுகளாகச் சிற்ப சாத்திரம் எனப்படும் மனையடி சாத்திரத்தில் கட்டடம் கட்டுவது பற்றிய மரபுகள் சொல்லப்படுகின்றன.

அந்த மரபுகள் வெறும் நூல் வழக்காக மட்டுமே கடைப்பிடிக்கப்படுவதில்லை. அவற்றின்படிதான் கட்டடம் கட்டப்படவேண்டும் என்பதில் மக்களுக்கு நம்பிக்கை மிகுந்து காணப்படுகிறது. கட்டடத்திற்கான மனையைத் தேர்ந்தெடுப்பதிலிருந்து ஒவ்வொரு நுணுக்கமான செய்தியையும் மனையடி சாத்திரம் கூறிவிடுகிறது. ஒரு கலையில் இத்தகைய நம்பிக்கைகள் அழுத்தமாகப் பதிய வேண்டுமாயின் அதன் பழமையும் பெருமையும் உறுதி செய்யப்படுகின்றன. கட்டடக் கலையின் தேவ தச்சனாக விசுவ கர்மாவும், அசுரர் மானிடர்க்கான தச்சனாக மயனும்[5] குறிக்கப்படுகிறார்கள். வடமொழியில் கட்டடக் கலை ஒரு மதமாகவும் சாத்திரமாகவும்போற்றப்படுகிறது. அது 'வாஸ்து சாஸ்திரம்' என்ற பெயரில் வழங்கப்படுகிறது. 'வாஸ்து' என்ற பெயர் கட்டடக் கலையின் வழிபடு தெய்வத்தைக் குறிப்பதாகக் கருதுகின்றனர். 'அதிதேவதை' என்ற பெயரே இங்கு அக்கலையின் வழிபடு தெய்வமெனத் தமிழாக்கம் செய்யப்பட்டுத் தரப்படுகிறது. தமிழ் முறை சார்ந்த மனையடி நூலிலும் இக்கருத்துக் கூறப்படுகிறது. அறுபத்து நான்கு கலைகளுள் இருவகைக் கலைப் பெயர்கள் கட்டடம் சார்புடையனவாய் வருகின்றன. நகரமைப்பைப் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரம் ஒன்றிலேயே மிகுதியாக உள்ளது. ஏனைய நூல்களில் ஆங்காங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. சோழர்

தலைநகராகிய பூம்புகாரில் தொடங்கிப் பாண்டியர் கோநகராகிய மதுரையில் திருப்பம் பெற்றுச் சேரர் கோநகராகிய வஞ்சியில் முடிவு பெறுவதனால் சிலம்பி லேயே மூன்று நகரங்கள் பற்றிய செய்திகளும் கிடைக் கின்றன.

ஆனால், காவிரிப்பூம்பட்டினம் பற்றியும், கூடல் மாநகர் என்று சிறப்பித்துக் கூறப்படும் மதுரை நகரம் பற்றியுமே சிலம்பில் மிகுதியான தகவல்களை அறிய முடிகிறது. வஞ்சி பற்றிக் குறைவாகவே அறிய முடிகிறது.

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றாகிய பரிபாடலில் மதுரை நகரமைப்புக்கு வரைபடம் (Blue Print) போலவே ஒரு பாட்டு வருகிறது. அப் பாட்டு மதுரை நகரமைப்பைத் தாமரைப் பூவுடன் ஒப்பிட்டு அழகுற விளக்கி விவரிக் கிறது.

தண்டியலங்காரத்துள் வரும் தனிமேற்கோள் செய்யுள் காஞ்சி நகரின் அமைப்புத் தோகை விரித்தாடும் மயில் போல் அழகியது[6] எனக் கூறுகிறது. பல நூல்களும் காப்பியங்களும் பொதுவிற் கூறும் சிறப்பான முறை ஒன்றும் காணப்படுகிறது. தத்தம் கோநகரங்களை வருணிக்குங்கால் அது நிலமகள் நெற்றியில் திலகம்போல் அமைந்துள்ளதாய்க் கூறுகிற வழக்கை நிறையக் காண முடிகிறது. சில நகரங்களின் அமைப்பு, தோற்றம், வரலாறு ஆகியவற்றுடன் புராணக் கதைகள் தொடர்பு பட்டு வருகின்றன. ஆராய்ச்சிக்கு அவற்றிலிருந்து பயன் தரும் சில குறிப்புக்கள் கிடைக்கக் கூடும்.

மாபெரும் பூம்புகார் தவிர உறையூரும் சோழர் கோநகரமாயிருந்துள்ளது எனினும் உறையூரின் சார்பு - சுற்றுச்சூழல் பற்றி அறிய முடிந்த அளவு நகரின் அமைப்புப் பற்றிய உள் விவரங்களை நிரம்ப அறியச் சான்றுகள் குறைவாகவே உள்ளன.

மதுரை தவிரப் பட்டத்துக்கு வருமுன் பாண்டிய இளவரசர்கள் வசித்த நகரம் கொற்கை எனக் கூறப்பட்டாலும் - அழிந்து பட்ட கடற்கரை நகரம் - முத்துக் குளித்தலில் புகழ் பெற்றிருந்தது என்பன போன்ற சில குறிப்புக்களைத் தவிரக் கொற்கை நகரமைப்புப் பற்றியும் அதிகமாக அறிய முடியவில்லை.

இலக்கியப் புகழ் பெற்ற திருவாரூர், தில்லை, திருவரங்கம் முதலிய நகரங்களைப் பற்றியும் நகரமைப்பு என்ற முறையில் குறைவான ஆராய்ச்சிக் குறிப்புக்களே கிடைக்கின்றன.

இக் காரணங்களால் புகார், கூடல் இரு நகரங்களை முழுமையாக ஆராய்ந்தால் கிடைக்கும் செய்திகளைக் கொண்டே நகரமைப்புத் திறனில் தமிழர் பெற்றிருந்த சிறப்பை முழுமையாக விளக்கிவிட இயலும். பழந்தமிழ் நகரங்கள் எல்லா நலன்களும் வளங்களும் நிறைந்தவையாயிருந்தன என்பதற்கு அதன் பரியாயமான சொல் ஒன்றே விளக்கமாயமையும். 'வசதி' என்றொரு சொல் இன்றும் நல நிறைவுகளைத் தொகுத்துரைக்கும் தனியொரு பதமாக வழங்கி வருவது கண்கூடு. வசதி என்ற சொல்லுக்கே-நல்லிடம், ஊர், வீடு என்று பொருள்கள் உள்ளமை சூடாமணி நிகண்டில் காணலாம்.[7]

''வசதி நல்லிடமூர் வீடாம் வரனயன் பரமன் காந்தன்''

என்னும் விளக்கம் கூறுகிறது. இச்சொற் பொருளிலிருந்து பழந்தமிழர் ஊரமைப்பும், கட்டடக் கலையும் எத்துணை நலமாகவும், சீராகவும் இருந்தன என்பதை உணர முடிகிறது. நகரும், வீடும் 'வசதி'யாயிருந்ததனையே உணர முடிகிறது.

என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா என்னும் கலைக் களஞ்சிய நூலில் கட்டடக் கலை என்ற பகுதியில்

கட்டடங்களின் பயன் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகிறது.[8]

1. வீடுகள் (Domestic)
2. சமயச்சார்பான கட்டடங்கள் (Religiosu)
3. அரசாங்கக் கட்டடங்கள் (Governmental)
4. கேளிக்கைக் கட்டடங்கள் (Recreational)
5. நலவுரிமைக்கும் கல்விக்குமான கட்டடங்கள் (Welfare)
6. வர்த்தகக் கட்டடங்கள் (Educational)
7. தொழிலகக் கட்டடங்கள் (Industrial)

கட்டடத்திற்குத் திட்டமிடுதல் பற்றிக் கூறும்போது,

1. சூழ்நிலை கருதித் திட்டமிடல் 2. பயன்பாடு கருதித் திட்டமிடல் 3. பொருளாதாரத் திட்டமிடல் என மூவகையாகப் பகுக்கப்படுகிறது.

கற்கட்டடம், மரக்கட்டடம், இரும்புக்கட்டடம், உருக்குக் கட்டடம், சிமெண்டுக் கலவைக் கட்டடம் எனக் கட்டட வகைகள் பகுத்துரைக்கப்படுகின்றன. இங்கே நம் நாட்டுக் கட்டடக்கலையில் 'சிமெண்டு' வருவதற்கு முந்திய காலத்துக்கு ஏற்பக் காரை, சுதை, (திவாகரம்) சுண்ணாம்பு என நாம் சேர்த்துக் கொள்ளவேண்டும். பின்னாளில் சுண்ணாம்பின் இடத்தைச் 'சிமெண்டு' பிடித்துக் கொண்டது. கட்டடக் கலையின் தத்துவம் பற்றியும் 'என்ஸைக்ளோபீடியா பிரிட்டானிகா என்னும் கலைக் களஞ்சிய நூல் பின்வருமாறு கூறுகிறது.[9]

"கட்டடக் கலைக் கோட்பாடு உண்மையில் 'ரேஷியோ சினேஷியோ" என்னும் இலத்தீன் மொழித் தொடரின் ஏற்கப்பட்ட இணக்கமான மொழிபெயர்ப்பாக விர்ட் ருவியஸ் என்னும் புகழ் பெற்ற உரோமானியக் கட்டடக் கலை நிபுணரால் கி.பி.முதல் நூற்றாண்டிலேயே

ஏற்கப்பட்டிருந்தது". கட்டடத் தொழிலுக்கும், கட்டடக் கலைக்கும் வேறுபாடு கூறுகிற பிறரும் நுணுகிய கலைத் தரத்துக்கு உயரமுடிந்த கட்டடமே கட்டடக்கலையாகிறது என்றே கூறுவர். தொழிலில் பணி நிறைவு மட்டுமே உண்டு. கலையில் நுண்ணிய அழகும், வேலைபாடுகளும் கூட உண்டு. தமிழர் கட்டடக் கலையிலும் இந்தக் கலையியல் கூறுபாடு நன்கு கவனித்து மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஐரோப்பாவில் 'ரேஷியோ, சினேஷியோ' என்னும் இலத்தீன் மொழித் தொடர் போல இந்தியக் கட்டடக் கலை, நாகரிகம் தேவதச்சனாகிய விசுவன்மா, பிறர்க்குத் தச்சனாகிய மயன் இருவரும் ஏற்படுத்தியதத்துவங்களால் நிறைந்துள்ளது. இந்திய மன்னர்களில் ஒருவனாயிருந்த நளன் கட்டடக்கலை வல்லுநனாகவும் விளங்கியுள்ளான்.[10] அழகுக்கு அழகு செய்து முடிந்த பயன் தேடுவதே கட்டடக் கலை. அழகைத் தேடுகையில் பல அழகற்ற பிரச்சினைகள் சரியாகத் தீர்ந்துகூடப் போகலாம் என்கிறார் ரோகர் ஸ்க்ருடன். கட்டடக் கலையின் அழகியல் பற்றிய தமது நூலில் அவர் இக்கருத்தைக் கூறியுள்ளார்.[11]

இப்படிப் படிப்படியாய் அழகைத் தேடி வளர்ந்த பழமரபும் வரலாறுமுள்ள கட்டடக்கலை தோன்றிமேலெழுந்த விதங்களை இனி ஒருவாறு காணலாம்.

□

குறிப்புகள்:

1. John Buchard and Albert Bush Brown, Excerpt from the Architecture of America, pp. 1-4.
2. "Architecture is a Social Art. It may be argued must serve some social purpose but the demands upon architecture are clear. They impose limita-

-tions on the architect which are not inevitably imposed on the painter or sculptor".

3. Architecture then requires three things A building must serve social needs far which it is built.The materials and the structure must be firm and suitably durable. And then there is art. Excerpt from the American Architecture pp. 5 : 18-22

4. மு. இராகவய்யங்கார் (திவாகரம்), ஆராய்ச்சித் தொகுதி, ப. 146.

5. Prof. Sukla, Vaasthu Sastra, Part I, p. 2.

6. தண்டியலங்காரம் 37ம் நூற்பா மேற்கோள் பாட்டு.

7. சூடாமணி நிகண்டு 'ச'கர எதுகை 13வது பாடல் 4-ம் வரி.

8. Encyclopaedia Britannica pp. 1088-1115.

9. "The term theory of Architecture was originally simply the accepted translation of the Latin term 'Ratio Cinatio' as used by Virtruvious, a Roman Architectural Engineer or the first century A.D.

—Theory of Architecture, Encyclopaedia Britannica, p. 1088.

10. கம்பராமாயணம் 6811.

11. Beauty is a consequential thing, a product of solving problems correctly.

—Roger Scruton, The Aesthetics of Archi-tecture, Part I, p. 25.

# முன்னுரை

வரலாற்றுத் தொன்மையும், பெருமையும், நாகரீகச் சிறப்பும் உள்ள ஓர் இனம் பல துறைகளிலும், பல கலைகளிலும் முன்னோடியாயிருந்து தகுதிகள் பெற்றிருத்தல் வேண்டும் என்பதை உய்த்துணரவும் ஆராயவும் முடியும்.

கிரேக்க உரோமானிய இனங்களைப் போல் தமிழினமும் அப்படித் தகுதிகள்பெற்றிருந்ததாகும். முன்னோடியாயிருந்த பல பழங்கலைகளில் தமிழினமும் முதன்மையான தகுதிகள் பெற்றிருந்தது.

இவற்றுள் கட்டடக் கலை மற்றெல்லாக் கலைகளுக்கும் தாய் போன்றதாயிருந்தது என்பார் பேரறிஞர் ஏ. பி. கண்வின்டே.[1] நகரமைப்புக் கலைக்கும் அது பொருந்தும்.

"கட்டடக் கலையை எல்லாக் கலைகளுக்கும் தாய் என்று அழைப்பார்கள். இன்றும் இது உண்மையே. வடிவத்திலும் அமைப்பிலும் உருவாக்கப்பட்ட பண்பாட்டின் துல்லியமான உருவகம் அது. சமுதாயத்தின் தீவிரமான ஈடுபாடு இல்லாவிட்டால் இந்தக் கலை வளர்ச்சியுறவோ நிறைவடையவோ இயலாது".

தமிழ்ச் சமூகமும் இத்தகைய தீவிர ஈடுபாட்டுடன் விளங்கியுள்ளது. பழந்தமிழர் இத்தகைய அக்கறையை

யும் ஆர்வத்தையும் கட்டடக் கலையிலும் நகரமைப்பிலும் செலுத்தியுள்ளனர்.

இக்கலைகள் இரண்டிற்குமே தமிழ் இனம் எடுத்துக் காட்டான நிலைகளைக் கொண்டிருந்தது. இக் கலைகளின் வளர்ச்சிக்கும் திறனுக்கும் தமிழகமும் தமிழினமும் நிலைக்களனாக விளங்கியதை வழக்கிலிருந்தும், இலக்கியங்களிலிருந்தும் ஆய்ந்து நிறுவுவதே இங்கு நோக்கமாகிறது.

கலைகள், பண்பாடு, சமயம், இலக்கியம் ஆகிய துறைகளில் தமிழினம் இணையற்ற பெருமைகளைப் பெற்றிருந்தது. எடுத்துக்காட்டாக விளங்கவல்ல சிறப்புக்களைப் பெற்றுள்ள இனங்களில் தமிழினம் முதன்மையானது என்பது ஐயத்துக்கு இடமின்றிப் பலராலும் பலமுறை நிறுவப்பட்ட உண்மையாகும்.

இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட கட்டடக்கலை, நகரமைப்பு ஆகிய இரு பிரிவுகளும் ஒன்றோடொன்று தொடர்புடையன. ஒன்றிலிருந்து மற்றொன்று விரிந்து பரந்து கிளைப்பது. கட்டடக்கலை தனி ஒரு பகுதித் திறனுக்கு (Departmental excellence) உரியது என்றால் நகரமைப்பு முழுமையான திறனுக்கு (Total excellence) உரியதுஆகும்.

கட்டடங்கள், தெருக்கள் முதலியன சீராக அமைந்தால்தான் நகரமைப்பு அழகாயிருக்கும். ஆக இவை ஒன்றோடொன்று தொடர்புடையவை மட்டுமில்லாமல் ஒன்றிலிருந்து ஒன்றானவை—ஒன்றை ஒன்று இன்றியமையாதவை என்றும் அறிய முடிகிறது.

கட்டடக் கலை, நகரமைப்பு (Architecture and Urban planning) ஆகிய துறைகளிலும் தமிழர் சிறப்புற விளங்கியுள்ளனர் என்பதை நூற்சான்றுகள் கொண்டு ஆராயவும், நிறுவவும் நிரம்பிய வாய்ப்புகள் உள்ளன. அவ்வாய்ப்பை இந்த ஆய்வு பயன்படுத்திக் கொள்கிறது.

கட்டடம் தொழிலா? கலையா? கட்டடத் தொழில் (Construction work) என்ற தொடருக்கும் கட்டடக் கலை (Architecture) என்ற தொடருக்குமே நிரம்ப வேறுபாடுகள் உண்டு. கட்டப்படுவன அனைத்துமே கட்டடம்தான். ஆனால் நுண்ணிய கலைத் திறத்தினாலும், கலைத் தரத்தினாலும் உயர்ந்த அத்தகு கட்டட வேலைப்பாடே கட்டடக் கலையாகும்.[2]

கிரேக்கர்கள், உரோமானியர்கள் தத்தம் கட்டடக் கலை, நகரமைப்புத் திறன்களால் வரலாற்றில் புகழ் மிக்க இடம் பெற்றுள்ளனர். அதே அளவு மேன்மையும் திறனும் இக்கலைகளில் தமிழரிடமும் இருந்தன. தமிழரின் பழம் பெரும் நூல்களிலும் காப்பியங்கள், பிரபந்தங்கள், புராணங்களிலும் இதற்கான சான்றுகள் பல காணக் கிடைக்கின்றன. அவற்றை இவ்வாய்வு தொகுத்தும் வகுத்தும் முடிவு காண்கிறது.

தனியார் வீடுகள் (Domestic building) குடியிருப்புகள், கோவில்கள் அரசர்தம் அரண்மனைகள், கோட்டைகள், கொத்தளங்கள், பொது மன்றங்களான (Public building) அரங்கு, அவை ஆகியவை பற்றியும் தெருக்கள், வீதிகள், நகர் ஒழுங்கு ஆகியவை பற்றியும் ஆய்வு செய்யும்போது பல உண்மைகள் தெளிவு பெறுகின்றன.

தலைப்பு முறைப்படி முதலில் கட்டடக் கலையையும் பின்னர் நகரமைப்பையும் நிரல்பட அமைத்துக் கொள்கிறது இந்த ஆய்வு.

"கட்டடக் கலை என்பது வெறும் புறத் தோற்ற உரு அழகு மட்டுமில்லை. அதன்மூலம் தூண்டப்படும் மக்களின் மனநிலை, உணர்வுகள், குணநலன், விழிப்புணர்ச்சி ஆகியவற்றையே அறிய முடியும்"[3] என்கிறார் அஜய பாரத்வாஜ் என்கிற பேராசிரியர்.

பேராசிரியர் பாரத்வாஜ் அவர்களின் இம்முடிபு தமிழர் கட்டடக் கலைக்கும், நகரமைப்புக்கும் மிகமிகப் பொருந்தி வரக் கூடியதாகும்.

கட்டடக் கலை மூலமும் நகரமைப்புத் திறன் மூலமும் பழந்தமிழர் பண்பாடு, மன வளர்ச்சி, உணர்வுகள், விழிப்பு நிலை, குண நலன்கள் எல்லாவற்றையும் சீர்தூக்கி ஆராய முடிகிறது.

கடல் கொள்ளப்படுவதற்கு முந்திய பூம்புகார் நகரம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலண்டன் பெருநகர அமைப்பை ஒத்ததாக விளங்கியது என்கிறார் வரலாற்றுப் பேரறிஞர் சதாசிவ பண்டாரத்தார்.[4] பூம்புகார் அன்றியும் உறையூரும் சோழர் பெருநகராயிருந்தது.

இவ்வாறே பாண்டியர் கோநகராகிய மதுரை, சேரர் கோநகராயிருந்த வஞ்சி, பல்லவர் பெருநகராயிருந்த காஞ்சி முதலியன பற்றியும்போதிய சான்றுகள் நூல்களிற் காணக் கிடைக்கின்றன

கட்டடக் கலை, நகரமைப்புக் கலை இரண்டின் வளர்ச்சிக்கும் ஆறு கூறுபாடுகளைக் காரணங்களாவும் அடிப்படைகளாகவும் அறிஞர் கூறுகின்றனர். அவை பின்வருமாறு :

1. தேசிய வரலாற்றுப் பின்னணியும் அதன் நிகழ் கால விளைவுகளும் (Nation's historical background and its impact on the preseni)

2. தேசிய குணப் போக்கும், உணர்வுகளும் மக்கள் விழிப்பு உணர்வும் (National character, temperament and awakening of the people)

3. சமுதாயப் பொருளாதார அரசியல் நிலைகள் (Socio economic and political conditions)

4. நிலவியல் சார்ந்த உள்ளூர்க் கூறுபாடுகள் (Geographic and local factors)

5. அறிவியல்—தொழில் நுணுக்க விளைவுகள் (Scientific and technological impact)

6. தட்ப வெப்பக் கூறுபாடுகள் (Climatological factors)

தமிழில் மரபுவழியே எண்ணப்படும் அறுபத்து நான்கு கலைகளில், சிற்ப சாஸ்திரம், வாஸ்து வித்தை ஆகிய இரண்டும் கட்டடக் கலை தொடர்பானவை. நகரமைப்புக் கலையும், உள்முக அணி செயல்வகையும் (Interior decoration) தமிழர் வாழ்வில் தொன்று தொட்டுப் பழகியவை என்பதை மிகப் பொதுவான மேற்கோள் ஆட்சியிலிருந்து கூடக் காணலாம். ஒரு நூலுக்குப் பாயிரம் இன்றியமையாதது என்பதை விளக்குங்காலையில் 'மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்...போல்' என்று நன்னூலின் தொடக்கப்பகுதி அமைந்துள்ளது.[5]

பெரு நகரங்கள் என்ற பிரிவில் காவிரிப்பூம்பட்டினம் என்ற பூம்புகார் கடல் சார்ந்தது. மதுரை நிலம் சார்ந்த எல்லைகளை உடையது. வஞ்சி மாநகர் மலை கடல் சார்ந்த எல்லைகளை உடையது. இம்மூன்று நகரங்களின் அமைப்புக்களைப் பற்றி ஆராயும்போது மூவகையான சுற்றுப்புறச் சூழல் வாய்க்கப் பெற்ற நகரங்களைஅமைப்பு முறைப்படி அறிய முடிகிறது.

இம் மூன்று நகரங்கள் தவிர வேறு சில நகரங்களையும் ஆராய இடமுண்டு எனினும் இவற்றைப் பற்றி ஆய்வதில் ஒரு பொருத்தமும் உண்டு.

சேர சோழ பாண்டியர் மூவர்தம் பெருநகரங்களையும் அடுத்தடுத்து ஆய்கிற வாய்ப்பு முறையும் இதன் மூலம் கிடைத்துவிடுகிறது. மூன்று நகரங்களில் பூம்புகாரும் வஞ்சியும் துறைமுகப் பட்டினங்கள். மதுரை மாநகர் துறைமுகப்பட்டினமல்ல. என்றாலும் நான்மாடக் கூடல் என்ற திருவிளையாடல் வரலாறு தவிரப் பலதுறை அறிவு

களும், அறிஞர்களும் கூடும் இடமாகவுமிருந்து கூடல் என்ற புகழ்ப் பெயரைப் பெற்றிருந்த நகரம். கடைச் சங்கப் புலவர்கள் கூடியிருந்து தமிழ் ஆய்ந்த நகரம்.

ஆய்வுக்குரிய இரு பகுதிகளில் முன்பே கூறப்பட்டது போல் கட்டடக்கலை என்பது தனித்திறன். நகரமைப்பு என்பது கூட்டுத்திறன்.

வஞ்சியும் பூம்புகாரும் வாணிபச் செழிப்புள்ள நகரங்கள். மதுரை அவற்றோடு அறிவுச் செழிப்புமுள்ள நகரம். காஞ்சியும் கலைச் செழிப்பு வாய்ந்த நகராக இருந்துள்ளது. உறந்தை முந்திய சோழர் கோநகரா யிருந்துள்ளது. இவ்வாய்வுக்கு,

1. சங்க நூல்கள், 2. காப்பியங்கள் 3. புராணங்கள், 4. பிற இலக்கியங்கள், 5. மனையடி சாத்திரம், 6. கட்டடக் கலை நூல்கள்

ஆகிய பிரிவைச் சார்ந்தவற்றுள் கட்டடக் கலை, நகர மைப்பு பற்றிய செய்திகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. தமிழ்க் காப்பியங்கள், புராணங்கள் முதலியவற்றில் நாட்டுப்படலாம், நகரப்படலம் என்பவை பொதுவாய்த் தொடக்கத்தில் அமைந்தவை. பெரும்பாலும் நகரமைப் புப் பற்றிய விளக்கங்களுக்கு இவை பெரிதும் உதவுபவை.

நகரமைப்புப் பற்றியும், அந்நகர் எந்த ஆற்றின் கரை யில் அல்லது எந்த மலையருகே அமைந்துள்ளது என்பது பற்றியும் கூறித் தொடங்காத பழைய நூல்களே பெரும் பாலும் இல்லை எனலாம்.

இப்பகுதிகள் பெரும்பாலும் வருணனைகளாகவும், புகழ்ச்சியாகவும் கற்பனை நயந்தோன்றவும், பெருமை யாகவும் கூறப்பட்டிருப்பினும் பெருநகரங்களை அறிமுகப் படுத்தவும் ஆராயவும் இவை பேரளவிற்கு உதவவே செய் கின்றன.

பழந்தமிழரால் நகரமைப்பு ஒரு கலையாகவே போற்றப்பட்டிருப்பது இப்பகுதிகளிலிருந்து அறியப்படுகிறது. அதற்கான சான்றுகள் இவற்றிலிருந்து கிடைக்கின்றன.

பழந்தமிழர் என்ற தொடர் சங்ககால முதல் இன்று வரை உள்ள மொழியின மக்களைக் குறிக்கவும், கட்டடக் கலை என்பது தனியார்,இறைவர், அரசர், பொது, பாதுகாப்புப் பிரிவுகளிலான கட்டடங்களைக் (Individual or domestic royal public defence) குறிக்கவும், நகரமைப்பு என்பது பெருநகரங்களின் அமைப்பு ஒழுங்கு அழகு, கட்டுக்கோப்பு (Town planning or Urban planning) ஆகியவற்றைக் குறிக்கவும் இவ்வாய்வில் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

## ஆய்வுப் பகுப்பு

1. கட்டடக் கலையின் தோற்றமும் வளர்ச்சியும், 2. கட்டடக் கலை மரபு, 3. கட்டடக் கலையும் தமிழர் பண்பாடும், 4. கட்டடக் கலைஞரும் கட்டடங்களும், 5. நகரமைப்பு, 6. பூம்புகார் நகர், 7. மதுரை நகர், 8. முப்பெரு நகர், 9. நகரமைப்பில் சமுதாயங்கள்

என்ற தலைப்புகளில் இவ்வாய்வுக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

□

## குறிப்புகள்

1. "Architecture was called mother of all arts and it is still true. It is the crystallised physical expression of culture projected into space and form. This art cannot develop and mature without the active interest of seciety"

—A. P. Kanvinde, His opening remarks in the seminar on Architecture presided over by Pandit Jawaharlal Nehru held in New Delhi in March, 1959, under the auspision of Lalit Kala Akademy and published by them. Seminar on Architecture, p. 13.

2. Architecture—The science of building raised to a fine art, R. D. Encyclopaedia, Fine Arts, p. 1035.

3. "The expression of the buildings is not only dependent on purely physical conditions but is also largely influented by the mental make up, temperament, character and general awakening of the people of the country.

—Ajay Bharadwaj, collected papers—seminar on architecture, p. 55.

4. டி. வி. சதாசிவ பண்டாரத்தார். காவிரிப்பூம் பட்டினம், பக். 2.

6. நன்னூல் பொதுப்பாயிரம் 55-ம் நூற்பா.

## குறுக்க விளக்கப் பட்டியல்

| | | |
|---|---|---|
| அடியார். | : | அடியார்க்கு நல்லார் |
| சிலம்பு. | : | சிலப்பதிகாரம் |
| டி. வி. எஸ். | : | டி. வி. சதாசிவ பண்டாரத்தார் |
| தொல். எழுத்து | : | தொல்காப்பியம் எழுத்ததிகாரம் |
| தொல். பொருள். | : | தொல்காப்பியம் பொருளதிகாரம் |
| நச். | : | நச்சினார்க்கினியர் |
| ப. | : | பக்கம் |
| பக். | : | பக்கங்கள் |
| பி. ஸ்ரீ. | : | பி. ஸ்ரீ. ஆச்சாரியார் |

### இயல் ஒன்று

# கட்டடக் கலையின் தோற்றமும் வளர்ச்சியும்

ஆதியில் நாடோடியாகத் திரிந்துகொண்டிருந்த மனிதன், கலப்பையைக் கண்டறிந்தான். அதன் துணை யால் நிலத்தை உழுது பண்படுத்தித் தானியங்களை விளைத்து, தான் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவுப் பொருளை உற்பத்தி செய்துகொள்ள அறிந்து கொண்டான். இதுவே மனிதன் நாடோடி வாழ்க்கையை விடுத்துக் குறிப்பிட்ட இடத்தில் தங்கி வாழ்வதற்கு மூல காரணமாய் அமைந்தது; அவனது வாழக்கையில் ஒரு புரட்சியை உண்டாக்கியது. விலங்கு நிலையினின்றும் படிப்படியாக மாறி, நாகரிகமடைந்து தான் பெற்றுள்ள ஆறாவது அறிவு மலரப் பெற்று, மனிதன் மனிதனாக வாழத் தலைப்பட்டான். பின்னர்தான், தன் குடும்பத் தோடு பாதுகாப்பாக வாழ்வதற்குப் புகலிடம் அமைத்துக் கொள்ள முற்பட்டான். களிமண்ணால் சுவர் எழுப்பி மரக்கழிகளையும் கொம்புகளையும் குறுக்கும் நெடுக்கு மாகக் கட்டிக் காய்ந்த தழைகளையும், சருகுகளையும்,

ஓலைகளையும் கொண்டு கூரை வேய்ந்து குடிசை யமைத்து, முட்செடிகளையும் கிளைகளையுங் கொண்டு வேலி கட்டிப் பத்திரமான புகலிடத்தைப் படைத்துக் கொண்டான். பின்னர் நெருப்பின் பயனையறிந்தான். கரைந்து நெகிழ்ந்துவிடும் களிமண், நெருப்பினால் உறுதி பெற்றுக் கடினமாகிவிடுவதையுணர்ந்தான். தனக்கு வேண்டிய சட்டிகள், பானைகள் போன்ற பாத்திரங்களைப் படைத்துக்கொண்டான். செங்கற்கள் உற்பத்தி செய்யவும் அறிந்தான். படிப்படியாகக் களிமண், ஓலைக்குடிசைகள் கல்வீடுகளாய் மாறின. பின்னர் அடுக்கு மாடிவீடுகளும் மாளிகைகளும் தோன்றின.

கட்டடம், வீடு, அரண்மனை, மாடமாளிகைகள் கோயில்கள் எல்லாமே இப்படிப் படிப்படியாக ஏற்படத் தொடங்கியவைதான்.

முதற் கலை

அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி அழகுக் கலைகளில் கட்டடக் கலையையே முதலாவதாக வைத்து எண்ணுகிறார்.[1] அதற்குக் காரணமும் கூறுகிறார்.

> மனிதன் மிகப் பழைய காலத்திலே காட்டு மிராண்டியாக வாழ்ந்தான். இருக்க வீடும், உடுக்க உடையும் உண்ண உணவும் உண்டாக்கிக்கொள்ளத் தெரியாமல் அக்காலத்திலே மனிதன் விலங்குபோல அலைந்து திரிந்தான். பிறகு அவன் மெல்ல மெல்ல, சிறிது சிறிதாக நாகரிகம் அடைந்தான். வசிக்க வீடும் உடுக்க உடையும், உண்ண உணவும் உண்டாக்கிக் கொள்ளத் தெரிந்துகொண்டான்.[2]

வீடு கட்டி வசதி செய்துகொண்டு வாழத் தொடங்கிய மனிதன் தன்னைப்போல் பிறர் பலருடனும் சேர்ந்து கொண்டு வாழவும் தொடங்கினான்.

ஒரு வீடு ஏற்பட்ட இடத்தில் பல வீடுகள் ஏற்படத் தொடங்கின. நிலையான வாழ்க்கை ஏற்பட்டது. ஒரு மனிதன் அடையும் நன்மைத் தீமைகள் உடன் வசிக்கும் பிற வீடுகளைச் சேர்ந்த மற்றவர்களால் அறியப்பட்டன. ஒருவர் பெறும் இன்ப துன்பங்களில் பிறரும் பங்கு கொண்டனர். மக்கள் சேர்ந்து வாழ முற்பட்டனர். இவ்வாறு ஊர்கள் அமைந்தன.

புகலிடம் அமைத்துக்கொள்வதில், அனுபவத்தின் பயனாகப் பல முன்னேற்றங்களும் திருத்தங்களும் உண் டாயின. கண்டவாறு வீடு கட்டும் நிலையை விடுத்து மக்கள் சில வரன்முறைகளை மேற்கொண்டனர். அவற் றில் சில பின்வருவன :

1. வீடு கட்ட நிலம் தேர்ந்தெடுத்தல். 2. வீடு கட்டக் காலநேரம் பார்த்தல், 3. நிலைக்கால், வாசற் கால் வைக்க நல்ல வேளை காணல், 4. குடிபுகும் நேரம் தேர்ந்தெடுத்தல், 5. மனைகோடலின்போது நிமித்தம் சகுனம் பார்த்தல்.

அச்செய்திகளே நூல்களாக உருப்பெற்றன. மக்கள் தமக்கு மேற்பட்ட அற்புத ஆற்றல்படைத்த சக்தியொன்று உண்டெனக் கண்டனர். அதனைப் பல்வேறு பெயரிட்டு அழைத்தனர். துயரமும் கையறவும் வருங்காலை வேண்ட வும், முறையிடவும் கோயில்களைக் கட்டிக்கொண்டனர். தங்கள் வாழிடங்களை விடச் சிறப்பாகவும் மதிப்புக்குரிய முறையிலும் வழிபடும் இடங்களைக் கட்டினார்கள்.

மயமதம், சிற்பநூல், மனையடி சாத்திரம் இவை அனைத்தும் இவ்வாறே தோன்றியிருக்கக் கூடும்.

வழிபடுபவர்களில் முன்னவராகிய கடவுளுக்கும், அதற்கடுத்த நிலைக்கு வரும் அரசருக்கும் சிறப்பான இடங்களில் சிறப்பான முறையில் வாழிடம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் வந்தது. முறையே கோயில்

களும், அரண்மனைகளும், மிகப் பெரியவையாகவும், சிறப்பானவையாகவும் அமைய இதுதான் காரணம்.

கிரேக்கர், உரோமானியர் ஆகியோர்களின் கட்டடக் கலை இன்று ஐரோப்பாவில் சிறப்பாகக் கருதப்படுவது போலவே திராவிடக் கட்டடக் கலையின் பழமையும் நயமும் சிந்துவெளி நாகரிகத்திற்கும் முந்தியவை என வரலாறு கூறுகிறது.

**கட்டடக் கலையின் பழமை**

உலகின் மிகப் பழமையான இனங்களுள் முதல் வரிசையில் வைத்து எண்ணத்தக்கது திராவிட இனம்—தமிழினம் என்ற கருத்துப் பல அறிஞர்களுக்கும் உடன்பாடானது. அம்முறையில், கட்டடக் கலையில் மிகப் பழமையானதும், விந்திய சாத்பூர மலைகளுக்குத் தென் பகுதியாக உள்ளதுமான தக்கணம் — தமிழ் நாட்டை உள்ளிட்ட திராவிட நாடேயாம்.

பண்டைத் தமிழ் மக்களின் கைவண்ணத்தால் எழுந்து வானைத் தொட்டு முத்தமிட்டு உயர்ந்து நிற்கும் கோபுரங்களும், மாடங்களும், மாளிகைகளும், பழந்தமிழர்களின் கட்டடக் கலை வண்ணத்தின் அற்புதத் திறமைக்குத்தக்க சான்று பகர்கின்றன.[3]

மொகஞ்சதாரோ, ஹரப்பா பகுதிகளின் அகழ்வாராய்ச்சியிற் கண்ட சிந்துவெளி நாகரிகக் கலையே திராவிடக் கட்டடக்கலைதான் என்று மேலை நாட்டறிஞர்களும் ஒருவாறு உடன்படுகின்றனர். பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட இப்பகுதிகளில் காணப்படும் கட்டட அமைப்புகளும், நகர அமைப்பு முறைகளும், அறிவியலில் உச்ச நிலையையடைந்துள்ளதாகக் கருதப்படும் இன்று, அனைத்து வசதிகளுடனும் திட்டமிட்டுக் கட்டப்படும் கட்டடங்களையும், நகர் அமைப்பு முறைகளையும் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வுண்மை மிகப் பழங்காலத்திலேயே தமிழர்கள் கட்டடக் கலையில் தலைசிறந்து விளங்கினர் என்பதற்குத் தக்க சான்றாகின்றது.[4]

புதிய கற்காலம்

கி. மு. ஐயாயிரம் முதல் எண்ணூறு வரை உள்ள காலத்தைப் புதிய கற்காலம் என்று வரலாற்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.[5]

புதிய கற்காலத்தில் மனிதர் ஓரிடத்திலேயே தங்கி நிலைத்து வாழக் கற்றிருந்தனர். மனிதர்களின் வாழ்விலே குறிப்பிடத்தக்க வளர்ச்சியும், முன்னேற்றமும் நிலவின என்ற உண்மை புலனாகிறது.

> பதியெழு வறியாப் பழங்குடி
> பழவிறல் மூதூர்[6]

என்றெல்லாம் இவ்வாறு ஓரிடத்தில் தங்கி வாழ்தல் புகழப் படுவதைக் காணலாம்.

சிற்றூர்கள் ஒன்று சேர்ந்து ஒரு கோட்பாட்டில் வாழத் தொடங்கின. அப்படி இணைந்த ஊர்களே ஒரு நாடா யிற்று. அந் நாட்டினர் தங்களுள் ஒருவனைத் தலைவ னாக்கிக் கொண்டனர். நாளடைவில் அவனே மன்னன் ஆனான். ஒரு நாடு அண்டை அயல்நாடுகளுடன் தன்னி டம் அதிகம் இருப்பதைக் கொடுத்து அவர்களிடம் அதிக மாக இருப்பதைப் பெறும் பண்டமாற்று முறை தொடங் கியது.[7]

இப்பண்டமாற்று முறையிலும் வேறு உறவுகளிலும் நாளடைவில் சில தகராறுகளும், பிணக்குகளும் எல்லைச் சிக்கல்களும் மூள்வது இயல்பாயிற்று. மெல்ல மெல்ல அவை போராக மூண்டன.

இக்காலத்தில்தான் உரிமை, உடைமை உணர்ச்சிகள் தோன்றின. உரிமை, உடைமைகள்தாம், தமது, தங்களது

என்ற எண்ணத்தை உண்டாக்கின. படை, பாதுகாப்பு, கோட்டை, கொத்தளங்களைக் கட்டும் நிலை வந்தது. பாதுகாப்புக்கான கட்டடக் கலை வளர வாய்ப்புகள் ஏற்பட்டன.

### சங்க காலம்

கி.மு. 300 முதல் கி.பி. 300 வரையுள்ள காலத்தைச் சங்க காலம் என்று கூறுவர் தமிழறிஞர்.[8] இதில் முன் பின்னாக எண்ணும் பலவகைக் கருத்துக்கள் உண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை. 'சங்ககாலம்' என்பது 'இந்த ஆண்டு தொடங்கி இந்த ஆண்டு வரை' என்று வரையறுத்து அறுதியிட்டு உறுதியாகக் கூறிவிடுவதற்கு ஏற்ற மறுக்க முடியாத அடிப்படைச் சான்றுகள் எவையும் கிடைத்தில என்பதனால் இலக்கியங்களில் கிடைக்கும் ஒரு சில சான்றுகளையும் அநுமானங்களையும் கொண்டு முடிவு செய்யப்பட்டுப் பல்வேறு கருத்துக்கள் சங்ககாலம் பற்றித் தமிழறிஞர்களால் கூறப்படுகின்றன. இங்கும் அப்படிக் கொள்வதே தக்கது.

இச்சங்க காலத்தில் தமிழர் வாழ்வியல் சிறந்திருந்தது. முடியாட்சி முறையில் அரசர்கள் வளம் சுரக்கும்படி நாட்டை ஆண்டனர். பாசனம் செய்து பருவம் தெரிந்து பயிரிட்டு வளம் பெருகினர் வேளாளர். பல்வேறு வகைக் கருவிகள்—ஆடை அணிகள் உருவாயின.

பிற நாட்டுடன் வாணிபத் தொடர்பும் கப்பல் போக்குவரவும் ஏற்பட்டன. இலக்கியங்களும் பிறவகை நூல்களும் வளர்ந்தன. புலவர்கள் பெருகினர். கோயில்கள் பெருகின. முத்தமிழும் வளர்ந்தன. மன்னர் அரண்மனைகளும், மக்கள் வீடுகளும் நகர்கள் அமைப்பும், நானிலப் பகுப்பும் உண்டாயின. போர்களை எதிர்கொள்ள வலுவான அரண்மனைக் கோட்டைகளும் அகழிகளும் கட்டப்பட்டன. பல சிறப்புக்களும் பெருகி வளர்ந்த காலமாக

இது இருந்தது. தமிழரின் பொற்காலம் என இதனைக் கூறலாம்.[9]

கட்டடக் கலையின் தோற்றம் புதிய கற்காலத்தில் என்றால் அதன் வளர்ச்சியும், எழுச்சியும் இக்காலத்திலே தான் என்று கூற வேண்டும். குடிமக்கள் வீடுகள் மட்டு மின்றி மாடமாளிகைகளும்,கூட கோபுரங்களும் கோட்டை கொத்தளங்களும், அகன்ற பெரிய அரச மாளிகைகளும், கூத்தரங்கங்களும் கட்டப்பட்டன.

**கோயில்கள்**

எண்ணற்ற பெருங்கோயில்களைத் தமிழர்கள் கட்டி னார்கள். வைணவ ஆழ்வார்களால் பாடப்பட்ட நூற் றெட்டுத் திருப்பதிக் கோயில்களும், சிவத் தலங்கள் இரு நூற்று எழுபத்தைந்தும் [10] இருந்தன.

கொடிக்கூடம், மர நிழல், காவணம், குடில், மண்தளி, சுடுமண் தளி, மரப்பலகைகளால் சமைத்த அம்பலம், குடைவரை, ஒற்றைக் கற்றளி, கருங்கற்கோயில் என்று கோயில்கள் படிப்படியாக வளர்ந்தோங்கின.[11]

மூவாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தொல்காப்பியத் தில் புணரியல் விதி வகுக்கும் நூற்பாவால் 'கோயில்' என்னும் சொல்லுக்குப் புணர்ச்சி விதி கூறப்பட்டுள்ளது.

இல்லொடு கிளப்பின் இயற்கையாகும் [12]

தமிழகக் கோயில்கள் பழம் பெரும் நாகரிகத்தையும், பண் பாட்டையும் விளக்கும் சிறப்பை உடையவை.

திருவரங்கம், தில்லை, மதுரை, இராமேச்சுவரம் போன்ற ஊர்களில் உள்ள பெரிய கோயில்களின் மாட்சி கோயிற் கட்டடக் கலையின் பெருமைக்கு எடுத்துக் காட்டுக்களாக விளங்கக் கூடியவை.

### அரண்மனைகள்

சங்க காலத்து அரசர் அரண்மனைகள் எனக் குறிப்பிட்டுச் சொல்லும் எவையும் இன்று முழுமையாகக் கிடைக்காவிடினும், பூம்புகார், மதுரை ஆகிய நகரங்களில் இருந்த அரசர் இருக்கைகளைப் பற்றிய வருணனைகள் நமக்குத் தெரிவிக்கும் கருத்துகளிலிருந்து மாபெரும் அரச மாளிகைகளைத் தமிழர்கள் சிறப்புறக் கட்டியிருக்கிறார்கள் என்ற உண்மை தெளிவாக விளங்குகிறது. இன்றைய திருமலை நாயக்கர் மகால், சரசுவதி மகால் (தஞ்சை), செஞ்சிக் கோட்டை ஆகிய அரசிருக்கைக் கட்டடங்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. நெடுநல்வாடையில் அரசர் அரண்மனை அமைத்த முறை பற்றிய விவரங்கள் பல குறிப்பிடப்படுகின்றன.

### கோட்டைகள்

கிராமங்களைச் சுற்றியும், நகரங்களைச் சுற்றியும் பெரிய மதிற் சுவர்களை அமைத்துக்கொண்டு வாழ்ந்த நம்முடைய முன்னோர் பாதுகாப்பிற்காகப் பலவகை அரண்களையும் அமைத்திருக்கின்றனர்.

### துர்க்கங்கள்

அவை கோட்டைகள் எனப்பட்டன. கோட்டைகள் 'துர்க்கம்' [13] என்றும் அழைக்கப்பட்டன.

மலைக்கோட்டை—கிரி துர்க்கம்

(உ-ம்) சங்ககிரி துர்க்கம்—சேலத்தருகே ஓரூர்—மலையை அரணாகக் கொண்ட கோட்டை கிரி துர்க்கம் என அழைக்கப்பட்டது.

வனக் கோட்டை—வன துர்க்கம்

நதியினாலும் கடலினாலும் சூழ்ந்த கோட்டை ஜல துர்க்கம் என அழைக்கப்பட்டது. சேற்றினாலும் மண்ணா

லும் கட்டப்பட்ட சுவருடைய கோட்டையைப் பங்க துர்க்கம் என்றும் இயற்கையாகவே அமைந்த அரணு டைய கோட்டையைத் தெய்வத் துர்க்கம் என்றும் ஒரே பொட்டலாக அமைந்த கோட்டையை 'ரிண துர்க்கம்' என்றும் நூல்களில் வகைப்படுத்தியுள்ளனர்.

இந்த வகையான ரிணதுர்க்கத்தில் மரமும், நீரும் இல்லாத வறண்ட சூழ்நிலையே பிறர் அண்ட முடியாத அரணாகவும், பாதுகாப்பாகவும் அமைந்து விடுகிறது.

சில இடங்களில் மலைகளும் காடுகளும் சேர்ந்தே பாதுகாப்பாய் அடுத்தடுத்து அமைகிற கோட்டைக்கு 'மிச்ரதுர்க்கம்' என்று பெயர்.

தமிழ்நாட்டு மரபுவழிப்பட்ட சிற்ப நூல்களில் எல்லாம் கோட்டைகளை அமைக்கும் முறைகளும் விரிவான விளக் கங்களும் பாதுகாப்பிற்குரிய இரகசியப் பாதைகளும் இரக சிய அறைகளும் அமைக்கும் முறைகளும், படைகள் தங் கும் இடங்களும் தேவையான வசதிகளை எங்கெங்கு எவ் வெவ்வாறு அமைப்பது என்ற விவரங்களும் விளக்கமாக வும் தெளிவாகவும் கூறப்பட்டுள்ளன.

## வீடுகள் (Domestic Buildings)

தனிமனிதர் வீடுகள் பற்றி இலக்கியங்களிலிருந்து அறிய முடிந்தவற்றையும் மனையடி சாத்திரம் முதலிய நூல்களில் இருந்து அறிய முடிந்தவற்றையும் தவிர அதிக மாக எதுவும் அறிய இயலவில்லை.

பழந்தமிழர் 'கட்டடக் கலை' என்றாலே பெரும்பாலும் கோயில்களின் கட்டடக் கலையைத்தான் குறிக்கிறது என லாம். அடுத்து அரசர்கள் வாழ்ந்த அரண்மனைகளைப் பற்றியோ, செல்வந்தர்கள் வாழ்ந்த மாடமாளிகைகள் பற்றியோ ஓரளவே அறிய முடிகிறது.

பொதுமக்கள் வாழ்ந்த வீடுகளைப் பற்றி அதிகம் கூறவே முடியவில்லை. ஏனெனில் அவற்றைப் பற்றி இலக்கியங்கள் கூறும் செய்திகள் அல்லாது நேரிடைச் சான்றுகள் ஏதும் கிட்டாததனாலேயாகும்.[14]

இலக்கியங்களில் மன்னர்கள் வாழ்ந்த அரண்மனைகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. நகர அமைப்புப் பற்றியும் பேசப்படுகிறது. யவனப் போர் வீரன் ஒருவன் யானை மீது கொடியைப் பிடித்தபடி அமர்ந்து உள்ளே செல்லுமளவு மிக உயர்ந்த அரண்மனை வாயில்கள் விளங்கியுள்ளன. பெரிய மாளிகைகள் இருந்துள்ளன. ஐவகை நிலங்களுக்கு ஏற்ப (குறிஞ்சி. முல்லை, மருதம், நெய்தல், பாலை) மக்கள் சிறுசிறு வீடுகள் கட்டி வாழ்ந்துள்ளனர் என்றாலும் அவை பற்றிய நேரிடைச் சான்றுகள் அதிகமில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்பு பூம்புகாரில் நடைபெற்ற அகழ்வாய்வில் புத்த விகாரம் ஒன்றும், பொருள்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்யப்படும் முகத்துவாரக்கட்டடம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஆனால் மக்கள் வாழ்ந்த கட்டடப் பகுதி (Secular Buildings) எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை.

கொற்கையில் நிகழ்ந்த அகழ்வாய்விலும் உறையூரில் மேற்கொண்ட அகழ்வாய்விலும் கி. பி. 11—12 நூற்றாண்டைச் சேர்ந்த சில கட்டடப்பகுதிகள் கிடைத்தன. அவை அக்காலத்திய கட்டடக்கலை பற்றித் தெளிவாக எதையும் தெரிவிப்பனவாக அமையவில்லை. அண்மையில் தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத் துறையினர் கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரு பகுதியை அகழ்வாய்வு செய்தபோது, நகரின் பகுதியான உள்கோட்டையில் முதலாம் இராசேந்திர சோழன் எடுப்பித்து வாழ்ந்த அரண்மனைப் பகுதி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது; முழுப்

பகுதியும் கண்டுபிடித்து வெளிப்படுத்தப் பெற்றால் பல உண்மைகள் தெரியவரும்.

எனவே பொதுமக்கள் கட்டடக் கலை எவ்வாறு இருந்தது என்பதற்கு இலக்கியச் சான்றுகள் மட்டுமே ஓரளவு கிடைக்கிறது.[15]

**நீர்பாசனக் கட்டடக் கலை**

நீர்ப்பாசனத்துக்கான அணைக்கட்டுக்களைத் தமிழர்கள் கட்டிய முறைக்கும் நேரிடைச் சான்றுகள் கிடைக்கின்றன.

> நிலன்நெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
> தட்டோர் அம்ம இவண் தட்டோரே[16]

என்று புறநானூற்றில் குடபுலவியனார் என்ற புலவர் தண்ணீரைத் தேக்கி வைத்து அணை கட்டுவதுபற்றிக் குறிப்பிடுகிறார். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாடிய பாட்டு இது.

பண்டை மன்னர்கள் தமிழகம் முழுவதும் அமைத்த ஏரிகள், அவற்றின் அடிப்படையில் அமைந்த பாசன அமைப்புக்கள் யாவும் இன்றும் நாம் எண்ணி வியக்கத் தக்கன. இவை அனைத்திற்கும் சிகரம் போன்று அமைந்தது திருச்சிராப்பள்ளிக்கு அண்மையில் உள்ள கல்லணை ஆகும்.

ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் கரிகாலனால் கட்டப்பட்டு, இன்றும் பயன்பட்டு வரும் ஓர் அரிய கட்டமைப்பு (Construction) இக் கல்லணை. இவ்வணை மணல் தளத்தை அடிப்படையாகக் கொண்டு எழுப்பப்பட்ட ஒரு கட்டடம். நீர்த்தேக்கங்கள் அமைப்

பதில் மணல் தளத்தை அடிப்படையாகக்கொண்டு கட்டடங்கள் எழுப்புவது ஒரு தனிக்கலையாகும். சற்றுக் கடினமான கலையும்கூட.[17]

அணைக்கட்டு எழுப்பிய பின்னும்கூட அதன் அடியில் இருக்கும் மணல் தளத்தின் வழியாகத் தண்ணீர் துருவிச் செல்வது தொடர்ந்து இருந்துவரும்.

இப்படிப்பட்ட கட்டமைப்புக்களை, கசியும் அடித் தளத்தில் அமைந்த கட்டடங்கள் (Structures on pervious Foundations) என்று கூறுவார்கள். அணையின் மேல் வழிந்து செல்லும் நீர் அதன் கீழே கசிந்து செல்லும் நீர் இரண்டாலும் பாதிக்கப்படாத வகையில் இதுபோன்ற அணைகள் அமைய வேண்டும். இன்றைய வளர்ச்சி நிலையில் கூட அவை சிக்கல் நிறைந்தவை.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு கல்லணை போன்ற ஒரு சாதனத்தை எழுப்பிய சமுதாயத்தில் 'சில அடிப்படைப் பொறியியல் முறைகள்' இருந்திருக்க வேண்டும். அவற்றை அறிவதற்கான ஏடுகள் தமிழில் இல்லை அல்லது இதுவரை கிடைக்கவில்லை.[18]

இது தவிர மேற்கே ஆப்ரிக்கக் கண்டம் தொடங்கிக் கிழக்கே பிலிப்பைன்ஸ் தீவு வரை தமிழர்கள் சென்று நீர்ப் பாசனக் கட்டட வேலைகள் செய்ததாக ஃபிளெமிங் என்ற அறிஞர் கூறுவதாக டாக்டர் வா.செ.குழந்தைசாமி தெரிவித்துள்ளார்.[19]

## தமிழர் கட்டிடக் கலையின் தனிச் சிறப்பு

கிரேக்க உரோமானியக் கட்டடக்கலையின் இணைந்த சிறப்பாக ஐரோப்பாவில் (Gothic) கூம்பு வடிவ விமானம் கூறப்படுவது போல் தமிழகப் பழங்காலக் கட்டடக் கலையின் சிறப்பாகக் (Classical Architecture of Tamils) கோபுரத்தைக் கூறலாம். ஆங்கில அகராதிகளிலும்

கலைக்களஞ்சியங்களிலும்கூட இப்படியொரு விளக்கம் 'கோபுரம்' (Gopura) என்பதற்குத் தரப்பட்டுள்ளது.[20]

இருபதாம் நூற்றாண்டு சேம்பர் அகராதியிலும் இதே பொருள் கூறப்பட்டிருக்கிறது. (In southern India a Pyramidal tower over the gateway of a temple).[21]

நன்னூற் பாயிரத்திலும்கூட 'மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்'[22] என இக் கோபுர அமைப்பு நகருக்கே நுழைவாயிலாகக் கூறப்பட்டிருத்தலைக் காண லாம். நூலுக்குப் பாயிரம் கோபுரம் போன்றது எனச் சொல்லுவதற்கான இப்பகுதி நன்னூலில் உவமையாக ஆளப்பட்டுள்ளது.

பேரறிஞர் பி.ஸ்ரீ. கட்டடக் கலை பற்றி பின்வருமாறு கூறுகிறார்:

"'அரசர்களின் அரண்மனையைத்தான் கோயில் என்ற சொல் ஆதியில் குறித்திருக்க வேண்டும். பிறகு இது தெய்வ வழிபாட்டுக்குரிய இடங்களைச் சிறப்பாகக் குறிக்கலாயிற்று. சிற்ப நூல் வல்லுநர் கோயில்களையும் மண்டபங்களையும், மாட மாளிகைகளையும், உயர்ந்த மாடங்களில் அடுக்கு வீடுகளையும் நிலா முற்றங்களையும் தங்கள் கலைத்திறன் தோன்ற அமைத்தனர் என்று நெடுநல்வாடை முதலிய நூல்கள் தெரிவிக்கின்றன.

அழகான அரண்மனையை 'ஓவத்து அன்ன உருகெழு நெடுநகர்' — அதாவது 'ஓவியம்போல் அழகினையுடைய 'அரண்மனை' என்கிறது பதிற்றுப்பத்து. 'ஓவியம் போல் அழகினையுடைய வீடு' — என்று பொருள்படப் புற நானூறு பேசுகிறது."[23]

இத்தகைய சிறப்புடைய தமிழர் கட்டடக் கலையில் எல்லாவற்றுக்கும் அடிப்படையான நம்பிக்கைகள்—பழக்க வழக்கங்கள், பின்பற்றிய மரபுகள் பற்றி முதலில் காணலாம்.

கட்டடத்திற்கு மனையைத் தேர்வது தொடங்கி மரத்தைத் தேர்வது, கிணறு வெட்டுவது வரை எல்லா வற்றுக்கும் சிற்ப நூல் மரபுகள்[24] உள்ளன. கிணறு வெட்டுவதற்கே ஒரு நூல் உள்ளது. தமிழில் கூவ நூல் என்றும் வடமொழியில் 'கூப சாத்திரம்' என்றும் கூறப் படுவது அந்நூல். நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் போலத் தோன்றினாலும் கட்டடக் கலை மரபினை மனை நூலில் இருந்து அறிந்துகொள்ள வாய்ப்பு உள்ளது.

கட்டடக் கலை தொடர்பாகப் பரங்கிப்பேட்டை எஸ்.ஏ. குமாரசாமி ஆச்சாரியார் பதிப்பித்த 'சில்பரத்னா கரம்' தொகுத்துக் கூறும் சிற்ப சாத்திர நூல்கள் வருமாறு:[25]

1. விசுவகன்மீயம், 2. விசுவம், 3. விசுவசாரம், 4. பிரபோதம், 5. விருத்தம், 6. மயமதம், 7. துவஷ்ட தந்திரம், 8. மனுசாரம், 9. நளம், 10. மானவீதி, 11. மானகல்பம், 12. ஞானசாரம், 13. பெருஸ்ருஷ்டம், 14. சுருஷ்டம், 15. மானபோதம், 16. விசுவபோதா யனம், 17. அதிசாரம், 18. விசாலட்சம் 19. விசுவ காசியபம், 20. வாஸ்துபோதம், 21. மகாதந்திரம், 22. வாஸ்து வித்யாபதி, 23. பராசரேயகம், 24 கால யூபம், 25. சைத்யம், 26. சித்ரம், 27. ஆவர்யம், 28. சதாட்சர சம்ஹிதா, 29. பானுமதம், 30. இந்திர மதம், 31. லோகஞானம், 32. சௌரம்.

இதுவரை பதிப்பிக்கப்படாத மனுசாரம் என்னும் கையெழுத்துப் பிரதியில் பின்வரும் 28 நூல்களைப் பற்றிய குறிப்புக்கள் வருகின்றன.[26]

1. ஈசாநம், 2. விசுவகன்மீயம், 3. விருத்தம், 4. மயமதம், 5. பார்க்கவம், 6. வாஸ்து வித்யா, 7. பராசரீயம், 8. சித்ரகாசியபம், 9. மார்க்கண்டம், 10. மானசாரம், 11. பிரயோக மஞ்சரி, 12. கோபாலம், 13. பெருஹிதம், 14. நாரதீயம், 15. இந்திரமதம்,

16. பானுமதம், 17. பௌதமாதம், 18. நாராயணீயம், 19. கௌதமம், 20. காஸ்யபம், 21. மனுசாரம், 22. குலாலம், 23. சித்ரம், 24. சித்ரயாமளம், 25. வாசிஷ்டம், 26. சித்ரபாகுல்யம், 27. மனோகல்பம், 28. தேசிகம்.

இந்த 32ம் 28ம் ஆன சிற்ப நூல்கள் 'முக்கியம்' என்று கூறப்பட்டன. (Principal Shastras).[27] இவை போலன்றித் துணை நூல்கள் உபசில்ப சாஸ்திரம்[28] எனப் பட்டன. (Subsidiary shastras). தென்னிந்தியப் பிரிவு (Southern school of Architecture) ஏறக்குறைய 52 சிற்ப நூல்களைக் கொண்டிருந்தது என்கிறார் கணபதி ஸ்தபதி.[29]

ஆனால் இன்று அவற்றுள் ஒன்பதே முழுமையாக உள்ளன என்றும்[30] அவரே கூறுகிறார்.

1. மயமதம், 2. விசுவகன்மீயம், 3. மானசாரம், 4. மனுசாரம், 5. இந்திரமதம், 6. வாஸ்துவித்யா, 7. தாஸ்யபம் 8. சித்ர காஸ்யபம், 9. நாராயணீயம்

இந்த ஒன்பது நூல்களே இன்று தமிழகச் சிற்பிகளால் கற்கவும், நடைமுறையிற் கொள்ளவும் படுகின்றன.[31]

இவை தவிர சிற்ப உபநிஷதங்கள் என ஓர் ஆறும் நடைமுறையில் உள்ளன.[32] அவையாவன :

1. ஸ்ரீகுமாரரின் சில்பரத்னம், 2. சில்பரத்னாகரம், 3. மனுஷ்யாலய சந்திரிகா, 4. சர்வார்த்த சிற்ப சிந்தா மணி, 5. பிராமீயம், 6. சரஸ்வதீயம்

பெருப்பாலும் இவை கோயில் ஆகமங்களோடு தொடர்பு படுத்திக் கற்கப்பட்டன.

பொதுவில் கட்டடச் சிற்பக்கலையை நான்கு வகை யாகப் பிரிக்கலாம் என்கிறார் கணபதி ஸ்தபதி.[33]

1. மதச் சார்பற்ற மக்கள் கட்டடக் கலை, 2. சமய அல்லது கோயில் கட்டடக் கலை, 3. இராணுவக் கட்டடக் கலை, 4. சிற்பமும் ஓவியமும் [34]

பழஞ்சுவடிகளில் இருந்து திரட்டப்பட்ட 1,400 பாடல்களைக் கொண்ட சிற்ப சாஸ்திரம் மயமதத்தை அடிப்படையாகக் கொண்டு மணிப்பிரவாளத் தமிழில் வந்தது. அதுவே பின்னாளில் பல்வேறு பெயர்களோடு தமிழில் சிற்ப சாஸ்திரம், மனையடி சாஸ்திரம், மனைநூல் என்றெல்லாம் வழங்கலாயிற்று.

பெரும்பாலும் வீடு கட்டுதலைப் பற்றிய விவரங்களைக் கூறுவது. [35] இந்த வழக்கங்கள் திராவிடப் பகுதி முழுவதும் (தமிழகம், கன்னடம், கேரளம், ஆந்திரம்) நடைமுறையில் உள்ளன. [36] தமிழ் மனையடி சாத்திரத்தில் உள்ள தமிழ்ச் சொற்றொடர்களே வடமொழியிலும் பயிலுவதாகக் கணபதி ஸ்தபதி கூறுகிறார். [37]

பலகை (பலகா) உளி (உளிகா) குமுதம் (குமுதகா) கம்பு (கம்பா) யாளி (யாள) குடம் (கட) கலயம் (கலச) தாழி (தாடி) அம்பலம் (அம்பல) பொதிகை (பொதிகா) தரங்கு (தரங்கா) பத்தி (பக்தி) பட்டிகை (பட்டிகா)

சிற்பிகளிடையேயும் கட்டடக் கலைஞர்களிடையேயும் பயிலும் பல சொற்கள் தமிழகராதிகளில் கூடக் காணப்படாமல் வாய்மொழியாகவே வழங்குவதாகவும் கணபதி ஸ்தபதி கூறுகிறார். [38]

| | | |
|---|---|---|
| அலுங்கு | உள்நாட்டியம் | கோணாவிட்டம் |
| படங்கு | உட்கூடு | கட்டாயம் |
| அணிவெட்டிக்கால் | சிலம்புக்குமுதகம் | நிலைக்கால் |
| அடங்கல் | பட்டைக்குமுதகம் | பிள்ளைக்கால் |
| ஆளாங்கு | நிலங்காணி | பலமுனை |
| அலர்படி | மானாங்காணி | பத்திரிப்பு |
| அலையம் | கொடிப்பெண் | மதலை |

| | | |
|---|---|---|
| நாணுதல் | கொடிவளை | புறநாட்டு |
| நேரிசை | கால்புறவாய் | அகநாட்டு |
| மகர இசை | கொடுங்கை | விரல் |
| மாற்றானிசை | சுரிப்பு | முழக்கோல் |
| இடைக்கட்டு | குறிமானம் | |
| மேழி உத்திரம் | | |
| மேழிப் போதிகை | | |

இந்தத் தொடர்கள் (Technical terms) இன்றிச் சிற்ப உலகில் பழக இயலாது என்கிறார் கணபதி ஸ்தபதி.[39]

பல ஏடுகளில் இருந்து திரட்டிய 1,400 தமிழ்ப் பாடல்களில் சில குறைந்தும் கூடியும் சிற்ப நூல்[40] என்றும், சிற்ப சாத்திரம் என்றும் நாட்டு வழக்கில் மனையடி சாஸ்திரம் என்றும் கிராமப்புறங்களில் வாய்மொழிப் பாடலாகவும் (Oral tradition) கூட வழங்குகின்றன.

ஏழைகள் முதல் பெருஞ்செல்வர் வரை (அரசர்கள் மாளிகை அமைக்கவும் சேர்த்து) வரையறை கூறும் அந்த நூலையும் அதன் விவரங்களையும் அடுத்த இயலில் காணலாம்.

பின்வரும் இயல்களில் கூற வேண்டிய கருத்துக்களுக்கும் ஆய்வு முடிவில் நிறுவப்பட வேண்டிய உண்மைகளுக்கும் இந்த மனை நூல் விவரங்கள் அடிப்படையாக[41] அமையக் கூடும்.

□

குறிப்புகள்

1. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 4.
2. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 1.

3. ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், க.த.திரு நாவுக்கரசு கட்டுரை, ப. 247

4. ஐ. மகாதேவன் கட்டுரை, இந்து நாளிதழ் 23-4-1979.

5. சா. கணேசன், இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கையேடு, ப. 118.

6. சிலப்பதிகாரம் 1:15.

7. சா. கணேசன், இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கையேடு, ப. 118.

8. சா. கணேசன், இரண்டாம் உல்கத் தமிழ் மாநாட்டுக் கையேடு, ப. 119.

9. சா. கணேசன், இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கையேடு, ப. 119.

10. ந. ரா. முருகவேள், ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், ப. 109.

11. ந. ரா. முருகவேள், ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், ப. 110.

12. தொல். எழுத்து. 294.

13. வை. கணபதி, இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கையேடு, ப. 230.

14. தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், ப. 366.

15. தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், ப. 366.

16. புறநானூறு, 18:28-29.

17. டாக்டர் வா. செ. குழந்தைசாமி, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், ப. 131.

18. டாக்டர் வா. செ. குழந்தைசாமி, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், ப. 131.

19. டாக்டர் வா. செ. குழந்தைசாமி, ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், ப. 131.

20. Gopura-Gateway to temple in Hindu Archite-cture, Encyclo, Readers Digest, p. 1044.

21. Chambers twentieth Century Dictionary, p. 456.

22. நன்னூல் பாயிரம் 55.

23. பி. ஸ்ரீ., தமிழரும் கலை உணர்வும், ப. 9.

24. மனையடி சாஸ்திரம் என்னும் சிற்ப நூல், பக். 5-42.

25. வி. கணபதி ஸ்தபதி, இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கையேடு, ப. 245.

26. வை. கணபதி ஸ்தபதி, இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், ப. 246.

27. கணபதி ஸ்தபதி, இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், ப. 246.

28. கணபதி ஸ்தபதி. இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், ப. 246.

29. கணபதி ஸ்தபதி, இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், ப. 246.

30. கணபதி ஸ்தபதி, இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர், ப. 246.
31. ,, ,, ,,
32. ,, ,, ,,
33. ,, ,, ப. 248
34. ,, ,, ,,
35. ,, ,, ,,
36. ,, ,, ,,
37. ,, ,, ப. 249
38. ,, ,, ,,
39. ,, ,, ப. 248
40. ,, ,, ,,
41. ,, ,, ப. 249

## இயல் இரண்டு

# கட்டடக் கலை மரபு

கட்டடக் கலை அறுபத்து நான்கு கலைகளுள் ஒன்றாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது. 'சிற்பத் தொழில்' என்பதனைக் 'கலைஞானம் அறுபத்துநான்கின் ஒன்று'[1] எனக் குறிப்பிட்டு 'இல்லமெடுத்தல், கோயில் முதலியனக் கட்டுஞ் சாத்திரம்' என மதுரைத் தமிழ்ப் பேரகராதி விளக்கவும் செய்கிறது. செதுக்குவேலை, கல்வேலை, கற்சிற்ப வேலை என விரிவும் கூறப்படுகிறது. இத்தொழில் செய்வோரைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று 'கண்ணுள் வினைஞர் கண்ணாளர்'[2] என்பது. இச்சொற்றொடரே ஓவியர், சிற்பியரைக் குறிக்கவும் பயன்படுத்தப் பெற்றது. வடமொழிப் பெயரில் இது 'வாஸ்து வித்யா'[3] எனப்படுகிறது. சிற்பத் தொழிற்கு உறுப்பு எனக் 'கல், உலோகம், செங்கல், மரம், மண், சுதை, தந்தம், வண்ணம், கண்டசருக்கரை, மெழுகு ஆகியவை கூறப்பட்டுள்ளன.

இக்கலை பற்றிக் கூறும் முன்னூல்களாக விச்சுவ தருமம், விச்சுவேசம், விச்சுவசாரம், விருத்தம், தாவட்டம்,

நளம், மயம். அனுமான், பானு, கற்பாரியம், இருப்பிம், மானசாரம், வத்து வித்யாபதி, பராசாரியம், அரிடிகம், சயித்தகம், வாத்துபோதம், வித்தாரம் ஐந்திரம், வச்சிரம், சௌமம், விச்சுவகாசிபம், மகாதந்திரம், விசாலம், சித்திரம், காபில காலயூபம், நாமசங்கிதை, சாத்திகம், விச்சுவபோதம், அதிசாரம், வெகுசுருதம், மானபோதம் என்னும் முப்பத்திரண்டு நூல்களை மதுரைத் தமிழ்ப் பேரகராதி[4] விவரிக்கிறது.

இம்முப்பத்திரண்டு நூல்களுள் மயன் இயற்றியதாக வழங்கும் சிற்ப சாத்திரம் எனப்படும். 'மயம்' ஒன்றே தமிழில் செய்யுள்களின் வடிவில் வழங்கி வருகிறது. நானூற்றுப் பதினைந்து விருத்தங்களுக்கு மேலாக இந்நூலில் உள்ளன. சிற்பநூல் பின்வருமாறு தொடங்குகிறது.

வேதநான் மறைகளாகி விளங்கும்
மும்மூர்த்தியாகிப்
பூதலந் தனைப்படைத்த புண்ணியன் தாளைப்
போற்றித்
தீதிலா மயனார் சொன்ன சிற்ப
சாஸ்திரமாம் நூலை
நீதியாய்த் தமிழினாலே நிலைபட
உரைக்கலுற்றேன்[5]

மனையடி சாத்திரம் இவ்வாய்வுக்கு எவ்வகையில் பயன்படும் என்பதை டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன மனைநூல் பதிப்பின் முன்னுரையில் பின்வருமாறு கூறியுள்ளார்.

"மனித வாழ்க்கையின் நாகரிக வளர்ச்சியை, வீடு கட்டி மனிதன் வாழ்ந்தது நிரூபிக்கிறது. தமிழர் வீடு கட்டும்போது நல்ல இடத்தைத் தேர்ந்தெடுத்தனர். நல்ல மரத்தைத் தேர்ந்தெடுத்தனர். நல்ல நாள் பார்த்துக் கட்டத் தொடங்கினர்."

தமிழ்நாட்டிலிருந்து தேக்கு மரம் பல நாடுகளுக்குச் சென்றதற்கு அடிப்படைக்காரணம் தமிழர் வீடுகட்டுவதில் சிறந்த மரத்தைத் தேர்ந்தெடுத்ததுதான் என்பது தெளிவாகிறது. நல்ல மரங்களை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதை பற்றித் தமிழர், தெளிவாக அநுபவ அறிவின் வாயிலாக உணர்ந்திருந்தனர் என்பதை நம் மனைநூல் சாத்திரங்கள் நமக்கு உணர்த்துகின்றன."[6]

தமிழ் மனைநூலின் ஆசிரியர் யாரென அறிய இயலவில்லை எனினும் இவ்வழி நூலிலிருந்து நாமறியும் செய்திகள் பயனுள்ளவையாய் அமைகின்றன. ஆய்வுக்குப் போதிய உதவியாகவும் அமைகின்றன.

### நிமித்தங்கள்

கட்டடம் கட்டுவோன் மனைகோல வேண்டும் என்று அதற்குரிய சிற்பியை (கொத்தனாரை) அழைத்துக் கொண்டு புறப்படும்போது எதிர்ப்படும் மனிதர்கள், பொருள்கள் ஆகியவற்றையே மனைநூல் நிமித்தம் என்று கூறுகிறது. பாமரர் வழக்கில் இதுவே சகுனம் என்றும் கூறப்படும்.

இனி எந்தெந்த நிமித்தங்கள் நல்லவை, எந்தெந்த நிமித்தங்கள் தீயவை என மனை நூலின்படியே காணலாம்.

### நன்னிமித்தங்கள்

1. பேரழகு வாய்ந்த பெண்கள் எதிர்ப்படுதல், 2. நிறைகுடம், 3. துணி வெளுக்கும் வண்ணான், 4. தயிர்க்குடம், 5. பால்குடம், 6. சோறு, 7. மதுக் குடம், 8. பருவ மகளிர், 9. சாரைப்பாம்பு, 10. தேவ தாசி, 11. கரும்புக்கட்டு, 12. இரட்டை அந்தணர்.[7]

கீழ்வரும் விலங்குகளும் பறவைகளும் மனைகோலைப் புறப்படுகையில் இவ்வாறு புறப்பட்டுச் செல்கிறவருக்கு

இடது பக்கத்தில் தொடங்கி வலது பக்கம் நோக்கிச் சென்றால் பெரிதும் நலம் பயக்கும் என்கிறது மனை நூல்.

1. நரி, 2. கிளி, 3. வேங்கைப்புலி, 4. முயல், 5. கோழி, 6. கொக்கு, 7. மயில், 8. ஓந்தி, 9. மான், 10. பசு, 11. மாடு, 12. நாரை, 13. அணில், 14. கழுதை, 15. செம்போத்து[8]

தீய நிமித்தங்கள்

1. அழுக்கு ஆடை அணிந்தவன், 2. செம்பட்டை முடியினன், 3. சுருட்டை முடியினன், 4. கால்நொண்டி 5. உடலில் மயில் இல்லாதவன், 6. விரித்த தலையை உடையவன், 7. ஒற்றைக் கண்ணன், 8. கைம்பெண், 9. தடி ஊன்றி வருபவன்

ஆகியோர் எதிரில் வருவது உயிர்க்கு ஏதம் விளைவிக்கும் நிமித்தங்களாகக் கருதப்படுகிறது.[9]

1. அவிழ்ந்த கூந்தலுடன் வருவோர், 2. மோட்டைத் தலையர், 3. மட்டை என்னும் ஒருவகைப் பாம்பு, 4. துறவி, 5. ஒற்றை அந்தணன், 6. மார்பில்லாத பெண், 7. புதிய சட்டி பானை, 8. மூக்கறையன் 9. எண்ணெய் விற்போன்

ஆகியோர் எதிர்ப்பட்டாலும் தீமையேயாம்.[10]

எதிர்ப்படும் பொருள்கள் சிலவற்றிற்கும் பின்வரும் விளைவுகள் கூறப்பட்டுள்ளன.

| | பொருள் | | பலன் |
|---|---|---|---|
| 1. | குறைகுடம் | — | துயரம் உண்டாகும் |
| 2. | நெருப்பு | — | குடும்பம் அழியும் |
| 3. | கரி | — | பிணிகள் உண்டாகும் |
| 4. | எலும்பு | — | கன்று காலிகள் நாசமாகும் |
| 5. | உமி | — | செல்வம் சீரழியும் |
| 6. | விறகு | — | இகழ்ச்சியும் பழியும் ஏற்படும் |

**நற்பயன்**

கட்டடம் கட்டிக்கொள்ள இருப்பவனும் கொத்தனாரும் கட்டப்பட இருக்கிற மனையில் போய் நின்றபின் ஏற்படும் நிமித்தங்களின் பயனை இனிக் காணலாம்.[11]

மனைக்குரியோனும் சிற்பியும் நின்ற இடத்திற்கு வலப்பக்கமாகப் பல்லி செல்லுமானால் நற்பயன் விளையும்.[12]

முதலில் வலப்புறம் பல்லி சொல்லி அதன்பின் இடப் பக்கமும் தொடர்ந்து சொல்லுமானால் அம் மனைக்கு உரியோன் அரசனுக்கும் — ஆள்வோர்க்கும் மிகவும் வேண்டியவனாகவும், நல்வாழ்வு வாழ்பவனாகவும் இருப்பான்.

**காட்சியில் படும் பிற**

மனையில் சென்று நிற்கும்போதில் பின்வரும் உயிரினங்களைக் கண்டால் நற்பயனாகும்.

| உயிரினம் | பயன் |
|---|---|
| 1. வெள்ளைப் புறா | சீரும் சிறப்புமாக வாழ்வர் |
| 2. வெள்ளைப்பசு | |
| 3. வெள்ளைக் காளை | |

பறண்டை என்னும் புள் பாடியபடியே வலமிருந்து இடமாகச் செல்வதைக் கண்டால் துயரம் நீங்கி நலம் பயக்கும்.[13]

| பொருள் | பயன் |
|---|---|
| 1. மதுக்குடம் | |
| 2. மாமிசம் | |
| 3. பால் | |
| 4. நெய் | |
| 5. தண்ணீர் | மிகவும் மேலான நல் |
| 6. நல்லபுடைவை | விளைவுகள் ஏற்படும் |

7. மங்கல மகளிர்
8. நிறைகுடம்
9. யானை
10. குதிரை
11. தேர்
12. ஒற்றை ஆடவன்

தீய பயன்

மனையில் போய் நிற்கும்போது பின்வருவன நிகழு மாயின் மனைகோலாமல் திரும்பிவிடவேண்டும் என்கிறது மனை நூல். [14]

1. எறும்புகள் அணி அணியாகச் செல்லாது பிரிந்து சிதறிச் செல்வது.

2. கரையான்கள் பரவிக் கிடப்பது.

3. வண்டுகள் கண்டபடி மண்பரப்பைத் துளைத்துக் கொண்டிருப்பது.

4. ஓணான் எதிரில் ஓடி வருவது.

பின் வருவோரைக் காணநேர்ந்தால் அந்த இடத்தில் மனை கோலுவோர் குடி சீரழியுமாதலால் மனைகோலு வதைத் தவிர்க்க வேண்டுமாம். [15]

1. குடியன், 2. வலையன், 3. சுடுகாட்டு ஆண்டி, 4. முடமானவன், 5. செக்கு ஆட்டுபவன், 6. மூக்கறையன், 7. கூனன், 8. அந்தகன்.

இனி மனைகோலக் கருதிய இடத்தில் மண் பரப்பைத் தோண்டிப் பார்க்குங்கால் என்னென்ன தோன்றினால் என்னென்ன பலன் என்பது. [16]

1. தவளை, அறனை, பல்லி, சிலந்தி, நண்டு ஆகியவை தென்பட்டால் வீடு சிறப்படையும்.

2. பசுவின் கொம்பு, பல தானியங்கள், செங்கல், பஞ்சலோகம் (ஐம்பொன்) இவற்றுள் எது கிடைத்தாலும் செல்வம் மேன்மேலும் பெருகும்.

3. பொன், வெள்ளி, செம்பு இவற்றில் யாதொன்று அகப்பட்டாலும் நன்மையே — புதையல் கிடைத்தாலோ மிகப்பெரிய இன்பம் விளையும். இரும்பு, ஈயம், பித்தளை இவற்றுள் யாதொன்று கிடைத்தாலும் குறைந்த நற் பலனே விளையும்.

தீய விளைவுகள்

தோண்டிய மனையுள், 1. உடும்பு, 2. பாம்பு, 3. தேன்கூடு, 4. ஆமை, 5. பூரான், 6. வண்டு ஆகியவை தென்பட்டால் வீடு தீப்பட்டு அழியுமாம்.[17]

1. எறும்பு, 2. தேள், 3 கரையான், 4. மரக்கட்டை 5. முட்டை, 6. நகம், 7. உரோமம், 8. மண்டையோடு, 9. எலும்பு ஆகியவற்றுள் ஒன்றோ சிலவோ தென்படு மாயின் பெருந்தீங்கு நேரிடுமாம்.[18]

அகழ்ந்த மண் பரப்பில்,

கரி தோன்றினால், பிணியும்
உமி தோன்றினால், செல்வக்கேடும்
விறகு தோன்றினால், குல அழிவும்

நேரிடும் என்கிறது.[19]

கருங்கல்லோ, எலும்போ தென்பட்டால் மனையாள் உயிர்ச் சேதமும் மனைக்குரியோனுக்குப் பிணியால் நலிவும் நேரிடும்.

மேற்கூறிய ஏதுக்களால் மனையை அகழ்ந்து பார்க் காமல் வீடு கட்ட முயலக்கூடாது என்றும் அவ்வாறு ஆராயாமல் கட்டிவிட்டால் நடக்கும் தீய நிகழ்வுகளைக் கொண்டே கட்டப்பட்ட மனையின் எந்தெந்தப் பகுதியில்

என்னென்ன குறை என்று உய்த்துணர முடியும் என்றும் [20] மனைநூலே கூறிவிடுகிறது.

1. கட்டிய வீட்டின் கிழக்கு மூலையில் சிறுகுழந்தையின் எலும்பு கிடந்தால் அம்மனையில் கறவையினம் பயன் தராது.

2. தென்கிழக்கு மூலையில் பரி எலும்பு கிடந்தால் பசு கறக்காததோடு அரசினர் சினத்துக்கு ஆளாக நேரிடும்.

3. யானை எலும்பு தென்புறத்திற்கிடந்தால் மனைக்குடையோன் 'ருணகாரனாக' (நோயாளி) இருந்து துயரப்படுவான். [21]

4. தென்மேற்கு மூலையில் பன்றி எலும்பு இருந்தால் அபமிருத்யு பாவம் (துர்மரணம்) விளையும்,

5. மேற்குப்புறம் எருதின் எலும்பு கிடந்தால் மனைக்குடையோன் பிறருக்கு ஆருடம், போக்குவரவு பற்றி உரைக்கும் தொழிலில் இருப்பான்.

6. மனையின் எப்பகுதியில் கழுதை எலும்பு இருப்பினும் உரியோன் பொருள் நாசத்தால் வருந்துவான்.

7. ஆட்டு எலும்பு வடக்கே இருந்தால் அண்டை அயலார் விரோதமே நிகழும். [22]

8. வடகிழக்கு மூலையில் நாய் எலும்பு இருந்தால் எப்போதும் கலகமே விளையும்.

இக்காரணங்களால் கட்டடம் கட்டத் தொடங்குமுன் மனையை நன்கு அலசி ஆய்ந்த பின்பே பணி தொடங்க வேண்டும் என்கிறது மனைநூல்.

## மண் தேர்வும் பிறவும்

கட்டடம் கட்டுவதற்கு உரிய மனையின் மண்ணைத் தேர்ந்து சோதனை செய்யவும் அதன் முடிவை பொறுத்து

மனை அமைக்கவும் கூட நூலில் வழி செய்யப்பட்டுள்ளது.[23]

மனை நூலில் கூறுவதையே இன்றைய மண் ஆய்வாளர்களும் கூறுகின்றனர். தற்காலப் பொறியியலில் மண் ஆய்வு (Soil investigation) உரிய இடத்தைப் பெற்றுள்ளது.

மண்ணை அகழ்ந்து பார்த்தல், குழி வெட்டிப் பார்த்தல் போன்ற மனைநூல் முறைகள் இவ்வாறு மண் ஆய்வைப் பொறுத்தவையாகத் தோன்றுகின்றன.

எப்பொருளுக்கும் அடிப்படை நன்கு அமைதல் வேண்டும் என்னும் உலக வழக்குப்படி இக்கட்டடங்கள் எல்லாம் நிலைத்து நிற்க வேண்டின் சிறந்த அடித்தளங்களைப் பெற்றவையாயிருக்க வேண்டும். அடித்தளங்கள் செவ்வனே அமைய வேண்டின் அவை அமைக்கப்படும் இடத்தில் முழுமையான மண் ஆய்வு நடத்தப்படல் சாலவும் இன்றியமையாததாகும்.

மண் ஆய்வு கீழ்க்கண்ட நோக்கங்களோடு நடத்தப்படுகிறது.

(அ) கீழ் மண் தளத்தின் (Sub soil Strata) தாங்குதிறனை (Bearing Power) கண்டுபிடிக்க,

(ஆ) எவ்வளவு ஆழத்தில் உறுதியான தளம் உள்ளது என்பதனை அறிய,

(இ) நமக்குத் தேவையான தாங்குதிறன் கொண்ட தளம் எவ்வளவு ஆழத்தில் உள்ளது என்பதையும் அத்தளத்தின் உயரம் என்ன என்பதையும் கண்டறிய,

(ஈ) எவ்வளவு ஆழத்தில் கீழ்த்தள நீர் மட்டம் உள்ளது என்று காண[24]

என்று வகைப்படுத்துவர் பொறியியல் நூலார். இதே செயலை மனை நூலாரும் வேறு வகையில் செய்து பார்த்திருக்கின்றனர்.

'திறந்த வெட்டுக் குழிகள்' (Open pits) அகழ்ந்து ஆய்தல் (Probing) என்று இருவகை மண் ஆய்வு கூறப்படுகிறது. மண்ணின் அழுத்தத்தன்மை (Compressibility) யும் காணப்பட வேண்டும். [25]

குழி அகழ்ந்து எடுத்தமண்ணை மீண்டும் குழியிலேயே இட்டுப் பார்க்கும் மனைநூல் முறையின்படி இந்த மண் அழுத்தத் தன்மையே பரிசோதிக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர முடிகிறது. [26]

பாட்டியல் நூல்களில் இன்னின்ன வருணத்தார்க்கு இன்னின்ன பாட்டு என்று கூறப்பட்டுள்ளது போல மனை நூலிலும் கூறப்படுகிறது. இன்னின்னவர்க்கு இந்த வகை மனை என வருதலைக் காண்கிறோம்.

(1) அந்தணர்க்கு : வெண்மை வண்ணமும் இனிமைச் சுவையுமுடைய தாமரைப் பூவின் நறுமணம் பொருந்திய மண்ணில் அந்தணர் வீடு கட்டினால் அனைத்து நலனும் எந்நாளும் பெற்று மங்கல நல்வாழ்வு வாழ்வர்.

(2) அரசர்க்கு : செந்நிறமும், துவர்ப்பான சுவையும் குதிரையின் மேனி மணமும் உள்ள நிலத்தில் அரசர் வீடு கட்டினால் துயரமின்றிக் குபேரனை ஒத்த செல்வம் நிலைத்திருக்க வாழ்வர்.

(3) வேளாளர்க்கு : கரிசல் நிறமும் (கருப்பு) கைப்புச்சுவையும், காரச்சுவையும், தானியங்களின் மணமுமுள்ள நிலத்தில் வேளாளர் வீடு கட்டினால் சிறப்புள்ளதாயிருக்கும். [27]

(4) வணிகர்க்கு : பசு நிறமும் (பச்சை) புளிப்பு உவர்ப்புச் சுவையும் உள்ள நிலத்தில் வாணிகஞ் செய்வார் கட்டடம் கட்டினால் உயர்வு அடைவர்.

பொதுநிலை

(5) பொதுவில் என்றுமே இடையறாத இனிமையும், நறுமணமுமுள்ள நிலத்தில் எவ்வினத்தவரும் வீடு கட்ட எந்தக் குறைவும் வராது.

(6) தயிர், நெய், தேன், குருதி, மயிர், மீன், பட்சி ஆகியவற்றின் மணமுள்ள மனையில் கட்டடம் எடுத்தால் எவர்க்கும் ஆகாது. நல்லன எவையும் விளையா.[28]

உயர்வு தாழ்வு — திசைகள்

மனையின் கிழக்குப் பக்கமும் வடக்குப் பக்கமும் தாழ்வாகவும், மேற்குப்பக்கமும், தெற்குப்பக்கமும் உயர்ந்தும் உள்ள நிலம் கட்டடத்திற்கு என அமைந்தால் பெரிதும் நலம் பயக்கும்.[29]

(1) தென் சார்பாக வடக்குப் பார்த்த வாயில் அமைகிற மனை மறையோர்க்கு நல்லது.

(2) மேற்குச் சார்பாகக் கிழக்குப் பார்த்த வாயில் அமைகிற மனை அரசர்க்கு நல்லது.

(3) வடக்குச் சார்பாகக் கிழக்குப் பார்த்த மனை அமைவது வணிகர்க்கு நல்லது.

(4) கிழக்குச் சார்பாக மேற்கைப் பார்த்த மனை அமைவது வேளாளர்க்கு நல்லது.

ஏற்ற இடம் — நிமித்தம்

மேற்கூறியபடி தேர்ந்தெடுத்த மனையில் கட்டடம் கட்டும் உரிமையாளன் தன்னைவிட மூத்தோர், குருக்கள், இரு முது குரவர், சுற்றத்தாரில் மூத்தவர் ஆகியோர் தன் இடத்திற்கு மேற்கேயும் தெற்கேயும் அமையுமாறு செய்து அவர்கள் வசிப்பிடத்திற்குக் கிழக்கிலும் வடக்கிலும் தன்

இடம் அமையச் செய்து கொள்வதே உயர்வு அளிக்கும் என்கிறது மனை நூல்.[30]

(1) இந்திர திசை எனப்படும் மனையின் கிழக்குப் பக்கத்தில் புற்றுத் தோன்றுமாயின் பொருளும் செல்வமும் பெருகும்.[31]

(2) அக்கினித் திசை எனப்படும் தென்கிழக்குப் பக்கத்தில் புற்றுத் தோன்றுமானால் கட்டப்படும் கட்டடம் இடிந்து பாழாகிவிடும்.

(3) எமன் திசை எனப்படும் தெற்குப் பக்கத்தில் புற்றுத் தோன்றுமாயின் அக் கட்டடத்தில் உள்ளார்க்குத் துன்பம் தொடர்ந்து வரும்.

(4) நிருதித் திசை என்று கூறப்படும் தென்மேற்குத் திசையில் புற்றுத் தென்படுமாயின் கட்டடத்திற்கு உரியோன் எல்லாத் திசைகளிலும் புகழ் பெற்று உயர்ந்த வாழ்வைப் பெறுவான்.

(5) வருண திசை எனப்படும் மேற்குத் திசையில் புற்றுத் தோன்றுமேயானால் நன்மக்கட்பேறு — புத்திரப் பேறு அடைவர்.

(6) 'வாயு திசை' எனப்படும் வடமேற்குத் திக்கில் புற்று உண்டாகில் மரணம் ஏற்படும்.

(7) குபேர திசை எனப்படும் வடக்குத் திசையில் புற்றுத் தோன்றினால் அனைத்துச் சிறப்பும், செல்வமும் சீரும் பெறுவார்கள்.

(8) ஈசானிய திசை எனப்படும் வடகிழக்குத் திசையில் புற்றுத் தோன்றினால் அனைத்து நாளும் பிணி பெருகி நலிவடையும்.

(9) கட்டட மனையின் மேற்கூறிய எட்டுத் திசையும் அல்லாமல் இவற்றுக்கு நடுவில் உள்ள நடுவன் மனைப்

பகுதியை பிரம்மத்தானம் என்பர். இந்த நடுவன் மனைப் பகுதியில் புற்றுத் தோன்றினால் பெருங்கேடு. அதாவது சாவு நிகழும் என்கிறது மனைநூல்.[32] புற்று நிமித்தத்திற்காகப் பகுத்துக்கூறப்பட்ட எண்திசைகளையும் பிரம்மத்தானத்தையும் வெறும் திக்குகளாக மட்டும் பார்க்காமல் மனையின் ஒன்பான் பகுதிகளாகப் பார்க்க வேண்டும் என்று கூறும் மனை நூல்.

மனை கோலுதல்

கட்டடம் கட்டுவதற்கு முன் தாமாக நேரும் நிமித்தங்கள், சகுனங்கள், நேர்ச்சிகள் தவிர மனையில் கட்ட இருப்பவன் தானாகப் பார்க்கும் சில அடையாளக் குறிப்புக்களும் உள்ளன.

பூப்போட்டுப் பார்த்தல்

மங்கல நன்னாளைத் தேர்ந்தெடுத்துக் கட்டடம் கட்டப் புகுவோன் தன் குடும்பத்துடனும் சிற்பியுடனும் மனைக்குச் சென்று மனையின்கண் ஒரு முழ அகல ஆழமுள்ள குழி ஒன்றை அகழ்ந்து — அதனைத் தண்ணீரால் நிரப்பி அதன்மேல் நறுமணமுள்ள மலரை இடுதல் வேண்டும். அங்ஙனம் இடப்பட்ட மலர் நீர்ப்பரப்பிலே வலமாகச் சுற்றி வருமாயின் அம்மனையில் கட்டும் கட்டடத்தில் அனைத்து நலன்களும் பெருகி வளரும்.[33]

இடப்பக்கமாகச் சுற்றி வருமாயின் துன்பம் நேரும் என்பதால் அம்மனையில் கட்டடம் கட்டாமல் விடுதலே சிறந்தது. "வேலை செய்யும் மண்வெட்டி கொட்டு முறியுமாயினும் முனை முறியுமாயினும் கழலுமாயினும் சாவு நேரும் என்பர்.

தொடங்கும்போதே இதைச் செய்து திருவுளக் குறிப்பு அறிந்துவிடுதல் மரபு. பெரும்பாலும் ஈசானிய மூலை எனப்படும் வடகிழக்கு மூலையில் இவ்வாறு அகழ்ந்து

நீரூற்றி மலரிட்டுப் பார்ப்பது வழக்கமாகும். இது தவிர மற்றொரு வழக்கமும் இருந்தது. [34]

**நீரூற்றி மறுநாள் காணும் நிலை**

வீடு கட்டுகிற மனையில் கிழக்கு அல்லது வடக்குப் பக்கத்தில் நாற்சதுரமாகத் தோண்டி அவ்வாறு அகழ்ந்த குழியில் மங்கல மங்கையர் மூவர் குடங்களில் நீர் கொண்டு வந்து ஊற்ற வேண்டும். ஊற்றியபின் அம்மூவரும் ஊற்றிய நீரைத் திரும்பிப் பார்க்காமல் சென்றுவிட வேண்டும். பள்ளத்தில் அவர்கள் ஊற்றிய நீர் வலப்பக்கமாக ஓடிப் பாய்ந்தால் வெற்றி, செல்வம், செல்வாக்கு அனைத்தும் நாடி வரும். இடப்பக்கமாக ஓடினாலும், நுரையும், குமிழியும் ஆக நீர் உள்ளிறங்கினாலும் பல தீமைகள் வரும். [35]

இனி இதனை இவ்வாறன்றி வேறுவிதமாகக் காணலும் உண்டு. அகழப்பட்ட பள்ளம் நிறையுமாறு முந்திய மாலையில் நீரூற்றி மறுநாள் கதிரவன் உதிக்கும் காலத்தே வந்து பார்க்கவேண்டும்.

அவ்வாறு காணுங்கால் மூன்றுபிடி (விரற்கடையளவு) நீரேனும் எஞ்சித் தேங்கி நிற்குமாயின் அது மிக நல்ல மனையாகும். நீர் இன்றிச் சேறாக ஈரப்பதத்தோடு இருப்பினும் நன்றே.

நீர் வறண்டு வெடித்திருந்தால் தாழ்வு நிலை வந்தெய்தும்.

ஈரப்பசையின்றிப் பாளம் பாளமாகப் பூமி பிளந்திருந்தால் நோயும், சிறைத் தண்டனையும் எய்தும்.

**மண் எடுத்து மீண்டும் அடைத்தல்**

மனை கோலும் இடம் நல்லதா கெட்டதா என அறிய மற்றொரு முறையும் வழக்கில் இருந்தது. [36]

மனைகோலும் அடையாளமாக அகழ்ந்த குழியிலிருந்து எடுத்த மண்ணை மீண்டும் அதே குழியில் இட்டு நிரப்பிப் பார்க்க வேண்டும்.

அம்மண் குழியையும் நிரப்பி மீதமும் எஞ்சுமானால் அங்கே கட்டப்படும் மனையில் வருவாயும், செல்வமும் பெருகி ஊதியம் உயரும் எனக்கொள்ளல் வேண்டும். இட்ட மண்ணினால் குழி சரிசமமாக நிரம்ப மட்டுமே செய்யுமாயின் அம்மனையில் வாழ்பவனின் வரவுக்கும் செலவுக்கும் சமமாயிருக்கும் என்று கொள்ள வேண்டும். உயர்வுமின்றித் தாழ்வுமின்றி எல்லாம் சமமாய் இருக்கும் என்க. இட்டமண் குழியை நிரப்பப் போதாமல் குறைந்து விடுமாயின் வருவாய் குன்றிச் செலவு மிகுதியாகி வறுமை வந்தெய்தும் எனக் கொள்ளவேண்டும். இது தவிரத் தேங்காய்க் குறி என ஒன்றும் இருந்தது. [37]

**தேங்காய் அடையாள முறை**

மனை மங்கலம் செய்யும்போது அங்கு வழிபாட்டின் நிமித்தம் உடைக்கப்படும் தேங்காய் எவ்வாறு உடைகிறது என்பதைப் பொறுத்து நன்மை தீமைகள் கணிக்கும் நிலையும் இருந்தது. அவை வருமாறு: [38]

(1) தேங்காயின் குடுமி உள்ள முடிப்பக்கம் (கண்கள் உள்ள பக்கம்) பெரிதாகவும் அடிப்பக்கம் சிறிதாகவும் உடைந்தால் அந்த மனையில் திருமகளின் அருள் பொங்கிச் செல்வம் பெருகும்.

(2) முடிப் பக்கம் மும்மடங்கும், அடிப்பக்கம் ஒரு மடங்குமாக உடைந்தாலும் அங்கே கட்டப்படும் மனையில் மிக்க உவகை விளையும்.

(3) முடிப்பக்கம் ஐந்தில் மூன்று பங்கும் அடிப்பக்கம் ஐந்தில் இரு பங்குமாக உடைந்தால் அக் குடும்பம் நலமாயிருக்கும்.

(4) நரம்பு பிடித்திருந்தால் அக்குடும்பத்தினர் நீடூழி வாழ்வார்கள் என்று பொருள்படும்.

(5) உடையும்போது சிறுபகுதித் துண்டுத் தேங்காய் மூடியினுள் விழுமாயின் அவ்வீட்டில் இரத்தினம் கூடும் என்பர்.

(6) உடையும் தேங்காய் அகலத்தில் இரண்டாக உடையாமல் நீளத்தில் நெடுங்குத்தாகப் பிளக்குமானால் மிக்க துயரம் உண்டாகும்.[39]

(7) பெரும் பங்கு சிறு பங்கு இன்றிச் சரி பாதியாய் உடையுமாயினும் நன்மை தரும்.

(8) நான்கு அல்லது ஆறு சுக்கல்களாகச் சிதறி உடையுமாயின் மிக்க கேடு பயக்கும்.

(9) தேங்காய் கண்ணுள்ள பகுதியில் உடைந்து அவ்வாறு உடைந்த பகுதி மனைக்குரியவன் மேல் தெறித்து வந்து விழுமாயின் அவனுக்குச் சாவு வரும்.

(10) மேலோடு கழன்று தனியாகப் பிரிந்து உடைந்தால் வறுமை உண்டாகும்.

(11) மேலோடு கழன்று மேலே வந்து விழுந்தால் மனை கட்டுகிறவன் பிணியடைவான்.

(12) ஓடு உடைந்து கழன்று மனையில் விழுந்தால் உரியவன் வீடு வாசலை விற்க நேருமளவு வறுமை அடைய நேரிடும்.[40]

பொருந்து மனைகள் - சில பொருந்தா மனைகள் [41]

(1) தெரு அல்லது வீதி மட்டத்தை விட மிகவும் பள்ளமாக இருக்கும் மனையில் வீடுகட்ட முற்படலாகாது. கிழக்கு மேற்குத் திசைகளில் நீண்டும் வடக்குத் தெற்குத் திசைகள் சற்றே குறுகலாகவும் இருப்பது நல்லது. பூமி கோணலாக இருக்கக்கூடாது.

(2) மூன்று மூலைகள் சரிவரப் பொருந்தி முக்கோண மாய் நான்காம் மூலையே இல்லாது பாம்பின் வால்போல அமைந்த இடத்திலும் வீடு கட்டலாகாது. பழைய மனையைச் சிதைத்த இடத்தில் கட்டுதலும் புதிய மனை யில் பழைய வீட்டு உறுப்புக்களைப் பயன்படுத்தலும் ஆகா என்கிறது மனை நூல்.[42]

(3) வளைகளும் பொந்துகளும் உள்ள மனையும் கட்டடத்திற்கு ஆகாது.

(4) சூரிய சந்திரர் உதிக்கும்போது பார்வையில் படாத இடங்களில் வீடமைக்கலாகாது. அதாவது பார்வையில் படுமாறு அமைப்பது சிறப்பு ஆகும்.

ஏற்ற மாதங்கள் - ஏலாத மாதங்கள்

(கிரகாரம்பம் அல்லது பூமி பூஜை) மனை செய்வதற்கு ஏற்ற மாதங்கள் இவை, ஏலாத மாதங்கள் இவை என்றும் மனை நூலில் கூறப்பட்டுள்ளன.

புதிதாக வீடு கட்டப் புகுந்து மனை கோல முற்படு கிறவர்களுக்கு உத்தமமான பயன்கள் விளையும் மாதங் களாவன. பின்வரும் எட்டு மாதங்கள்.[43]

1, சித்திரை, 2. வைகாசி, 3. ஆடி, 4. ஆவணி, 5. ஐப்பசி, 6. கார்த்திகை, 7. தை, 8. மாசி.

மேற்படி மாதங்களில் மனைகோலுவோருக்கு மிகவும் (அநுகூலங்கள்) நற்பலன்கள் விளையும் என்று கூறப்பட் டுள்ளது. இவ்வெட்டு மாதங்களிலும் மிகமிகச் சிறந்த மாதங்களாக வைகாசி, கார்த்திகை ஆகிய இரு மாதங்கள் கருதப்படுகின்றன. சித்திரை மாதம் சிறந்தது என்ற கருத்து நெடுநல் வாடையிலும் வருகிறது.[44]

மனை கோலும் முயற்சிக்கு ஆகாத மாதங்களாவன, பின்வரும் நான்கு மாதங்கள்.

1. ஆனி, 2. புரட்டாசி, 3. மார்கழி, 4. பங்குனி.

இம்மாதங்களில் கட்டி முடித்த வீடுகளில் குடி புகவும் கூடாது என மனைநூல் தடுக்கிறது. ஆகாத மாதங்களில் முயன்றால் பகையும், துன்பமும் உண்டாவதோடு குடி புகுந்தாலும் பிணி, பீடை நலக் குறைவுகள் நேரும் என்று சொல்லப்படுகிறது. கட்டடக் கலையின் அதிதேவதையாகிய வாஸ்து புருடனின் நிலையறிந்து கட்டுவோன் நாள்கோள் மீன் முதலியன சரிபார்த்து மனைகோல வேண்டும் என்பதை மிக விரிவாக மனைநூல் கூறும்.

மனையடி நீள அகலம்

கட்டடம் கட்டும் மனையில் கட்டப்படும் நீள அகல அடியளவை வைத்து நன்மை தீமைகளைக் கூறுவதால் தான் இவ்வகை நூல்களுக்கு 'மனையடி சாஸ்திரம்' என்ற பெயரே வந்தது.[45] தவிர அடிகொள்ளல் - தொடங்கல் என்றும் அடிகோலுதல் — அஸ்திவாரம் போடுதல் என்றும் பொருள்படுவனவாகும்.[46]

புதிதாகக் கட்டப்படும் வீட்டின் அறைகள், கூடங்கள், தாழ்வாரம் (சறுக்கார்) வாசல்கள் போன்றவற்றிக்கு உரிய நீள அகலங்களின் நன்மை தீமைகள் பற்றி விளக்கப்படுகிறது. அடி என்பது முன்னாளில் காலடி அளவும்—இந்நாளில் அடி அளவுமாகக் கொள்ளலாம். மேற்கூறிய அனைத்துப் பகுதிகளின் நீள அகலத்துக்கும் இப்பலன்கள் பொருந்தும். மனையில் கட்டடம் கட்டுவோர் தங்கள் நன்மைக்கேற்ப அளவுகளைத் தேர்ந்து கொள்ளவேண்டும்.[47] விஞ்ஞான அறிவு வளர்ந்துள்ள இந்நாளிலும் மரபில் நம்பிக்கையுள்ள தமிழ் மக்கள் அந்த அடிமுறை நம்பிக்கைகளைக் கைவிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதே அடி முறை நம்பிக்கையான வேறொரு வகையில் கணித்துப் பார்ப்பதும் உண்டு. யார் மனையில் வீடு

கட்டப் போகிறாரோ அவரே தம் காலடியால் அளந்து பார்த்துக் கொள்கிற முறை அது. [48]

| அளவு (நீள அகலம்) | பலன் |
|---|---|
| ஏழு அடி | நினைத்த செயல் நிறைவேறாமல் நோயுண்டாகும் |
| எட்டு அடி | எண்ணிய செயல் முடியும். பகைவர் விலகுவர். பட்டமரமும் தளிர்க்கும் |
| ஒன்பது அடி | ஆயுள் குன்றும்—மனையாள் இறப்பாள் |
| பத்து அடி | கால்நடை கன்று கால்கள் பெருகும் வேளாண்மை விருத்தியாகும் |
| பதினோரடி | பாலும் சோறும் நிறையும் பயிர்த் தொழில் வளரும் |
| பன்னிரண்டு அடி | செல்வம் நலியும். வருத்தம் மிகுதியாகும் |
| பதின்மூன்று அடி | எண்ணிய செயல் இயலாது. உறவினர் உகைவர் ஆவர். தொல்லைகள் மிகும் |
| பதினான்கு அடி | இன்ப அழிவு. உயிர்ச்சேதம் |
| பதினைந்து அடி | நோயால் சாவு—பாவம் — செல்வம் வந்து சேராது |
| பதினாறு அடி | செல்வ வளர்ச்சி, புத்திரப்பேறு, பகைவர் விலகுவர் |
| பதினேழு அடி | பகைவர் வணங்கிப் பணிவர். இறையருள் சித்தி—அரச பதவி கிட்டல் |

| | |
|---|---|
| பதினெட்டு அடி | செல்வ அழிவு — கையிலிருந்த பொருள் விலகல்—மனையாள் பிணியுறல் |
| பத்தொன்பது அடி | மனைவி சாவு—சண்டை பயம்—புத்திர சோகம் நேரும் |
| இருபது அடி | புத்திரப் பேறு—வாணிகப் பெருக்கம் செல்வமும் மகிழ்ச்சியும் நிலைத்தல் |
| இருபத்தோரடி | பால் பாக்கியம் பெருகும். துன்பம் அணுகாது. |
| இருபத்திரண்டு அடி | மகிழ்ச்சியான வாழ்க்கை. நன் மக்கட்பேறு—பகைவர் அஞ்சும் நிலை |
| இருபத்துமூன்றுஅடி | ஆயுட் குறைவு—நோய் மிகுதி—சுற்றத்தார் விட்டு விலகுவர் |
| இருபத்துநான்குஅடி | ஆயுட் குறைவு |
| இருபத்தைந்து அடி | மனையாள் இறப்பாள் |
| இருபத்தாறு அடி | இந்திரன் போல் போக வாழ்வு |
| இருபத்தேழடி | உலகு புகழ வாழ்வர்—பட்ட பயிரும் விளையும் |
| இருபத்தெட்டடி | செல்வ மிகுதி — நிறை வாழ்வு, எதிரிகள் அச்சம் |
| இருபத்தொன்பதடி | எல்லா வளமும் பெருகும் |
| முப்பதடி | செல்வப் பெருக்கம். புத்திரப்பேறு |
| முப்பத்தோரடி | இறையருள் உண்டாகும் |
| முப்பத்திரண்டடி | இறையருளால் உலகமே அடிப்படும் |

| | |
|---|---|
| முப்பத்து மூன்றடி | குடிப் பெருமை உண்டாகும் |
| முப்பத்து நான்கடி | வீட்டை வீட்டு ஓட நேரும் |
| முப்பத்தைந்தடி | பலவகைச் செல்வமும் உணடாகும் |
| முப்பத்தாறடி | அரச போக வாழ்க்கை |
| முப்பத்தேழடி | இன்பமும் இலாபமும் உண்டாகும் |
| முப்பத்தெட்டடி | வீட்டில் பேய் பிசாசுகள் குடி இருக்கும் |
| முப்பத்தொன்பதடி | இன்பமும் சுகமும் உண்டாகும் |
| நாற்பதடி | சலிப்பும் சோர்வும் உண்டாகும் |
| நாற்பத்தோரடி | குபேர வாழ்வு பெறுவர் |
| நாற்பத்திரண்டடி | எல்லாச் செல்வமும் நிலை பெறும் |
| நாற்பத்து மூன்றடி | சிறப்பு கெடும்—தீமையுண்டாகும் |
| நாற்பத்து நான்கடி | கண்பார்வை அழியும் |

வேறு சிலநூல்களில் 100அடி 108 அடி வரை பலன்கள் கூறப்பட்டுள்ளன.

மனை அமைப்பும் அறைகளும்

வீட்டின் அறைகள், கூடங்கள், வாயில் முதலான வற்றிற்கும் அடி அளவுப்பொருத்தம், நற்பயன், தீயபயன் ஆகியவை விவரிக்கப்பட்டிருக்கின்றன.[49]

மனையின் தெற்குத் திசையில் குப்பை கொட்டவும், தென்மேற்குத் திசையில்—தென்மேற்கு எல்லையில் வைக் கோல் போர் வைக்கவும், மேற்குத் திசையில் எருமை முதலிய கால்நடைகளைக் கட்டும் கொட்டகை ஏற்படுத்த வும், வடமேற்குத் திசையில் நவதானியங்களை ஆண்டு

முழுமைக்கும் சேர்த்து வைக்கும் தொம்பை அமைக்கவும், வடக்கில் பசுவிற்கான தனித்தொழுவம் மட்டும் அமைக்கவும் ஏற்ற வகையில் வீடு கட்ட வேண்டும்.[50]

இவ்வாறு முறை அமைத்தால் வீட்டில் வசிப்பவருக்கு ஏற்றமும், நலனும், உயர்வும் கூடிப் பெருகும் என்பது பயனாக உரைக்கப்பட்டுள்ளது.

எருமை முதலிய கால்நடைகளைக் கட்டும் இடத்திலிருந்து பசுத் தொழுவம் தனியே உயர்வு கொடுத்துப் பிரிக்கப்பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

வீட்டிற்குள் கிழக்குத் திசையில் குளிக்கும் இடமும் அக்கினி மூலையில் உணவு சமைக்கும் இடமும் ஏற்படுத்தப் பெறவேண்டும்.[51]

தெற்கில் கணவன் மனைவி உறங்கும் படுக்கையறையும், மேற்கில் சமைத்த உணவினை அமர்ந்து உண்ணும் இடமும் அமைந்திருப்பது நல்லதாம். உணவு சமைக்குமிடமும் அமர்ந்து உண்ணும் இடமும் வேறு வேறாய் அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது. வாயு மூலையில் பசுத் தொழுவமும், வடக்கில் தானியங்கள் சேர்த்து வைக்கும் இடமும், ஈசான்ய மூலையில் வழிபாட்டு அறையும் இருந்தால் அவ்வீட்டிற்குரியோன் அரச யோகம் பெறுவான் என்கிறது மனை நூல்.

முழக்கோல் அளவு

பழைய நாட்களில் நிலத்தை அளக்கவும் கணக்கிடவும் முழக்கோல் பயன்படுத்தப் பெற்றது. 'முழக்கம்பு' என இதற்கு மற்றொரு பெயரும் உண்டு.[52] அதைப் பற்றிய விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| அணு எட்டுக் கொண்டது | —புல் நுனி |
| புல் நுனி எட்டுக் கொண்டது | —நுண்மணல் |
| நுண்மணல் எட்டுக் கொண்டது | —எள் |

| | |
|---|---|
| எள் எட்டுக் கொண்டது | —நெல் |
| நெல் எட்டுக் கொண்டது | —துவரை |
| துவரை எட்டுக் கொண்டது | —விரற்கடை |
| விரற்கடை ஆறு கொண்டது | —கால் முழம் அல்லது அரைச் சாண் |
| அரைச்சாண் இரண்டு கொண்டது | —ஒரு சாண் |
| சாண் இரண்டு கொண்டது | —ஒரு முழம் |
| இருபத்து நான்கு விரற்கடை | —கிடகு |

கிடகு வேளாளருக்கு முழம் என்று கூறப்படும். இருபத்தைந்து விரற்கடை கொண்டது பிராசாபத்தியம். பிராசாபத்தியம் வைசியருக்கு முழம் என்று கூறப்படும். இருபத்தாறு விரற்கடை கொண்டது தனுமுட்டி, தனுமுட்டிஅரசருக்கு முழம் என்றுகூறப்படும். இருபத்து ஏழு விரற்கடை கொண்டது தனுக்கிரகம்—தனுக்கிரகம் அந்தணருக்கு முழம் என்று கூறப்படும்.

முழக்கோல்—மற்றொரு வகை

| | |
|---|---|
| அணி எட்டுக் கொண்டது | —ஒரு பஞ்சின் தூள் |
| பஞ்சின் தூள் எட்டுக்கொண்டது | —ஒரு மயிர் முனை |
| மயிர் நுனி எட்டுக் கொண்டது | —ஒரு மணல் |
| மணல் எட்டுக் கொண்டது | —ஒரு கடுகு |
| கடுகு எட்டுக் கொண்டது | —ஒரு மூங்கில் அரிசி, |
| மூங்கில் அரிசி எட்டுக்கொண்டது | —ஓர் அங்குலம் |
| அங்குலம் ஆறு கொண்டது | —கால் முழம் |
| அங்குலம் பன்னிரண்டு கொண்டது | —அரை முழம் |

அங்குலம் பதினெட்டுக்
கொண்டது —முக்கால் முழம்

அங்குலம் இருபத்து நான்கு
கொண்டது —ஒரு முழம் [53]

இவற்றுள் கோயில் மனை அறை, மண்டபம், மாளிகை போன்றவற்றை இருபத்து நாலு விரற்கடை கொண்ட கிடகால் அளப்பது மரபாக இருந்தது. கோபுரம் கூடம் போன்றவற்றை ஆறுவிரல்கடை கொண்ட முழத்தால் அளப்பது வழக்கமாக இருந்து வந்தது.

### கட்டடமும் மரவகைகளும்

வீடு கட்டுவதற்குப் பயன்படும் மரங்கள் பற்றியும், எந்தெந்த மரங்களை எங்கெங்கே பயன்படுத்த வேண்டும் என்பது பற்றியும் எவ்வெவற்றிற்கு என்ன விளைவு என்பது பற்றியும் மனை நூல் விவரிக்கிறது. [54]

பயன்படுத்த ஏற்ற மரங்களையும் பயன்படுத்தக் கூடாத மரங்களையும் பெயர் சுட்டி இனம் பிரித்துக் கூறவும் செய்கிறது.

(அ) ஆண் மரம் (ஆ) பெண் மரம் (இ) அலி மரம்.

என மரங்களை மூன்று வகையாகப் பிரிக்கிறது மனை நூல். ஒரு கட்டடத்தில் எக்காரணத்தைக் கொண்டு பயன் படுத்தக் கூடாதவை எனப் பின்வரும் மரங்களைத் தவிர்க்கச் சொல்லுகிறது.

### கூடாத மரங்கள்

1. அத்தி, 2. ஆல், 3. இச்சி (இறலி மரம்) 4. அரசு, 5. இலவு, 6. புரசு, 7. குச்சம் (குன்றிமணி மரம்), 8. இலந்தை,, 9. பீலி (பனங்குருத்து) 10. மகிழ், 11. விளா, 12. அகத்தி, 13. எருக்கு, 14. நாவல்.

இம்மரங்களைக்கட்டடத்தில் பயன்படுத்தினால் இருக்கிற செல்வம் தேய்பிறை போலத் தேய்ந்துவிடும்—இருள் சூழும் எனக் கூறுகிறது மனைநூல். வாரிசுகள் இழப்பும், பெருந்துன்பங்கள் அடுத்தடுத்து வருவதும் இம்மரங்களால் விளையுமாம்.

இவை தவிர நெருப்புப் பட்டுப் பாதியளவு வெந்த மரங்கள் அவற்றின் வேகாமல் எஞ்சிய பகுதிகள் கொடி சுற்றிய மரங்கள் யானை முறித்த மரங்கள், பாழடைந்த வீட்டு மரங்கள், பெரும்புயல், காற்று போன்ற இயற்கைச் சீற்றத்தால் வீழ்ந்துபட்ட மரங்கள், கோயிலுக்குச் சொந்தமான மரங்கள், சுடுகாட்டில் இருந்த மரங்கள் போன்றவற்றையும் கட்டடத்தில் பயன்படுத்தக் கூடாது.[55]

ஏற்ற மரங்கள்

மிகவும் வலிமை உடையவனாய் தூண் போலப் பருத்து அகக்காழுடையனவாய் (உள்ளே வைரம் பாய்ந்தவை) அமையும் மரங்களே ஆண்மரம்.

> புறக் காழனவே புல்லென மொழிப
> அகக் காழனவே மரனென மொழிப [56]

என்னும் தொல்காப்பிய மரபியல் நூற்பா இங்கு நோக்கத் தக்கது. மரத்தின் அடிப்பகுதி மட்டுமே பருத்து நுனிப் பகுதியில் போகப் போகச் சிறுத்து அமையும் மரங்கள் பெண்மரம் எனப்படும்.

சிறுத்து நீண்டு மெலிந்து புறக்காழுடையதாக (உள்ளே வைரம் பாயாமல்) நெடிதாய்த் தலைப்பகுதி மட்டும் பெரிதாயுள்ளதாய்க் காணப்படின் அத்தகையவற்றை அலிமரம் என்பர்.

இம்மூன்று வகை மரங்களில் எங்கெங்கே எவ்வெவற்றைப் பயன்படுத்தலாம் என்பதற்கும்கூட மனைநூலில் வரையறைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

வாசற்கால், தூண், பலகணி போன்றவற்றிற்கு ஆண் மரங்களையே பயன்படுத்த வேண்டும்.

உத்திரம், விட்டம், வளை, தாழ்வாரம் தாங்கிக் கட்டை, சிறுதூண், சுமைதாங்கிக் கட்டை ஆகியவற்றுக்குப் பெண் மரங்களைப் பயன்படுத்தலாம்.

சிறுவிட்டம், சட்டம், கைகள், வேலி ஆகியவற்றிற்கு அலி மரங்களையே பயன்படுத்திக்கொள்ளலாம்.

காட்டில் சென்று மரம் வெட்டிவர அல்லது மரம் வாங்கவும் காலநேரப் பொருத்தங்கள் கூறுகிறது மனை நூல்.

இனி இன்னின்ன வருணத்தார்க்கு இன்னின்ன மரம் நலம் தரும் எனக் கூறப்படுவதனையும் மனைநூலில் காண முடிகிறது.

தேவர்க்கு மாமரமும், அந்தணர்களுக்கு வேப்ப மரமும், அரசர்களுக்குத் தேக்குமரமும், வணிகர்களுக்கு இலுப்ப மரமும், வேளாளர்க்கு வேங்கை மரமும் நலம் தருபவை என்று மனைநூல் விவரிக்கிறது.

வாசல் இராசி — விசால லட்சணம் [57]

தெற்கு முகம், மேற்கு முகம் கட்டிய வீடு விசாலத்துக்குக் கமலாகரம் எனப்படும்.

இதன் பலன் லட்சுமி பிரதம்.

மேற்கு முகம், வடக்கு முகம் கட்டிய வீடு விசாலத்துக்கு சுவர்ண பலம் எனப்பெயர்.

இதன் பலன் சோரபயமும், பீடையுமாம்.

வடக்கு முகம், கிழக்கு முகம் கட்டிய வீடு விசாலத்துக்குப் புஷ்கத முஷ்டிகம் எனப் பெயர்.

இதன் பலன் திருடர் அச்சமும் நச்சுப் பிராணிகள் பற்றிய அச்சமுமாம்.

தெற்கு, மேற்கு, வடக்கு, கட்டின வீட்டிற்குக் கிழக்கு அவடத்தில் வாசற்கால் வைத்தால் அதற்குப் புத்திர முஷ்டிகம் என்று பெயர்.

இதன் பலன் அச்சம்.

வடக்கு, கிழக்கு, தெற்கு கட்டின வீட்டுக்கு மேற்கு அவடத்தில் வாசற்கால் வைத்தால் அதிசயம் எனப்பெயர். எப்போதும் இருவகை மரம் கலந்த வாசற்கால் ஆகாது.

இதன் பலன் ஆனி. (கெடுதல்)

கிழக்கு, மேற்கு தெற்கு, வடக்கு —கட்டின வீட்டுக்கு வடக்கில் வாசற்கால் வைத்தால் நல்ல சுகமுண்டாகும்.

மேற்கு கிழக்கு வடக்கு இந்த மூன்று பக்கத்திலும் வாசற்கால் இருந்தால் கலியாணபதம் எனப்படும்.

இதில் செல்வம் உண்டாகும்.

கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு இந்த நாலு பக்கத்திலும் வீடு கட்டியிருந்தால் அதற்குச் சதுரச் சாலை என்று பெயராம்.

இதன் பலன் உத்தமம் என்கிறது மனைநூல். இவற்றிற்கு வாசல் இராசி பார்ப்பது எனப் பெயர் குறிக்கப் படுகிறது.

**சங்கு வைத்தல்**

கட்டடம் கட்ட மனை முகூர்த்தம் செய்யும்போது சங்கு வைத்தல் என்றொரு வழக்கமும் உண்டு. இதில் திசை — ராசி முதலிய பொருத்தமும் பார்க்க வேண்டும். [58]

ஒரு மங்கலப் பெண்ணின் கையால் சங்கு வைக்க வேண்டும். இறை வழிபாட்டுக்குப்பின் சங்கு வைப்பது வழக்கம்.

**சங்குக்கான மரம்**

சந்தன மரம், யானைத் தந்தம், வன்னி வேங்கை, தேக்கு, ஆல், அரசு, கிச்சிலி, கருங்காலி ஆகியவை சங்கு செய்யச் சிறந்த மரங்களாகும். இவற்றில் தேக்கு வேங்கை ஆகிய மரங்கள் அனைவருக்கும் உரியவை யாகும். [59]

**சங்கு வைக்கும் முறை**

இரண்டு முழ நீளம் அகலமுள்ள இடத்தைச் சமன் செய்து நல்ல நேரம் பார்த்து சங்கை நீராட்டித் தூய்மைப் படுத்தி மஞ்சள் குங்குமம் சந்தனம் இட்டு மலர் தூவி வழிபட்டுச் சமன் செய்யப்பட்ட நிலத்தில் நிறுத்த வேண்டும்.

**சங்கு வைக்க ஏற்ற காலம்**

சங்கு வைப்பதற்கு ஆவணி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்கள் சிறந்தவை. மேற்படி மாதங்களில் வளர் பிறைக் காலங்களில் வானத்தில் மாசு மறுவற்று கதிரவன் விளங்கும் நாட்களாக இருக்க வேண்டும். புதன், வியாழன், வெள்ளி ஆகிய மூன்று நாட்களும் சங்கு வைக்க மிகவும் சிறந்தவை. அமாவாசை முதல் பிரதமை, சஷ்டி, ஏகாதசி ஆகிய நாட்களில் சங்கு வைக்கக் கூடாது. சனி, ஞாயிறு, செவ்வாய் ஆகிய மூன்றுநாட்களில் சங்கு வைக்க ஆகாது.

சதயம், திருவோணம், உத்திரம், அஸ்தம், ரேவதி, சுவாதி, ரோகிணி, மிருகசீரிடம், சித்திரை, பூரம், புனர் பூசம், அனுஷம், அவிட்டம் ஆகிய நட்சத்திரங்கள் சங்கு வைக்க ஏற்றவை.

இப்படிச் சங்கு வைக்க ஏற்றவை என மேலே கூறிய நாள், நட்சத்திரம், காலங்கள் வீட்டிற்கான கடைக்கால் எடுக்கவும் சிறந்தவை ஆக அமையக்கூடும் எனக்கொள்ள லாம்.

**இராசியும் மனையும்**

கட்டடம் கட்டுமுன் மனைக்குரியவரது இராசியோடு ஒத்த இடமும் திசையும் கவனிக்கப்பட வேண்டும் என மனைநூல் எடுத்துக்கூறுகிறது. அது பற்றிய விவரங்கள் கீழ்வருமாறு அமையும்.[60]

| | | | |
|---|---|---|---|
| 1. | மேஷ ராசி | — | ஊரின் வடக்குப் பக்கம் ஆகாது — ஏனைய திசைகளில் அமைக்கலாம். |
| 2. | ரிஷப ராசி | — | ஊரின் நடுப்பகுதி ஆகாது. |
| 3. | மிதுன ராசி | — | மத்தியப் பகுதி கூடாது. |
| 4. | கடக ராசி | — | தெற்குப் பகுதி ஆகாது. |
| 5. | சிம்ம ராசி | — | மத்தியப் பகுதி ஆகாது. |
| 6. | கன்னி ராசி | — | தென்மேற்குப் பகுதி ஆகாது. |
| 7. | துலா ராசி | — | வடமேற்குப்பகுதி ஆகாது. |
| 8. | விருச்சிக ராசி | — | கிழக்குப் பகுதி ஆகாது. |
| 9. | தனுசு ராசி | — | மேற்குப்பகுதி ஆகாது. |
| 10. | மகர ராசி | — | ஊரின் நடுப்பகுதி ஆகாது. |
| 11. | கும்ப ராசி | — | வடகிழக்கு அநுகூலப் பலனில்லை. |
| 12. | மீன ராசி | — | தென்கிழக்கு யோகம் தராது.[61] |

ஒவ்வோர் இராசிக்காரரும் ஊரின் திசை அறிந்து அவரவர் இராசிகளுக்கு ஏற்ப வீடு அமைப்பதுதான் அநுகூலமானப் பலனைத் தரும் என்பது மனைநூல் வழக்கு.

வீட்டுக்குரிய கட்டடம் கட்டப்பட இருக்கும் மனை ஒழுங்காக இருக்க வேண்டும். கோணல் மாணலாக இருக்கக் கூடாது.

மத்தளம் போன்றும், கொட்டைப் பாக்கு உருவம் போன்றும், கத்தரிக்கோலைப் போன்றும் உள்ள மனைகளில் வீடு கட்டக்கூடாது. கோயில் நிலம், வளைகள் உள்ள நிலம், தண்ணீர் இடையறாது பாயும் நிலம் ஆகிய வற்றைக் கட்டடம் கட்டுவதிலிருந்து அறவே தவிர்க்க வேண்டும். கிழக்கு மேற்கு அகலங்கள் குன்றிய மனையில் கண்டிப்பாகக் கட்டடம் கட்டக்கூடாது. இவை மரபுகள், நம்பிக்கைகளாகக் கூறப்பட்டிருப்பினும் நடைமுறைப்படி பார்த்தாலும் மேலே கூறிய கோணல் மாணலான மனைகளில் கட்டடம் கட்ட இயலாதென்பது புலப்படும்.

**கிணறு — வாசல் — சுவர்கள்**

வீட்டின் மேற்குப்புறத்தில் கிணறு வெட்டுவதே நற்பலன் தரும். [62] வடமேற்கு முனையில் கிணறு வெட்டினால் புத்திரர்களுக்குக் கெடுதல் உண்டாகும். வடக்குத் திசையிலோ, ஈசான்யமூலையிலோ கிணறுகள் அமைத்தால் வாழ்வு வளம் பெற்று ஏற்றமும் முன்னேற்றமும் தொடர்ந்து கிடைக்கும். வீட்டின் கிழக்குத் திசையில் கிணறுகள் அமைப்பதுகூட நற்பலனையே தரும் என்பது மனைநூல் நம்பிக்கை.

அக்கினி மூலையில் (தென்கிழக்கு) கிணறு அமைத்தால் தீப்பட்ட பண்டம் சிறிது சிறிதாக எரிந்து கருகி அழிவதுபோல் நாளுக்கு நாள் அந்தக் குடும்பம் அழியும் என்கிறது மனைநூல்.

வீட்டின் தெற்குத் திசையில் கிணறு அமைத்தால் குடும்பத்தில் உயிர்ச்சேதம் விளையும். அடிக்கடி அப்படிப் பட்ட சேதங்கள், நிகழலாம். நிருதி மூலையில் (தென் மேற்கு மூலை) கிணறு வெட்டினால் குடும்பத்தில் உள்ள

வர்கள் நோயால் துன்புற்று மருத்துவச் செலவுகள் ஏற்பட்டபடி இருக்கும்.

இக்காலத்தில் எந்த இடத்தில் நிலத்தடி நீர் நன்றா யிருக்கும் என்று காணும் நீரறி நிபுணர் (Water Diviner) போல் அக்காலத்திலும் கண்டறிய ஏற்பாடுகள் இருந்தன வீட்டில் கிணறு வெட்டும் யோகமுள்ள திசையில் பசுவின் கன்று ஒன்றை இட்டுச் செல்ல வேண்டும், கன்றிற்குப் பூவும் சந்தனமும் இட்டு வழிபட்டபின் அதன் கழுத்துக் கயிற்றைப் பற்றியபடி மனைக்குரியவர் நிற்க வேண்டும். சிறிது நேரம் கழித்துக் கன்று எப்பக்கம் போக முனை கிறதோ அப்பக்கம் விட்டுவிட வேண்டும். விடுபட்டுப் போன கன்று எங்கு சென்று நின்று கோமியம் (கோமூத் திரம்) கழிக்கிறதோ அந்த இட்த்தில் பூமிக்குள் நல்ல நீரோட்டம் இருக்கும் என்று உய்த்துக்கொண்டு அகழ வேண்டும். பசுவின் கன்று சிறுநீர் கழித்த இடத்தினை அகழ்ந்நால் நல்ல நீரோட்டமும் ஊற்றும் கீழிருக்கும் என்பது நம்பிக்கை. இவ்வாறு நிகழாமல் பசுவின் கன்று ஓரிடத்தில் நின்று சாணம் கழிக்குமாயின் அவ்விடத்தில் கீழே அகழ்ந்து பார்த்தால் கற்பாறைகள் இருக்கும் என் பதும் நம்பிக்கை. அப்படிப்பட்டஇடத்தில் கிணறு அகழ்ந் தால் அல்லலும் துன்பமும் நேரும். வீட்டின் வாசற்படி களின் எண்ணிக்கை ஒற்றைப்படையாக இருப்பதே நல்லது. வீட்டின் நான்கு திசைகளிலும் வாசற்கால்கள் வைக்கப்பட்ட வீட்டில் அதிக அநுகூலங்கள் உண்டாகும் என்பது முன்னோர் நம்பிக்கை. [63]

ஆனால் வடக்குப் பக்கம் வாசல் இல்லாமல் மற்ற மூன்று பகுதிகளில் வாசல்கால் வைப்பது அரசனின் கோபத்தையும் தொல்லைகளையும் தரும்.

மேற்குப் பகுதி வாசல் இல்லாமல் மற்ற மூன்று பகுதி களில் வாசல் வைப்பது முன்னேற்றம், செல்வச் சேர்க்கை அனைத்தையும் உண்டாக்கும்.

கிழக்குப் பகுதியில் வாசல் இல்லாமல் மற்ற மூன்று பக்கங்களில் வாசல் வைப்பது அவ்வீட்டில் கால்நடைகள் விருத்தி, முன்னேற்றம் யாவும் ஏற்படச்செய்யும்.

தெற்குப் பகுதி வாசல் அமைக்காமல் மற்ற மூன்று பக்கங்களிலும் வாசல் வைப்பதால் செல்வமும் நலப் பெருக்கமும் உண்டாகும்.

வீட்டினுள் நுழையும்போது வாசலில் தலை குனியாமல் நிமிர்ந்தபடி நுழைவது நல்லதில்லை என்கிறது மனைநூல். அதாவது வாசல்களை மிகவும் உயர்வாக வைக்கக்கூடாது. அப்படிப்பட்ட வாசல்களால் சஞ்சலமும் கவலையுமே உண்டாகுமாம்.

வீட்டினுள் நுழையும்போது சிரம் குனிந்து வணங்குவது போல் புக ஏற்றபடி வாசல்கள் தணிவாக அமைவதே நல்லது என்கிறது மனைநூல். இலக்குமி கடாட்சம் இப்படியான வாசல்களில்தான் நிலைக்குமாம்.

கட்டிய சுவர் பிளவுபட்டுத் தெரிந்தால் வீட்டுக்கு நல்லதில்லை. வீட்டின் சுவர்கள் நான்கு பக்கமும் சம உயரமாக மேல் சாயையாக இருப்பதும் தாழ்வாரம் போன்றவை சம அகலமாக இருப்பதுமே ஏற்றமான பலன் ஆகும். பாதி வீடு கட்டுகையில் சுவர் சிதைவது நல்ல அறிகுறி இல்லை.

பிரதானமான சுற்றுச்சுவர் தாய்ச்சுவர் எனப்படும். தாய்ச்சுவர் முதல் உள்புறம் உள்ள சுவர்கள் எல்லாம் ஒன்றரை அடி அகலத்திற்குக் குறையாமல் அமைய வேண்டும். அதுபோல வீட்டிற்குப் பட்டறை மட்டம் ஒன்பதடி உயரத்திற்குக் குறையாமல் அமைய வேண்டும்.

வீட்டின் வாசற்படிக்கு எதிரில் (மேலே மூளியான சுவர் - இது குட்டிச் சுவர் எனவும் கூறப்படும்) கட்டைச் சுவர் இருப்பது நற்பலனைத் தராது. வீட்டுக்குள் ஏறி வரும்படி உயர்வாகவும் உள்பகுதிக்கு வரும்படிகள் தாழ்-

வாகவும் அமையும்படி வீடு கட்டினால் நலிவும் நட்டமுமே ஏற்படும் என்பர்.

**கதவுகள்**

வீடு கட்டியதும் வாசற்படிக்கும் அறைகளின் முகப்புக்களுக்கும் கதவு பொருத்துகிறோம். இக் கதவுகள் குறையின்றி ஒட்டுப் போடப்படாமல் - ஒருவகை மரத்தில் அமைய வேண்டும்.

கதவைத் திறந்து வைத்தவுடன் கதவு தானாகவே இரைச்சலுடன் திரும்பச் சென்று மூடிக்கொள்வது நற் பலன் தராது. அப்படிப்பட்ட வீட்டில் உயிரிழப்பு நேரிடும். சில ஆண்டுகளில் வீடே பாழடைந்து விடும்.[64]

ஒரு கதவு நின்ற நிலையில் அப்படியே நிற்குமாயின் அம்மனையிலுள்ளோர் நிலை பேறுள்ள நல்வாழ்வு வாழ்வார்கள்.

கதவைச் சாத்தும்போது கழுதை கனைப்பது போன்ற குரல் அல்லது செக்கு ஆடுவது போன்ற ஓசை எழுமானால் தீராத கவலைகள் உண்டாகும்.

யானைக்குரல் போலவும் சங்கொலி போலவும் ஓசை உண்டானால் சகல நலங்களும் விளையும்.

கதவை அடைக்கும்போது மந்த கதி கொண்டு உடலில் காணும் வாதம், பித்தம் என்னும் இரண்டு நாடி போல நடந்தாலும் அல்லது கிளியைப் போலக் கீச்சிட்டா லும் நடுக் கட்டத்தில் ஆணி ஒன்று ஊனமாகியிருக்க வேண்டும். அவ்வாறாயின் அம்மனைக்குரியோனுக்கு நோயை உண்டாக்கும்.

கதவைச் சாத்தும்போது சிக்கிக்கொண்டு செக்கோசை போல இரைச்சலிட்டால் அம்மனையில் மக்கட்பேறு வாய்க்காது. மனைவி மரணமடைவாள். மனக்கவலை நேரிடும்.

கதவைச் சாத்தும்போது கரும்பாலை எந்திரம் போல ஓசை எழுமாயின், புத்திர நாசம், பெண்பழி, மிக்க துயர் யாவும் நேரிடுமாம்.

நாய் ஊளை இடுவது போலவும், பேய் அழுவது போலவும், கதவு சத்தமிட்டால் வீட்டுக்கு உரியவர் பிணி மிகுந்து நொந்து தொல்லைப்படுவார்கள். செல்வம் அழிந்துபடும். நாரை கத்துவது போல் ஒலியுண்டானால் நீண்டகாலம் செல்வம் நிலைத்திருக்கும். புதையல் வைக்கு மளவு தனம் பெருகும்.

தள்ளிய கதவு சடக்கென்று வலியன்போல் துள்ளிக் கத்தினால் துக்கம் அதிகரிக்கும். மனைவி சோரம் போவாள். புத்திரர்கள் நாசமடைவர். பல துன்பங்கள் திடுமென நேரிடும்.

நரியைப் போல் கதவு ஊளையிடுமானால் பெண்கள் துன்பப்படுவர். சில காரியங்கள் கைகூடும் எனினும் திடீரென மக்கள் மாள்வர். வீரியம் குன்றும்.

கழுதை ஒலி பழுதைக் கொணரும். பகை, மெலிவு அழுகை, சிறுமை, இறப்பு நேரிடும்.

வண்டுபோல் ஒலி நன்மை தரும். மக்கட்பேறு சிறப்பாக வாய்க்கும். ஆமை போல் ஒலி மனைவியின் உயிருக்குச் சேதம் விளைவிக்கும். நீண்ட கதவு, ஊழிபோல முழங்குமானால் பொன்னும் பொருளும் மணியும் நிறைந்து வாழ்வர். சங்குபோல் சாத்தித் தாளம்போல் மூடுமானால் பொலிவோடு வாழ்வர். நன் மனையாள் கிட்டுவாள். புத்திரப்பேறு மிகுதி. பொன்னும் பொருளும் கொழிக்கும்.

கரும்பாலைச் செக்கு போலச் சிக்கிச் சிக்கிக் கதறும் ஓசை எழுந்தால் மனைக்குரியோன் ஊரை விட்டே ஓட நேரிடும். மைந்தன் நோயுற்று அழிவான். குடும்பம் கெடும்.

ஆண்குரற் செக்குப் போல் ஓசை எழுமாயின் குபேரன் போல் மனைவி மக்களுடன் நீடு வாழ்வர். பெண்குரற் செக்கு போல் ஓசை எழுமாயின் மனையில் செல்வம் கொழிக்கும்.

தும்பி போல் கதவு ஒலி எழுமாயின் மனையில் வம்பும் பேய்க் கூட்டமும் மிகுந்து பொலிவு குன்றும். சிறுமை மிகும்.[65]

பேரிகை மேளம் போல் கதவு ஒலி உண்டானால் பெண்கள் துயரடைவர். நோய் மிகும். காரியம் கை கூடாது. ஊரை விட்டு அகலத்துரத்தும்.

**வேறு சில நம்பிக்கைகள் வழக்கங்கள்**

வீடு கட்டுமுன் நட்சத்திரப் பொருத்தம், இராசிப் பொருத்தம் தவிரத் தமிழர் வேறு சில பொருத்தங்களை யும் பார்த்தனர். பெயர் எழுத்துக்களை வைத்தும் பொருத் தம் பார்க்கப்பட்டிருக்கிறது.

திங்கள் கிழமை கால் நாட்டி புதன் கிழமை கை வைத்து வெள்ளியன்று கூரை வேய்ந்து, வியாழக்கிழமை குடி புகுந்தால் இந்திரபோகத்தோடு வாழமுடியும் எனப் பொதுவாக ஒரு நம்பிக்கை நிலவி வந்தது. மாதம் இராசி, திசை ஆகியவற்றிற்கு ஏற்ப வாசற்கால் வைக்கும் வழக்க மும் தமிழர்களிடையே நெடுங்காலமாய் நிலவி வந்திருக் கிறது. ஒவ்வொரு திசை நோக்கி வைத்த வாசற்படிக்கும் சில லட்சணங்கள் கூறப்பட்டுள்ளன.

கிழக்குப் பார்த்த —வடக்கிழக்கு மூலை முதல் தென் கிழக்கு மூலை வரை அளந்து எட்டு பாகம் செய்து பலன் காண வேண்டும்.

மேற்குப் பார்த்த —தென்மேற்கு மூலை முதல் வடமேற்கு மூலை வரை

வடக்குப் பார்த்த —வடமேற்கு மூலை முதல் வட கிழக்கு மூலை வரை

தெற்குப் பார்த்த —தென்கிழக்கு மூலை முதல் தென் மேற்கு மூலை வரை

இதற்கு நவக்கிரகப் பலன் காண மேற்படி முறையே ஒன்பது பாகம் செய்து பலன் காண வேண்டியிருக்கும்.[66]

ஏழு சாண் நீளம் மூன்று சாண் அகலம் உள்ள வாசற் காலே உத்தமம். ஒன்பதுசாண் நீளம் ஐந்து சாண் அகல முள்ள வாசற்காலும் உத்தமம். வாசற்காலில் இருவகை மரம் கலக்கலாகாது.

வாஸ்துபுருஷன் என்றால் நிலக்கடவுள். பூமியின் அதிதேவதை. வீடு கட்டு முன் இக்கடவுளை வணங்கித் தொடங்க வேண்டும். இக்கடவுள் படுத்திருக்கும் நிலைகள், எழும் நிலைகள் பற்றி நூலில் விரிவாகக் கூறப் பட்டுள்ளது. அந்நிலைகளுக்கு ஏற்பக்கட்டடம் கட்டுவோர் இசைந்து செயல்படவேண்டும்.

கருப்புப் பேழை

நண்டு தோண்டிய மண், யானைக்கொம்பால் கீறிய மண், குளத்து மண், எருதுக்கோட்டால் கீறிய மண் ஆகியவற்றைச் சேர்த்து ஐந்து அறை, ஏழறை, ஒன்ப தறை, பதினைந்து அறை ஆகியவற்றுள் ஒரே அளவு டைய ஒரு பெட்டியைச் செய்துகொண்டு அப்பெட்டியின் நடு அறையில் பொன்னும் மணியும் இட்டுத் தானிய வகைகளை நிரப்பி மனையின் நடுப்பகுதியை அறிந்து பதித்துவிடும் வழக்கமும் இருந்துள்ளது.[67]

மனையின் அளவு அளந்து ஆதாயம் விரயம் காணும் பழக்கமும் இருந்துள்ளது. நட்சத்திரங்களை வைத்துத் தாராப் பலன் பார்க்கும் பழக்கமும் இருந்துள்ளது.

வீட்டின் உள்பகுதியில் 1,5,9 ஆகிய ஏதேனும் ஓர் எண்ணிக்கைப்படி அறைகள் இருப்பது நல்லது. 3, 7, 11 என்ற எண்ணிக்கையில் அறைகள் இருப்பது மத்திமப் பலனையே தரும். 2, 4, 6, 8, 10, 12, 14, 16 ஆகிய எண்ணிக்கையில் அறைகள் அமைவது அநுகூலமில்லை. 1, 3, 5, 7, 9, 11 எண்ணிக்கையில் இருப்பது ஏற்றம்.

வீடு, கேணி குத்தல், சந்து குத்தல், கோடிக்குத்தல், கட்டைக் குத்தல் என்பது நேர் எதிரே இருப்பது.

மேலே கூறிய இவற்றில் பல நம்பிக்கைகளாக மட்டும் கட்டடம் தொடர்பான நம்பிக்கைகளாதலின் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. மிகப் பல விரிவான சோதிட விவரங்கள் ஆய்வுக்கு அவசியமின்மைக் கருதி விடப்பட்டன.

### மனைநூலும் ஆசிரியரும்

மனை என்னும் சொல்லுக்கு வீடு, இல்லம், மனைவி மனை வாழ்க்கை, இல்வாழ்க்கை, குடும்பம், வெற்றிடம், நற்றாய், இரண்டாயிரத்து நானூறு குழி கொண்ட ஒரு நிலப்பரப்பு, சிற்றில், நில அளவின் வகை, சூதாடு பலகையின் அறை ஆகிய பல பொருள்களை நிகண்டுகளிலும் அகராதிகளிலும் காண்கிறோம். மனையடி சாத்திரம் என்ற நூலுக்குப் பொருள் காண்பது எளிது. [68]

மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு [69] எனத் தொல்காப்பியரும்,

> மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை [70]

எனத் திருவள்ளுவரும் மனை என்ற சொல்லை வீடு என்னும் பொருளில் வழங்கியுள்ளார்.

அடி என்னும் சொல்லுக்கு அளவு, காலடி, காற்சுவடி, செய்யுள் உறுப்பிலொன்று என்பன பொருள். இங்கு அளவு என்னும் பொருள் பொருந்துகிறது.

சாத்திரம் என்று வழங்கும் சொல்லுக்கு ஒழுங்கு, கட்டளை, கலை, நூல், மறை எனப் பல பொருள்கள் உண்டு. எப்பொருள் கொள்ளினும் அங்கு ஏற்கிறது.

மனையடி சாத்திரம் என்பதற்கு 'வீடு கட்டும் கலை' என்பது பொருளாகிறது.

இதே நூல் சிற்ப நூல், சிற்ப சிந்தாமணி, சிற்ப ரத்தினம் என்னும் வேறு பெயர்களிலும் வழங்கி வருகிறது.[71]

இம்மூல நூலை வடமொழியில் மயன் எழுதியிருக்கிறார். தமிழ் விருத்த யாப்பிலான நூல் முதல் முதலாக 1888ம் ஆண்டில் அச்சாகி வெளிவந்துள்ளது.

மயன் ஒரு தேவதச்சன். நுண்கலை வல்லுநன். சிற்பி. இவன் தந்தை காசியப முனிவன் என்றும் தாய் திதி என்றும் அரசுப் பெண் என்றும் கூறுவர். சிற்ப சாத்திர மூல நூலை இயற்றியவன் இவனே. இவன் மாளிகைகளும் அரண்மனைகளும் நகரங்களும் அமைப்பதில் வித்தகனாக விளங்கியிருக்கிறான். இவனுக்கு மாயாவி துந்துபி என இரு புதல்வர்களும் மண்டோதரி என ஒரு மகளும் இருந்தனர். மண்டோதரி இராவணனை மணந்தாள்.

ஒரு காலை மயனின் உயிரை அருச்சுனன் காப்பாற்றி உதவியதற்கு நன்றியாக மயன் ஓர் அலங்கார மண்டபம் நிர்மாணித்துப் பாண்டவர்களுக்கு அளித்ததாகப் பாரதம் கூறும்.

மயனுக்குப் பின்வந்த வம்சாவளியினரும் அதே பெயரால் அழைக்கப்பட்டனர்.

மயனுடைய மரபினர் தெய்வகம்மியராகிய துவஷ்டா என்னும் விசுவகர்மாவுடைய மரபினருக்கு பயந்து ரோகம புரியிற் குடியேறி அசுர கம்மியராகிய அவர்களுக்குப்

படைக்கலங்களும் தேர்களும மாட மாளிகைகளும் செய்து கொடுத்து வாழ்ந்தனர்.

ரோகமபுரி கடல்கோளுக்குட்பட்டு அழிந்தபோது அந்த மரபினர் பலர் தப்பிப் பிழைத்து மீண்டும் ஆரியா வர்த்தத்தை (பாரத நாடு) அடைந்தனர் என்பது வரலாறு.[72]

மனை நூலில் உள்ள விவரங்களில் பெரும் பகுதி நம்பிக்கைகள், சோதிட விவரங்களாகவே அமைந்துவிடினும் மண் பரிசோதனை தொடங்கி வேறு பல கட்டடக் கலைக் கூறுபாடுகள் தெளிவாகவே விளக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில நம்பிக்கைகள், வழக்கங்கள் என அமையினும் பல அறிவியற் கூறுபாடுகளோடு பொருந்திவர எக்காலத்துக்கும் ஏற்றவையாகவே விளங்குவதைக் காண்கிறோம்.

மன நூலைப் பதிப்பித்துள்ள அறிஞர் பூ. சுப்பிரமணியன் அவர்கள் இது பற்றித் தமது முன்னுரையில் கூறும் போது, மண் கட்டட வேலை தொடங்கும் முன்பே சோதிக்கப்பட வேண்டும். இது தொடர்பாகப் பல முறைகள் கூறப்பட்டுள்ளன. மனையில் குழி அகழ்ந்து அதே மண்ணால் குழி நிரம்புகிறதா இல்லையா என்று பார்க்கும் முறை ஒன்று. முன் மாலையில் குழியில் நீரை நிரப்பி அது வற்றுதல் வற்றாமை, சேறு முதலியவற்றை மறுநாள் காலை பார்த்து முடிவு செய்வது மற்றொரு முறை மண்ணின் வலிவை இம்முறை மூலம் நன்கு பரிசோதித்து விடவும் கட்டடத்தைத் தாங்கும் ஆற்றல் அம்மண்ணுக்குண்டா என்பதைக் காணவும் இது பயன் படுகிறது.

நிலம் நல்லதா கெட்டதா என அறியவும் மற்றொரு முறை பயன்பட்டது. ஒரு வட்ட வடிவமான குழி அகழ்ந்து நீருற்றி அதில் மலரை இட்டு அம்மலர் எப்படி நகருகிறது என்பதைக் கொண்டு விளைவறியும் முறை இந்நூலில்

கூறப்படுகிறது என்று கூறுகிறார்.[73] பன்னெடுங்கால வழக்கிலும் நடைமுறையிலும் மனைநூல் வழக்கங்களும், முறைகளும் தமிழரிடையே ஒரு கலையாகவே பதிந்து பழகி வளர்ந்திருப்பதை நன்கு அறிய முடிகிறது.

□

குறிப்புகள்

1. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப. 771
2. சூடாமணி நிகண்டு, ப. 28.
3. வாஸ்து வித்யா கலைஞானம், காஞ்சிமட வெளியீடு, ப. 21.
4. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப. 771.
5. விஸ்வ கர்மாவாகிய மயனென்பவர் திருவாய் மலர்ந்தருளிய சிற்ப நூல் என்னும் மனையடி சாஸ்திரம் 1, கடவுள் வணக்கப்பாட்டு.
6. டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், மனை நூல் (முன்னுரை) ப. 1.
7. மனை நூல், ப. 8 செய்யுள் 3-5.
8. மனை நூல், ப, 8-9, செய்யுள் 6-8.
9. மனை நூல், ப. 6.
10. மனைநூல், ப. 7.
11. மனைநூல், ப. 8, 9.
12. மனைநூல், ப. 10, செய்யுள் 11.
13. மனைநூல், ப. 10, செய்யுள், 12.
14. மனைநூல், ப. 11' செய்யுள் 16.

15. மனைநூல், ப. செய்யுள் 13.
16. மனைநூல், ப. 11, செய்யுள் 17-20.
17. மனைநூல், ப. 18.
18. மனைநூல், ப. 19.
19. மனைநூல், ப. 17.
20. மனைநூல், ப. 12, செய்யுள் 21.
21. மனைநூல், ப. 13.
22. மனைநூல், ப. 13.
23. மனைநூல், ப. 22, செய்யுள் 22-25.
24. மா. ஆறுமுகம், தொழில் நுட்பம், ப.44.
25. மா. ஆறுமுகம், தொழில் நுட்பம், ப.45.
26. மனைநூல், ப. 15.
27. மனைநூல், ப. 14—15.
28. மனைநூல், ப. 23, செய்யுள் 26—27.
29. மனைநூல், ப. 23, செய்யுள் 28—29.
30. மனைநூல், ப. 24, செய்யுள் 31.
31. மனைநூல், ப. 26—27, செய்யுள் 40—46.
32. மனைநூல், ப. 15—16.
33. மனைநூல், ப. 29, செய்யுள் 47.
34. மனைநூல், ப. 29, செய்யுள் 48.
35. மனைநூல், ப, 30—31, செய்யுள் 51—53.
36. மனைநூல், ப. 33—34, செய்யுள் 62
37. முல்லை முத்தையா, மனையடி சாஸ்திரம், ப. 29.
38. மனைநூல், ப. 34, செய்யுள் 63—64—66.
39. மனைநூல், ப. 20-21.
40. மனைநூல், செய்யுள் 63—66.
41. மனைநூல், செய்யுள் 67.

42. மனைநூல், செய்யுள் 28.
43. மனைநூல், ப. 87, செய்யுள் 189—212.
44. நெடுநல்வாடை 72—75, நச்சினார்க்கினியர் உரை, ப. 335
45. மனைநூல், ப. 36—42, செய்யுள் 67—93.
46. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப.31.
47. மனைநூல். ப. 44—45.
48. முல்லை முத்தையா, மனையடிசாஸ்திரம், ப.43.
49. சாஸ்திரம் பார்த்து வீடு கட்டுவது எப்படி? ப. 50.
50. சாஸ்திரம் பார்த்து வீடு கட்டுவது எப்படி? ப. 10.
51. சாஸ்திரம் பார்த்து வீடு கட்டுவது எப்படி? ப. 11.
52. மனைநூல், ப. 47-62, செய்யுள் 100-133.
53. மனையடி சாஸ்திரம், ப. 47-48.
54. மனைநூல், ப. 63-83, செய்யுள் 134-188.
55. மனைநூல், ப. 64.
56. பொரு. பொருள் மரபு 640.
57. மனைநூல், ப. 46, செய்யுள் 94-99.
58. மனைநூல், ப.106, செய்யுள் 228-236.
59. மனைநூல், ப. 98, செய்யுள் 222-227.
60. மனைநூல், ப. 127-132, செய்யுள் 293-316.
61. மு. முத்தையா, மனையடி சாஸ்திரம், ப.71.
62. மனைநூல், ப. 213, செய்யுள் 405-410.
63. மு. முத்தையா, மனையடி சாஸ்திரம், ப. 51-56
64. மனைநூல், ப. 80-83, செய்யுள் 167-188.
65. மு. முத்தையா, மனையடி சாஸ்திரம், ப.80-83.
66. மு. முத்தையா, மனையடி சாஸ்திரம், ப.51.

67. மு. முத்தையா, மனையடி சாஸ்திரம், ப. 67.
68. மு. முத்தையா, மனையடி சாஸ்திரம், ப. 9.
69. தொல். பொருள். களவியல் 111-121.
70. திருக்குறள் 6-51.
71. சூடாமணி நிகண்டு 110-51.
72. மு. முத்தையா, மனையடி சாஸ்திரம், ப. 1-6.
73. Soil is to be tested before construction. Many methods are narrated in this regard. One is to dig a pit and fill it with the earth removed from the pit. Another one is to fill the pit with water in the evening and observing the quantum of water in the next morning. This method shows the strength of the soil to withstand the weight of the Building to be constructed.

Good and bad effects of a plot is also decided by another method which is precisely narrated in this work. Hence a circular pit is dig around a partion of the earth and water and flower is put in the circular pit. The movement and direction of the water along with the flower which indicate the results whether good or bad.

—P. Subramanian, Manai Nool, p. XLVI.

## இயல் மூன்று

# கட்டடக் கலையும் தமிழர் பண்பாடும்

சங்க நூல்களில் கட்டடக் கலை பற்றிய செய்திகள் அங்கங்கே காணக் கிடைக்கின்றன. கட்டடக் கலையில் தமிழர்க்கு இருந்த ஈடுபாட்டையும் அக்கறையையும் அவற்றிலிருந்து அறிய முடிகிறது.

கை புனைந்து இயற்றாக் கவின் பெறுவனப்பு [1]

என இயற்கையைத் திருமுருகாற்றுப்படையில் வருணித்த அதே நக்கீரர் பத்துப்பாட்டில் தம்முடைய மற்றொரு பாட்டாகிய நெடுநல்வாடையில் செயற்கைக் கலையாகிய கட்டடக்கலை பற்றிக் குறிப்பிடுகிறார்.

இக்காரணத்தால் அறிஞர்கள் நெடுநல்வாடையைக் கட்டடக்கலை நூல் என்னும் பொருள்படுகிற சிற்பப்பாட்டு என்றே கூறலாம் என்னும் அளவு துணிபு கொள் கின்றனர்.

''நக்கீரர் நெடுநல்வாடையில் பாண்டிமாதேவி படுத் திருந்த கட்டிலின் மேல் விதானத்துத் திரைச்சீலையில் மெழுகு வழித்து, ஓவியம் தீட்டியிருந்ததைக் குறிப்பிடு கிறார். அதில் மேடராசியில் ஞாயிறு திரியும் காலத்தில் திங்களஞ் செல்வனுடன் உரோகிணி மகிழ்ந்திருக்கும் காட்சி வரையப் பெற்றிருந்தது.

இவ் ஓவியக் காட்சி தேவியின் உள்ளத்தை உருக்கியது. மேலும் நக்கீரர்க்கு ஓவியம், சிற்பம், கட்டடக் கலை ஆகியவற்றில் ஈடுபாடு இருந்தமை நெடுநல்வாடையால் உணரப்படுகிறது.

அரண்மனை வகுத்துக் கட்டப்பட்ட முறையை, அது கால்கோள் செய்யப்பட்ட நாள் முதலாக எடுத்துரைக்கிறார்.

அரண்மனை வாயில் முற்றம், அந்தப்புரத்தின் அமைப்பு, அரசி படுத்திருக்கும் வட்டக் கட்டில், அதன் விதானம், படுக்கையின் அமைப்பு யாவும் சிற்ப உத்தித் திறனோடு புனையப்பட்டுள்ளன. கட்டிற்காலில் உருண்டு திரண்டிருக்கும் குடம் போன்ற உறுப்பைத் "தூங்கு இயல் மகளிர் வீங்குமுலை கடுப்பப் புடைதிரண் டிருந்த குடத்த" என்று நுட்பமாக விளக்குகிறார். அசையும் நடையினை உடைய மகளிர் என்பதனால் கருக்கொண்ட மகளிர் என்பதைக் குறிப்பாக உணர்த்தியிருக்கும் அழகிலேயே சிற்ப நுட்பம் உளதன்றோ? பாண்டியனுக்கு முன்னதாகப் பாசறைக்கண் நள்ளிரவில் தீவட்டி பிடித்துச் செல்லுகையில் வாடைக்காற்று வீசுவதால் அதன் சுடர் தெற்கே சாய்ந்து எரிவதையும் நக்கீரர் குறிப்பிடுகிறார்.

> வடந்தைத் தண்வளி எறிதொறும் நுடங்கி
> தெற்கு ஏர்பு இறைஞ்சிய தலைய நன்பல்
> பாண்டில் விளக்கில் பரூஉச்சுடர் அழல
>
> (நெடுநல். 173-75)

இக்காட்சியும் சிற்பத் திறனை நுட்பமாகக் குறிப்பிடுவதாகும். இங்ஙனம் வரும் பல பகுதிகளை நோக்கும் பொழுது நெடுநல்வாடையைச் 'சிற்பப் பாட்டு' (Sculpture Poem) என்றே அழைக்கலாம் எனத் தோன்றுகிறது. [2]

**நாள் பார்த்தல்**

பழைய நம்பிக்கைகள் — பழக்க வழக்கங்களின் அடிப்படையில் எழுந்தவை என இவ்வாய்வின் முந்திய

இயலில் குறிப்பிடப்பட்ட 'மனை நூல்' இலக்கணக் கூறு பாடுகளை 'நெடுநல்வாடை'க் காலத்திலும் தமிழர்கள் கடைப்பிடித்திருக்கிறார்கள் என்பதற்கு அகச்சான்று கிடைக்கிறது.

தலைவி தங்கியிருக்கும் இல்லம் உள்ள அரண் மனையை எவ்வாறு தொடங்கிக் கட்டினார்கள் என்றுகூற வந்த நக்கீரர்,

... ... ... .... மாதிரம்
விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்பு
ஒருதிறஞ்சாரா வரைநாள் அமயத்து [3]

என்று நாள் செய்து தொடங்கியதைக் கூறுகிறார். மனை நூற் கருத்தும்—நெடுநல்வாடையின் இப்பகுதியும் ஒத்து வருகின்றன. நாள் கோள்களின் நிலை பார்த்து நல்ல வேளையிலே கட்டடம் தொடங்கும் மரபையும் அம்மரபின் பழமையையும் அறிய முடிகிறது. மனைநூலின் நடையும் எழுதப்பட்ட காலமும் பழையதாகத் தோன்றவில்லை எனினும் மனைநூற் செய்திகள் பழந்தமிழர் வாழ்வில் இருந்தவையே என்பதைத் தெளிய இந்த நெடுநல் வாடைப் பகுதி தகுந்த சான்றாகிறது.

திசைகளிலே விரிந்த கிரணங்களைப்
பரப்பின அகன்ற
இடத்தை உடைய ஞாயிறு மேற்றிசைக்கட்
சேறற்கெழுந்து
இரண்டிடத்து நாட்டின இரண்டு
கோலிடத்துஞ் சாயா
நிழலால் தாரை போக ஓடுகின்ற நிலையைக்
குறித்துக்
கொள்ளுந் தன்மை தப்பாதபடி தான் ஒரு
பக்கத்தைச்

சாரப் போகாத சித்திரைத் திங்களின் நடுவிற்
பத்தின்ற யாதோர் நாளிற் பதினைந்தா
நாழிகையிலே
அங்குரார்ப்பணம் பண்ணி [4]

என இதற்கு நச்சினார்க்கினியர் விளக்கம் எழுதியுள்ளார்.

'சிற்ப நூல்' என்றே உரையில் பெயர் குறிக்கப்படு கிறது. எனவே அக்காலத்திலேயே கட்டடக்கலை ஒரு கலையாக இருந்ததும் அதற்கென்று வரைவிலக்கண நூல் இருந்ததும் பெறப்படுகின்றன. கோலளவு, நூல் பிடித்தல் முதலிய கட்டடக் கலைச் செய்திகளும் பெறப்படுகின்றன. வாஸ்து தேவதை, திசைக் கடவுள்கள் முதலிய செய்தி களும் மனைநூலில் கூறியபடியே வருவதையும் காண் கிறோம்.

இப்போது வழக்கிலுள்ள 'மனையடி சாஸ்தி'ரத்தில் கூட மனை கோலுவதற்கு மிகச் சிறந்த மாதமாகச் சித்திரையே கூறப்பட்டுள்ளது. நெடுநல்வாடையும் இதை உறுதி செய்கிறது.

> கோயிலை (அரண்மனையை)க் கட்டுவது நல்ல நாளில் தொடங்கப்பட வேண்டுமாதலால் அதற்கு ஏற்பச் சித்திரை மாதத்து இடைப்பத்து நாளில் ஏற்ற தான ஒருநாளில் பகலின் நடுப்போதில் அங்குரார்ப் பணஞ் செய்தனர். பகலின் பதினான்கு நாழிகைக்கு மேற்பட்ட இரண்டு நாழிகை—அபிசித்து முகூர்த்த மென்று கொண்டாடப்படுமாதலாலும் அந்த முகூர்த்தம் எல்லாக் குற்றங்களையும் போக்குமென் பதும் சாதிட நூலார் கொள்கையாதலாலும் அம் முகூர்த்தத்தில் அங்குரார்ப்பணஞ் செய்தனர். [5]

என விளக்குவார் வை. மு. கோ. அவர்கள்.

**பொறியியல் வல்லுநர்**

நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வ நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து [6]

என்று மேலும் கூறப்படுகிறது.

இன்றைய பொறியியல் வல்லுநர்கள் (Construction Engineers) போல் அன்றும் கட்டடக்கலைத் திறன் வல்ல நூலறி புலவர் இருந்தனர் என்பதை நெடுநல்வாடையி லிருந்து அறிய முடிகிறது. கட்டடக்கலை நூல்களும் இருந்தன என்பது அறியக் கிடக்கிறது.

> சிற்ப நூலை (கட்டடக் கலை நூலை) நன்கு நுணுக்கமாக அறிந்த புலவர்கள் நூலை நேரே பிடித்துத் திசைகளை மாறாது குறித்துக்கொண்டு அவ்வத் திசைகளில் நிற்கும் தெய்வங்களையும் குறைவறப் பார்த்து அரச மரபினருக்கு ஏற்ப மனையை வகுத்தனர்.

என்கிறார் நக்கீரர்.

நூலைப்பிடித்து அளவும் திசையும் பார்க்கும் வழக்கம் இன்றும் கொத்தனார்களிடையே உள்ளது. வாயுமூலை, ஈசானியமூலை, அக்கினிமூலை, நிருதிமூலை [7] என்று மனைநூலில் திசைகளும் தெய்வங்களும் கூறப்படுவது இங்கே நினைவுகூரத் தக்கது.

இப்பகுதிக்கு உரை எழுதுங்கால் உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் 'மனை வகுத்து' என்பதற்கு மட்டும், ''மனைகளையும் வாயில்களையும் மண்டபங்கள் முதலியவற்றையும் கூறுபடுத்தி'' [8] என்று பதசாரம் எழுது கிறார். அரசர்க்குரிய கட்டடத்தின் உட்பிரிவுகள் கூறப் படுகின்றன. ''மனையை வாயில், மண்டபம், முற்றம், கூடம் முதலியவாகக் கூறுபடுத்து'' [9] என இன்னும் தெளி வாக விளக்குகிறார் வை. மு. கோபாலகிருஷ்ணமா சாரியார்.

நெடுநல்வாடையே மேலும் கூறுகிறது :

ஒருங்குடன் வளைஇ ஓங்குநிலை வரைப்பின்
பருவிரும்பு பிணித்துச் செல வாக்குரீஇத்
துணைமாண் கதவம் பொருத்தி யிணைமாண்டு
நாளொடு பெயரிய கோளமை விழுமரத்துப்
போதவிழ் குவளைப் புதுப்பிடி காலமைத்துத்
தாழொடு குயின்ற போரமை புணர்ப்பிற்
கைவல் கம்மியன் முடுக்கலிற் புரைதீர்ந்து
ஐயவி அப்பிய நெய்யணி நெடுநிலை
வென்றெழு கொடியொடு வேழஞ் சென்றுபுகக்
குன்று குயின்றன்ன வோங்குநிலை வாயில் [10]

முற்றம், கூடம், மண்டபம் என்னும் உட்பிரிவுகளை எல்லாம் ஒருசேரக் கவிய வளைத்து உயர்ந்த நிலையை யுடைய மதில் என வருகிறது.

கட்டவேண்டிய இடத்தை எல்லாம் முன்னதாக அளந்துகொண்டு இன்ன இன்ன இடத்தின்கண் இன்ன இன்ன கோள்கள் உள்ளன என்பது முதலியவற்றை அறிந்து எந்தெந்தத் திசையில் எந்தெந்தத் தெய்வம் நிற்பதால் நன்மை விளையுமோ அவற்றை அறிந்து நியமித்தபின் தொடங்குக என்றவாறாயிற்று. [11]

**திசை மரபு**

தெற்கு இயமன், வடக்கு குபேரன், கிழக்கு இந்திரன், மேற்கு வருணன், தென்கிழக்கு அக்கினி, தென்மேற்கு நிருதி, வடமேற்கு வாயு, வடகிழக்கு ஈசானன் என்பது மனைநூல் கூறும் "திசைக்கடவுளர் விளக்கம்" (9 விளக்கப்படம் 1) இத்தெய்வங்கள் நிற்கும் நிலைகளை அறிந்து கட்டடம் அமைப்பது நக்கீரர் காலத்தும் வழக்கமாக இருந்தமை அறியப்படுகிறது.

'நூலறி புலவர்' என்ற தொடருக்குச் "சிற்ப நூலை யறிந்த தச்சர் [12] என நச்சினார்க்கினியர் கூறும் விளக்கம்

காணத்தக்கது. நூலாவது 'கிருஹ நிர்மாண சாஸ்திரம்[13] (வீடு கட்டுதல் பற்றிய நூல்) என்பார் வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

**கட்டட மரபுகள்**

இந்நெடுநல்வாடை பகுதியால் தெரியவரும் கட்டடக் கலைத் தொடர்பான பழக்க வழக்கங்களும் பண்பாடுகளும் கூர்ந்து கவனிக்கத் தக்கவை.

1) கதவு முகப்பில் குவளைப்பூ ஏந்திய இரு பெண் யானைகளினிடையே திருமகள் தோற்றம் அமைப்பது மங்கலமாகக் கருதப்பட்டது.[14]

2) நிலைப்படியில் வெண்சிறுகடுகு அரைத்து நெய் கலந்து அப்புகிற பழக்கம் மரபாயிருந்தது.[15]

3) முற்றத்தில் மணல் பரப்புவது வழக்கமாயிருந்தது.[16]

ஆணிகளும் பட்டங்களுமாகிய பெரிய இரும்புகளாலே கட்டப்பட்டுச் செவ்வரக்கு வழித்துத் தாழ்ப்பாள் பொருத்திய இரண்டாய் மாட்சிமைப்பட்ட கதவைச் சேர்த்தி உத்தரமென்னும் நாளின் பெயர் பெற்ற சிறப்பமைந்த உத்தரக்குறுக்குக் கட்டையை வைத்துப் பிடி ஏந்திய குவளைப் பூவுடன் இடையே திருவிளங்க நிலை ஏற்பாடு செய்து கைத்தொழில் வல்ல தச்சன் இடைவெளி தெரியாது இணைத்த மரயாப்பின் வெண் சிறுகடுகும் நெய்யும் அணிந்த படியில் எழுகின்ற கொடியுடன் யானை புகும் மலையை நடுவே திறந்தாற் போன்ற கோபுர வாயில் என்று நெடுநல்வாடை அரசனின் கோயிலை விவரிக்கிறது.

உத்தரத்துக்கும் நிலைக்கும் மரங்களைப் பயன் படுத்தினர் என்பதையும் பல மரங்களைச்சந்து தெரியாமல் இணைத்து இழைப்பது உண்டென்பதையும், கோயில்கள் போல் அரசன் அரண்மனைக்கும் கோபுர வாயில் உண்டு

என்பதையும் கதவுகள் ஒன்றினுள் ஒன்றாக இரண்டாய் அமையும் எனவும் இதிலிருந்து அறிய முடிகிறது.

பழந்தமிழர் கட்டடக்கலை மரபான வாயிற்படியில் யானைகளிடையே திருமகள் சிலை அமைத்தல் (கஜ லட்சுமி) இன்றும் நடைமுறையில் இருப்பதைக் காண் கிறோம்.

கலித்தொகை, சீவகசிந்தாமணி முதலிய பிற நூல் களிலும் இக் கருத்துக் கூறப்பட்டுள்ளது.

வருநுதல் எழில்வேழம் பூநீர்மேற் சொரிதரப்
புரிநெகிழ் தாமரை மலரங்கண் வீறெய்தித்
திருநயந் திருந்தன்ன [17]
நான் மருப்பின் மதயானை நாறிய
பைந்தாமரை மடந்தையைத்
தேன் மதர்ப்பத் திளைத்தாங்கவன் திருவின்
சாயனலங் கவர்ந்தபின்
ஊன் மதார்த்த வொளி வேற்கண்ணார்
பரவவிவ் வாறொழுகு மன்றே
வானகத்து நிலத்து மில்லாவண்ணம்
மிக்கமணிப் பூணினான் [18]

மேற்படி சிந்தாமணிச் செய்யுள் உரையில் நச்சினார்க் கினியர், ''இரண்டானை பக்கத்தே நின்று நீரைச்சொரிய நடுவே தாமரைப் பூவிலேயிருந்த திருமகளைத் திளைத் தாற்போல'' என்று விளக்கியுள்ளார்.

வாயில் நெடுநிலையில் தெய்வம் உறையும் என்ற நம்பிக்கையில் அதற்கு ஐயவி அப்பி நெய்யணியும் மரபை நற்றிணையும் [19] கூறும். மதுரைக் காஞ்சியிலும் இந்த ஐயவி அப்புதல் பற்றிக் குறிப்புள்ளது.

தொல்வலி நிலைஇய அணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின் [20]
குறுங்கதிர்த் தோரை நெடுங்கால் ஐயவி [21]

நெய்யோடு ஐயவி அப்பி ஐதுரைத்து [22]
ஐயவி அமன்ற வெண்காற் செறுவின் [23]

நிலைப்படியில் திருமகள் அமைப்புத் தவிர அழகிய மனையின் முன்னிடத்தில் மணல் பரப்பும் வழக்கமும் இருந்தது என்பதையும் அறிகிறோம்.

திருநிலை பெற்ற தீதுதீர் சிறப்பின்
தருமணன் ஞெமிரிய திருநகர் முற்றத்து [24]

அத்தகைய மணல் முற்றத்தில் அழகிய நிறத்தையுடைய அன்னப்பறவைகள் இருக்கும் என்பதையும், அரசன் கோயிலில் சிறப்பான நிலா முற்றம் உண்டு என்பதையும் கூட நெடுநல்வாடையிலிருந்தே அறிய முடிகிறது.

நெடுமயிர் எகினத் தூ நிற வேற்றை
குறுங்கா லன்னமொ டுகளும் முன்கடை
பணைநிலை முனைஇய பல்லுளைப் புரவி
புல்லுணாத் தெவிட்டும் புலம்புவிடு குரலொடு
நிலவுப் பயன்கொள்ளும் நெடுவெண்முற்றத்துக்
கிம்புரிப் பகுவா யம்பண நிறையக்
கலுழ்ந்து வீழருவிப் பாடுவிறந் தயல
ஒலிநெடும் பீலி யொல்க மெல்லியற்
கலிமயி லகவும் வயிர்மரு ளின்னிசை
நளிமலைச் சிலம்பிற் சிலம்புங் கோயில் [25]

ஆண் மான்களும், அன்னங்களும் திரியும் முன்பக்கத்தின் நிலை கூறப்படுகிறது. குதிரைகளின் குரல் ஒலி, நிலா முற்றத்துச் செயற்கை அருவி நீரொலி, மயிலின் ஆரவாரம் எல்லாம் மலையின் செறிந்த ஆரவாரம் போலுள்ள அரண்மனை என விவரிக்கப்படுகிறது.

இதுவரை வெளி அலங்காரம் அமைப்புப் பற்றிக் கூறிய (Exterior Decoration) இனி உள் அமைப்பு அலங்காரம் (Interior Decoration) பற்றிக் கூறுகிறார்.

**உள்ளலங்காரம்**

இக்காலக் கட்டடக் கலையை போலவே இவ்விரு கூறும் அன்றுகூடச் சிறப்பாக அமைந்திருக்கின்றன. இன்று வளர்ந்துள்ள உள்முக அலங்கார வகைகளை அன்றே தமிழரிடம் காண முடிகிறது. அரண்மனையை மேலோட்டமாக (Surface) வருணித்த நக்கீரர் இனி அவ்வரண்மனையில் தலைவி இருந்த பகுதியின் உட்புற எழிலை வருணிக்கிறார். இப்பகுதியிலிருந்து கட்டடக் கலையின் நுணுக்க வேலைப்பாடாகிய உள்ளழகு செய்தல் (Interior Decoration) புலப்படுகிறது.

யவனர் இயற்றிய வினைமாண் பாவை
கைஏந் தையகல் நிறைய நெய் சொரிந்து
பரூஉத்திரி கொளீஇய குரூஉத்தலை நிமிரெரி
அறுவறு காலைதோ றமைவரப் பண்ணிப்
பல்வேறு பள்ளிதொறும் பாயிரு ணீங்கப்
பீடுகெழு சிறப்பிற் பெருந்தகை யல்லது
ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின்
வரை கண்டன்ன தோன்றல வரைசேர்பு
வில்கிடந் தன்ன கொடிய பல்வயின்
வெள்ளி யன்ன விளங்குஞ் சுதையுரீஇ
மணி கண்டன்ன மாத்திரட் டிண்காழ்ச்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்
உருவப் பல்பூ வொருகொடி வளைஇக்
கருவொடு பெயரிய காண்பின் நல்லில் [26]

யவனர் எனப்படும் சோனகர் செய்த தொழில் மாட்சிமைப்பட்ட கையில் விளக்கு ஏந்திய பிரதிமைகள் — அவ்விளக்கில் அது எரிய நெய் சொரியப்பட்டு நிற்க அவற்றின் திரிகள் மேல் நோக்கிச் சுடர் பரப்பி எரிய இருள் நீங்கிய பெருமை பொருந்திய சிறப்புடையது. காவல் நிரம்பிய பாண்டியனின் அரண்மனையில் மலையை ஒட்டி வானவில் போலப் பெரிய கட்டடங்களில் பல நிறக் கொடிகள் தோன்றின. அந்த அரண்மனையின் நடு இடம் (கருப்பக்

கிருகம்) வெண்ணிறச் சுண்ணம் பூசிய செம்பிலியன்றது போலும் சுவர்களையும் பல தூண்களையும் கொண்டு விளங்கியது. சுவரில் பூங்கொடிகள் எழுதப் பெற்றிருந் தமை இந்நாளையச் சுவர் அணித்தாள் (Wall Decoration Paper) போன்ற உள்ளலங்கார (Interior Decoration) அமைப்பாகத் தோன்றுகிறது.

அரண்மனை நடு இடச் சுவரைச் 'செம்பியன்றது போல் என' ஒப்பிடும் வழக்கம் பிற பாடல்களிலும் காணக் கிடக்கிறது. மதுரைக் காஞ்சியில்,

செம்பியன்றன்ன செஞ்சுவர் புனைந்து [27]

என வருவதை இங்கு ஒப்பு நோக்க முடிகிறது. அறை உள்ளலங்காரத்தின் அடுத்த பகுதியாக அக் கருப்பக் கிருகத்தில் இருந்த கட்டிலின் வருணனை வருகிறது.

இறைவன் கோயிலின் நடு இடத்தைக் கருப்பக்கிருகம் என இக்காலத்தில் அழைப்பது போல அரசன் கோயிலின் நடு இடத்தைக் கருப்பக்கிருகம் என அழைத்தமை பத்துப் பாட்டு—நெடுநல்வாடையில் நச்சினார்க்கினியர் உரையில் இருந்து தெரிகிறது. [28]

இப்பகுதியில் வரும் கட்டில் வருணனை நேரடியாகக் கட்டடக் கலையோடு தொடர்பற்றது எனினும் கருவறை யின் உள்ளலங்காரத்தை விளக்குகிறது.

மடைமாண் நுண்ணிழை பொலியத்
தொடைமாண்டு
முத்துடைச் சாலேக நாற்றிக் குத்துறுத்துப்
புலிப்பொறிக் கொண்ட பூங்கேழ்த் தட்டத்துத்
தகடுகண் புதையப் பொளீஇத் துகடீர்ந்து
ஊட்டுறு பன்மயிர் விரைஇ வயமான்
வேட்டம் பொறித்து வியன்கட் கானத்து
முல்லைப் பல்போ துறழப் பூநிரைத்து
மெல்லிதின் விரிந்த சேக்கை மேம்படத்

துணைபுண ரன்னத் தூ நிறத் தூ வி
இணையணை மேம்படப் பாயணை யிட்டுக்
காடி கொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடமை தூ மடி விரித்த சேக்கை [29]

மூட்டுவாய் இனிது பொருந்த நூலிழையிற்கோத்த முத்துச் சரங்களை அந்தத் தந்தக்கட்டிலின் நாற்புறமும் சாளரம் போல் (சாலேகம்) இடைவெளிவிட்டு நேராகத் தொங்க விட்டிருத்தலையும், கட்டிலின் அமைப்பையும், கச்சுப் பட்டைகளாற் கட்டப்பட்டிருந்த விதத்தையும், படுக்கை விரிப்பையும், மலர்கள் தூவியிருந்தலையும் இப்பகுதி விளக்கும்போது பழந்தமிழர் — உள்ளலங்காரத் துறையிலும் சிறந்திருந்ததை அறிய முடிகிறது.

### கடவுளர் கோயில் கட்டடங்கள்

அரசர்தம் அரண்மனைக் கட்டடக் கலையைப்போல் கடவுளர் கோயிற் கட்டடக் கலையைப் பற்றி இனிக் காணலாம். கடவுளர் தொடர்பான தமிழ்நாட்டுக் கோயிற் கட்டடக் கலையில் படிப்படியான வளர்ச்சி நிலைகள் உள்ளன என்கிறார் பேரறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி. [30]

(அ) மரத் தளிகள் (மரத்தாற் கட்டிய கோயில்கள்)
(ஆ) செங்கல் சுண்ணாம்பு மரம் இணைந்த கட்டடக் கோயில்கள்
(இ) குகை — குடைவரைக் கோயில்கள்
(ஈ) கற்றளிகள் (கல்லால் கட்டப்பட்ட கோயில்கள்)
(உ) மண்தளிகள் (மண்ணால் கட்டப்பட்ட கோயில்கள்)

பெரும்பாலான மலைநாட்டுக் (இன்றைய கேரளப் பகுதி) கோயில்கள் திருக்குற்றாலம் — சித்திரசபை, சிதம்பரம் சபாநாதர் மண்டபம் ஆகியவை முழுமையாக

மரத்தினாலேயே கட்டப்பட்டன. தில்லைக் கோவிலில் உள்ள ஊர்த்துவதாண்டவ மூர்த்தி கோயில், முதலில் மரத்தினாலேயே அமைக்கப்பட்டிருந்தது. பிற்காலத்தில் தான் கருங்கல்லுக்கு மாற்றப்பட்டது. மரக்கூரை, தூண்கள், கெட்டுப் போகாத வண்ணமே செம்பிலும், தங்கத்திலும் தகடுகள் வேயப்பட்டன.[31]

**செங்கற்கோயில்கள்**

பின்பு மரக்கோயில்களில் தீப்பற்றி அழிய நேரும் அபாயம் உணரப்பட்ட பின் — செங்கல் (சுடுமண்) சுண்ணாம்பு (சுதை) கொண்டு பெரும்பகுதி கட்டி உத்தரம் கதவு முதலியவற்றுக்கு மட்டுமே மரங்களைப் பயன்படுத்தும் வழக்கம் ஏற்பட்டது. கி.பி. 600க்கு முற்பட்ட தமிழ் நாட்டுக் கோயில்கள் யாவும் செங்கற் கட்டடங்களே என்பார் மயிலை சீனி வேங்கடசாமி.[32]

சங்க காலத்துத் தமிழ்க் கோயில்கள் பெரும்பாலும் இத்தகையவையே என்று கூறுவதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. இதற்கு எட்டுத் தொகையில் ஒன்றாகிய அகநானூற்றில் பெரும்புலவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியுள்ள ஒரு பகுதி சான்றாக அமையும்.

இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரஞ்சோர் மாடத்து
எழுதணி கடவுள் போகலிற் புல்லென்று
ஒழுகுபலி மறந்த மெழுகாப் புன்றிணை [33]

பாழடைந்த கோயில் ஒன்றைப் பற்றிய வருணனையாக வரும் இதனுள், ''செங்கல்லால் இயன்ற நெடிய சுவரிற் சேர்த்திய விட்டம் என்னும் மரம் அசைந்து வீழ்ந்து பட்டதனால் அங்கு ஏற்கெனவே இருந்த மணிபுப்றாக்கள் கைவிட்டுப் போன நழுவி வீழ்தலையுடைய மாடத்தின் கண் ஓவிய வடிவாக எழுதி ஊர்மக்கள் வழிப்பட்ட கடவுள் போய்விட்டதனால் பொலிவிழந்து மக்களால் வழிபடப்

பெறாத சாணம் மெழுகித் தூய்மை செய்யப் பெறாத திண்ணைகளையுடைய அம்பலம் என்று வருவதனால் அக்காலக் கோயில்கள் கட்டப்பட்ட விதத்தை அறிய முடிகிறது.

கடைச் சங்க காலத்தின் இறுதியில் இருந்த சோழன் செங்கணான் சிவபெருமானுக்கும் திருமாலுக்குமாக எழுபதுக்கு மேற்பட்ட திருக்கோயில்களைச் செங்கல்லால் கட்டினான். [34]

இருக்கிலங்கு திருமொழிவாய் எண்டோ ளீசற்கு
எழில்மாடம் எழுபதுசெய் துலகமாண்ட
திருக்குலத்து வளச் சோழன் [35]

என இதனை அப்பர் தேவாரமும் கூறுகிறது. இவை யாவும் செங்கற் கோயில்களாகவே அமைந்தன என்று அக்கால வரலாறு கொண்டு உய்த்துணர்ந்து உரைக்கிறார் அறிஞர் சீனி வேங்கடசாமி.

## பாறைக் கோயில்கள்

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பல்லவப் பெருவேந்தனான மகேந்திர வர்மன் என்னும் அரசன் ஆட்சி செய்தபோது (கி.பி.600 முதல் 630 வரை) கோயிற் கட்டடக் கலையில் புது மாறுதல் ஒன்று நிகழ்ந்தது.

இவன் காலத்தில் பெரிய கற்பாறைகளைக் குடைந்து எழில் வாய்ந்த குகைக் கோயில்களை (பாறைக் கோயில்கள்) அமைக்கும் வழக்கம் ஏற்பட்டது.

கற்பாறைகளைச் செதுக்கித் தூண்களையும் முன் மண்டபத்தையும் அப்பால் கருவறை எனப்படும் திருவுண்ணாழிகையையும் அமைக்கும் பாறைக் கோயில் முறை இவன் காலத்திலேயே ஏற்பட்டது. [36]

இன்றைய தென்னார்க்காடு மாவட்டம் விழுப்புரம் தாலுகாவைச் சேர்ந்த மண்டகப்பட்டு என்னும் ஊரில் மகேந்திர வர்மன் அமைத்த பாறைக்கோயில் ஒன்று உள்ளது. [37]

இதே மண்டகப்பட்டுக் குகைக்கோயிலில் உள்ள வட மொழிச் சாசனம் ஒன்று,

''செங்கல், சுண்ணம், மரம், உலோகம் முதலியவை இல்லாமலே பிரம, ஈசுவர, விஷ்ணுக்களுக்கு விசித்திர சித்தன் (மகேந்திர வர்மனின் பெயர்) என்னும் அரசனால் இக்கோயில் அமைக்கப்பட்டது" என்று கூறுகிறது.

மண்டகப்பட்டுத் தவிர இதே மகேந்திர வர்மன் குடைந்த பாறைக் கோயில்கள் சென்னையை அடுத்த பல்லாவரத்திலும், காஞ்சியை அடுத்த மற்றொரு பல்லா வரத்திலும், மகேந்திரவாடி, சீயமங்கலம், மேலைச் சேரி, வல்லம் மாமண்டூர், தளவானூர், சித்தன்னவாசல் முதலிய ஊர்களிலும் உள்ளன. [38]

இவனுக்குப் பின் இவனுடைய மகனான மாமல்லன் நரசிம்மபல்லவனும், அவனுக்குப் பின் பரமேசுவரவர்மன் முதலியவர்களும் மாமல்லபுரம், சாளுவன் குப்பம் முதலிய இடங்களில் பாறைகளைக் குடைந்து குகைக்கோயில் களையும் தேர்க்கோயில்களையும் உருவாக்கினர்.

**கற்கோயில்கள்**

பாறைக்கோயில்களை அடுத்துக் கற்றளிகள் எனப் படும் கற்கோயில்களின் காலம் கி. பி. ஏழாம் நூற்றாண் டின் இறுதியில் அரசாண்ட இரண்டாம் நரசிம்ம வர்மன் ஆகிய இராச சிம்ம பல்லவன் கால முதல் தொடங்கியது.

நீளமாகவும், அகலமாகவும் தேவைக்கேற்பவும் தரித்து எடுத்த கருங்கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிக் கட்டப்படும் கோயிலே கற்றளி. சுண்ணம் சேர்க்காமலே பெரும்பாலும் இக்கட்டடங்கள் அமைக்கப் பட்டன. [39]

மாமல்லபுரக் கடலோரமாக உள்ள கற்றளியும், காஞ்சியில் கைலாசநாதர் கோயில் என்று இப்போது கூறப்படும் இராச சிம்மேசரம் என்ற கற்கோயிலும், பனை

மலையிலுள்ள கற்கோயிலுமே முதன்முதலில் கட்டப் பட்டன. இவற்றின் வய்து இருநூறு ஆக இருக்கலாம்.

கல்வெட்டுக்களில் இருந்தும் சாசனங்களில் இருந்தும் பிற்காலச் சோழர்கள் பல செங்கல் தளிகளைக் கற்கோயில் களாக மாற்றிக் கட்டியதை அறிகிறோம். [40]

பின்னாளில் கற்கோயில்களே பெரு வழக்கமாயிற்று. திருவரங்கம், தில்லை, மதுரைக் கோயில்களின் பெரும் பகுதிகள் இத்தகைய கற்கோயில்களாகவே கட்டப்பட்டு அர்த்த மண்டபம், மகாமண்டபம், ஆயிரங்கால் மண்டபம், கருவறை, திருச்சுற்றுக்கள் என்னும் அமைப்புடன் சிறப் பாக விளங்கி வருகின்றன என்பதைக் காண்கிறோம்.

**மாடக் கோயில்கள்**

ஒன்றின் மேல் ஒன்றாக ஒன்பது நிலைகளை உடைய மாடக்கோயில்களைச் சிற்பசாஸ்திரங்கள் விவரிக்கின்றன, யானை முதுகு போல் மேற்பகுதி அமைந்த கோயில்கள் தூங்கானை மாடக்கோயில்களாம். ஆனால் இக்காலத் தில் ஒன்பது நிலைகளும் நிறையக் கட்டப்பெற்ற கோயில் களைக் காண்பது அரிதாயுள்ளது. [41]

இரண்டு அல்லது மூன்று நிலைகள் உள்ள கோயில் களே காணப்படுகின்றன.

கி.பி. ஆறாம் நூற்றாண்டிற்கு முன்னரே — அதாவது பல்லவர் காலத்துக்கு முன்னரே இம்மாடக் கோயில்கள் செங்கல்லினால் அமைக்கப்பட்டவை. அவை அழிந்து பட்டன.

திருமங்கையாழ்வார் தமது பெரிய திருமொழியில் [42] திருநாங்கூர் மணிமாடக் கோயிலைப்பற்றிக் குறிப்பிடு கிறார். இத்திருநாங்கூர் என்பது தஞ்சை மாவட்டம் சீர்காழிக்குக் கிழக்கே ஐந்து கல் தொலைவிலுள்ள ஒரு சோழ நாட்டுத் திருப்பதியாகும்.

திருநறையூரில் (இன்றைய நாச்சியார் கோயில்) சோழன் செங்கணான் கட்டிய மணிமாடக்கோயில் ஒன்றும் 'திருவைகல்' என்னும் தலத்தில் ஒரு மணிமாடக் கோயில் இருந்ததாகவும் (திருவைகல் மாடக் கோயில்) தெரிகிறது.[43]

மாமல்லபுரத்து அருச்சுனன் இரதம் தருமராசர் இரதம் ஆகியவையும் மாடக் கோயில்கள் போன்ற அமைப்பினவே.[44]

காஞ்சி பரமேசுவர விண்ணகரம் என்னும் வைகுந்தப் பெருமாள் கோயிலும் கி.பி. 730 முதல் 795 வரை ஆண்ட நந்தி வர்ம பல்லவன் கட்டிய உத்தரமேரூர் மாடக் கோயிலும் குறிப்பிடத்தக்கவை. இதுவும் மூன்று நிலைகளுள்ள மாடக் கோயிலே.[45]

மூவகைப் பிரிவுகள்

பாரத நாட்டுக் கட்டடக் கலையை மூவகையாகப் பிரித்துக் காணலாம். அம்மூன்று பெரும்பிரிவுகளும் நிலவியல் வழிபாட்டுமுறை சார்ந்தவை.

1. நாகரம், 2. வேசரம், 3. திராவிடம்.

(அ) நாகரம் என்பது வடஇந்தியக் கட்டட மரபு ஆகும்.

(ஆ) வேசரம் என்பது பௌத்த மதத்தவர் சார்பான கட்டடக்கலை.

(இ) திராவிடம் தென்னிந்தியக் கோயிற் கட்டடக் கலையாகும்.[46]

நாகரக் கட்டடக் கலை நருமதை ஆற்றுக்கு வடக்கே வட இந்தியாவில் அமைந்தது. அடி முதல் முடிவரை நான்கு பட்டை (சதுரமாக) இருக்கும். இம்முறை தமிழகத்தில் இல்லை.

வேசரம் — பௌத்த விகாரங்களும், அரைவட்டவடிவ பகோடாக்களும், தேங்காய் மூடியைக் கவிழ்த்ததுபோன்ற

அமைப்புக்களும் இதனுள் அடங்கும். வேசரம்[47] ஒரு சிற்பவகை என்பர்.

திராவிடம் — வடபால் கிருஷ்ணா நதிக்குத் தெற்கே கன்னியாகுமரிவரை அமைந்த கட்டடக்கலை. இதில் தமிழர், சாளுக்கியர், ஹொய்சாளர் முதலிய உட்பிரி வினரின் கட்டடக் கலைகள் எல்லாம் அடங்கக் கூடியவை யாம்.[48]

தளிகள் அமைப்பு

பழந்தமிழர் கோயிற் கட்டடக் கலையில் ஆறு பெரும் உறுப்புக்கள் உண்டு. அவையாவன:

1. அடி (அதிஷ்டானம்) 2. உடல் (பாதம்) 3. தோள் (மஞ்சம்) 4. கழுத்து (கண்டம்) 5. தலை (பண்டிகை) 6. முடி (ஸ்தூபி)

ஆறுறுப்பின் அளவுகள்

1. அடி என்னும் அதிஷ்டானத்தின் உயரம் 1 பங்கு.
2. உடல் என்னும் பாதத்தின் உயரம் 2 பங்கு.
3. தோள் என்னும் மஞ்சத்தின் உயரம் 1 பங்கு.
4. கழுத்து என்னும் கண்டத்தின் உயரம் 1 பங்கு.
5. தலை என்னும் பண்டிகையின் உயரம் 2 பங்கு.
6. முடி என்னும் ஸ்தூபியின் உயரம் 1 பங்கு[49]

விமானங்கள்

கோயிலின் மூலத்தானத்தில் கடவுள் அல்லது மூர்த்தம் அமைந்திருக்கும் இடத்திற் மேற்பகுதித் தூபிக்கு விமானம் என்று பெயர். நுழைவாயில் பகுதித் தூபிக்குக் கோபுரம் என்று பெயர்.

மூலத்தானம் அல்லது கருவறைக்குத் திருவுண்ணாழிகை என்று பெயர்.[50] தமிழகத்திலேயே மிக உயரமான விமானம் கி.பி. 1000 ல் இராசராசன் எடுத்த தஞ்சைப் பெருவுடையார் விமானமாகும். இதன் உயரம்

190 அடி. பின்னர் கங்கை கொண்ட சோழபுரத்தில் தஞ்சை விமானம் போலவே கி.பி. 1025-ல் ஒரு விமானம் எடுக்கப்பட்டது. அடுத்துத் திரிபுவனேசுவரர் கோயில் விமானம் குறிப்பிடத்தக்கது. [51] இந்த அளவு உயரமான விமானக் கோயில்கள் பிற்காலத்தில் கட்டப்படவில்லை.

அப்பர் தேவாரத்தில் சோழன் செங்கணான் கட்டிய எழுபத்தெட்டுக் கோயில்களைக் கூறியபின்,

1. கரக் கோயில், 2. ஞாழற் கோயில், 3. கொகுடிக் கோயில், 4. இளங்கோயில், 5. மணிக்கோயில், 6. ஆலக் கோயில்

என்னும் ஆறு வகைகள் [52] கூறப்படுகின்றன.

கோயிலில் நீர்ப்படை செய்யுமுன் சிலையை வைக்கும் தற்காலிகமான இடத்தைப் 'பாலாலயம்' என்று வட மொழியில் கூறுவதுண்டு. 'இளங்கோயில்' என இங்கே கூறப்படுவது அதன் மொழிபெயர்ப்போ என்று தோன்று கிறது. [53]

வடமொழியிலுள்ள சிற்ப நூல்கள் இந்த வகைகளை,

1. விஜயம், 2. ஸ்ரீயோகம், 3. ஸ்ரீவிசாலம், 4. ஸ்கந்த காந்தம், 5. ஸ்ரீகரம், 6. ஹஸ்தி பிருஷ்டம், 7. கேசரம்

எனக் கூறுகின்றன. யானை முதுகு போன்ற விமான அமைப்புடைய கோயில் கஜபிருஷ்ட விமானக் கோயில் அல்லது ஆலக்கோயில் எனப்பட்டது. ஆலக்கோயில் ஆனைக் கோயில் என்பதன் மரூஉ ஆகும். அக்காலக் கோயில்களிலிருந்த மூவகைகளைக் குறிக்க மூன்று வடசொற்களைப் பயன்படுத்தினர்.

1. சுத்தம் — முழுமையும் மரம் அல்லது கல்லால் ஆகியது.
2. மிஸ்ரம் — இரண்டு பொருள் கலந்து அமைப்பது.

3. சங்கீர்ணம் — இரண்டிற்கும் மேற்பட்ட பொருள்களைக் கலந்து கட்டுவது.

இதுகாறும் அரசனுக்குரிய கட்டடம், இறைவனுக்குரிய கட்டடம் ஆகிய கோயில்கள் ஆகியவற்றை உரிய சான்றுகளுடன் ஆராய்ந்து உண்மைகளைக் காண முடிந்தது.

இனி மக்கள் இல்லங்கள் வீடுகள் பற்றிய கட்டடங்களை ஓரளவு கவனிக்கலாம். இலக்கியங்கள் காப்பியங்களில் அரசர் இருக்கை, இறையவர் இருக்கைகள்பற்றிய சான்றுகள் அதிகமாகக் கிடைப்பதுபோல் மக்கள் இல்லங்கள், கட்டடங்கள் பற்றிய வருணனைகள் பெரும்பான்மையினவாகக் காணக் கூடவில்லை. இல், புக்கில், துச்சில், குரம்பை, குடிசை, குடும்பம் என்ற சொற்கள் கொண்டே ஆய்வைத் தொடங்கலாம்.

## மக்களுக்கான கட்டடங்கள்

திராவிடக் கட்டடக் கலையில் ஒரு பகுதியாகிய பழந்தமிழர் கட்டடக் கலையில் மக்கள் எத்தகு கட்டடங்களை அமைத்து வாழ்ந்தனர் என்பது வினா. இவ்வினாவிற்குப் பல விடைகள் கிடைக்கின்றன.

இல்லம், இல், மனை, குரம்பை, புக்கில், துச்சில், வீடு, குடி, குடில் போன்ற சொற்கள் பழந்தமிழர் நூல்களில் வழங்குகின்றன.

> தமிழகத்தில் பழைய கற்காலம் தொட்டு மக்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதற்கான சான்றுகள் நிரம்பக் கிடைத்திருப்பதால் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு மிக முக்கியமான உணவு, உடை, உறையுள் என்ற மூன்றினையும் அமைத்துக் கொள்வதற்கான முயற்சியும், அம்முயற்சி வெற்றி பெறக் கையாண்ட முறைகளிலே ஏற்பட்ட வளர்ச்சியும் நாளாவட்டத்தில் மெல்ல மெல்ல அதே நேரத்தில்

திண்மையாக வளர்ந்து வந்திருக்கின்றன என்று அறிகிறோம். [54]

என்கிறார் அறிஞர் நடன காசிநாதன்.

புதிய கற்காலம் முதலே கட்டடக் கலை தொடங்கி விட்டது. இயற்கையாக அமைந்த பாறையிடுக்குகளிலே குகைகளில் வாழ்ந்த மக்கள், மலைச் சரிவுகளிலே வட்ட வடிவில் அமைந்த குடிசைகளில் (புல்வேய் குரம்பை) வாழத் தொடங்கிய கால முதல் புதிய கற்காலம் வந்து விட்டது.

புதிய கற்கால மக்கள் பயன்படுத்திய கோடரி முதலிய கருவிகளே இதற்குச் சான்று. புதிய கற்கால முதலே தமிழகத்தில் கட்டடக்கலையின் வளர்ச்சி தொடங்கி யிருப்பதை அறிய முடிகிறது.

இப்படி வளரத் தொடங்கிய கலை சங்க காலத்தில் நல்ல நிலையை அடைந்திருக்க வேண்டும். கி.பி. முதல் நூற்றாண்டிலிருந்து மூன்றாம் நூற்றாண்டு வரை சங்க காலம் நிலவியிருக்கலாம் என்று வரலாற்றறிஞர்கள் கருதுகின்றனர்.

அந்தக் காலத்தில் இறைவர்தம் கோயில்களும் அரசர் தம் அரண்மனைகளும் சமுதாயத்தட்டில் உயர் நிலையில் இருந்தவர்களுக்கு மாட மாளிகைகளும் அமைக்கப்பட்டு இருந்ததற்கான ஆதாரங்கள் சங்க இலக்கியங்களிலே நிரம்பக் கிடைக்கின்றன. [55]

கட்டடக்கலை தொடர்பான பின்வரும் சொற்களும், தொடர்களும் பழந்தமிழ் நூல்களில் காணக் கிடைக் கின்றன.

1. சுடுமண் (செங்கல்), 2. சுதை (சுண்ணாம்பு), 3. விட்டம் (உத்தரம், நிலை முதலியன), 4. மாடம், 5. சாலகம் (பலகணி—சன்னல்), 6. காலதர் (பலகணி —சன்னல்), 7. வேதிகை (திண்ணை), 8. தெற்றி

(திண்ணை), 9. கூடம், 10. அங்கணம் (வீட்டுச் சாக்கடை), 11. முன்றில் (இல் முன்) 12. கதவு—கதவம் தாழ்ந்த பொருளாதார நிலையிலிருந்தவர்கள் தொடங்கிப் பெருஞ்செல்வ நிலையிலுள்ளோர் வரை உறையுள்களை அமைத்திருக்கின்றனர்.

தழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறையிறைக் குரம்பை [56]

புதுவை வேய்ந்த கவி குடில் [57]

ஈந்தலை வேய்ந்த வெய்புரக் கரம்பை [58]

குறவர் ஊன்றிய குரம்பை புதைய
வேங்கை தாஅய் தேம்பாய் தோற்றம் [59]

புல்வெய் குரம்பை புலர ஊன்றி
முன்றில் நீடிய முழவு... [60]

குறையிலாக் குரம்பைக் கொலைவெம்பாதவர் [61]

குளகு மறுத்து உயங்கிய மருங்குல பலவுடன்
பாழூர்க் குரம்பை [62]

குரம்பை நம் மனைவயின் புகுதரும் [63]

நல்கூர் பெண்டில்புல் வேய் குரம்பை [64]

தழைகளை இணைத்துத் தருப்பைப் புற்களால் குடிசைகளை வேய்ந்தனர்.

புதிய வைக்கோலால் தாழ்ந்து நெருங்கிய குடில்களை அமைத்துள்ளனர்.

மலைவாழ் மக்களின் குடிசைமேல் வேங்கைப் பூக்கள் உதிர்ந்து அழகிய தோற்றத்தை உண்டாக்கியுள்ளன.

குடிசைக்கும் முன்றில் புழைக்கடை அமைப்புக்கள் இருந்துள்ளன.

குடிசையும் மனைவீடு என்ற பெயர்களால் அழைக்கப் பட்டுள்ளன. [65]

மலைப்பாறைகளில் இயல்பாய் அமைந்த கல் முழை களும் குறிஞ்சி நில மக்களால் வாழிடங்களாகப் பயன் படுத்தப் பெற்றிருக்கின்றன.

கட்டடங்கள் அமைக்கத் தொடங்கிய காலத்தில் மயன்மரபு' (இன்றைய மனையடி சாஸ்திரத்தின் மூல நெறி) அல்லது பொதுவாக 'விசுவகர்ம முறை' என்று அழைக்கப்படும் நெறி பயன்பட்டுள்ளது.[66] ''மயன் விதித் தன்ன மணிக்கால் அமளிமிசை''[67] எனச் சிலப்பதிகாரத் தலைவனும் தலைவியும் அமர்ந்திருந்த கட்டில் வருணிக் கப்பட்டுள்ளது.

மண்ணினும் கல்லினும் மரத்திலும் சுவரினும்
கண்ணிய தெய்வம் காட்டுநர் வகுக்க[68]

என்ற மணிமேகலை அடிகளால் — மண், கல், மரம், செங்கல் ஆகியவற்றைப் பயன்படுத்தும் வழக்கம் இருந் ததையும் அறியமுடிகிறது.[69]

காவிரிப்பூம்பட்டினத்து வீடுகள் எவ்வாறு கட்டப் பட்டன என்பதற்குச் சிலப்பதிகாரத்திலும் மணிமேகலை யிலும் நிரம்பிய சான்றுகள் கிடைக்கின்றன. கட்டடத்திற்கு செங்கல், ஓடு ஆகியவை பயன்படுத்தப் பெற்றமைக்குப் பின்வரும் மேற்கோள்கள் சான்று பகர்கின்றன.

சுடுமண் ஏறா வடுநீங்கு சிறப்பின்
முடியரசு ஒடுங்குங் கடிமனை வாழ்க்கை[70]
வம்ப மாக்கள் கம்பலை மூதூர்
சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்[71]

முன்னதில் சமுதாயக் குற்றஞ்செய்தாரைத் தலையில் செங்கல்லை வைத்து ஊர்ப்புறம் போக்கும் வழக்கம் கூறப்படுகிறது. 'சுடுமண்' என்பது செங்கல் அல்லது சுட்ட ஓடுகளைக் குறிக்கும்.

கட்டட வேலைக்குச் சுண்ணாம்பு பயன்பட்டது.

வெண்சுதை விளக் கத்துவித்தகர் இயற்றிய[72]
வெள்ளியண்ண விளங்குஞ் சுதையுரீஇ[73]

சுவர்கள் அழகுற அமைக்கப்பட்டன.

செம்பியன்றன்ன செஞ்சுவர் புனைந்து[74]

மாடங்களிலும் சுவர்களிலும் சித்திரங்கள் தீட்டப்பட்டிருந்தன.[75]

சுவர்களை அமைத்த முறை, ஓவியந் தீட்டுதல் போன்ற வேலைப்பாடுகள் கட்டடக்கலையின் ஒரு பகுதியாகிய உள்ளலங்கார வேலையிலும் பழந்தமிழர் சிறப்புப் பெற்றிருந்தனர் என்பதனையே காட்டுகிறது.

எட்டுத்தொகை நூலுள் ஒன்றாகிய பரிபாடலில் கூட இதற்கான சான்றுகள் காணக்கிடைக்கின்றன. மதுரைக்கு அருகேயுள்ள திருப்பரங்குன்றம் குகைக் கோயிலில் அமைந்த ஓவியம் பற்றிய வருணனையில்,

> நின் குன்றத்து
> எழுதெழில் அம்பலம் காமவேள் அம்பின்
> தொழில் வீற்றிருந்த நகர்[76]

என்று குன்றம்பூதனார் என்ற புலவர் பாடியுள்ளார். 'சித்திர மாடத்துத் துஞ்சிய நெடுமாறன்'[77] என்றே ஓர் அரசன் புறநானூற்றில் குறிக்கப்படுகிறான். மாடங்களில் அழகிய ஓவியங்கள் தீட்டப்படுவது பழந்தமிழர் கட்டடக் கலை வழக்கமாயிருந்தது தெரிகிறது.

**கட்டடக் கலையும் பாதுகாப்பும்** (Defence Architecture)

கோயில்கள், அரண்மனைகள் போலவே பாதுகாப்புக்கான கோட்டை கொத்தளங்களையும் அகழி, மதில் போன்ற அவற்றின் உறுப்புக்களையும் தமிழர்கள் சிறப்பாக வகுத்திருக்கின்றனர்.

அரசன் இல்லத்திற்கு அரண்மனை என்றே பெயர் வைத்ததில் பாதுகாப்புப் பொருளும் இணைந்து வருவது காணற்குரியது.

பெரும்பாலான அரசர் வசிப்பிடங்கள் கோட்டைக்குள்ளேயே அமைந்திருந்தன என்பதும் தெரிகிறது.

"பழங்கால மதில்கள் இயந்திரக் கலை நுட்பமும், இராணுவப் பொறி நுட்பமும் சேர்ந்து விளங்கின".[78]

கோட்டை மதில்களையும் பாதுகாப்புக்கான அகழிகளையும் அமைப்பதில் தமிழர்கள் மிகமிக உயர்திறன் பெற்றிருந்ததை அறியப் போதுமான சான்றுகள் உள்ளன.

போர்க்காலப் பயன்களுக்காகக் கரந்துபடை என்னும் சுரங்கப் பாதைகளையும் அமைத்துக் கொண்டனர் தமிழ் மன்னர்கள்.

நெடிதுயர்ந்த மதில்களில் பாதுகாப்புக்கான பல்வேறு வகை விசைக் கருவிகள் பொறிகள் பொருத்தப்பட்டிருந்தன. தாமாகவே வளைந்து விரைவாக அம்புகளை வீசும் விற்பொறிகள், கருங்குரங்கைப் போன்ற அமைப்புடைய விசைப் பொறிகள், கற்களை உமிழ்வது போல வீசியடிக்கும் கவண்பொறிகள், பகைவர் நெருங்கிவர முயலும்போது அவர்மீது கொதிக்கிற எண்ணெயைக் கவிழ்த்துவிடும் பொறிகள், இரும்பைக் காய்ச்சி ஊற்றும் உலைப்பொறிகள், பகைவரைப் பற்றிக் கழுத்தை இறுக்கி முறுக்கும் பொறிகள், ஆளிதலைப் புலிவடிவாக அமைந்த புதுமைப் பொறிகள், அகழியைத் கடந்து மதிலில் ஏற முயலும் பகைவர்களைக் கீழே தள்ளிவிடும் இரும்புக் காப்புக்கள், தூண்டில் பொறிகள், பன்றிப் பொறிகள், ஊசிப் பொறிகள், சங்கிலிப் பொறிகள் முதலான பல்வேறு வகை இயந்திரப் பொறிகளை மதிலில் கட்டியிருந்தார்கள் என்று சிலப்பதிகாரம் விவரித்துக் கூறுகிறது[79] பொதுமக்களுக்கான பொறியியல் அறிவுடன் (Civil Engineering) இராணுவப் பொறியியல் அறிவை (Military Engineering)யும் பழந்தமிழர்கள் பெற்றிருந்தார்கள் என்பதையே இச்சான்றுகளால் உணரமுடிகிறது.

"அரண்மனையிலிருந்து கோயிலுக்குச் செல்லவும், ஊருக்கு வெளியே இரகசியமாகச் செல்லவும் தமிழ் மன்னர்கள் சுரங்கப் பாதைகள் அமைத்துக் கொண்டனர்.

கோட்டை மதில்கள் அமைப்பதிலும் தமிழ் வேந்தர்கள் மிகுந்த கவனம் செலுத்தினர். பழங்கால மதில்கள் அமைப்பில் கட்டடக் கலை நுட்பமும் இயந்திரக் கலை நுட்பமும் இராணுவப் பொறி நுட்பமும் சேர்ந்து விளங்கின.[80]

> மதிலும் கோபுரமும் சுருங்கையுமாகிய அரணுடைமை பற்றி அது அரண்மனை எனப்பட்டது. அதற்குக் கோயில், பள்ளி, நகர், மாளிகை எனப் பிற பெயர்களும் உண்டு.[81]

என அறிஞர் இதனை விளக்குவர்.

> அரசன் முன்னிலையில் சூழ்வினை அமைச்சரும், படைத்தலைவரும், பல்வேறு ஆள்வினைத் திணைக்களத் தலைவரும், பெருங்கணியும் ஆசானும் பல்வகைப் புலவரும் பிறரும் நாள்தோறும் குழுமியிருக்கும் நிலையான இடம் அவைக்களம்[82]

> ஒரு தலைநகருக்கு ஐவகை அரண்கள் உண்டென்றும், அவை: மதிலரண், நிலவரண், நீரரண், காட்டரண், மலையரண் எனப்படும் என்றும் தெரிகிறது.[83]

இவற்றுள் கட்டடக் கலையோடு தொடர்புடைய மதிலரண் பொதுவில் 'புரிசை' என்று கூறப்பட்டாலும், மதில், எயில், இஞ்சி, சோ என்று நால்வகைப்படும். புரிசை என்றால் வளைதல் அல்லது சூழ்ந்திருத்தல்.

**மதில்**

நால்வகை மதில் அரண்களில் உயரம் ஒன்றே உடையது மதில்.

**எயில்**

உயரத்தோடு அகலமும் உடையது எயில்.

**இஞ்சி**

உயரம் அகலம் இவற்றோடு திண்மையும் உடையது இஞ்சி.

**சோ**

உயரம், அகலம், திண்மை இவற்றோடு பகைவர் நெருங்க அரியது சோ.

நான்கு வகை அரண்களுள் சோவரணே சிறந்தது.[84]

உயர்வகலந் திண்மை அருமையிந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கு நூல்[84]

திருக்குறளில் 'அரண்' என்றே பொருட்பாலில் ஓர் அதிகாரம் உள்ளது. இஞ்சுதல் என்றால் தமிழில் இறுகுதல் என்று பொருள். இறுகிய மதிலே இஞ்சி — செம்பை உருக்கிச் சாந்தாக வார்த்துக் கருங்கல்லாற் கட்டிய மதிலே இஞ்சி.

செம்பிட்டுச் செய்த இஞ்சித் திருநகர்[85]

செம்பு புனைந் தியற்றிய சேண்நெடும் புரிசை
உவரா வீகைத் துவரை யாண்டு[86]

சோ வரணும் போர் மடியத் தொல்லிலங்கை
கட்டழித்த[87]

சுழலழலுள் வைகின்று சோ[88]

ஏமாண்ட நெடும்புரிசை[89]

பிறைதொடும் பேமதில்[90]

சுடுமண் நெடுமதில்[91]

மழைதுஞ்சு நீளரணம்[92]

எனப் பழைய நூல்களில் பலவாகப் பயின்று வந்துள்ளமை காணத்தக்கது. இலங்கையிலும், துவார சமுத்திரம் எனப் படும் துவரை நகரிலும் 'இஞ்சியரண்' இருந்தமை அறியப் படும். செப்புக்கோட்டை என்பது இராவணன் கோட்டைப் பெயராக இன்றும் ஈழத்தில் வழங்கப்படுகிறது. மதிலரணை அருமைப்படுத்துவது பொறியாதலால் ஏவறைகளும், பொறிகளுமுடைய இஞ்சியே சோவரணமாயிருத்தல் வேண்டும் என்பது புலனாகிறது. பெரும்பாலும் கோநகரங்களில் ஒரே ஒரு சுற்றுமதில் தவிர ஒன்றினையடுத்து மற்றொன்றாகப் பல மதில்களைக் கட்டுவதும் உண்டு என்பது தெரிகிறது.

'கோடுறழ்ந்தெடுத்த' என்னும் பதிற்றுப்பத்துச் செய்யுளில் அகமதில் — மதிலென்றும் புறமதிலே இஞ்சியென்றும் கூறப்படுகிறது. மதிலை ஒட்டி உட்புறம் அமையும் மேடைக்கு அகப்பா என்று பெயராம். [93]

தொலைவில் பகைவர் வருவதை முன்கூட்டியே நின்று காண முடிந்தபடி புறமதிலின் பல திசைகளிலும் அட்டாலை என்னும் சிறுசிறு கோபுரங்கள் அமைக்கப்பட்டிருப்பதும் உண்டு. இக்கோபுரங்களைக் காப்பார் 'அட்டாலைச் சேவகர்' எனப்பட்டார். மதில் காவலர் மதில் நாயகர் எனப்பட்டார். [94]

மதிலுள்ள நிலவரண் வெள்ளிடை நிலம், தண்ணடை நிலம் என இருவகைப்பட்டன புறமதிற் புறத்தே ஆறும் கடலுமாகிய இயற்கை நீர்நிலையாகவும் அகழி அல்லது கிடங்கு என்னும் செயற்கை நீர்நிலையாகவும் இருக்கும் அரண். காட்டரண் மரங்களடர்ந்த பகுதியாயிருக்கும். மக்கள் விரைந்து கூட்டமாக மேலேற முடியாததும் ஏறினால் கற்களை உருட்டித் தடுக்கக் கூடியதுமாய் இருப்பது மலையரண். [95]

இந்த அரண்களை எல்லாம் நுணுக்கமாக அமைப்பதற்குத் தேவையான பாதுகாப்புப் பொறியியல் அல்லது இராணுவப்பொறியியல் வல்லமை (Defence Architecture or Military Engineering) பழந்தமிழர்க்கு இருந்ததை மேலே காட்டிய நூற்சான்றுகளிலிருந்து அறியமுடிகிறது.

அரசன் வாழும் இல்லம், இறைவர்க்கான கோயில் இரண்டையும் பற்றிய செய்திகள் கிடைப்பதுபோல் தனிப்பட்ட மக்கள் வீடுகள் பற்றிய விவரங்கள் குறைவாகவே கிடைக்கின்றன. அப்படிக் கிடைக்கும் விவரங்களும் மாடமாளிகைகள் வணிகர் குடியிருப்புக்கள் பற்றியனவாகவே உள்ளன. இக்காரணங்களால் திராவிடக் கட்டடக் கலையின் காலம் கோயில்களின் கட்டடக் கலையோடு சார்த்தியே ஆராயப்பட்டுள்ளது.

திராவிடக் கட்டடக் கலையின் பல்வேறு கால நிலைகள்.

1. பழைய காலம் : கி. பி. 600க்கு முற்பட்டது. மரம் செங்கற்களால் மட்டும் ஆன கோயில்கள்.
2. பல்லவர் காலம் : கி. பி. 600 — 900 பல்லவர் கற்றளிக் காலம்.
3. சோழர் காலம் : கி. பி. 900 — 1300 புதிய கற்றளிக் காலம். பழைய கற்றளிகளும் புதுக்கப்பட்ட காலம்.
4. பாண்டியர் காலம் : கி. பி. 1300—1500.
5. விஜயநகரக் காலம் : கி. பி. 1500—1700.

குகைக் கோயில்களும், பாறைக்கோயில்களும் கி. பி. 600 முதல் 850 க்குள் தமிழகத்தில் முதன்முதலாக அமைக்கப்பட்டன என்று தெரிகிறது. [96] மயன், மரபு காக்கேயர் சிற்பம் முதலிய கட்டடக் கலை நூல்கள் கட்டடங்களுக்காக ஏற்கப்பட்டுள்ளமையும் தெரிய வருகிறது. [97]

பொறியியல் நுணுக்கங்கள்

இக்காலக் கட்டடக் கலை வல்லுநரும் வியக்கும் சில பொறியியல் நுணுக்கங்கள் பழந்தமிழர் கட்டடக் கலையில் அமைந்திருந்ததைக் காண்கிறோம்.

வேயா மாடமும் வியன்கல இருக்கையும்
மான்கட் காலதர் மாளிகை இடங்களும் [98]

என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து பலவகை அழகிய தோற்றமுடைய பலகணிகளைப் (ஜன்னல்) பழந்தமிழர் கட்டியிருப்பதை அறிய முடிகிறது. அவற்றில் மானின் கண்போன்ற துளைகள் அமைந்த சாளரமும் ஒன்று என்று தெரிகிறது.

அரண்மனைகளில் மகர மீனின் வாயைப் பிளந்தாற் போன்ற நீர்ப்பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. வேனிற்

காலத்தில் மன்னர்கள் தங்கிய மாடத்திற்கு இளவேனிற் பள்ளி என்று பெயரிட்டிருந்தனர். [99]

பூம்புகார் நகரில் அரண்மனை மண்டபம் கட்டுவதற்கு யவன நாட்டுத் தச்சரும் துணை செய்திருக்கின்றனர். எனவே அயல்நாட்டு நிபுணரைக் கலந்து செயல்படும் வழக்கமும் இருந்தமை தெளிவாகிறது.

இராசராசன் கட்டிய தஞ்சைக் கோபுரத்தின் உயரம் 216 அடி. அப்படியானால் இதன் கடைக்கால் அளவு எத்துணை ஆழமும் அகலமும் உள்ளதாயிருந்திருத்தல் வேண்டும்? கோபுரத்தின் உச்சியில் அமைந்துள்ள ஒரே கல் மட்டும் இருபத்தைந்தரை அடிச் சதுரம் உடையது. இதன் எடை இன்றைய அளவுமுறைப்படி எண்பது டன். இதற்குப் 'பிரமந்திரதளக்கல்' என்று பெயர். பாரம் தூக்கி மேலே ஏற்றி வைக்கக்கூடிய புதிய எந்திரங்கள் எவையும் இன்றுபோல இல்லாத காலத்தில் இவ்வளவு பெரிய கல்லை எவ்வாறு 216 அடி உயரத்திற்கு ஏற்றினர் என்பது எண்ணி வியத்தற்குரியது.

மணலைக் குவித்துச் சாரமேடு அமைத்து யானைகளின் உதவியால் தள்ளிப் பிரமந்திரதளக்கல்லைக் கோபுரத்தின்மேல் ஏற்றியதாகத் தெரிகிறது. இதற்கு ஆதாரமான சாரப்பள்ளம் ஊர் தஞ்சைக்கு அருகே உள்ளது. [100]

அணைகள் கட்டி நீரைத் தேக்கும் பொறியியலிலும் தமிழர்கள் திறம் பெற்றிருந்தனர். சோழன் கரிகாற் பெருவளத்தான் காவிரிக்குக் கரை எடுத்த பெருமையும், கல்லணை கட்டிய சிறப்பும் நீர்ப்பாசனப் பொறியியல் கட்டடக் கலையியலின் அழியாச் சின்னங்களாக விளங்குகின்றன. [101]

உயர்ந்த மண் அணையினால் அமைக்கப்பட்ட வீராணம் என்னும் வீர நாராயணம் ஏரி, செம்பரம்பாக்கம் ஏரி, காவேரிப்பாக்கம் ஏரி, இராசசிங்க மங்கலம் ஏரி முதலிய

ஏரிகளின் மிகப் பெரும் அமைப்பு மேல்நாட்டுப் பொறியியல் வல்லுநர்களையே வியப்பில் ஆழ்த்தியுள்ளது. வரலாற்றுக்கு முற்பட்ட இவைகளைப் போன்ற மாபெரும் ஏரித் தேக்க முறை இதுவரை வேறெந்த நாட்டிலும் காணப்படவில்லை என்றும் மேல்நாட்டு அறிஞர்கள் பாராட்டுகின்றனர்.[102]

பாசனக் கால்வாய்கள் தென்னை ஓலையைப் போல் அமைய வேண்டும் என்றும் ஒரு குறிப்பு உள்ளது. அதாவது மத்தியில் உள்ள மட்டை போன்ற பெரிய கால்வாயும், இருபுறமும் ஓலைகள் பிரிவதுபோல் கிளை வாய்க்கால்களும் இருக்க வேண்டும் என்பது கருத்து. இவற்றை எல்லாம் தொகுத்துக் காணும்போது இவைப் பொறியியல் விந்தையாகவே தோன்றுகின்றன.[103]

கல், மரம், செம்பு, இரும்பு, அரக்கு முதலியவற்றைப் பயன்படுத்தி அவ்வக் காலத்தில் தமிழர் கட்டடக் கலை கோயில்களாகவும் அரண்மனைகளாகவும் வளர்ந்த விதம், கோட்டைகளாகவும் பாதுகாப்புக் கட்டடங்களாகவும் வளர்ந்த விதம் அனைத்துமே அவர்தம் வரலாற்றுச் சிறப்பையும் பண்பாட்டுப் பெருமையையும் பொறியியல் நுண்ணறிவையும் விளக்குவனவாக அமைந்துள்ளன. பிற்கால மாளிகைகளாகிய திருமலை நாயக்கர் மகால் (மதுரை) போன்றவற்றில் இசுலாமியக் கட்டடக் கலைப் பாங்கு விரவியிருப்பதாக அறிஞர் நடன காசிநாதன் போன்றோர் கருதினாலும் அதிலுள்ள முகப்புத் தூண்கள் போன்ற தமிழ்க் கட்டடக் கலைக் கூறுபாடுகள் வியக்கத்தக்கவையாக உள்ளன.[104] இன்றைய மொஸைக் (Mosaic) போல் அன்றே சுதை—கண்டசருக்காரை இளநீர்—பனஞ்சாறு—முட்டைச் சாறு போன்றவற்றால் மழுமழுப்பான மேற்புறம் அமைக்கப்பட்டிருக்கும் அழகை மகாலில் காணமுடிகிறது.

□

குறிப்புகள் :

1. திருமுருகாற்றுப்படை 17, ப. 3.
2. டாக்டர் தமிழண்ணல், ஒப்பிலக்கிய அறிமுகம், பக். 138-39.
3. நெடுநல்வாடை 72-75.
4. பத்துப்பாட்டு நெடுநல்வாடை, நச்சினார்க்கினியர் உரை, ப. 335.
5. பத்துப்பாட்டு உரை, நெடுநல்வாடை, ப. 5.
6. நெடுநல்வாடை 76-79.
7. முருகு ராஜேந்திரன், மனையடி சாஸ்திரம், ப. 32.
8. பத்துப்பாட்டு, நச்சினார்க்கினியர் உரை, ப. 335.
9. நெடுநல்வாடை, வை.மு. கோ. உரை, ப. 15.
10. நெடுநல்வாடை 79-85.
11. முருகு ராஜேந்திரன், மனையடி சாஸ்திரம், ப. 25.
12. பத்துப்பாட்டு நெடுநல்வாடை நச்சினார்க்கினியர் உரை, ப. 335.
13. பத்துப்பாட்டு நெடுநல்வாடை வை. மு. கோ. உரை, ப. 16.
14. நெடுநல்வாடை 84.
15. ,, ,, ,, 86.
16. ,, ,, ,, 94.
17. கலித்தொகை 44:5-7.
18. சீவகசிந்தாமணி 2595.
19. நற்றிணை 370.
20. மதுரைக்காஞ்சி 287.
21. மதுரைக்காஞ்சி 353-54.

22. திருமுருகாற்றுப்படை 228.
23. மலைபடுகடாம் 123.
24. நெடுநல்வாடை 89-90.
25. ,, ,, 93-100.
26. ,, ,, 101-114.
27. மதுரைக்காஞ்சி 485.
28. நெடுநல்வாடை உரை. ப. 338.
29. நெடுநல்வாடை 124-135.
30. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 9.
31. ,, ,, ,, ப. 10.
32. ,, ,, ,, ப. 11.
33. அகநானூறு 167 : 13-16.
34. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 12.
35. அப்பர் தேவாரம் திருஅடைவுத் தாண்டகம், 5.
36. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 12.
37. ,, ,, ,, ப. 13.
38. ,, ,, ,, ப. 14.
39. ,, ,, ,, ப. 14.
40. ,, ,, ,, ப. 15.
41. ,, ,, ,, ப. 20.
42. நாலாயிர திவ்யப் பிரபந்தம், திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழி, 1218-1227.
43. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 21.
44. ,, ,, ,, ப. 22.
45. ,, ,, ,, ப. 22.

46. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 16.
47. மதுரைத் தமிழ்ப் பேரகராதி. ப. 586.
48. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 16.
49. ,, ,, ,, ப. 23.
50. ,, ,, ,, ப. 26.
51. ,, ,, ,, ப. 35.
52. ,, ,, ,, ப. 27.
53. அப்பர் தேவாரம் திருஅடைவுத் திருத் தாண்டகம் 5ம் பாடல்.
54. நடன காசிநாதன், தமிழக நுண் கலைகள், கட்டடக் கலை, ப. 82.
55. ,, ,, ,, ப. 83.
56. பெரும்பாணாற்றுப்படை 263-65.
57. ,, ,, ,, ப. 225.
58. ,, ,, ,, ப. 88.
59. அகநானூறு 12:9.
60. ,, ,, 17 2:10.
61. ,, ,, 210:8.
62. ,, ,, 229:5.
63. ,, ,, 272:11,
64. ,, ,, 369:22.
65. பெரும்பானாற்றுப்படை 263-265.
66. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 84.
67. சிலப்பதிகாரம், மனையறம் 12.
68. மணிமேகலை, 21:125-126.
69. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள். ப. 85.

70. சிலப்பதிகாரம், ஊர்காண் 146-147.
71. மணிமேகலை, மலர்வனம் புக்ககாதை 126-127.
72. ,, ,, ,, 130.
73. நெடுநல்வாடை 110.
74. மதுரைக்காஞ்சி 184-85.
75. நெடுநல்வாடை 110-114.
76. பரிபாடல் 18:27-29.
77. புறநானூறு 59.
78. டி. முத்தையன், தமிழர் நாகரிகம், பொறியியல், ப. 64.
79. சிலப்பதிகாரம் 15:206-216.
80. டி. முத்தையன், தமிழர் நாகரிகம் பொறியியல், ப. 64.
81. ஞா. தேவநேயன், பழந்தமிழராட்சி (1967) சைவ சித்தாந்தம், ப. 29.
82. ,, ,, ,, ப. 31.
83. ,, ,, ,, ப. 58.
84. திருக்குறள் 743.
85. கம்ப ராமாயணம், கும்பகருணன் வதைப்படலம் 159.
86. புறநானூறு 20.
87. சிலப்பதிகாரம் 17:33 ஆய்ச்சியர் குரவை.
88. புறப்பொருள் வெண்பா மாலை 228.
89. புறப்பொருள் வெண்பா மாலை நொச்சி படலம், குதிரை மறம் 4.
90. புறப்பொருள் வெண்பா மாலை உழிஞைப் படலம் வாள்நாட்கோள் 2.
91. புறப்பொருள் வெண்பா மாலை உழிஞைப் படலம் 18 எயிற்பாசி.

92. புறப்பொருள் வெண்பா மாலை வேற்றுப்படை வரவு 24.
93. ஞா. தேவநேயன், பழந்தமிழராட்சி, ப. 61.
94. ,, ,, ,, ப. 63.
95. ,, ,, ,, ப. 63.
96. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள். ப. 95
97. டி. முத்தையன், தமிழர் நாகரிகம் பொறியியல், ப. 62.
98. சிலப்பதிகாரம் 5:7-8.
99. டி. முத்தையன், தமிழர் நாகரிகம்—பொறியியல், ப. 61.
100. ,, ,, 64.
101. ,, ,, 65.
102. ,, ,, 65.
103. ,, ,, 65.
104. நடன காசிநாதன், தமிழக நுண் கலைகள், P. VI, 1978.

இயல் நான்கு

# கட்டடக் கலைஞரும் கட்டடங்களும்

பழந்தமிழர் நாளில் கட்டடங்களையும் கோயில்களையும் அரண்மனை களையும் அமைத்த சிற்பிகளின் தனித் தனிப் பெயர்கள் தெரியவில்லை என்றாலும் சில சாசனங்கள் கல்வெட்டுக்கள் மூலம் சிற்பத் தொழிலின் தனிப் பெயர்கள் சில தெரிகின்றன.

அவையும் கோயில்களைக் கட்டிய சிற்பிகளின் பெயர்களே தவிர வீடுகள், அரண்மனைகளைக் கட்டிய சிற்பிகளின் பெயரை அதிகம் அறிய வாய்ப்பில்லை. அவை எங்கும் இடம் பெறவும் இல்லை.

## சில சிற்பிகள் பெயர்

மாமல்லபுரத்துத் தேர்க் கோயில்களையும் பாறைக் கோயில்களையும் உருவாக்கிய சிற்பாசாரியர்களின் பெயர்கள் மாமல்லபுரத்தை அடுத்த பூஞ்சேரி என்னும் சிற்றூருக்கு அருகில் நொண்டி வீரப்பன் குதிரைத் தொட்டி என்னும் ஒரு பாறையில் பொறிக்கப்பட்டுள்ளன.[1] இப் பெயர்கள் யாவும் மாமல்லபுரத்துச் சிற்பங்களை உருவாக்கிய சிற்பிகளின் பெயர்கள் என்றே கருதப்படுகின்றன. அவையாவன :

1. கேவாத பெருந்தச்சன், 2. குணமல்லன், 3. பய்யமிழிப்பான், 4. சாதமுக்கியன், 5. கல்யாணி, 6. திருவொற்றியூர் அபாஜர், 7. கொல்லன் ஸேமகன்[2]

கி. பி. 8-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலே வாழ்ந்த தண்டி என்னும் வடமொழி நூலாசிரியர் தாம் இயற்றிய அவந்தி சுந்தரிகதா என்னும் நூலில் புகழ்பெற்ற லலிதா லயர் என்னும் சிற்பியைப் பற்றிக் கூறுகிறார். அத்துடன் மட்டும் இல்லாமல் 'சூத்ரக சரிதம், என்னும் கதையை லலிதாலயரே தமிழில் எழுதினார் என்ற தகவலும் தண்டி யாசிரியரால் கூறப்படுகிறது. [3]

இரண்டாவது விக்கிரமாதித்யன் (733-745) காஞ்சி புரத்தை வென்ற பிறகு அந்நகரிலிருந்து குண்டன் என் னும் பெயரையுடைய சிற்பி ஒருவனை அழைத்துக் கொண்டு வந்து 'பட்டதக்கல்' என்னும் ஊரில் ஒரு கோயி லைக் கட்டினான் என்பது தெரிகிறது. அந்தக் கோயில் இப்போது விரூபாட்ச ஈசுவரர் கோயில் என வழங்கப்படு கிறது. திரிபுவனாசார்யர் அநிவாரிதாசாரியார் என்ற சிறப்புப் பெயர்களை இவ்வரசன் இந்தச் சிற்பிக்கு அளித் திருக்கிறான். [4]

முதலாவது குலோத்துங்க சோழன் காலத்தில் புரி சையில், 'திருப்படக்காருடைய மகாதேவர்' கோயில் கட்டப்பட்டது. இதனைக் கட்டிய சிற்பாசாரியின் பெயர் 'சந்திர சேகரன் ரவி' என்னும் சோழேந்திர சிம்ம ஆசாரி என வழங்கப்படுகிறது. [5]

இராசேந்திர சோழன் காலத்தில் புதுப்பிக்கப்பட்ட திருவோற்றியூர் மூலக் கோயில் இன்ன சிற்பியால் புதுப் பிக்கப்பட்டது என்பது தெரிய வாய்ப்புச் சுவர் எழுத் துக்கள் மூலம் அறிய முடிகிறது. வீர சோழ தச்சன் என்பதே அப்பெயர். [6]

சிதம்பரம் கோயிலின் வடக்குக் கோபுரத்தைக் கட்டிய சிற்பியரின் உருவங்களும், பெயர்களும் வடக்குக் கோபு ரத்து உள்சுவரில் எழுதப்பட்டுள்ளன.

அப்பெயர்கள் வருமாறு :

1. விருத்தகிரியில் கேசவப் பெருமாள்
2. அவர் மகன் விசுவமுத்து
3. திருப்பிறைக் கோடை ஆசாரி திருமருங்கன்
4. அவர் தம்பி காரணாச்சாரி[7]

கோயில் கட்டடக் கலைஞர் ஸ்தபதி என்ற தனிப் பெயராலும், வீடு முதலிய கட்டடக் கலைஞர் கொத்தனார் என்ற பெயராலும் குறிக்கப்படும் வழக்கம் பின்னாளில் வந்தது.

ஸ்தபதிகள் ஆகமப் பயிற்சி, வடமொழி அறிவு, சிற்ப நூலறிவு அதிகமுள்ளவர்களாக உயர் மட்டத்தில இருந்தனர்.

உருக்குதல், வார்த்தல், பஞ்சலோகக் கலவை— ஜடிபந்தன மருந்து செய்தல் (சிலையைப் பீடத்தோடு இணைக்கும் அரக்குப் போன்றதொரு மருந்து) முதலிய சிறப்பம்சங்கள் ஸ்தபதிகளுக்குத் தெரிந்திருந்தன.[8]

காரை, செங்கல், பூச்சு, கட்டல் நெற்றி எடுத்தல் (மேல் விதானப் பூச்சு) ஆகிய வேலைகளில் கொத்தர் அல்லது கொத்தனார்கள் தேர்ந்திருந்தனர்.[9]

'சிற்ப சாஸ்திர' நூல் மரபுப்படி எல்லாரையும் 'சிற்பிகள்' எனக் குறித்த பழைய மரபு மாறி வெறும் கட்டட வேலை மட்டும் செய்வோர் கட்டட வேலைக்காரர் அல்லது கொத்தனார் என்ற பிற்கால வேறுபாடுகள் வந்தன. இந்த வேறுபாடு வந்த பின்னும் கோயில் கட்டட வேலைகளில் ஸ்தபதி கொத்தனார் இருவருக்குமே பணிகள் இருந்தன.

சுவரைக் கொத்தனார் எடுத்தார். திருவுண்ணாழிகை, பீடம் அமைத்தல், பீடத்தில் மூர்த்தத்தை நிறுவுவது போன்றவற்றை ஸ்தபதி செய்தார்.[10]

ஸ்தபதி என்ற சொல்லுக்கு ஸ்தாபிப்பவர்—நிலை நிறுத்துபவர் என்பது பொருள்.

"கோயில் கட்டும் கலையில் உலகிலேயே மிகவும் தேர்ச்சி பெற்றவர்கள் தமிழர்கள் என்றும் இந்தியாவிலேயே நிகரற்ற பெருமை வாய்ந்த கோயில் தஞ்சைப் பெரிய கோயில் என்றும் ஆங்கிலக் கலைக் களஞ்சியம் என்ற தொகுப்பு நூலில் காணப்படுவதுகாய்தல் உவத்தல் இன்றி வெளியிடப் பெற்றிருக்கும் கருத்தே ஆகும்" என்று காலஞ்சென்ற அறிஞர் பி. ஸ்ரீ. கூறுவார். [11]

"அரசர்களின் அரண்மனையைத்தான் கோயில் என்ற சொல் ஆதியில் குறித்திருக்க வேண்டும். பிறகு இது தெய்வ வழிபாட்டுக்குரிய இடங்களைச் சிறப்பாகக் குறிக்கலாயிற்று. சிற்ப நூல் வல்லுநர் கோயில்களையும், மண்டபங்களையும் மாட மாளிகைகளையும் உயர்ந்த மாடங்களில் அடுக்கு வீடுகளையும் நிலாமுற்றங்களையும், தங்கள் கலைத் திறன் தோன்ற அமைத்தனர் என்று நெடுநல்வாடை தெரிவிக்கிறது. சிறந்த அறிஞர்களான ஓவியமணிகள் மதுரையில் இருந்ததாக 'மதுரைக்காஞ்சி' கூறுகிறது. [12]

அழகான அரண்மனையை 'ஓவத்து அன்ன உருகெழு நெடுநகர்' [13] என்கிறது பதிற்றுப்பத்து. ஓவியம் போல் அழகையுடைய அரண்மனை என்பது இதன் பொருள். 'எழுதி வைத்த சித்திரமே போன்ற அழகிய வீடு' என்று இப்போது கூடப் பேச்சு வழக்கில் புகழ்ந்து சொல்லுவது உண்டு. இதே போன்றதோர் உவமை புறநானூற்றிலும் காணப்படுகிறது. [14] "சித்திரத் தொழில் வேலைப்பாடுகள் நிறைந்த ஒரு மனையை அல்லது வீட்டை ஓவியம் போல் இருக்கிறது என்று சங்க நூல்கள் கூறுவதிலிருந்து அக் காலத்துத் தமிழர்களின் ஓவியக் கலை உணர்வையும் நன்கு உய்த்துணரலாம்". இன்றைய கட்டடக் கலையில் ஓவியமும் ஒரு வகையில் உள்ளடங்குகிறது. வெளி

வேலைப்பாடு (Exterior Decoration) உள்ளணி (Interior Decoration) என்ற கட்டடக் கலையின் இரு பிரிவுகளில் ஓவியம் உள்ளணியில் அடங்கி விடுகிறது.

அரங்குகள் அமைப்பு

மேடை, அரங்கமைத்தல், உள்ளணி செய்தல் போன்ற கட்டடக் கலையின் நுண்ணிய பிரிவுகளிலும் பழந் தமிழர் சிறந்து விளங்கி இருந்ததற்கு நூற் சான்றுகள் கிடைக்கின்றன. திரைச்சீலை, அரங்க நிர்மாணம் பற்றிய விவரங்கள் பலவும் தெரிய வருகின்றன.

இவை பற்றிச் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையில் பல செய்திகளைக் காணமுடிகிறது.

பழந்தமிழர் அமைப்பில் இவ்வாறு நாட்டியம், நாடகம், கூத்து முதலியன நிகழும் கட்டட ஏற்பாடு இரு பிரிவுகளை உடையதாயிருந்தது.

கலைஞர் நின்று நிகழ்த்தும் இடம் அரங்கு எனவும், சுவைப்போர் இருந்து காணுமிடம் அவை எனவும் அவையரங்கு எனவும் கூறப்பட்டன. [15]

அரங்கு அமைக்கும் இடத்தைத் தேர்ந்தெடுப்பதில் 'மனையடி சாஸ்திரம்' பின்னாளில் கூறும் அதே நிலைகள் சிலம்பிலும் வருகின்றன என்பதைக் கவனிக்க வேண்டும்.

எண்ணிய நூலோர் இயல்பினின் வழாஅது
மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு
புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்கழைக்
கண்ணிடை ஒருசாண் வளர்ந்தது கொண்டு
நூல்நெறி மரபின் அரங்க மளக்கும்
கோலளவு இருபத்து நால்விர லாக
எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து
ஒருகோல் உயரத் துறுப்பின தாகி
உத்தரப் பலகையோ டரங்கின் பலகை
வைத்த இடைநிலம் நாற்கோலாக

ஏற்ற வாயில் இரண்டுடன் பொலியத்
தோற்றிய அரங்கு [16]

என்று சிலப்பதிகாரம் அரங்கு கட்டப்பட்ட விதத்தை விவரிக்கிறது. இதில் 'எண்ணிய நூலோர், என்ற தொடருக்கு அடியார்க்கு நல்லார் விளக்கம் எழுதும் போது,

''எண்ணப்பட்ட சிற்ப நூலாசிரியர் வகுத்த இயல்பு களின் வழுவாத வகை அரங்கு செய்தற்கு நிலக் குற்றங்கள் நீங்கின இடத்திலே நிலம் வகுத்துக் கொண் டென்க'' [17] என்றார்.

மேலும் எண்ணப்பட்ட மண்ணக நிலம் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கும் விளக்கமும் அவரது உரையி லேயே கிடைக்கிறது.

தந்திரத் தரங்கிங் கியற்றுங்காலை
அறனழித் தியற்றா வழக்குடைத் தாகி
நிறைகுழிப் பூழி குழிநிறை வாற்றி
நாற்றமும் சுவையும் மதுரமுமாய்க் கனம்
தோற்றிய திண்மைச் சுவட துடைத்தாய்
என்பு உமி கூர்ங்கல் களிஉவர் ஈளை
துன்ப நீறு துகள் இவை இன்றி
ஊரகத் தாகி யுளைமான் பூண்ட
தேரகத்தோடுந் தெருவுமுக நோக்கிக்
கோடல் வேண்டும் ஆடரங்கதுவே [18]

என்று ஒரு மேற்கோளும் வருகிறது. ஏறக்குறைய மனை நூல் பாடல் போலவே ஒரு பாடலை உரையாசிரியர் காட்டுகிறார்.

தனியார் வீட்டுக்குத் தெருக் குத்தல் (தெருவை முக நோக்கி இருப்பது) ஆகாது எனக் கூறும் அதே சாஸ்திரம்[19] அரங்குக்குத் தெருமுக நோக்கி இருத்தல் வேண்டும் என்று இலக்கணம் கூறியிருப்பது சிந்தனைக்குரியது. இதே பகுதிக்கு அரும்பதவுரையில் ''எண்ணப்பட்ட நாடக நூலாசிரியர் வகுத்த இயல்புகளின்வழுவாத வகை அரங்கு

செய்யத் துவர் வரி வளை பொருத்தல் முதலிய நிலக் குற்றங்கள் நீங்கின இடத்திலே நலந்தெரிந்து இவ்விடம் என்று வகுத்துக் கொண்டு"[20] என்றார்.

அடியார்க்கு நல்லாரோ அரங்கமைத்தலை மேலும் விவரிக்கும்போது, "தந்திர வழி அரங்கு இவ்வுலகத்துச் செய்யுமிடத்துத் தெய்வத் தானமும் பள்ளியும் அந்தண ரிருக்கையும் கூபமும், குளனும் காவும் முதலாகவுடையன நீங்கி அழியாத இயல்பினையுடைத்தாய் நிறுக்கப்பட்ட குழிப் பூழி குழிக் கொத்துக் கல்லப்பட்ட மண் நாற்றமும் மதுர நாறி இரதமும் மதுரமாகித் தானும் திண்ணிதாய் என்பும், உமியும், பரலும் சேர்ந்த நிலம், களித்தரை, உவர்த்தரை, ஈளைத்தரை, பொல்லாச் சாம்பல் தரை பொடித்தரை என்று சொல்லப்பட்டன ஒழிந்து ஊரின் நடுவணதாகித் தேரோடும் வீதிகளெதிர் முகமாக்கிக் கொள்ளல் வேண்டும் என்க"[21] என்று விவரிக்கிறார்.

இவ்விடத்தில் சாமிநாதையர் ஓர் அடிக்குறிப்புப் பாடல் தருகிறார்.

ஆடலும் பாடலும் கொட்டும் பாணியும் நாடிய
அரங்கு சமைக்கும் காலைத் தேவர்
குழாமுஞ் செபித்த
பள்ளியும் புள்ளின் சேக்கையும் புற்றும் நீங்கிப்
போர்க்களி யானைப் புரைசாராது மாவின்
பந்தியொடு
மயங்கல் செய்யாது செருப்புகு மிடமும்
சேரியும் நீங்கி
நுண்மை யுணர்ந்த திண்மைத்தாகி
மதுரச்சுவை மிகூஉ
மதுர நாறித் தீராமாட்சி நிலத்தொடு பொருந்திய
இத்திறத்தாகு மரங்கினுக் கிடமே[22]

என்று வரும் அப்பாடல். அரங்கமைக்க நிலங்கோடல் பற்றி விளக்குகிறார் அடியார்க்கு நல்லார்.

நிலந்தான்,

1. வன் பால், 2. மென் பால், 3. இடைப் பால் என மூவகைப்படும். அவற்றுள்,

வன் பாலாவது குழியின் மண் மிகுவது
மென் பாலாவது குழியின் மண் குறைவது
இடைப் பாலாவது குழியின் மண் ஒப்பு

ஈண்டு இவை பெரும்பான்மையாற் கொள்ளப்படும்.[23]

அரங்கிற்கு நிலங்கோடல் பற்றி அன்றும் மனை நூல் முறைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை இப்பகுதி உறுதி செய்கிறது.

பின்னர் அரங்கு அமைக்கும் முறையும், உள்ளலங்காரமும் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

பொதியில் மலை முதலிய புண்ணிய நெடுவரையின் பக்கங்களில் நெடிதாகி உயர வளர்ந்த மூங்கிலிற் கண்ணொடு கண்ணிடை ஒரு சாணாக வளர்ந்தது கொண்டு நூல்களிற் சொல்லியபடியே அரங்கம் செய்ய அளக்குங் கோல் — உத்தமன் கைப்பெருவிரல் இருபத்து நாலு கொண்டது ஒரு முழமாகக்கோல் நறுக்கி அக்கோலால் ஏழுகோல் அகலமும் எட்டுக்கோல் நீளமும் ஒரு கோல் குறட்டுயரமுமாய்க் கொண்டு —தூணத்துக்கு மீது வைத்த உத்தரப் பலகைக்கும் அரங்கினிடத்து அகலத்துக்கு இட்ட உத்தரப் பலகைக்கும் இடைநின்ற நிலம் நான்குகோலாக உயரங்கொண்டு இத்தன்மையவாய் அளவுக்குப்பொருந்த வகுத்த வாயிலிரண்டினை உடையதாகச் செய்த அரங்கு என்றவாறு.[24]

வாயிலிரண்டாவது புகச் சமைத்த வாயிலும் புறப்படச் சமைத்த வாயிலும் எனக் கொள்க.[25] என்று கூறப்பட்டுள்ளது.

உட்புகும் வாயிலும் (Entry) வெளிப்படும் வாயிலும் (Exit) தனித்தனியே அமைப்பது இந்த நூற்றாண்டின் அரங்க உத்தி (Theatre Technic) என்று கருதுகிறோம்.

ஆனால் சிலப்பதிகாரக் காலத்து அரங்கமைப்பிலேயே அந்நிலை இருப்பதைக் காணமுடிகிறது. இந்நுணுக்கம் தமிழர் கட்டடக் கலை நயத்திற்கு ஓர் அடையாளமாகவே விளங்குகிறது.

இவ்வாறு அமைத்த அரங்கிலே அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நால்வகை வருணத்தார்க்கு முரிய பூதங்களை எழுதி யாவரும் வணங்க மேனிலத்தில் வைப்பர்.

இதே கருத்து சீவக சிந்தாமணியிலும் கூறப்படுகிறது. [26]

சிலம்பு அழற்படுகாதையிலும் இப்பூதங்கள் பற்றிய பிற விவரங்கள் வருகின்றன.

அரங்கி னுயரமு மகலமு நீளமும் பொருந்த நாடி
உரைக்குங் காலைப் பெருந்தண்
மால்வரைச் சிறுகழை
கண்ணில், கண்ணிடை யொருசாண்
வளர்ந்தது கொண்டே
இருபத்து நால்விரற் கோலளவு அதனால்
எழுகோலலெத்
தெண்கோ னீளத் தொருகோல் உயரத்
துறுப்பினதாகி
உத்தரப் பலகையோ டரங்கின் பலகைவைத்த
இடைநிலை நாற்கோலாகப் பூதரை
எழுதி மேனிலை வைத்து நந்தி என்னுந்
தெய்வமு
மமைத்துத் தூணிழற் புறப்பட மாண்விளக்
கெடுத்து
... கோவும் யானையுங் குரங்கும் பிச்சனும்
பாவையும் பாங்குடைப் புருடா மிருகமும்
யானையு மெழுதி

இந்நிலம் விளங்கப் பாவையர்க் கியற்றுவ
தரங்கெனப் படுமே [27]

என்று சுத்தானந்தப் பிரகாச மேற்கோளும் காட்டப் படுகிறது.

அரங்கின்கண் விளக்கு ஒளியில் ஏனையவற்றின் நிழல் பட்டு விடாதபடி கவனம் எடுத்துக்கொண்டது[28] மற்றொரு கட்டட நிர்மாண நுணுக்கமாகும். தூண்களின் நிழல் அரங்கில் பட்டுவிடாதபடி அரங்கமைத்தனர் என்கிறார் இளங்கோவடிகள்.

''தூண்களின் நிழல் நாயகப் பத்தியின்கண்ணும், அவையின் கண்ணும் படாதபடி மாட்சிமைப்பட்ட விளக்கை ஏற்றி'' என்கிறார் அரும்பதவுரையாசிரியர்.[29]

அடுத்துத் திரைச்சீலை பற்றியும், அரங்கை அணி செய்தல் பற்றியும் கூறுகிறார்.

திரைச்சீலை எழினி எனப்படுகிறது. ''வடமொழியில் வழங்கும் 'யவனிகா' (திரைச்சீலை) என்பது யவனரிடமிருந்து வந்தது என்ற பொருளுடையது என்பதை மறுத்துத் தமிழின் 'எழினி'யே வடமொழியில் அம்மொழி உச்சரிப்பில் 'ழ' இல்லாத காரணத்தால் 'யவனிதா' ஆயிற்று எனக் கூறுவார் அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி.[30] சித்திரங்கள் தீட்டப்பட்ட நாடக அரங்கத்திரைச்சீலைகள்,

1. ஒருமுக எழினி, 2. பொருமுக எழினி, 3. கரந்துவரல் எழினி

என மூன்று வகையாக வழங்கப்பட்டன.[31] இனி அவற்றைப் பற்றிய விவரமானசெய்திகள் வருமாறு:

(அ) இடத் தூணின் நிலையிடத்துத் தொங்கவிடப் படுவது ஒருமுக எழினி.

(ஆ) வலத் தூணின் நிலையிடத்துத் தொங்கவிடப் படுவது பொருமுக எழினி.

(இ) வலத் தூணின் மேற்பகுதியில் கரந்துவரல் எழினி.[32]

இனி அடியார்க்கு நல்லார் திரைச்சீலை அமைப்பை உரிய மேற்கோள்களுடன் நிறுவுகிறார்.

"இடத் தூண் நிலையிடத்தே உருவுதிரையாக இருப்பது ஒருமுக எழினி. இருவலத் தூண் நிலையிடத்தேயும் உருவுதிரையாக இருப்பது பொருமுக எழினி.

மேற்கட்டுந் திரையாகக் கரந்துவரல் எழினியைச் செயற்பாட்டுடனே வகுத்தல் வேண்டும்.[33]

மேற்கட்டுத் திரையாய் நிற்பது ஆகாயசாரிகளாய்த் தோன்றுவார்க்கெனக் கொள்க. என்னை?

"முன்னிய எழினிதான் மூன்று வகைப்படும்" என்றார் மதிவாணனார்.[34]

"அரிதரங்கிற் செய்தெழினி மூன்றமைத்துச் சித்திரத் தாற் பூதரையும் எய்த எழுதி இயற்று" என்றார் பரத சேனாபதியார்.[35]

மேற்கட்டியாகிய விதானத்தின் பல்வேறு சித்திரங்கள் எழுதப் படுகிற மரபும் இருந்தது.[36] உள்ளலங்காரமாக "நல்லவாகிய முத்துமாலைகளாற் சல்லியும் தூக்குமாகத் தொங்கவிடச் செய்து அழகினால் புதுமைத்தாகச் சமைத்த அரங்கினகத்து"[37] என்று இவ்வாறு அரங்க நிருமாணம் பற்றி வருகிறது. நெடுநல்வாடையிலும் இச்செய்தி குறிப்பிடப்படுவதைக் காண்கிறோம்.

அரங்கின் 'உத்தரப் பலகை'[38] பற்றி மணிமேகலையிலும் கூறப்படுகிறது.[39]

எழினி மூவகைப்படும் என்ற கருத்து சீவகசிந்தாமணியில்,

எழினி தானே மூன்றென மொழிப
அவைதாம் ஒருமுக எழினியும் பொருமுக
எழினியும் கரந்துவர லெழினியுமென
மூவகையே [40]

என்று கூறப்படுகிறது. ''பொருமுகப் பளிங்கி னெழினி''[41] என்று மணிமேகலையிலும் எழினி பற்றி வருகிறது. சிலப்பதிகாரத்தின் இப்பகுதியிலிருந்து அரங்க நிருமாணம் என்னும் மற்றொரு வகையான கட்டடக் கலையிலும் அவ்வரங்கின் உள்ளலங்கார வேலைப்பாடுகள் போன்றவற்றிலும் பழந்தமிழர் தேர்ச்சி பெற்றிருந்ததையும் திறமை காட்டியிருப்பதையும் அறிய முடிகிறது. அரங்க நிருமாணக் கலையில் கட்டடத்துக்கான பொருள்களைத் தவிர உள்ளலங்காரமும் நிழற்படாமை மேடையில் நுழைய வெளியே தனித்தனி வாயில்கள் என்ற நுணுக்கங்களையும் கடைப்பிடித்திருக்கின்றனர். அரங்கிற்கு நிலம் வகுத்துக்கொள்ளுதல் பற்றிப் பரத சேனாபதியம் என்னும் பழைய நூலே இலக்கணம் கூறியிருப்பதாக [42] அடியார்க்கு நல்லார் எழுதுகிறார்.

நிலங்கோடல் முதல் சந்திரன் குரு அங்காரகன் என்னும் வெண்ணீர்மை பொன்னீர்மை செந்நீர்மை என்னும் புகழ்மையைத் தமக்குரிமையாகப் பெற்ற முத்து மாலைகளாற் சரியும் தூக்கும் தாமமுமாக நாற்றுவது வரை அரங்கமைப்புக் கூறப்படுவதில் இடையே வேறு சில நுணுக்கமான செய்திகளும் அடைமொழியாலே அறியப் படக்கிடக்கின்றன. [43]

இனி 'ஏற்ற வாயில் இரண்டுடன் பொலிய' [44] என்ற அடியுள் ஏற்ற என்ற அடைமொழியாற் கிடைக்கும் பொருள்களாய் அடியார்க்கு நல்லார் பின்வருமாறு கூறுவதைக் காணலாம்.

'ஏற்ற' என்றதனால் கரந்து போக்கிடனும், கண்ணுளர் குடிஞைப் பள்ளியும் அரங்முகம் அதிதெனர்,

மன்னர் மாந்தரோடிருக்கும் அவையரங்கமும், இவற்றினைச் சூழ்ந்த புவிநிறை மாந்தர் பொருந்திய கோட்டியும் முதலாயின கொள்க. [45]

இதனுள் கண்ணுளர் குடிஞைப்பள்ளி என்பது கலைஞர் புனைவறையாக இருத்தல் வேண்டும் என்று உய்த்துணர முடிகிறது.

கரந்து போக்கிடன் என்பது அப்பள்ளியிடத்துக்கும் அப்பள்ளியிலிருந்தும் அவையினர் காணாதபடி போகவும் வரவும் அமைந்த வழியாயிருத்தல் வேண்டும். அல்லது கருவியிசை ஓர் அமரஇக்கால அரங்கில் கட்டப்படும் பள்ளமான அமர்வறை போன்ற ஒன்றாக இருத்தலும் கூடும் என்று கருதலாம். என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா என்னும் கலைக்களஞ்சிய நூல் கட்டடங்களின் பயனை வகைப்படுத்தும்போது கேளிக்கைகளுக்கான மனமகிழ் கட்டடங்கள் (Recreational Architecture) என்று ஒரு வகையைக் கூறுகிறது. [46]

கட்டடங்களை அலங்கரிப்பதைப் (Ornamental) பற்றியும் கூறுகிறது. சிலப்பதிகார அரங்கேற்றுகாதையில் வருகிற அரங்க நிருமாணப் பகுதி மனமகிழ்ச்சிக்கான கட்டடக் கலைப்பகுதிக்கும் அதன் உள்ளலங்காரத் திறனுக்கும் (Applied Ornamental) பொருத்தமான எடுத்துக்காட்டாக அமையக்கூடியது.

(அ) மரபு, (ஆ) கலை நுணுக்கம், (இ) பொருத்தம் ஆகிய மூன்றினாலும் இச்சிறப்பு அரங்கேற்று காதைப் பகுதியிலிருந்து அறியும் அரங்க நிருமாணக் கலையில் இசைந்து சிறக்கின்றன. நிலங்கோடலில் பழைய மரபும், எழினி, தனித்தனி வாயில்கள், தூண்களில் நிழல் படாத மேடை, அவை ஆகியவற்றில் கலை நுணுக்கமும் காணக் கிடக்கின்றன.

கண்ணுளர் குடிகளை, கரந்து போக்கிடம் முதலியவை பொருத்தமாக அமைகின்றன என்பதும் குறிப்பிடத் தக்கவை.

இவ்வாறு தொடக்கத்தில் மனிதன் தனக்கு இன்றியமையாத் தேவையாய் இருந்த உறையுள் அமைத்தல் முதல் கோயில், அரண்மனை, கோட்டை, கொத்தளம், அரங்கு, கட்டட உள்ளலங்காரம் என இக்கலையின்கண் வளர்ந்த பின் அடுத்த வளர்ச்சியாய் அமைந்தது நகரமைப்பு.

பழந்தமிழர்கள் நகரமைப்பையும் அழகுறச் செய்தனர். திராவிடக் கட்டடக்கலை நாகரிகம் என்று அறிஞர் கண்டு பிடித்துள்ள சிந்துவெளி அகழ்வாய்வுச் சிதைவுகளில் உள்ள மொகஞ்சோதாரோ கோட்டை ஒன்று முப்பத்து மூன்று சதுர அடி முற்றத்தையும் அதனைச் சுற்றி அறைகளையும் உடையதாயுள்ளது. 230 அடி நீளமும் 78 அடி அகலமும் உள்ளதாயிருந்தது. அந்தக் கட்டடம்[47] என்கிறார் அறிஞர் எஸ். இராமகிருஷ்ணன். 90 அடி கொண்ட மற்றோர் அவைக்கூடமாகும். மற்றொன்று தானியக் களஞ்சியமாகும்.[48]

நாகரிகத்தின் மலர்ச்சிக் காலமே பழந்தமிழரிடமிருந்தே தொடங்குகிறது என்கிறார் ஆய்வாளர் க. த. திருநாவுக்கரசு.

"மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் கொண்ட நாடு நகரங்களை அமைத்து அவற்றைக் காக்க நல்லதொரு அரசினை அமைத்து வாழ்வாங்கு வாழத் தொடங்கினான்"[49] என்கிறார்.

கட்டடக் கலையின் உள்ளது சிறத்தலாய் ஊரமைப்பு நகரமைப்புக் கலை வளர்ந்தது. நகரமைப்புக் கலையிலும் தமிழர் தம் தனித் திறனைக் காட்டிப் பண்பாட்டு முத்திரையைப் பதிக்கலாயினர். பூம்புகார், மதுரை, உறையூர், காஞ்சி, வஞ்சி போன்ற நகரங்கள் பழந்தமிழர் நகரமைப்புத் திறனுக்குச் சான்றுகளாக இலங்கின. □

குறிப்புகள் :

1. S.I.I., Vol. XII, No. 23A.
2. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 42.
3. ,, ,, ,, ப. 43.
4. ,, ,, ,,
5. Epi. Rep. 1911, p. 72.
6. S.I.I., Vol. IV, p.185.
7. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 43.
8. சுவாமிநாத ஸ்தபதி, கோயிற்சிற்பங்கள், ப.16.
9. டாக்டர் நாகசாமி, இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கையேடு, ப. 155.
10. சுவாமிநாத ஸ்தபதி, கோயிற்சிற்பங்கள், ப.19.
11. பி. ஸ்ரீ., தமிழரும் கலையுணர்வும், ப.4.
12. மதுரைக் காஞ்சி 518.
13. பதிற்றுப்பத்து 88:28.
14. புறநானூறு 251:12.
15. பி.ஸ்ரீ., தமிழரும் கலை உணர்வும், ப. 117.
16. சிலம்பு. 1:3:95—106.
17. சிலம்பு, அடியார்க்கு நல்லாருரை, ப. 113.
18. ,, ,, ,,
19. மு. முத்தையா, மனையடி சாஸ்திரம், ப. 52.
20. சிலம்பு, அரும்பதவுரை, ப. 69.
21. சிலம்பு, அடியார்க்கு நல்லார் உரை, ப. 113.
22. ,, ,, ,,
23. ,, ,, ,,
24. சிலம்பு அரும்பதவுரை, ப.70.
25. சீவக சிந்தாமணி, 672 நாச்சினார்க்கினியர் மேற்கோள்.

26. சிலம்பு, சாமிநாதையர் மேற்கோள், ப. 115.
27. சிலம்பு, அடியார், ப. 115.
28. சிலம்பு, 1:3:108.
29. மயிலை சீனி வேங்கடசாமி, தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், ப. 177—179.
30. ,, ,,
31. ,, ப. 178.
32. சிலம்பு, அரும்பதவுரை, 71.
33. சிலம்பு, அடியார், 115.
34. ,, ,,
35. ,, ,,
36. சிலம்பு, 3:111.
37. சிலம்பு, 3:111-113, நெடுநல். 125
38. சிலம்பு, 3:103.
39. மணிமேகலை, 18:103.
40. சீவ சிந்தாமணி 675, நச்சினார்க்கினியர் மேற்கோள்.
41. மணிமேகலை, 5:3.
42. சிலம்பு, அடியார்க்கு நல்லார் உரை, 8:95—96.
43. ,, ,, ப. 111-113.
44. சிலம்பு 3:105.
45. ,, ,, அடியார் உரை. ப.115.
46. என்சைக்ளோபீடியா பிரிட்டானிகா, தொகுதி 1, ப. 1089.
47. எஸ். இராமகிருஷ்ணன், இந்தியப் பண்பாடும் தமிழரும், ப. 45.
48. ,, ,,
49. க. த. திருநாவுக்கரசு, வரலாறும் வாழ்வும், ப. 20.

□

## இயல் ஐந்து

# நகரமைப்பு

புதிய கற்காலத்தின் தொடக்கத்தில் ஓரிடத்தே தங்கி வாழப் பழகிப் பயிர்த்தொழில் செய்யத் தொடங்கிய மனிதன் வீடுகள் கட்டினான். பல வீடுகள் கட்டப்பட்டபோது ஒரு வீட்டுக்கும் மற்ற வீடுகளுக்கும் இடையே தகராறுகள் எழாமல் போக வரப் பொதுவான வீதி தேவைப்பட்டது. நடுவே சாவடி, அம்பலம், கோயில் போன்ற பொது இடங்களுக்கு நிலம் ஒதுக்கினார்கள்.

வீடுகளின் வரிசைக்கு நடுவே ஆறுபோல் கிடைத்த அகன்ற நெடிய இடம் தெரு ஆயிற்று. இவ்வாறு பலபல தெருக்கள் ஊரில் உண்டாயின. ஊர்கள் ஏற்பட ஏற்பட முந்திய ஊரிலே நேர்ந்த பொது வசதிக் குறைகள் அடுத்த ஊரிலே நேராமல் வீடுகளும் வீதிகளும் பொது இடங்களும் பொருத்தமாகக் கட்டப்பட்டன. ஊரின் பொது வசதிகள் கவனிக்கப் பட்டன. கட்டப்பட்ட முறையும் திட்டமும் (Planning) நாளுக்கு நாள் மெருகேறின. இந்த மெருகும் அநுபவமும் நகரங்களை அமைப்பதற்குப் பெரிதும் பயன் பட்டன. நகரங்களை விட அதிகமான அக்கறை பின்பு கோநகரங்களின் (இராசதானி) அமைப்பில் செலுத்தப் பட்டது.

இவ்வாறு நகரமைப்பு (Town Planning or urban Planning) என்பது ஒரு கலையாகவே உருவாயிற்று. பழந் தமிழர்களைப் பொறுத்தவரை கட்டடக் கலையைப்

போலவே இக்கலையிலும் சிறந்து விளங்கியிருக்கிறார்கள்.

புகழ் பெற்ற பூம்புகார், மதுரை, காஞ்சி போன்றகோநகரங்களே இதற்குச் சான்றாகும். நகரமைப்புக் கண்ணோட்டத்திலும், பண்பாட்டுக் கண்ணோட்டத்திலும், பாதுகாப்புக் கண்ணோட்டத்திலும் இந்நகரங்கள் குறைவற அமைந்திருந்தன. நகரமைப்பு, ஊரமைப்புக் கலைகளில் பழந்தமிழர் சிறந்திருந்தனர் என்பதைப் பற்றிப் பல அறிஞர்களும், ஆய்வாளர்களும் குறிப்பிட்டுள்ளவை ஏற்கெனவே கூறப்பட்டுள்ளன.

தமிழர் நாகரிகம் மிகவும் பழமையானது என்ற உண்மையை உலகினர் அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர். "சீனம், மிசிரம், யவனம் இன்னும் தேசம் பலவும் புகழ் வீசிக் கலை ஞானம் படைத் தொழில் வாணிகமும் மிக நன்று வளர்ந்த தமிழ்நாடு". கட்டிடக் கலை, இயந்திரக் கலை, நீர்ப்பாசனக் கலை, நகரமைப்புப் கலை துறைமுக வளர்ச்சி, கப்பல் கட்டும் கலை, சிற்ப வேலைப்பாடுகள் முதலிய பல வகையான பொறியியல் கலைகளின் சிறப்புக்களைப் பழந்தமிழ் மக்கள் பெற்றிருந்தனர்.[1] என்று பொறியியல் வல்லுநரான அறிஞர் டி. முத்தையன் கூறுகிறார்.

"முதல் நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவுக்கு வந்த கிரேக்க யாத்திரிகர்கள் இருவருள் ஒருவரான தாலமி காவிரிப்பூம்பட்டின நகரமைப்பின் சிறப்பைப் பாராட்டிக் கூறி விட்டுச் சென்றிருக்கிறார்".[2]

"தமிழர்கள் கட்டடக் கலையில் உயர்திறன் பெற்றிருந்தனர். அவர்கள் வீடுகளும், பிற கட்டடங்களும் கலைத் திறன் மிக்கவையாயிருந்தன. அவர்களது சிறப்பாகத் திட்டமிடப்பட்ட நகரங்களும் கோயில்களும் புதை குழாய்களும், பிறவும், அவர் திறமை, பொறியியல் ஞானப் பெருமையைப் பற்றிப் பகுதி பகுதியாகப் பேசும்."[3]

சில நகரமைப்பு முறைகள் பற்றியும்கூட அறிஞர் எஸ். வி. சுப்பிரமணியம் தம் கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

"பரிபாடல் மதுரை நகர் தாமரை வடிவில் அமைந்திருந்ததாகக் கூறுகிறது. உள்ளே யானைகள் நுழையுமளவு பெரிய புதை குழாய்களைப் பூமிக்கடியில் பதித்திருந்தமையைச் சிலம்பு செப்புகிறது. அது பாதாள வடிநீர் வழியாக (Under ground drainage)ப் பயன்பட்டது எனத் தெரிகிறது. [4]

அவ்வாறு யானை புகுந்து புறப்படத்தக்க பெரிய பெரிய பாதாளவழிச் சாக்கரைகள் இன்றும் பம்பாய் போன்ற பெருநகரங்களில் அமைக்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

இவ்வாறு பழந்தமிழர் நகரமைப்புத் திறன் பற்றிப் பலரும் கூறியுள்ளனர்.

மயமதத்தின் ஒரு பிரிவான சிற்ப நூலே நகரமைப்புப் பற்றியும் விவரிப்பதாக வை. கணபதி அவர்கள் கருதுகிறார்கள். [5]

சிலப்பதிகாரத்தில் பூம்புகார் நகர நிருமாணமே 'மயமதம்' என்னும் சிற்ப நூல் இலக்கணப்படி அமைந்ததாகக் கூறப்படுகிறது.[6]

சிலம்பில் கோவலனும் கண்ணகியும் தங்கியிருந்த மாளிகையிலே அவர்களது கட்டில் வருணிக்கப்படுகையில் "மயன் விதித்தன்ன மணிக்கால் அமளிமிசை"[7] என்கிறார் இளங்கோவடிகள். ஆகவே கட்டடக் கலைக்கு மட்டுமின்றி நகரமைப்புக் கலைக்கும் மயமதமே ஆதார நூல் ஆகிறது. மயன் பாண்டவர்க்கு நகரமைத்துக் கொடுத்த விவரம் பாரதக் கதையில் வருவதை யாவரும் அறிவர். மயன் சமைத்த நகரையும் மண்டபங்களையும் கண்டு ஒரு கையின் ஐந்து விரல்களையும் விரித்து எண்ணத் தொடங்

கியவர்கள் ஒன்று என்று அந்த ஒரு நகரை எண்ணி விரலை மடக்கிய பின் மற்ற நான்கு விரல்களும் எண்ணக் கட்டடமோ நகரமோ அகப்படாமல் அப்படியே விரித்தபடி நிக்க நேரும் என்னும் பொருள்பட 'மண்மிசை நால் விரல் நிற்கும்' [8] என்பார் பாரதம் பாடிய வில்லிபுத்தூரார்.

வரலாறு

தொடக்கத்தில் எடுத்த எடுப்பிலேயே நகரமைப்பு அமைந்து விடவில்லை. முதலில் சிறுசிறு குடியிருப்புக் களைக் கொண்ட கிராமங்களையும் சிற்றூர்களையும் அமைக்கும் ஊரமைப்புத் (Rural Planning) தான் ஏற் பட்டது. பின்பு அது படிப்படியாய்ப் பெருகி நகரமைப்பு வரை விரிவடைந்தது என்பதே பொருத்தமாக இருக்கும். பரிணாம வளர்ச்சியும் அவ்வாறே நிகழ்ந்துள்ளது.

ஊரமைப்பும் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்து நிலங்களைச் சார்ந்தே நிகழ்ந்தது எனலாம்.

'மயமதம்' சார்ந்த கருத்துக்களின்படி ஊரமைப்பு ஊரின் சுற்றளவை ஆதாரமாகக் கொண்டு ஐந்து வகை யாகப் பிரிக்கப் பட்டிருந்தது. [9]

அக்கால அளவு முறைப்படி ஒரு தண்டம் என்பது நான்கு முழம் அல்லது பதினோரடி ஆகக் கணக்கிடப்பட் டிருந்தது. [10]

இந்த அளவுப்படி இத்தனை இத்தனை தண்டங்கள் கொண்ட கிராமங்களை நிறுவலாம் என்கிறார் மயன்.

அ. 20,000 தண்டங்கள் அளவு கொண்ட கிராமம்.

ஆ. 40,000 தண்டங்கள் கொண்ட கிராமம்

இ. 60,000 தண்டங்கள் சுற்றளவு கொண்ட கிராமம்.

ஈ. 80,000 தண்டங்கள் சுற்றளவு கொண்ட கிராமம்.

உ. 1,00,000 தண்டங்கள் சுற்றளவு கொண்ட கிராமம்.

இந்தச் சுற்றளவிலும் கூட முழுப்பரப்பிலும் வீடுகளைக் கட்டிவிட முடியாது.

இதில் 20இல் ஒரு பாகமே வீடுகள் கட்டவும், கட்டடங்கள் நிறுவவும் உரிய பகுதி, [11]

இப்படிக் குடியிருப்புக்கு ஒதுக்கப்படும் பகுதி குடும்ப பூமி என்று அழைக்கப்படும்.

எஞ்சிய இடம் விளை நிலங்கள், நீர் நிலைகள், ஏரி, குளம், மேய்ச்சல் நிலம் பயன்தரும் (காற்றோட்டமுள்ள) நல்ல மரஞ்செடி கொடிகள் இருக்க, தோப்புத் துரவுகள் அமைய ஒதுக்கப்படும். [12]

இங்கே தமிழரின் ஊரமைப்பில் உள்ள அழகும், அறிவியலும் கவனிக்கப்பட வேண்டும். சுற்றுப்புறத் தூய்மை (Ecology) அழகு, பசுமை, தண்ணீர்வசதி ஆகியவற்றுக்கு ஒரு குறைவும் வரலாகாது என்று பத்தொன்பது பங்கு இம்முக்கியப் பிரிவுகளுக்கு ஒதுக்கி ஒரு பங்கே கட்டடங்களுக்கு ஒதுக்கியிருக்கும் நுணுக்கம் மிகப் பெரிதும் பாராட்டத் தக்கது.

இன்று மரம்,செடி,கொடிகளுக்கும், நீர்நிலைகளுக்கும் நல்ல காற்றோட்டத்திற்கும் கூட இடமே விடாமல் கிடைக்கிற ஒவ்வொரு பகுதியையும் கட்டடக்காடு செய்து விடும் அநாகரிகத்தைக் காண்கிறோம். அதே சமயம் பழைய நகரமைப்பிலுள்ள இந்தப் பகுதி நம்மை வியக்கச் செய்கிறது.

அக்கால ஊரமைப்பில் மக்கள் வசிப்பதற்குரிய ஊர்கள் ஐந்து வகையாகப் பிரிக்கப்பட்டன. [13] அவையாவன:

1. கிராமம், 2. கேடம், 3. கர்வடம், 4. துர்க்கம், 5. நகரம்[14] இந்த வரிசை முறை வளர்ச்சியில் நிறைந்த நிலையாகக் காணப்படும் நகரம் என்பது ஊரமைப்புக் கலையின் உள்ளது சிறத்தலாகப் (Evolution)படிப்படியாய் வளர்ந்திருக்கிறது எனக்கொள்ள வேண்டும். 'கிராமம்' என்ற எல்லையில் ஊரமைப்பாகத் தோன்றிய கலை வளர்ச்சியின் நிறைவை நகரமைப்பு என்ற உச்ச நிலையில் பெற்றுச் சிறந்திருக்கிறது.

மக்கள் தொகையும், நாகரிகமும் வாழ்க்கை வசதிகளும் வாணிகமும் சாலைகளும் பெருகப்பெருக நகரங்கள் பல்கி வளர்ந்து வந்திருக்கின்றன.

இனிக் கிராமங்கள் எப்படி அமைக்கப்பட்டன. ஊரமைப்புத்திறன் எவ்வாறு படிப்படியாய் வளர்ந்து மேம்பாடுற்றது என்பனவற்றைக் காணலாம்.

கிராமங்களின் வடிவங்கள் (Blue Print) பழைய சிற்ப நூல்களில் விவரமாக விளக்கிக் கூறப்படுகின்றன.

அவ்வடிவங்களாவன:

1. தண்டகம், 2. சுவஸ்திகம், 3. பிரஸ்தரம், 4. பிரகீர்ணம், 5. நந்தியாவர்த்தம், 6. பராகம், 7. பத்மம், 8. ஸ்ரீபிரதிஷ்டிதம்

இப்பெயர்களும், பகுப்புக்களும், ஊரில் அமையும் வீதிகளின் எண்ணிக்கை, போக்கு இவற்றை அடிப்படையாகக்கொண்டு அமைக்கப்பட்டிருந்தன.

### தண்டகம்

ஊரின் வீதிகள் ஒரு தண்டத்தைப்போல (நீளக்கோல் போல) நீண்டு கிழக்கு முகமாகவாவது வடக்கு முகமாகவாவது சென்று அச்சாலையின் நடுவில் நான்கு சந்துகள் இருப்பின் அக்கிராமம தண்டகம் என்று அழைக்கப்படும்.

**சுவஸ்திகம்**

ஊரின் வீதிகள் ஸ்வஸ்திக வடிவத்தில் போக்குடையவையாக இருப்பின் அவ்வூரமைப்பு சுவஸ்திகம் எனப்படும். காண அழகியதும் ஊரமைப்பிலேயே அரியதுமான வடிவமைப்புச் சுவஸ்திகம் என்று அறிஞர் கருதுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**பிரஸ்தரம்**

ஊரின் கிழக்கு மேற்குப் பாகங்களில் வடக்குநோக்கிச் செல்லுகின்ற வழிகள் மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது இருப்பின் அது பிரஸ்தரம் என்று கூறப்படும். பிரஸ்தரம் என்பது இரத்தினம்.

**பிரகீர்ணம்**

கிழக்கு நோக்கி நான்கு வழிகளிலும், வடக்கு நோக்கி எட்டாவது, ஒன்பதாவது, பத்தாவது, பதினொன்றாவது, பன்னிரண்டாவது வழிகளிலும் அமைப்பு வாய்த்தால் அது பிரகீர்ண வடிவாகும். பிரகீர்ணம் என்பது வீசுகிற சாமரம் போல் பிடிசிறுத்து மேல் விரிவது.

**நந்தியாவர்த்தம்**

கிழக்கு மேற்காக ஐந்து வழிகளும் வடக்கு நோக்கிப் பதின்மூன்று முதல், பதினேழுவரை வழிகளும் நான்கு திசைகளிலும் முக்கிய வழிகளும் அமைந்தது நந்தியாவர்த்தம். இவ்வூரின் உட்புறம் நந்தியாவர்த்தமாகச் சிறுசிறு வீதிகளும் சந்துகளும் அமைந்திருக்கும். இது ஒரு பூ.

**பராகம்**

வடக்கு நோக்கிச் செல்லுகின்ற வழிகள் பதினெட்டு முதல் இருபத்திரண்டு வரையிலும் கிழக்கு மேற்காகச் செல்லுகின்ற வழிகள் ஆறும் அமைந்திருந்தால் அதற்குப்

பராகம் என்று பெயர். பராகம் என்றால் ஒரு மலை என்று பொருள்படும்.

**பத்மம்**

கிழக்கு மேற்கான போக்குடைய வழிகள் ஏழும் தெற்கு வடக்காகச் செல்லுகிற வழிகள் மூன்று முதல் ஏழு வரையும் அமையின் அது பத்மம் என்று கூறப்படும். பத்மமாவது தாமரைப்பூ.

**ஸ்ரீபிரதிஷ்டிதம்**

கிழக்கு மேற்கான போக்குடைய வழிகள் எட்டும், தென் வடலாகச் செல்லும் வழிகள் இருபத்தெட்டும் அக்கிராமத்தில் இருந்தால் அது ஸ்ரீ பிரதிஷ்டிதம் எனப்படும். தெற்கு வடக்காகப் பதினாறு வழிகளும் கிழக்கு மேற்காகப் பதினாறு வழிகளும் இருந்தாலும் அதுவும் ஸ்ரீ பிரதிஷ்டிதம் எனப்படும். ஸ்ரீ பிரதிஷ்டிதம் என்றால் திருமகளைத் தங்கச் செய்தல் எனப்படும்.

ஊர் வீதிகளின் அகலங்களும், அமைப்புக்களும் விரிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளன. மழை நீரையும் கழிவு நீரையும் வெளியேற்றுவதற்காக நீர்த்தாரைகள் (Storm water drain) அமைக்கும் முறையும் கூறப்பட்டுள்ளது. சிற்ப நூல்களின் இவ்விவரங்கள் இன்றைய நவீன நகரமைப்பு முறையோடு பெரிதும் ஒத்து வருகின்றன.

மேலே கூறிய எட்டு வகை தவிர மயூரம் என்றொரு வகையும் இருந்திருக்க வேண்டுமென உய்த்துணரலாம். ஏனெனில், காஞ்சிபுர நகர் அமைப்பு மயிலின் உடலமைப்போடு ஒப்பிடப்பட்டுள்ளது. மேலும் நகரங்களில் எல்லாம் சிறந்தது காஞ்சி என்னும் பொருள்பட வடமொழிக் கவிஞர் பாரவி எழுதிய சுலோகம் 'நகரேஷு காஞ்சி' என்று கூறுகிறது.

இவ்வளவு புகழ் பெற்றுள்ள காஞ்சி நகரம் மயில் போன்ற அமைப்பை உடையது என்று வியந்து கூறப்பட்டிருக்கிறதெனின் நகரமைப்புக் கலை நூல்களின் பல்வேறு பிரிவுகளில் எங்காவது 'மயூரபாணி' அல்லது மயூரம் என ஓர் வடிவமைப்பு இருக்க வேண்டுமென்பது ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கிறது. அக்கருத்தையும் இங்கே குறிப்பிடுதல் பொருத்தமானது.

### கோட்டைச் சுவர்

எல்லாவிதமான கிராமங்களுக்கும் ஊர்களுக்கும் வெளியில் புறக்காவலாக அகழி சூழ்ந்த கோட்டைச் சுவர்கள் இருக்க வேண்டும் என்கிறது ஊரமைப்பு விதி.

இப்படி முழு அளவில் உள்ள ஒரே கிராமம் தென் தமிழகத்தில் நெல்லைப் பகுதியில் உள்ள ஸ்ரீ வைகுண்டத்தின் அருகிலுள்ள 'கோட்டைப் பிள்ளைமார் குடியிருப்பு' என்பதாகும். அது கோட்டைச் சுவர்கள் சூழ உள்ளேதான் உள்ளது.

### ஆற்றின்கரை ஊர்

பொதுவாக ஒரு கிராமம் அல்லது ஊர் ஆற்றின் தென் கரையில் அமைந்திருந்தால் அவ்வூர் ஆற்றின் போக்கை ஒட்டி நீண்டு அமைந்திருத்தல் வேண்டும். அதுவே நல்லிலக்கணம்.

தமிழகத்தில் பெரும்பாலான கிராமங்களும் ஊர்களும் ஆற்றின் கரைகளிலேயே அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

### ஊர்ப் பகுப்பு முறை

ஓர் ஊரை அல்லது கிராமத்தை அமைத்து உருவாக்கும்பொழுது முழு இடத்தையும் எண்பத்தொரு சதுரங்களாகப் பிரித்துக் கொள்ள வேண்டும்.

நடுவிலுள்ள இடத்தைப் பிரம்மபதம் என்று பிரித்துக் கொள்ள வேண்டும். அதைச் சுற்றிலும் உள்ள பதங்களைத் தெய்வபதம் என்று கொள்ள வேண்டும். அதைச் சுற்றியுள்ள இடங்களை மானுடபதம் என்று கொள்ள வேண்டும். இறுதியாக உள்ள பதங்கள் பைசாச பதம் எனப்படும்.

பிரம்ம பதம் நீங்கிய தெய்வ பதம் மானுட பதங்களில் மக்கள் வசிப்பதற்கான வீடுகளைக்கட்டலாம். இறுதியாக எஞ்சிய பைசாச பதங்களில் தொழிலாளர்களின் குடியிருப்புக்களைக் கட்டிக் கொள்வது வழக்கமாக இருந்து வந்தது.[15] 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது தமிழ்ப் பழமொழி.

அது ஊர் அமைப்பு ஆயினும், சிற்றூர் அமைப்பு ஆயினும், நகரமைப்பு ஆயினும், கோநகரமைப்பு ஆயினும் நகரைக் கட்டுமுன் நல்ல இடத்தில் ஒரு கோயிலைக் கட்டிக்கொண்டு பிற பணிகளைத் தொடங்க வேண்டும் என்பது மயன் வகுத்த நகரமைப்பில் முதலிடம் பெறும் விதியாகும்.[16]

**வீதிகள்**

ஊரைச் சுற்றித் தேர்கள் முதலிய பெரிய வாகனங்களும் அரசர் வருவதற்கு ஏற்ற அகன்ற வீதிகள் அமைத்திருக்க வேண்டும். நகர இலக்கணத்தில் இது மிகவும் இன்றியமையாதது. இப்படி வீதிகள் அரச வீதி (இராச வீதி)என்றும் மங்களவீதி என்றும் குறிப்பிட்டுச் சிறப்பாகக் கூறப்படும்.[17]

ஊராயினும், சிற்றூராயினும், பேரூராயினும் எல்லா விதமான தேவதைகளுக்கும் கோயில்களை இடமறிந்து நிறுவ வேண்டும்.

## மாடவீதிகள்

### அமைப்பு முறை

கோயிலமைப்பிலும் திசை முறைகள், இடமுறைகள் போன்ற வரன்முறைகள் உண்டு. ஊருக்கு வடகிழக்கில் சிவன் கோயிலும், மேற்கே விஷ்ணு கோயிலும், தெற்கே முருகன் கோயிலும், கிழக்கே சூரியன் கோயிலும், தென் மேற்கு மூலையில் ஐயனார், பிள்ளையார் கோயில்களும், தென்கிழக்கே காளி கோயிலும், வடக்கே குபேரன், ஏழு கன்னிமார் கோயில்களும் நிர்மாணிக்கப்படலாம் என நகரமைப்புக் கலை விதிகள் உள்ளன.[18]

கிராமத்தின் மேற்கே சமணக் கோயில்களைக் கட்டலாம். ஊரின் குடியிருப்பு வீடுகள் தவிர மன்றம், அம்பலம். சாவடி, கோசாலை, பூந்தோட்டங்கள், இளமரக்கா, துறவியர் மடங்கள், அறக் கோட்டங்கள், மயானம், கடைகள் ஆகியவற்றுக்கும் இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஓர் ஊரில் எந்தெந்தப் பகுதியில் யார் யார் குடியிருக்க வேண்டும் என்ற வரையறையும் நகரமைப்புக்குள் சொல்லப்பட்டிருக்கிறது.

### பெருநகர் அமைப்பு

இனிப் பெருநகரங்களின் அமைப்பு அடுத்து வருகிறது. பரிணாம வளர்ச்சியின் அடுத்த இடம் என்பது நகரங்களும், கோநகரங்களும் ஆகும். அவை இடப் பரப்பினாலும், மக்கள் தொகையினாலும், வகையினாலும் பெருக்கமுடையவையாக அமைந்தன.

அ. சிறு நகரம்

ஆ. பெரு நகரம்

இ. கோநகரம் (இராசதானி)

என மூன்று பிரிவுகளைக் காண முடிகிறது. நகரமைப்பு இலக்கணப்படி ஒரு சிறிய நகரத்தின் சுற்றளவே பதினாறாயிரம் தண்டம் அல்லது 6,76,000 அடி ஆகும்.

நகரின் நான்கு திசைகளிலும் நான்கு எடுப்பான கோபுர வாயில்கள் இருக்க வேண்டும். மதிற்சுவர்களைப் பெற்றிருக்க (Walled city) வேண்டும் பல பொருள்களை வாங்கியும் விற்றும் வாணிபம் செய்யும் வணிகர்கள் பலரைக் கொண்டதாயிருக்க வேண்டும். பலவகை மக்களுக்கான பல்வேறு தெருக்களும், வீதிகளும் நிறைந்திருக்க வேண்டும். பலவகைத் தெய்வங்களுக்கும் உரிய பல கோயில்களைக் கொண்டிருக்க வேண்டும். அத்தகுதிகள் உடையதே நகரம் எனப்படும். இனி 'புரம்' என்ற சிறப்புக்குரிய ஊர் எவ்வாறிருக்க வேண்டும் என்றும் கூறப்படுகிறது. காடு அல்லது தோப்புக்கள் நிறைந்ததும் பலவகை மக்கள் வசிக்கக் கூடியதும் வணிகர்கள் நிறைந்ததுமாகிய நகரத்தைப் புரம் என்று கூறலாம்.

(உ-ம்.) காஞ்சிபுரம், சிங்கபுரம், கபாடபுரம், திரிசிரபுரம்.

சுற்றுப்புறத்திலே நதிகளாலும், மலைகளாலும் சூழப்பட்டு உழுதுண்டு வாழ்வோரும், தொழில் செய்வோரும் வசிக்கும் ஊர் கேடம் என்று அழைக்கப்படும், நான்கு பக்கங்களிலும் மலைகளால் சூழப்பட்டு மக்கள் வாழ்க்கைக்குத் தகுதியுள்ள ஊர் கர் வடம் என அழைக்கப்படும்.

**பட்டினம்—கோநகரம்**

அயல் நாடுகளிலிருந்து இறக்குமதியான பல்வேறு பொருள்களை யுடையதும் பல திறப்பட்ட மக்கள் வாழ்வதும், வணிகர்கள் மிகுந்ததும், துறைமுகமுடையதும் கடற்கரை சார்ந்ததும், முத்து, இரத்தினம், மணிகள், பொற்காசுகள் புழங்குவதும் பட்டாடைகள் நிரம்பிக் கிடப்பதும் வெளிநாட்டு மக்கள் பலரும் குடியேறியுள்ள குடியிருப்புக்களை உடையதும் ஆன நகரம் பட்டினம் என்று சொல்லப்படும்.[19]

இத்தகைய இலக்கணம் முழுமையாகப் பெற்றது காவிரிப்பூம் பட்டினம் என்னும் பெயரையுடைய பூம்புகார் நகராகும்.

கோநகரங்கள் சுற்றிலும் கோட்டைச் சுவர்கள் கொண்டது. புறநகரில் படைகள் தங்கும் இடங்கள் கொண்டது. வானுயர் மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் கொண்டது. நால்வகைப் படை இருக்கைகள் கொண்டது. பலவகையான கோயில்களும் அம்பலங்களும் அறக்கோட் டங்களும் கொண்டது. அரசனின் அரண்மனையும் தோட் டமும், பூங்காக்களும் இளமரக்காவும் உடையது. இது மதுரை நகருக்குப் பொருந்தும். இதனை 'இராஜதானி' என வடமொழியில் கூறுவர். ஆகக் கிராம அமைப்பு, ஊரமைப்பு, நகரமைப்பு என இக்கலை தோன்றி வளர்ந்த வரலாற்றினை ஒருவாறு அறிகிறோம்.

இனி நகரமைப்பையே நேர்முகமாகக் காணலாம். பூம்புகார், மதுரை ஆகிய இரு நகரங்கள் பற்றி முழுமை யாகவும், உறந்தை வஞ்சி, காஞ்சிபுரம் பற்றி ஓரளவு காண்பதும் இவ்வாய்வின் நோக்கமாகும்.

பூம்புகார், மதுரை ஆகிய இரு நகரங்களையும் நன்க றியச் சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு என்னும் இரு நூல் களே போதுமெனினும் தேவையான பிற மேற்கோள்களை யும் நாடிக் கொள்ள வாய்ப்புக்கள் உள்ளன. மதுரை நகரின் புராண முறையான அமைப்பு வரலாற்றினைத் திருவிளையாடற் புராணம் கூறுகிறது.

உரிய தகுதிகளும் பட்டினம் என்கிற பெருமையும் இருப்பதால் முதலில் காவிரிப்பூம்பட்டினம் என்னும் பூம்புகாரை ஆராயலாம்.

வாணிகச் சிறப்பு, பல நாட்டினர் குடியிருப்பு—கலைப் பெருமைகள், அமைப்பு முறை ஆகியவற்றால் இந்நகரின் பெருமை முதன்மையானதாக அமைகிறது என்பதில் ஐயமில்லை. □

குறிப்புகள் :

1. டி. முத்தையன், தமிழர் நாகரிகம், ப. 60.

2. ம. ரா. இளங்கோவன், தமிழர் தலைநகரங்கள், ப. 45.

3. The Tamil had a great skill in architecture. Their houses and other constructions speak of their concern for blending utilitarian asects with artistic values. Their highly planned cities, temples tunnels and so, speak volumes for their mastery in the field of Engineering.

—Dr. S. V. Subramanian, Tamil Culture A Multi Dimensional phenomenon V world Tamil Conference Number, p. xxiii.

4. "Paripaadal talks about the lotus-shaped Madurai city. According to Cilampu, the undarground drainages were wide and high enough for an elephant to pass through.".

—Dr. S. V. Subramanian, Vth World Tamil Conference Number Tamil Culture, A Multi Dimensional Phenomenon, p. xxvii.

5. வை. கணபதி, 'ஊரமைப்புக் கலை', இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர் கையேடு. ப. 228.

6. ,, ,, ப. 228.

7. சிலப்பதிகாரம் 1:2:12.

8. வில்லிபுத்தூரார் பாரதம். 1, இராசசூயச் சருக்கம். 13.

9. வை. கணபதி, இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர் கையேடு, ப. 228.

10. ,, ,, ப. 228.

11. ,, ,, ப. 228.

12. ,, ,, ப. 228.

13. ,, ,, ப. 229.

14. ,, ,, ப. 229.

15. ,, ,, ப. 229.

16. ,, ,, ப. 229.

17. ,, ,, ப. 229.

18. ,, ,, ப. 229.

19. ,, ,, ப. 230.

## இயல் ஆறு

# பூம்புகார் நகர்

நகரமைப்புக் கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது பூம்புகார் நகரம். இந்நகரின் பொற்காலம் முடிந்து இது கடல் கொள்ளப்பட்டு விட்டது என்றாலும் வரலாற்றிலிருந்தும் இலக்கியங்களிலிருந்தும் இதன் அமைப்பையும், பெருமையையும் நன்கு அறிந்துகொள்ள முடிகிறது. சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை முதலிய நூல்களில் இதன் சிறப்பு நன்கு தெரிகிறது.

கி. பி. முதல் நூற்றாண்டில் மேற்கு நாடுகளிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்தவர்களாலேயே காவிரிப்பூம்பட்டின நகரம் பெயர் சுட்டிப் புகழப்பட்டிருக்கிறது.

யவன ஆசிரியராகிய தாலமி என்பவர் எழுதி வைத்து விட்டுச் சென்றுள்ள வரலாற்றுக் குறிப்பில் [1] இது உள்ளது.

அந்நாளைய மேனாட்டு வரலாற்று ஆசிரியர் ஒருவர் எழுதிய 'பெரிப்ளூஸ்' என்னும் நூலிலும் [2] காவிரிப்பூம் பட்டினம் புகழப்பட்டுள்ளது.

'இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந் நகரை ஆட்சி புரிந்த கரிகால் வளவன் என்னும் பேரரசன் காலத்தில் முழுப் பெருமையோடு வீறு பெற்றுவிளங்கிய இந் நகரம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இலண்டன் மாநகரம் எப்படி விளங்கியதோ அதைவிட ஆயிரம் மடங்கு

சிறப்பாக விளங்கியதாக நாம் கூறலாம்'[3] என்கிறார் வரலாற்று ஆசிரியர் சதாசிவ பண்டாரத்தார்.

இவற்றிற்கெல்லாம் காரணம் இந்நகரின் அமைப்பே ஆகும்.

'முட்டாச் சிறப்பிற் பட்டினம்[4] என்று கடியலூர் உருத்திரங் கண்ணனார் பூம்புகாரைப் புகழ்கிறார்.

கடல் வாணிகச் சிறப்பால் அன்றைய பூம்புகார் ஒரு பன்னாட்டு நகரமாகவும் (International city) விளங்கியுள்ளதை அறிகிறோம். இந்நகருக்குப் பல பெருமைகள் இருந்துள்ளன.

இந் நகரத்துக்குச் செல்லும் பிரதான சாலை சோழ மன்னர்களின் கல்வெட்டுக்களில் 'பட்டினப் பெருவழி' என்று குறிக்கப்பட்டுள்ளது.[5]

அமைப்பும் உட்பிரிவும்

காவிரிப்பூம்பட்டினப் பெருநகர் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவையாவன:[6]

1. மருவூர்ப்பாக்கம்
2. பட்டினப்பாக்கம்
3. நாளங்காடி

இந்த மூன்று பிரிவுகளும் அடுத்தடுத்து அமைந்திருந்த விதம் நகரமைப்பின் பண்பட்ட நிலைக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையக் கூடியது ஆகும். மருவூர்ப்பாக்கம் புகார் நகரின் கடற்கரை ஓரமாக அமைந்திருந்த பகுதி. அகநகராக உட்புறம் அமைந்திருந்த பகுதியே பட்டினப்பாக்கம்.

இந்த இரண்டு பாக்கங்களுக்கும் இடையில் இருந்த இடம் நகரத்தின் வணிகப் பகுதியாக (Commercial area)

அமைந்திருந்தது. அதற்கு நாளங்காடி என்று பெயர். அல்லங்காடி என மற்றொரு பகுதியும் இருந்திருக்கிறது. இது சோலை சூழ்ந்த பகுதியாம்.

காவிரிப்பூம்பட்டினத்தின் முழுப் பகுதியும் இம்மூன்று பெரிய பிரிவுகளுக்குள் அடங்கி விடும்.

மருவூர்ப்பாக்கம்

இனி மருவூர்ப்பாக்கத்தில் அடங்கிய பகுதிகள் என்னென்ன என்று கவனிக்கவேண்டும். இவ்விவரங்கள் இளங்கோ அடிகள் வாக்காகவே இந்திர விழவூரெடுத்த காதையில் [7] வருகின்றன.

அலைநீராடை மலைமுலை யாகத்
தாரப் பேரியாற்று மாரிக் கூந்தற்
கண்ணகன் பரப்பின் மண்ணக மடந்தை
புதையிருட் படாஅம் போக நீக்கி
உதைய மால்வரை உச்சித் தோன்றி
உலகு விளங்கவிரொளி மலர்கதிர் பரப்பி
வேயா மாடமும் வியன்கல இருக்கையும்
மான்கட் காலதர் மாளிகை இடங்களும்
கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனர் இருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும் [8]

நிலா முற்றங்களும், மிகவும் சிறப்புடைய பலவகை அலங்காரங்களால் அழகு செய்யப்பட்ட அறைகளும், மானின் கண் போன்ற அமைப்பை உடைய காற்றுப் புகும்வழிகளாகிய சாளரங்களும்,கொண்ட மாளிகைகள் நகரின் மருவூர்ப் பாக்கத்தில் நிறைய இருந்தன. காவிரி கடலொடு கலக்கும் இடங்களில் கரையோரமாக யவனர் மாளிகைகள் இருந்தன. அந்த மாளிகைகள் கண்ணைக் கவரும் எழில் வண்ணம் கொண்டவையாக விளங்கின. குன்றாத

வளமிகு வாழ்க்கையினராக யவனர் வாழ்ந்தனர். கடல் வாணிபம் மூலம் பொருள் சேர்க்கத் துணிந்த வேறு பிற நாட்டு வாணிகர்களும் கடற்கரை ஓரமாகவே வாழ்ந் தனர். பட்டினப்பாலையும் இதனை விவரித்துக் கூறு கிறது.[9]

வண்ணமும் சுண்ணமும் தண்ணறுஞ் சாந்தமும்
பூவும் புகையும் மேவிய விரையும்
பகர்வனர் திரிதரு நகர வீதியும்
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருக ரிருக்கையும்
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோடு அளந்து கடையறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகும்
பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலங் குவித்த கூல வீதியும்
காழியர் கூவியர் கண்ணொடை யாட்டியர்
மீன்விலைப் பரதவர் வெள்ளுப்புப் பகருநர்
பாசவர் வாசவர் மைந்நிண விலைஞரோடு
ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்[10]

எனச் சிலம்பும் வருணிக்கிறது. வண்ணம், சுண்ணம் சந் தனம், நறும்புகைக்குரிய மணப்பொருள்களும் நறுமலர் முதலியவும் விற்போர் விலை கூறித் திரியும் பெருந்தெருக் களும், பட்டு நூலாலும், நுண்ணிய மயிராலும், பருத்தி நூலாலும், அழகிய ஆடைகளை நெய்ய வல்ல பட்டுச் சாலியர் முதலியோர் இருக்கும் இடங்களும் பவளமும், ஏனைய மணிகளும், பொன்னும் ஆகிய இவற்றைப் பொன் அணிகலன்களுடன் வைத்து ஒப்பு நோக்கி மதிப் பிட வல்லார் வாழும் வளம் மலிந்த வீதிகளும், நெல் வரகு முதலிய தானியங்களை நிறையக் குவித்து வைத்துள்ள கூலக் கடைத் தெருவும், பிட்டு அப்பம் முதலிய சிற்றுண்டி களைச் செய்து விற்போர், கள், மீன், உப்பு, நிணம்

முதலியவற்றை விற்போர், இலையமுதிடுவோர், பஞ்ச வாசம் (தக்கோலம் தீம்பூத் தகைசால் இலவங்கம் கப்பூரஞ் சாதியோடைந்து) [11] விற்போர் முதலியவர்களும், வெண் கலத் தொழில் செய்யும் கன்னார், மரங்கொல் தச்சர், செம்பினாற் கலங்கள் செய்வோர், இரும்பினால் தொழில்கள் புரியும் கொல்லன் ஓவியர், சிற்பாசிரியர், பொற்கொல்லர், மணிகளிழைப்போர் தையல் வினைஞர், நெட்டி, துணி முதலியற்றைக் கொண்டு பறவை, பூங்கொத்து முதலிய உருவங்களைச் செய்வோர், குழல் முதலிய துளைக் கருவியாலும், யாழ் முதலிய நரம்புக் கருவியாலும், பண்ணும் திறமும் ஆகிய இசையினை வளர்க்கும் குழலர், பாணர் முதலியோர் ஆகிய பல்வகைத் தொழிலாளர்கள் வாழ்தற்குரிய இடங்களும் அமைந்திருந் தன. [12]

நாளங்காடி

இனி நாளங்காடிப் பகுதியின் அமைப்பைக் காண லாம். கிழக்கே கடற்கரையை ஒட்டி அமைந்த மருவூர்ப் பாக்கமும் அடுத்து நாளங்காடியும் மேற்குப் பக்கமாகப் பட்டினப்பாக்கமுமாக இருந்த அமைப்பு காவிரிப்பூம் பட்டினத்திற்கு உரியது.

இரண்டு பாக்கங்களுக்கும் நடுவிலே அமைந்த இந் நாளங்காடி நிலப்பரப்பு மரங்களடர்ந்த சோலையாக விளங்கியது.

இங்கிலாந்தில் இலண்டன் நகரின் நடுப்பகுதியாக உள்ள ஹைட்பார்க் (Hyde Park) போல இந்நாளங்காடி அமைந்திருந்ததனால்தான் வரலாற்றறிஞர் சதாசிவ பண் டாரத்தார் 19ஆம் நூற்றாண்டு இலண்டன் நகரமைப்பை யும் இதையும் ஒப்பிட்டார் என்று தோன்றுகிறது. [13]

நாளங்காடிச் சோலை பட்டினப்பாக்கத்திலுள்ளவர் களும், மருவூர்ப் பாக்கத்திலுள்ளவர்களும் தத்தமக்கு

வேண்டிய உணவு முதலிய துகர்பொருள்களைப் பகற் காலத்தே பெற்றுக் செல்லும் கடைவீதியாக அமைந்த தாலேயே நாளங்காடி எனப் பெயர்பெற்றது.[14] நாளங் காடிப் பகுதியின் கலகலப்பான நிலைமையையும் இளங்கோ அடிகள் பின்வரும் உவமை மூலமாக விளக்கு கிறார்.

இருபெரு வேந்தர் முனையிடம் போல
இருபாற் பகுதியின் இடைநிலமாகிய
கடைகால் யாத்த மிடைமரச் சோலைக்
கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஓதையும்
நடுக்கின்ற நிலைஇய நாளங்காடியில் [15]

மருவூர்ப்பாக்கத்திற்கும் பட்டினப்பாக்கத்திற்கும் இடை நிலமாகிய நாளங்காடி இருபெரு வேந்தர் முனையிடம் போல விளங்குகிறது. முனையிடம் ஆரவாரத்திற்கு உவமை. போர் குறித்து வந்துவிட்ட பாசறை இருப்புக்கு நடுப்பட்ட நிலமென்பார் அடியார்க்கு நல்லார். [16] அல்லங் காடியும் உண்டாதலின் இதனை நாளங்காடி என்றார் [17] என அடியார்க்கு நல்லார் உரையிற் கூறுதலால் அல்லங் காடி என ஒரு பகுதியும் இருந்தது.

## பட்டினப்பாக்கம்

நாளங்காடிப் பகுதிக்கு மேற்கே பட்டினப்பாக்கம் மன்னவன் அரண்மனை அமைந்திருந்த இடமாகும்.

அரசவீதிகள், தேரோடும் தெருக்கள் கடைத் தெருக்கள், தன வணிகர்களின் மாடமாளிகைகள் உள்ள பெருந்தெருக்கள், அந்தணர்கள் வாழும் மனைகள் விளங் குகிற தெருக்கள், உழவர், மருத்துவர், காலக் கணிதர், சோதிடம் முதலியோர் தத்தம் தொழிலுக்கு ஏற்றபடி வாழும் தெருக்கள் எல்லாம் பட்டினப்பாக்கத்தில் இருந்தன. [18]

முத்துக் கோப்பவர்களும், மணிமாசு நீக்குவோரும், வளையை அறுத்து அணிகள் செய்வோரும் இருக்கும் தெருக்கள் அரசன் முன்னிலையில் நின்று வணங்கும் சூதர், இருந்து வணங்கும் மாகதர், அரசர் புகழ் பாடும் வைதாளிகர், நாழிகை கூறும் நாழிகைக் கணக்கர், சாந்திக் கூத்தர் மதங்கள், களத்தாடும் கூத்தியர் கணிகையர் பரிசங்கொள்ளும் விலைமாதர் குற்றேவல் செய்யும் ஏவல் மகளிர், தோற் கருவி, துளைக் கருவி, உருக்குக் கருவி முதலியவற்றை வாசிப்போர், போர்ப்படைக்கும், திருவிழாக்களுக்கும் பறை கொட்டுவோர், நகை வேழம்பர் முதலியோர் தத்தம் பிரிவின் நிலை தெரியும்படி வாழுமிடங்கள் குதிரைப்பாகர், யானைப்பாகர், தேர்ப்பாகர், கடுங்கண் மறவர் ஆகிய இவர்கள் அரண்மனைப் புறத்தைச் சுற்றியுள்ள இடங்கள் ஆகிய இவை அனைத்தையும் உட்கொண்டு பெருஞ்சிறப்புடன் விளங்கியது பட்டினப்பாக்கம்.[19] சிற்சில சாதியாளர்கட்கும் தொழிலாளர் கட்கும் தனித்தனித் தெருக்கள் அமைந்திருந்தன என்பது புலனாகிறது.

### ஐவகை மன்றங்கள்

மன்றம் என்ற சொல் ஊர் நடுவே பலரும் கூடும் பொது இடம் எனப் பொருள்.[20] பட்டினப்பாக்கப் பகுதியில் காவிரிப்பூம்பட்டின நகரத்தின் ஐம்பெரும் மன்றங்களும் அமைந்திருந்தன. இம்மன்றங்கள் நகரின் பொது மக்கள் கூடுமிடங்களாக அமைந்திருந்தன என்று தெரிகிறது. அவையாவன :

1. வெள்ளிடை மன்றம்
2. இலஞ்சி மன்றம்
3. பூத சதுக்கம்
4. நெடுங்கல் நின்ற மன்றம்
5. பாவை மன்றம்[21]

**வெள்ளிடை மன்றம்**

பல பொருள்கள் திணிக்கப்பட்ட மூட்டைகள் இருந்தன. அவற்றின் மேல் அவற்றுக்கு உரியவர் தம் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன.

அந்தந்த மூட்டைக்கு உரியவர் தத்தமது மூட்டைகளை அடையாளம் பார்த்து எடுத்துச் செல்வர்.

எவனாவது கள்வனைப் போல் பிறர்க்குரிய மூட்டையைக் கவர்வானேயாகில் அவன் அதனை எங்குமே கொண்டு செல்ல முடியாது. கண்டுபிடிக்கப்பட்டுச் செய்த தவற்றுக்கு உரிய முறையில் அவன் தண்டிக்கப்படுவான். வெள்ளிடை மன்றத்தில் எந்தப் பொருளும் திருடு போக முடியாது.

வெள்ளிடை மன்றம் என்ற பெயரை நினைத்த மாத்திரத்தில் கள்வர் நடுங்குவர். பொருளைக் களவு செய்வோரிடமிருந்து பாதுகாக்கக் கூடியதும் மீறிக் களவு செய்வோரைக் கடுமையாகத் தண்டித்து அவமானப்படுத்துவதுமான இடம் வெள்ளிடை மன்றமாக இருந்தது. [22]

**இலஞ்சி மன்றம்**

ஒரு பொய்கையாகும். கூன் குறள், ஊமை, செவிடு, தொழு நோயர் ஆகியோர் அப்பொய்கையில் மூழ்கி வலம் வந்தால் குறைகள் நீங்கி நலமடைவர் என்று கூறப்பட்டுள்ளது. [23]

**நெடுங்கல் நின்ற மன்றம்**

இந்த மண்டபத்தில் ஒளி வீசும் நெடிய கல் நடப்பட்டிருந்தது. வஞ்சக எண்ணம் கொண்டவர்களால் மருந்து வைக்கப்பட்டுப் பித்தம் கொண்டவர்கள், நஞ்சுண்டு, அல்லது நஞ்சூட்டப்பட்டுத்துன்புறுபவர்கள்பாம்புக் கடி பட்டோர் பேய் பிடித்துத் துன்பப்படுவோர் ஆகிய

இவர்கள் எல்லாம் இந்த ஒளி பொருந்திய நெடிய கல்லை வலமாகச் சுற்றி வந்து தொழுதால் நோய் நீங்கி நலம் பெறுவர் என்று கூறப்பட்டுள்ளது.[24]

### பூத சதுக்கம்

இங்கு பூதம் ஒன்று உண்டு.[25] அது பொய்யான தவ வேடங்கொண்டு அவ்வேடத்திற்கு ஏற்ப நடவாமல் பிறரை ஏமாற்றும் போலித் துறவிகள், கணவரை வஞ்சித்து ஏமாற்றி ஒழுகும் பெண்கள், மன்னனுக்குக் கேடு நினைக்கும் நன்றியற்ற அமைச்சர் பிறர் மனை விழைந்தோர், பொய் சாட்சி கூறுவோர், புறம் பேசுவோர் ஆகிய இவர்களை இப்பூதம் தண்டிக்கும் என்று கூறப்படுகிறது.[26]

### பாவை மன்றம்

ஆளும் அரசன் செங்கோல் முறை தவறிச் சென்றாலும், அறங்கூறும் அவையத்தார் நடுவுநிலை தவறினாலும் அதனை நாவாற் கூறாமல் கண்ணாற் கூறும் பாவையை உடையது பாவை மன்றமாயிருந்தது.[27]

### மன்றங்களின் பயன்

புகார் நகர அமைப்பில் இம்மன்றங்களின் பயன் குறிப்பிடத்தக்கது. நகரில் கள்வர் பற்றிய பயம், போலித் துறவு, பெண்கள் கொண்டவரை வஞ்சித்தல், பிறர் மனை நயத்தல், அரசத் துரோகக் குற்றம், பொய்ச்சாட்சி சொல்லுதல், புறங்கூறுதல் ஆகிய தீச்செயல்கள் இல்லா திருந்தமைக்கும், நகரின் ஒழுக்க மேம்பாட்டுக்கும் தக்க சான்றுகளாக இம்மன்றங்கள் இருந்தன.[28]

மயமதம் கூறும் நகரமைப்புக் கலை இலக்கணப்படி மொத்தச் சுற்றளவில் 20இல் ஒரு பாகம் 'குடும்ப பூமி' என்ற பெயரில் குடியிருப்புக்களுக்கும், பிற பகுதிகள்

தோட்டங்கள், நீர் நிலைகள், இளமரக்காக்கள் ஆகியவற்றுக்கும் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.[29]

பூம்புகார் நகரிலும் இவ்வமைப்பு இருந்திருப்பதைக் காணமுடிகிறது.

நாளங்காடிச் சோலை, காவிரி நீர்ப் பெருக்கு இவை தவிரவும் நீர்நிலைகள், வனங்கள், சோலைகள் ஆகியனவும் பூம்புகாரில் இருந்துள்ளன.

வனங்கள்

காவிரிப்பூம்பட்டின நகரத்தில் இருந்த சில பெரிய வனங்களைக் குறிப்பிட்டுக் கூறியுள்ளார் இளங்கோ அடிகள். மணிமேகலையிலும் இவை பற்றி வருகின்றன.[30] அவையாவன :

1. மலர்வனம் (இலவந்திகைச் சோலை)
2. உய்யானவனம்
3. சம்பாதி வனம்
4. கவேர வனம்
5. உவ வனம்[31]

தானே தண்ணீரை நிரப்பிக் கொள்ளவும், அத்தண்ணீரை வெளியேற்றவும் வல்ல இயந்திர அமைப்புடைய நீர்வாவியைக் கொண்ட மலர்வனம் ஒன்று பூம்புகாரில் இருந்தது. அம்மலர்வனம் அரசர்க்கும் அமைச்சர்க்கும் உரியதாயிருந்தது. இதற்கே இலவந்திகைச் சோலை என்றும் பெயர் வழங்கியது.[32] வேனிற் காலத்தில் அரசன் தன் பரிவாரங்களுடன் தங்கியிருத்தற்கு ஏற்ற வண்ணம் குளிர்ந்த நிழலும், நீர்நிலையும் கொண்டு சுற்றிலும் மதிலாற் சூழப்பெற்றுள்ள காவற் சோலையாயிருந்தது இது.

உய்யானவனம் என்பது தெய்வ வழிபாட்டுக்குரிய நறு மலர்களைத் தந்த நந்தவனமாயிருந்தது. கவேரவனம் என்பது காவிரியின் தந்தையாகிய கவேரன் தவம் புரிந்த இடமாகும்.

சம்பாதிவனம் என்பது சூரியகிரணத்தாற் சிறகு இழந்த கழுகரசனாகிய சம்பாதி தவம் புரிந்த வனம் ஆகும். [33]

உவவனம் என்பது புத்த தேவரது பாத பீடிகையைத் தன்பாற் கொண்ட பளிங்கு மண்டபத்தை அகத்தே கொண்டு பலவகை நறுமலர்களைத் தரும் மரங்களுடன் திகழ்ந்த சோலைவனமாகும். [34]

உவ வனத்திற்குள் பளிங்கு மண்டபமொன்று இருந்த தென்றும் அது தன்னகத்துள் இருப்பவர் ஓசையை வெளிப்படுத்தாது உருவை மட்டும் வெளிக்காட்டும் இயல் பினது என்றும் கூறப்பட்டுள்ளது. [35]

அப்பளிங்கு மண்டபத்தில் மாணிக்கச்சோதி பரந்த பதும பீடம் ஒன்றும் இருந்திருக்கிறது. [36]

### ஏரிகள், துறைகள்

காவிரி கடலோடு கலக்கும் இடமாகிய சங்க முகத் துறையில் அமைந்திருந்த நெய்தலங்கானல் என்ற சோலையில் காமவேள் கோட்டம் இருந்தது. [37] அந்தக் காமவேள் கோட்டத்துடன் இணைந்தனவாகச் சோமகுண் டம், சூரியகுண்டம் என்னும் பெயருடைய இரண்டு தீர்த் தங்கள் இருந்தன. [38]

இவை இரண்டும் தீர்த்தங்கள் என்றே சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லாரும் [39] பட்டினப் பாலை உரையாசிரியராகிய நச்சினார்க்கினியரும் கூறி யுள்ளனர். [40]

ஆயினும் இவை இரண்டும் ஏரிகள் என்ற கருத்துப் படி 'இருகாமத்து இணை ஏரி' என்று கூறும் வழக்கும் இருந்தது [41] என்று தெரிகிறது. அறிஞர் சாமி சிதம்பரனார் தமது பட்டினப்பாலை ஆராய்ச்சியில் காவிரிப்பூம் பட்டினம் பற்றிக் கூறுவதாவது :

''அங்கே பல பொய்கைகள்—அதாவது மலர் பூத்த தடாகங்கள் இருக்கின்றன. அத்தடாகங்களின் உயர்ந்த கரைகள் மாசு மறுவற்ற வானத்தில் சந்திரனுடன் மகம் என்னும் நட்சத்திரம் சேர்ந்து விளங்குவது போல் காணப் படுகின்றன. அந்தப் பொய்கைகளிலே பலவித வாசனை பொருந்திய பலநில மலர்கள் பூத்துக் கிடக்கின்றன. இதனால் அந்தப் பொய்கைகளும், பலவித நிறங்களிலே காட்சியளிக்கின்றன ''. [42]

**கோயில்கள்**

காவிரிப்பூம்பட்டின நகரின் அமைப்பில் பல்வேறு கோயில்கள் இருந்திருக்கின்றன. அவை கோட்டங்கள் என்று வழங்கப்படுகின்றன. அவை :

சிவன் கோட்டம், திருமால் கோட்டம், பலராமன் கோட்டம், இந்திரன் கோட்டம், முருகன் கோட்டம், சூரியன் கோட்டம், சந்திரன் கோட்டம், புத்தர் கோட்டம், அருக தேவன் கோட்டம்.

இதனைச் சிலப்பதிகாரம் பின்வருமாறு கூறும்.

அமரர் தருக்கோட்டம் வெள்யானைக் கோட்டம்
புகர் வெள்ளை நாகர்தம் கோட்டம் பகல்வாயில்
உச்சிக்கிழான் கோட்டம் ஊர்க்கோட்டம் வேற்
வச்சிரக் கோட்டம், புறம்பணையான்வாழ்
கோட்டம்
நிக்கந்தக் கோட்டம் நிலாக்கோட்டம் [43]

**இந்திர விகாரம் ஏழு**

காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரனால் நிருமிக்கப் பெற்ற புத்த விகாரங்கள் ஏழு இருந்தன.

இந்திர விகாரம் ஏழுடன் போகி [44]
இந்திர விகாரம் ஏழுடன் புக்கு [45]
இந்திர விகாரம் எனஎழில் பெற்று [46]
இந்திர விகார மேழும் ஏத்துதலின் [47]

புத்த சைத்தியத்து இந்திரன் நிருமித்தனவாகிய ஏழரங்கு என்று [48] இதற்கு அடியார்க்கு நல்லார் விளக்கம் எழுதினார். 'புத்த சைத்தியம் என்பது பௌத்த வித்தியாசாலை அல்லது புத்தனாலயமுமாம்' என்றார் [49] உ. வே. சாமிநாதையர்.

மணிவண்ணன் கோட்டம்

இதுவும் புகாரில் அமைந்திருந்த கோட்டங்களுள் ஒன்று. திருமாலின் கோயில் என்பதைப் பெயரில் இருந்தே அறிய முடிகிறது. மணிவண்ணன் கோட்டத்தைப்பற்றிய செய்தி சிலப்பதிகாரத்தின் நாடுகாண் காதையில் வருகிறது. காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து வெளியேறுகையில் கோவலனும் கண்ணகியும் இக்கோயிலை வலஞ்செய்து புறப்பட்டமை கூறப்படுகிறது.

கணி கிளர் அரவின் அறிதுயில மர்ந்த
மணிவண்ணன் கோட்டம் வலஞ்செயாக்
கழிந்து [50]

இப்பகுதியை விளக்கி, 'அரவணையின் மீதே அறிவோடு துயில் கொள்ளும் மணிவண்ணன் என்னும் திருநாமத்தையுடைய திருமால் கோயிலை வலஞ்செய்து' [51] என அடியார்க்கு நல்லார் கூறியுள்ளார்.

காவிரிப்பூம்பட்டின நகரமைப்பில் மேற்குறித்த கோயில்கள் இடம் பெற்றிருந்தமை புலனாகிறது. 'புறம்பணையான் கோயில் என்கிற ஐயனார் கோயில் நகரின் புறத்தே அமைந்திருந்தது என்பார் பண்டாரத்தார் [52]

**உலக அறவி**

காவிரிப்பூம்பட்டினத்தின்கண் அமைந்திருந்த ஐவகை வனங்களுள் ஒன்றாகிய உவ வனம் என்னும் மலர்ப் பூங்காவின்[53] மேற்றிசையில் அமைந்த சிறிய வாயில் வழியே சென்றால் — உவ வனத்திற்கும் நகரின் இடு காடாகிய சக்கரவாளக் கோட்டத்திற்கும் நடுவே உலக அறவி என்னும் பொது அம்பலம் இருந்தது.[54]

அந்த உலக அறிவியல் காவிரிப்பூம்பட்டினத்தின் நகரத் தெய்வமாகிய சம்பாபதி கோயிலும் அங்குள்ள பொது அம்பலத்தின் தூண் ஒன்றில் கந்திற்பாவை என்ற தெய்வத்தின் உருவமும் இருந்தன என்பதைச் சீத்தலைச் சாத்தனார் மணிமேகலையில் கூறியுள்ளார்.[55] உலக அறவிக்குள் நுழையும் வாயில் பலரும் ஒரு சேரப் புகுமளவு பெரிதாகவும் அகலமாகவும் அமைந்திருந்ததாகச் சாத்தனார் கூறுகிறார்.[56]

**சக்கரவாளக் கோட்டம்**

காவிரிப்பூம்பட்டினம் தோன்றிய காலத்திலேயே அதனுடன் தோன்றியதாகக் கூறப்படும் இடுகாடு சக்கரவாளக் கோட்டம் எனப்பட்டது.[57] ஊர் மக்கள் அதனைச் சுடுகாட்டுக் கோட்டம் என்றே கூறுவர் எனவும் மணிமேகலை உரைக்கிறது.[58]

அக்கோட்டம் நான்கு பக்கத்திலும் பெரிய மதில் களாற் சூழப்பட்டிருந்தது. அதன் உள்ளே காளி கோட்டமும் வேறு பல்வகை மன்றங்களும், தவத்தவர், அரசர், கற்புடை மகளிர் முதலியோர்க்கு எழுப்பப்பட்ட கோட்டங் களும் இருந்தன.[59]

புகார் நகரில் சக்கரவாளக் கோட்டம் அமைந்திருந் தது பற்றி மணிமேகலை விரிவாகக் கூறுகிறது. இந்தச்

சக்கரவாளக் கோட்டம் சிற்ப நூல், கட்டடக்கலை, நகரமைப்பு ஆகியவற்றின் தலைவனாகிய மயனால் நிருமிக்கப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது.[60]

எவ்வெச் சாதியினர் எவ்வெவ்விடங்களில் புதைக்கப் பட்டனர் என்பதை விளக்கப் பல தனித்தனிக் கோட் டங்கள் அந்தச் சக்கரவாளத்தில் இருந்தன. இடுகாட்டுத் தெய்வங்கள் உறையத் தக்க பல தூண்கள் இருந்தன. துறவிகளை வழிபடுவோர் ஓசை பிணங்களை அடக்கம் செய்ய வருவோர் எழுப்பும் அவலக்குரல்கள் நரிகளின் ஓலம், கோட்டான்களின் அலறல் இவையனைத்தும் அங்கு இரவும் பகலும் கேட்டுக்கொண்டே இருக்கும். பேய்கள் வாழும் வாகை மன்றம், பறவைகள் தங்கும் வெள்ளில் மன்றம், காபாலிகர்கள் வாழும் வன்னிமன்றம், விரதங்களால் இளைத்த மேனியையுடையோர் இறந்த பின் அவர் தலைவளை மாலையாகக் கட்டுவோர் வாழும் இரத்தி மன்றம், பிணங்களைத் தின்போர் வாழும் வெள்ளிடை மன்றம் என்னும் ஐவகை மன்றங்கள் சக்கர வாளக் கோட்டத்தில் இருந்தன.[61]

### நகரின் பரப்பளவு

புகார் என்ற சொல்லுக்குக் கடல் முகத்துவாரத்தில் அமைந்த நகரம் என்று பொருள்.[62] காவிரிப்பூம்பட்டினம் சோழநாட்டை, அன்னையாக அமைந்து புரந்த காவிரி கடலொடு கலக்கும் முகத்துவாரத்தில் இருந்த நிலப்பகுதி யில் அமைந்திருந்தமையால் புகார் என்றும் காவிரிப்பூம் பட்டினம் எனவும் இந்நகர் பெயர் பெற்றிருந்தது.[63]

‘‘சங்க காலத்தில் சோழநாட்டின் உள்நாடாகிய புகார் நாடு என்ற நாட்டுப் பகுதிக்குத் தலைநகராக விளங்கிய காவிரிப்பூம்பட்டினம்’’[64]

ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர் நான்கு காவதம் (சுமார் முப்பது மைல் பரப்பளவு) பரப்புடைய

பெரு நகரமாக விளங்கியது என்று சிலப்பதிகாரக் காப்பியம் கூறுகிறது.[65]

சிலப்பதிகாரம் இந்திரவிழவூரெடுத்த காதையில் பூத சதுக்கத்துப் பூதம் பற்றிக் கூறும்போது,

தவமறைந் தொழுகும் தன்மை யிலாளர்
அவமறைந் தொழுகும் அலவற் பெண்டிர்
அறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்
பொய்க்கரி யாளர் புறங் கூற்றாளரென்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோரெனக்
காத நான்கும் கடுங்குர லெழுப்பிப்
பூதம் புடைத்துணும் பூத சதுக்கமும்[66]

என்று கூறப்படுகிறது. இதில் 'காத நான்கும்' என்பதற்கு அரும்பதவுரையாசிரியர் 'ஊர் சூழ்ந்த நாற்காத வட்டகையும்'[67] என்று பொருள் கூறியுள்ளார். அடியார்க்கு நல்லார் 'காத நான்குமென முற்றும்மை கொடுத்தலானே ஊர் நாற்காத வட்டகை என்பதுணர்க'[68] என்று விளக்கியுள்ளார். இவற்றால் பூம்புகார் நகரின் பரப்பளவு நாற்காத தூரம் என்பது தெரிகிறது. இப்பொழுது காவிரிப்பூம் பட்டினத்தைச் சுற்றிலுமுள்ள கீருவேந்த நாதபுரம், கடாரம் கொண்டான் என வழங்கும் ஊர்கள் பழைய காவிரிப்பூம்பட்டினத்தின் மேற்கு எல்லையாகவும், திருக்கடவூர் தெற்கு எல்லையாகவும், கலிக்காமூர் (அன்னப்பன் பேட்டை) வடக்கு எல்லையாகவும், கடல் கிழக்கு எல்லையாகவும் அமைய இந்நான்கு பேரெல்லைக்கு உட்பட்ட சிற்றூர்கள் அனைத்தையும் தன் அங்கமாகப் பெற்றிருந்தது பழைய காவிரிப்பூம்பட்டினம் என்கிறார் சதாசிவ பட்டாரத்தார்.[69]

### மக்கள் தொகை

அன்றைய காவிரிப்பூம்பட்டினத்தின் மக்கள் தொகை பற்றி அறிய நேரிடையான சான்றுகள் இல்லை எனினும்

சிலப்பதிகாரப் பிரதியான ஏடு ஒன்றில் மனையறம் படுத்த காதையின் தொடக்கத்தில்,

உரைசால் சிறப்பின் அரசு விழைத்திருவின் [70]

என்ற அடிக்கு முன்னர்,

திருவின் செல்வியொடு பெருநில மடந்தையை
ஒருதனி யாண்ட செருவடு திண்டோள்
கரிகாற் பெரும்பெயர்த் திருமா வளவனைப்
பாலை பாடிய பரிசிலன் றெடுத்து
மாலைத் தாகிய வளங்கெழு செல்வத்து
அறைந் திரட்டியும் ஆயிரங் குடிகளும்
வீறுசால் ஞாலத்து வியலணி யாகி
உயர்ந்தோ ருலகிற் பயந்தரு தானமும்
இல்லது மிரப்பு நல்லோர் குழுவும்
தெய்வத் தானமும் திருந்திய பூமியும்
ஐயர் உறையுளும் அறவோர் பள்ளியும்
விண்ணவர் உலகின் நண்ணிடு நகரமொடு
எண்ணுவரம் பறியா இசையொடு சிறந்த

எனவரும் அடிகள் காணப்படுதலைச் சிலப்பதிகாரப் பதிப்பாசிரியராகிய உ.வே.சா. ஐயரவர்கள் அடிக்குறிப்பில் தந்துள்ளார்கள். [71] மேற்படி அடிக்குறிப்புக் கருத்திலிருந்து காவிரிப்பூம்பட்டினம் அறுபதினாயிரம் குடும்பங்களைக் கொண்டிருந்திருக்க வேண்டுமென்றும் — அறுபதினாயிரம் குடும்பங்கள் என்பது ஏறக்குறைய முந்நூறு ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்களைக் கொண்டிருக்கலாமென்றும் கருதுகிறார் சதாசிவ பண்டாரத்தார். [72] இது 1969ம் ஆண்டின் சென்னைப் பெருநகர மக்கள் தொகைக்கு இணையானது என்றும் அவரே கூறுகிறார். [73]

## துறைமுகம்

கிழக்குக் கடற்கரையில் மிகப் பெரிய துறைமுக நகரமாகவும் காவிரிப்பூம்பட்டினம் விளங்கியுள்ளது. கடல் வழியே வரும் மரக்கலங்கள் கரையளவும் உள்ளே வந்து பண்டங்களை ஏற்றிச் செல்லவும் இறக்கவும் வாய்ப்புள்ள இயற்கைத் துறைமுகமாக விளங்கியிருக்கிறது. நகரமைப்பில் இது ஒரு சிறப்பாகும்.

> .... ... ... கூம்பொடு
> மீப்பாய் களையாது மிசைப்பரந் தோண்டாது
> புகாஅர்ப் புகுந்த பெருங்கலம் தகாஅர்
> இடைப்புலப் பெருவழிச் சொரியும்
> கடல்பல் தாரத்த நாடுகிழ வோயோ [74]

என்னும் புறநானூற்றுப் பாடற்பகுதியிலிருந்து பல நாட்டுப் பண்டங்களை நிறைய ஏற்றிக்கொண்டு இத் துறைமுகத்தை நோக்கி வரும் பெரிய கப்பல்கள் பாய் மரங்களைக்கூடத் தாழ்த்தாமல் இந்நகரத்தின் கரையை அணுகிச் சரக்குகளை எளிதில் இறக்கின செய்தி தெரிய வருகிறது. நகரமைப்பின் இத்துறைமுக வசதி கடல் வாணிபத்திற்குப் பெரிதும் துணையாய் அமைந்திருந்தமை புலப்படுகிறது.

இரவில் திசையறியாது செல்லும் மொழி வேறுபட்ட தேயத்தாருடைய மரக்கலங்களை உரிய திசையில் வழிகாட்டி அழைக்கும் கலங்கரை விளக்கம் இந்நகரில் இருந்திருக்கிறது. [75]

## நலம் கொழிக்கும் நகரமைப்பு

பூம்புகார் நகரமைப்பைப் பற்றி அறிஞர் சாமி சிதம்பரனார் கூறுகிறார்: ''பட்டினப்பாலை தோன்றிய காலத்தில் அதாவது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே காவிரிப்பூம்பட்டினம் மிகப்பெரிய நகரமாக இருந்தது. கடற்கரையோரத்தில் பாக்கங்கள் என்ற பெயரு

டன் பல தெருக்கள் இருந்தன. செம்படவர் வாழும் சேரிகள் இருந்தன. ஏழைகளுக்குச் சோறிடும் பல அன்ன சாலைகள் இருந்தன.

கடைத் தெரு, பண்டக சாலைத் தெரு என்று தனித் தனியே இருந்தன. அந்த நகரத்தின் இடையிடையே பல தோட்டங்கள் இருந்தன. பூஞ்சோலைகள் இருந்தன. பல பெரிய குளங்கள் இருந்தன. ஏரிகள் இருந்தன. உயர்ந்த மாடமாளிகைகள் நிறைந்திருந்தன. இவற்றைப் பட்டினப்பாலை நமக்குப் படம்பிடித்துக் காட்டுகிறது.

நகரத்தில் ஆங்காங்கே பல வெட்டவெளிகள் (மைதானங்கள்) இருக்க வேண்டும். தோட்டங்களும், இளமரக் காவும் நிறைந்திருக்க வேண்டும். நகரங்களின் இடையிடையே நீரோடைகளோ ஏரிகளோ இருக்க வேண்டும். இத்தகைய நகரங்களைத்தான் நலங்கொழிக்கும் நகரமென்று கருதுகின்றனர். இத்தகைய நகரங்களிலேதான் நல்ல காற்றும் வெளிச்சமும் குடி கொண்டிருக்கும்.

இன்று புதிய நகரங்களை அமைப்போர் அல்லது நகரங்களைச் சீர்திருத்துவோர் நகரின் பல இடங்களிலும் விளையாட்டு வெளிகளும், இளமரக்காக்களும் (பார்க்) அமைக்கின்றனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த காவிரிப் பூம்பட்டினம், சுகாதாரம் நிலவுவதற்கான எல்லா அமைப்புக்களையும் கொண்டிருந்ததென்ற உண்மையைப் பட்டினப்பாலையால் நாம் அறியலாம்.[76]

பெரிய மாடங்களின் ஒளி விளக்குகளைக்கண்டபடியே கடலுள் புறப்படும் மீனவர் கதிரவன் எழுச்சியை நோக்குவர் என்கிறார் உருத்திரங்கண்ணனார்.[77]

### பண்டசாலைகள்

துறைமுக நகரங்களுக்கும் பண்டசாலைக்கும் (Godown) நெருங்கிய தொடர்பு உண்டு. துறைமுகத்தை

ஒட்டிப் பல வீதிகள் பண்டசாலைகளாகவும், கிடங்கு களாகவும் அமையும்.

"காவிரிப்பூம்பட்டின நகரமைப்பிலும் பண்ட சாலைகள் முதன்மை பெற்றிருந்தன." [78]

பண்டசாலைகளைக் காப்பவர்களின் சிறப்பைப் பற்றிக் கூடிய பின் பண்டங்கள் எவ்வாறு குவிந்து கிடக்கின்றன என்பதையும் கூறுகிறார் உருத்திரங்கண்ணனார்.

அந்நிய நாடுகளில் இருந்து பல பண்டங்கள் கப்பல் வழியாக வந்து பூம்புகாரில் இறக்குமதி செய்யப்படு கின்றன. அந்நிய நாடுகளில் கொண்டுபோய் இறக்கு வதற்காகவும் பல பண்டங்கள் புகாரிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

வெளியே அனுப்புவதற்காகக் குவிந்து கிடக்கும் பண்டங்களின் மீது சோழப் பேரரசின் சின்னமாகிய புலி இலச்சினை பொறிக்கப்பட்டுக் கிடக்கின்றன. [79]

முத்திரை இடப்பட்ட பண்டங்கள்தாம் வெளியேற முடியும். முத்திரை இடப்படாத பண்டங்கள் ஏற்றுமதியாக வெளியேற முடியா. ஏற்றுமதி இறக்குமதிக்குக் கட்டுக் காவல்களும் சுங்கமும் இருந்தன.

இவ்வாறு நகரமைப்பில் துறைமுகப்பகுதியை ஒட்டிப் பல்வேறு பண்டசாலைகள் இருந்தமை தெரிகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே காவிரிப்பூம் பட்டினம் ஒரு பெரிய வாணிக நகரமாக விளங்கியதென் பதும் [80] அதற்கேற்ற முறையிலே அக்கோ நகரம் அமைக் கப்பட்டிருந்தது என்பதும் நூற்சான்றுகளிலிருந்து தெரிய வருகின்றன.

"கடைத்தெருவுக்கு ஆவணம் என்று ஒரு பெயர். அங்காடி என்பது மற்றொருபெயர். பண்டசாலை என்பது பண்டங்களைச் சேமித்து வைத்திருக்கும் இடம். இதை

இக்காலத்தினர் கிடங்கு என்பர். ஆவணம் அல்லது அங்காடி என்பது பண்டங்களை வைத்து வாணிகம் செய்யும் இடம். [81]

''காவிரிப்பூம்பட்டினத்தில் இவை சிறப்புறஅமைக்கப் பட்டு எப்போதும் விழாக்கோலம் கண்டு காட்சி யளித்தன'' [82] என்கிறார் பட்டினப்பாலை ஆசிரியர்.

''நகரின் பெரிய கட்டடங்களுக்கு நெருக்கமாக அமைக்கப்பட்ட நீண்டபடிகள் இருந்தன. சுற்றுத் திண்ணைகள் பல இருந்தன. அந்தப் படிக்கட்டுகளின் வழியாகத்தான் அத் திண்ணைகளின்மேல் ஏற முடியும் முதல் கட்டு, இரண்டாங்கட்டு, மூன்றாங்கட்டு என்று சொல்லும்படி பல சுற்றுக் கட்டுகள் அமைந்திருந்தன.

சிறிதும் பெரிதுமான பல வாயில்கள் இருந்தன. பெரிய கதவின் நடுவே சிறிதாக இருந்த மற்றொரு கதவு திட்டி வாயில் (திருஷ்டி வாயில்) எனப்பட்டது. உள்ளே போகின்ற பல இடைவெளிகளும் இருந்தன. அந்த மாளிகைகள் மேகங்கள் படியக் கூடியவாறு ஓங்கி உயர்ந்திருந்தன. [82]

அந்நாள்களில் கொடிகட்டிப் பறக்கவிடும் வழக்கம் கோயில்களிலும் திருவிழாக் காலங்களிலும் மட்டும் அல்லாமல் கடைவீதிகளிலும் இருந்திருக்கிறது. [83]

பூம்புகார் நகரில் அறிஞர்கள் கூடி விவாதிக்கும் இடங் களில் கூடக் கொடி கட்டிப் பறக்கவிட்டிருக்கிறார்கள். 'இன்ன வணிகந்தான் இங்கு நடக்கிறது' என்பதை அங்கே பறக்கும் கொடி மூலமே அறியும் வகையில் பூம்புகார் நகரில் கொடிகள் பறந்தன. கொடிகளின் அடையாளத்தைக் கொண்டே இது இன்ன இன்ன நாட்டுக் கப்பல்—இன்ன இன்னாருடைய கப்பல் என்று அறிந்து வந்தனர் மக்கள். [84]

நகரின் வீதிகள் செல்வ வளம் மிக்கவையாயிருந்தன.

அங்கே குதிரைகள் பல கட்டப்பட்டிருந்தன. விரைவாக நிமிர்ந்து ஓடக்கூடியவையான அக்குதிரைகள் கடல்வழியாக வந்தவை. தரைமார்க்கமாக வண்டிகளிலே ஏற்றிக்கொண்டு வந்து குவித்த மிளகு மூட்டைகள் ஒரு புறம் நிரம்பிக் கிடந்தன. பல திறப்பட்ட இரத்தினங் களும், பொன் கட்டிகளும் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன அவை இமயமலை போன்ற வடநாட்டு மலைகளிலிருந்து கொண்டு வரப்பட்டவை.

குடகுமலையிலிருந்து கொண்டுவரப்பட்ட சந்தனக் கட்டைகளும், அகிற்கட்டைகளும் குவிக்கப்பட்டிருந்தன.

பாண்டி நாட்டுத் தென்கடலிலே மூழ்கி எடுத்த சிறந்த முத்துக் குவியல்கள் காணப்பட்டன. கீழைக்கடலில் பிறந்த பவளங்களும் காணப்பட்டன.

கங்கை நதி பாயும் பகுதிகளிலிருந்து வந்த விளை பொருள்களும், காவிரி பாயும் பகுதியிலிருந்து கொணரப் பட்ட விளைபொருள்களும் குவிந்து கிடந்தன.

இலங்கைத் தீவிலே உண்டான உணவுப்பொருள்கள் ஏராளமாக வந்து குவிந்திருந்தன. காழகத் தீவு என்று பெயர் பெற்றிருந்த பர்மாவிலிருந்து பல பொருட்கள் வந்து நிரம்பியிருந்தன.

இவ்வாறு செல்வம் மல்கி விளங்கின காவிரிப்பூம் பட்டினத்து வீதிகள் என்கிறார் பட்டினப்பாலை ஆசிரியர். [85]

இங்கு கூறிய சான்றுகளால் காவிரிப்பூம்பட்டினம் கடற்கரைத் துறைமுக நகரமாகவும் அறிஞர், செல்வர் நிறைந்த நகரமாகவும் விளங்கிய சிறப்பை அறிகிறோம்.

மதுரை மாநகர்

இனிக் கடற்கரை நகரமல்லாதது ஆனாலும் பேரறிஞரும், பெரும்புலவரும் இருந்து தமிழாராய்ந்த சங்கத் தமிழ் மதுரையைப் பற்றிக் காணலாம். காவிரிப்பூம் பட்டினம் போலவே மதுரை நகரமைப்பும் திட்டமிடப்பட்ட அழகுடையதாக விளங்கியதைச் சான்றுகளால் அறிகிறோம்.

☐

குறிப்புகள் :

1. Annual report on South Indian Epigraphy for 1918-19 part II, para 2.
2. Foreign Notices of South India, p. 59.
3. டி. வி. பண்டாரத்தார், காவிரிப்பூம்பட்டினம், ப. 2.
4. பட்டினப்பாலை 218.
5. டி. வி. பண்டாரத்தார், காவிரிப்பூம்பட்டினம், ப. 42
6. சிலம்பு 1: 5: 39—62.
7. சிலப்பதிகாரம், 5: 1-39.
8. சிலப்பதிகாரம் 1-12.
9. பட்டினப்பாலை 28-50.
10. சிலம்பு 5: 13-27.
11. சிலம்பு அடியார் உரை, ப.154.
12. சிலப்பதிகாரம், 5: 28-39.
13. டி. வி. பண்டாரத்தார், காவிரிப்பூம்பட்டினம், ப. 2.
14. சிலப்பதிகாரம் 5:63.
15. ,, 59:63.
16. ,, அடியார் உரை, ப. 158.

17. சிலப்பதிகாரம் அடியார் உரை ப. 11.
18. ,, 5: 40-45
19. ,, 5: 46-58.
20. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப. 347.
21. சிலப்பதிகாரம் 5: 111-140.
22. ,, 5: 111-117.
23. ,, 5: 118-121.
24. ,, 5: 122-127.
25. ,, 5: 134.
26. ,, 5: 128-134.
27. ,, 5: 135-138.
28. ம.ரா. இளங்கோவன், தமிழகத்தின் தலை நகரங்கள், ப. 38.
29. வை. கணபதி, 'கட்டுரை ஊரமைப்புக் கலை', இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கையேடு, ப. 228.
30. மணிமேகலை 3: 44-62.
31. மணிமேகலை 3: 160-169.
32. சிலம்பு 10: 30-31.
33. மணிமேகலை 3: 54.
34. ,, 3: 61-62.
35. ,, 3: 63-64.
36. ,, 3: 65-66.
37. பட்டினப்பாலை 35-38.
38. சிலப்பதிகாரம் 9: 59-60.
39. சிலம்பு—அடியார் உரை, ப. 250.
40. பத்துப்பாட்டு, நச்சர், ப.395.
41. பட்டினப்பாலை 39.

42. சாமி சிதம்பரனார், பட்டினப்பாலை ஆராய்ச்சி, ப. 26.
43. சிலப்பதிகாரம் 9:9-13.
44. ,, 10: 13-14.
45. ,, 27: 92.
46. மணிமேகலை, 28: 70.
47. ,, 26: 55.
48. சிலம்பு அடியார், ப. 268.
49. சிலம்பு, உ.வே.சா. அடிக்குறிப்பு, ப. 268.
50. சிலப்பதிகாரம் 10: 9-10.
51. சிலம்பு, அடியார் உரை, ப. 268.
52. டி.வி.எஸ்.பண்டாரத்தார்-காவிரிப்பூம்பட்டினம் ப. 29.
53. மணிமேகலை 3: 61-62.
54. ,, 7: 92-93.
55. ,, 21: 7.
56. ,, 7: 92-93.
57. சிலம்பு, 9: 20.
58. மணிமேகலை 6: 30—31.
59. ,, 6: 50-55.
60. ,, 6: 201-202.
61. ,, 6: 56-96.
62. ம.ரா. இளங்கோவன், தமிழகத்தின் தலை நகரங்கள், ப.51.
63. டி. வி. எஸ். பண்டாரத்தார், காவிரிப்பூம் பட்டினம், ப. 16.
64. ,, ,,
65. சிலப்பதிகாரம் 5: 133.

66. சிலப்பதிகாரம் 5: 128-134.
67. சிலம்பு, அரும்பதவுரை, ப. 144.
68. ,, அடியார், ப. 164.
69. டி வி,எஸ்.பண்டாரத்தார், காவிரிப்பூம்பட்டினம் ப. 16.
70. சிலப்பதிகாரம் 2:1.
71. ,, 2: 1 அடியார் உரை, ப. 46.
72. டி.வி.எஸ்.பண்டாரத்தார், காவிரிப்பூம்பட்டினம் ப. 17.
73. ,, ,, ப. 18.
74. புறநானூறு 30.
75. சிலப்பதிகாரம் 6:141.
76. சாமி சிதம்பரனார், பட்டினப்பாலை ஆராய்ச்சி, ப. 19-20.
77. பட்டினப்பாலை 111-112.
78. சாமி சிதம்பரனார், பட்டினப்பாலை ஆராய்ச்சி, ப. 58.
79. பட்டினப்பாலை 125—141.
80. சாமி சிதம்பரனார், பட்டினப்பாலை ஆராய்ச்சி, ப. 561
81. சாமி சிதம்பரனார், பட்டினப்பாலை ஆராய்ச்சி, ப. 65.
82. பட்டினப்பாலை 158.
83. ,, 160-183.
84. ,, 175.
85. ,, 183-194.

□

## இயல் ஏழு

# மதுரை நகரம்

பாண்டியர் தலைநகரமாயிருந்த மதுரை நகரின் அமைப்புத் தாமரைப் பூவின் அமைப்போடு ஒப்பிடப்பட்டுள்ளது. கட்டடக்கலை நகரமைப்பு முதலியவற்றை விவரிக்கும் மயமத நூலில் பத்மம் (தாமரை) என்பது நகரமைப்பு வகைகளுள் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது.[1] மதுரை நகருக்கும் அவ்விலக்கணம் பொருந்துகிறது.

சங்கத் தொகை நூல்களுள் ஒன்றாகிய பரிபாடல்,

மதுரை நகரமானது திருமாலின் உந்தியின் அலர்ந்த தாமரை மலரை ஒக்கும்.

அந்த நகரத்துள்ள தெருக்கள் அம்மலரின் இதழ்களை ஒக்கும்.

பாண்டிய மன்னனது அரண்மனை அம்மலரின் நடுவில் உள்ள பொகுட்டை ஒக்கும்.

அந்நகரில் வாழும் தமிழ்க் குடிமக்கள் அத்தாமரை மலரின் தாதுக்களை ஒப்பர்.

அந்நகரைத் தேடி வரும் பரிசில் வாழ்நர் தாதுண்ண வரும் வண்டுகளை ஒப்பர். மதுரை நகர மாந்தர் மறை முழக்கத்தின் ஒலி கேட்டு நாள்தோறும் துயிலெழுவரே யன்றி மற்றைய வஞ்சி நகரத்தாரும், உறையூராரும்

போலக் கோழி கூவுதலாலே விடிதலை உணர்ந்து துயி லெழுவதில்லை என்று கூறப்படும் செய்தி வியப்பையும் மகிழ்ச்சியையும் அளிக்கிறது.

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீரூர்—பூவின்
இதழ்கத் தனைய தெருவம் இதழகத்
தரும் பொகுட் டணைத்தே அண்ணல் கோயில்
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்
தாதுண் பறவை அனையர் பரிசில் வாழ்நர்
பூவினுட் பிறந்தோன் நாவினுட் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
ஏம இன்துயில் எழுதல் அல்லதை
வாழியும் வஞ்சியும் கோழியும் போலக்
கோழியின் எழாது எம்பேருள் துயிலே [2]

என்று மதுரை நகர அமைப்பைப் பற்றிக் கூறுகிறது. கூடல், நான்மாடக் கூடல், ஆலவாய் போன்ற பிற பெயர்களும் மதுரை நகருக்கு வாய்த்திருந்தன. சிலப்பதி காரம், மதுரைக் காஞ்சி, திருவிளையாடற் புராணம் ஆகிய மூன்று நூல்களில் இருந்தும் மதுரை நகரமைப்பைப் பற்றி மிகுதியான செய்திகளைத் தெரிந்து கொள் கிறோம்.

சிலப்பதிகாரம், மதுரைக்காஞ்சி ஆகிய நூல்கள்கூறும் மதுரை பற்றிய செய்திகளைக் காணுமுன் திருவிளை யாடற் புராணம் கூறுகிற விவரங்களைக் காணலாம்.

முன்னிரண்டு நூல்களினும் காலத்தாற் பிற்பட்டது ஆயினும் மதுரை நகரம் எப்படித் தோன்றியது என்பது பற்றிய புராண வரலாறு திருவிளையாடற் புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

நகரின் தோற்றம்

நகரம் தோன்றுவதற்கு முன் மதுரையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளும் கடம்ப மரங்கள்செறிந்த வனமாக

இருந்தன.[3] அப்பெருங் கடம்பவனப் பரப்பின் கீழ்ப்பகுதியில் மணலூர் என்னும் ஊர் ஒன்று இருந்தது. இந்த மணலூரைக் கோநகராகக்கொண்டு குலசேகரபாண்டியன் என்ற பாண்டிய மன்னன் நாட்டை ஆண்டு வந்தான்.[4]

அக்காலத்தில் மணலூரில் இருந்த தனஞ்சயன் என்னும் வணிகன் சிறந்த சிவபக்தன். ஒருமுறை அவன் தன்னுடைய வாணிப நிமித்தம் மேற்கு நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்தவன் பகல் கழிந்து இரவு வந்த காரணத்தால் கடம்ப வனத்துக்குள் தங்கினான்.[5]

அவ்வாறு அவன் தங்கிய இடத்திற்கு அருகே ஓர் அரிய காட்சியைக் கண்டான். எட்டுப் பெரிய யானைகளால் தாங்கப் பெற்ற விமானத்தின் அடியில் ஒளிஞாயிறு போல் விளங்கும் சிவலிங்கம் ஒன்றைக் கண்டு வியந்தான் தனஞ்சயன். அவன் மனம் மகிழ்ந்து பக்திப் பரவசம் கொண்டான்.[6]

அன்று சோமவாரம் (திங்கட்கிழமை) அங்கே தேவர்கள் வழிபட வந்தனர். இரவின் நான்கு யாமத்தும் மலர் தூவி வழிபட்டார்கள் அவர்கள். தனஞ்சயனும் சென்று வழிபட்டான். கடைசி யாமத்திற்குப்பின் விடிகாலையில் தேவர்களைக் காணாமல் வியப்புடன் மதுரை திரும்பிய தனஞ்சயன் அரண்மனைக்குச் சென்று பாண்டிய மன்னனிடம் இச்செய்தியைத் தெரிவித்தான்.[7] தனஞ்சயன் கூறிய செய்திகளைக் கேட்டு மன்னன் வியப்படைந்து மேலே என்ன செய்வதென்று ஒன்றும் புரியாதிருந்த நிலையில் சிவபெருமான் ஒரு சித்தர் வடிவில் மன்னனின் கனவில் தோன்றி,

"கடம்ப வனத்திலுள்ள காட்டை அழித்து நகரமாகச் செய்வாயாக" என்று பணித்தார். விடிந்ததும் அரசன் முந்திய இரவு தான் கனவில் கண்டவற்றைத் தன் அமைச்சர்களிடமும், சான்றோர்களிடமும் கூறி அவர்களையும் அழைத்துக்கொண்டு கடம்பவனத்திற்குச் சென்றான்.[8]

அங்கிருந்த பொற்றாமரைக் குளத்தில் நீராடினான். இறைவனை வழிபட்டு மகிழ்ந்தான். காட்டை அழித்து நகரமைப்புப் பணியைத் தொடங்குமாறு உத்தரவிட்டான். அமைச்சர்கள் உடனே நகரமைப்புத் தொழிலில் வல்லவர்களை அழைத்து வருமாறு நான்கு திசைகளிலும் ஏவலர்களை அனுப்பினர்.

பிறைமதியின் பிளவு போன்ற கூரிய கொடுவாளையும், கோடரியையும் சுமந்த தோளையுடையவர்கள், செருப்பணிந்த காலினருமாகப் பலவகைத் தொழிலாளர்கள் வந்து சேர்ந்தனர். அவர்கள் காடுகளை வெட்டி நிலம் தடுத்தனர். காடுகள் அழிக்கப்பட்ட பின்பு நகரத்தை உருவாக்குவது எவ்வாறு என்பது பற்றி மன்னன் அமைச்சர்களையும் சான்றோர்களையும் கலந்து பேசினான்.

அப்போது அங்கே சித்தர் உருத்தாங்கிச் சிவபெருமான் வந்தார். பாண்டிய மன்னன் அவரை வணங்கி ஆசனம் கொடுத்தான். ஒளிமயமான உருவினரான அந்தச் சித்தர் சிவாகமங்களின் வழிமுறைப்படி சிற்ப நூல் விதிகள் வழுவாமல் நகரமும் ஆலயமும் கோபுரமும் இன்னின்னவாறு அமைத்தல் வேண்டும் என்று வகுத்துரைத்துவிட்டு மறைந்தார்.

பின்பு சிற்பநூல் வல்லார் வரவழைக்கப்பட்டனர். சித்தர் கூறிச் சென்றவாறே நகரமும், கோவிலும் அமைக்கும் செயல்கள் தொடங்கப்பட்டன. பதும மண்டபம், நடு மண்டபம், (அர்த்த மண்டபம்) பெரிய மண்டபம், (மகா மண்டபம்) அறுகாற்பீடம், நடன மண்டபம், திருவிழா மண்டபம், வேள்விச்சாலை, மடைப்பள்ளி, கணபதி, முருகன் முதலிய தேவர்களின் கோயில்கள், மீனாட்சியம்மையின் திருக்கோயில், திருமாளியைக் கொண்ட திருமதில்கள், மண்டபங்கள், கோபுரங்கள், சுற்று மதில்கள், அகழிகள் ஆகியவை அமைக்கப்பட்டன.[9]

மதுரை என்னும் பெயர்

நகரத்தை மேலும் அழகு செய்ய விரும்பிய பாண்டியன் அவ்வவ் வினைகளில் வல்லுநரைக்கொண்டு ஓவியங்கள் நிறைந்த கடைவீதிகள், பலர் கூடிப்பேசும் இடங்களான அம்பலங்கள், மாடமாளிகைகள் மிக்க பெருந்தெருக்கள், கவர் வழிகள் நாற்சந்திகள், மன்றங்கள், செங்குன்றுகள், மேடைகள், நாடக மன்றங்கள் மடங்கள், அந்தணர் தெருக்கள், அரச வீதிகள், வணிகர்தெருக்கள் வேளாளர் வீதிகள், யானைக் கூடங்கள், குதிரைக் கூடங்கள், தேர்ச்சாலைகள், கல்விக் கூடங்கள், அறநிலையங்கள், கிணறுகள், சிறுகுளங்கள், ஓடைகள், பெரிய குளங்கள், பொய்கைகள், நந்தவனங்கள், பூங்காக்கள், தோட்டங்கள், உய்யான வனங்கள் முதலியவற்றை எல்லாம் அழகுற அமைத்தான்.[10]

இவ்வாறு புதிதாகக் கடம்பவனங்களை அழித்து அமைக்கப் பெற்ற நகருக்கு வடகிழக்குத் திசையில் பாண்டிய மன்னனின் பழைய அரண்மனை இருந்தது.

நகரத்தைப் பேரழகு மிக்கதாக அமைத்த பின்னர் அந்த நகரத்துக்கு முறைப்படி சாந்தி செய்ய திட்டமிட்டான் பாண்டியன்.

அப்பொழுது இறைவன் தன் சடைமுடியிலுள்ள சந்திரக்கலையின் புத்தமுதத்தை நகரை நோக்கிச் சிந்திச் சாந்தி செய்தான்.

மதுரமான அந்த அமுதம் அந்நகர் முழுவதையும் அமிர்தமயமாக்கித் தூய்மை செய்தது. அவ்வமுதம் மதுரமயமாகியிருந்த தன்மையினாலே அந்நகருக்கு மதுராநகர்—மதுரை என்று பெயர் தோன்றி வழங்கலாயிற்று.[11]

"இதன் பின்னர் குலசேகரபாண்டியன் மதுரையின் கிழக்குத் திசையில் ஐயனாரையும், தென்திசையில் சத்தமாதரையும், மேற்குத் திசையில் திருமாலையும், வடதிசை

யில் பத்திரகாளியையும் நகரின் காவல் தெய்வங்களாக நிறுவினான்.

வேதங்களில் வல்லவர்களான அந்தணர்களைக் காசி நகரிலிருந்து வரவழைத்து மதுரையில் குடியேற்று வித்தான். நகரில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் முறைப்படி வாழ்ந்தனர். பாண்டிய நாட்டுக்கு ஒருதிலகம் பதித்ததுபோல் மதுரையைக் குலசேகரன் வளப்படுத்தினான். [12]

நான்மாடக் கூடல்

வருணன் மதுரையை அழித்து விடும் திட்டத்தோடு தன்னுடைய ஏழு மேகங்களையும் ஏவி விட்டான். மதுரை நகரின் மேலே வானம் ஊழி இறுதியே போல இருண்டது. [13] எங்கும் கருமை சூழ்ந்தது. புயற் காற்று வேகமாக வீசலாயிற்று. ஏழு மேகங்களும், படையெடுத்து வந்தாற்போல மதுரை நகரைச் சூழ்ந்துகொண்டது. அபாயம் வந்தது,

பாண்டிய மன்னன் செய்வதறியாது திகைத்தான். சோம சுந்தரக் கடவுள் திருக்கோயிலை அடைந்து வணங்கி நகரத்தையும் மக்களையும் காப்பாற்றுமாறு வேண்டினான்.

பாண்டிய மன்னனின் வேண்டுகோளுக்கு இரங்கிச் சிவபெருமான் தம் சடைமுடியிலிருந்து நான்குமேகங்களை ஏவ—அந்நான்கு மேகங்களும் மதுரை நகரின் நான்கு எல்லைகளையும் சுற்றி வளைத்துக் காப்பது போல நான்கு பெரிய மாடங்களாகிக் காத்து வருணனின் ஏழு மேகங்களையும் விலக்கச் செய்தார். சிவபெருமான் ஏவிய நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாகி நகரத்தை மறைத்ததனால் வருணன் ஏவிய ஏழு மேகங்களும் ஏதும் செயலறியாது தோற்றுத் திரும்பின. [14]

சோமசுந்தரக் கடவுள் திருவருளால் மதுரை நகரம் காக்கப்பட்டது. பின்பு வருணனும் தன் அழுக்காறு தவிர்த்து செய்த தவற்றிற்கு நாணி இறைவனை வணங்கி மன்னிப்பு வேண்டினான் என்பது திருவிளையாடற் புராணச் செய்தி.

இப்படி இறைவன் வருணனை எதிர்த்து ஏவிய நான்கு மேகங்களும் நான்கு மாடங்களாய்க் கூடிய பெருமையால் மதுரை நகருக்கு நான்மாடக் கூடல் என்ற பெயரும் ஏற்பட்டது.[15]

ஆலவாய்

மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட பாண்டிய மன்னர்களில் ஒருவனான வங்கிய சேகர பாண்டியன் என்பவனின் காலத்தில் மக்கள் தொகை பெருகியது. அதனால் அவன் மதுரை நகரத்தை விரிவுபடுத்த முயன்றான்.[16]

சிவபெருமானிடம் போய்த் தன் முன்னோர் வரையறுத்த பழைய நகர எல்லையைத் தனக்கு உணர்த்தும்படி சோமசுந்தரக் கடவுளை அப்பாண்டிய மன்னன் வேண்டினான்.[17]

அவன் வேண்டுதலுக்கு இணங்கிய சிவபெருமான் அவன் முன்னிலையில் ஒரு சித்தராகத் தோன்றினார். அச்சித்தரின் அரைஞாண், பூணூல், குண்டலம், கால் சதங்கை, கைவளை என்பன பாம்புகளாகவே காணப்பட்டன.

சித்தர் தம் கையிலிருந்த பாம்பைப் பார்த்துப் பாண்டிய நாட்டின் எல்லையையும் மதுரை நகரத்தையும் அரசனுக்கு வரையறுத்துக் காட்டுமாறு கட்டளையிட்டார்.

இறைவன் இட்ட கட்டளையை நிறைவேற்று முன் அப்பாம்பு தன்னால் எல்லை காட்டப்படுகிற அந்தப் பெரு

நகரம் அதன்பின் தன் பெயரால் அழைக்கப்பட வேண்டும் என்னும் தன் அவாவைச் சித்தரிடம் வெளியிட்டது.

சித்தரும் அவ்வேண்டுகோளை ஏற்று அருள்புரிய இசைந்தார்.

பின்னர் அந்தப் பாம்பு கீழ்த் திசையின்கண் சென்று தன் வாலை நீட்டி மிகப்பெரிய அந்த நகருக்கு வலமாகப் படிந்து உடலை வளைத்து, வாலைத் தனது வாயில் வைத்துப் பாண்டிய மன்னனுக்கு நகர எல்லையைக் காட்டியது.

அவ்வாறு பாம்பு வளைந்து கிடந்து வரையறுத்துக் காட்டிய அளவின்படி மன்னன் நகர மதில்களை எழுப்பினான்.[18]

தெற்கே திருப்பரங்குன்றமும் வடக்கே இடபக் குன்றமும், மேற்கே திருவேடகமும், கிழக்கே திருப்பூவண நகரும் எல்லையாக அமையுமாறு மதில் சுவரின் வாயில்களை அமைத்தான். அந்நீண்ட மதில் ஆலவாய் மதில் என்று அழைக்கப்பட்டது. மதிலுக்கு உட்பட்ட நகரமும் பாம்புக்குச் சித்தர் கொடுத்த வாக்குப்படியே ஆலவாய் என அழைக்கப்பட்டது. இஃது ஆலவாய் என்னும் பெயருக்கான புராண வரலாறு ஆகும். இவற்றுள் நான்மாடக் கூடல் என்ற பெயருக்குக் கலித்தொகை உரையில் நச்சினார்க்கினியர் விளக்கம் கூறியுள்ளார்.[19]

''நான்கு மாடங்கூடுதலின் நான்மாடக்கூடலென்றாயிற்று.அவை திருவாலவாய், திருநள்ளாறு,திருமுடங்கை, திருநடுவூர்''.

வட திருவால வாய்திரு நடுவூர்
வெள்ளியம்பலம் நள்ளாறிந்திரை
பஞ்சவனீச்சரம் அஞ்செழுத்தமைந்த
சென்னிமாபுரம் சேரன் திருத்தளி
கன்னி செங்கோட்டம் கரியோன் திருவுரை
... ... ... ஒருபரங்குன்றம்[20]

எனக் கல்லாடத்திலும் மதுரையைச் சூழ அமைந்த பகுதிகள் கூறப்படுகின்றன.

## மலைகள்—ஆறுகள்

வையைஆற்றின் வலப்புறமாக அமைந்துள்ள மதுரைக்கு அருகில் ஆனை மலை, பசு மலை, நாக மலை ஆகிய மூன்று மலைகளும் சற்று வடபால் தள்ளித் திருமால் குன்றம் என்னும் அழகர் மலையும் அமைந்துள்ளன. திருமால் குன்றத்தை வழியாகக் கொண்டு மதுரைக்கு வருதல் சிலப்பதிகாரத்தும் கூறப்பட்டுள்ளது.[21] பசுமலை, நாகமலை பற்றித் திருவிளையாடல் கூறுகிறது.[22] பழங் கால மதுரை நகரின் மேற்கேயே வைகை நதி இரு பிரிவா கப் பிரிந்து ஒரு பகுதி கிருத மாலை என்னும் பெயருடன் இருந்த வளமுடையார் கோயிலருகே பாய்ந்தது (இன்றும் இந்த கிருத மாலை என்ற பெயரிருப்பினும் நதி மண் மேவிப் போயிற்று).

மாலையாக வளைத்துச் சூழ்ந்தது போல வையை நதி மதுரையைச் சுற்றிப் பாய்வதாகக் கலித்தொகையும் கூறுகிறது.[23]

இக்கருத்து அறிஞர் மு. இராகவய்யங்காராலும் ஆராய்ந்து உறுதி செய்யப்பட்டுள்ளது.[24]

மதுரையில் பாயும் வைகை நதிக்கே மூன்று பெயர்கள் வழங்கியிருக்கின்றன. வேகமாகப் பாய்தலால் வேகவதி என்றும், மாகம் (விண்கதி) வாய்ந்ததால் வையை என்றும், தாராதலாற் கிருத மாலை என்றும் வையைக்கு முப்பெயர் இருந்ததை அறிஞர் மு. இராகவ ஐய்யங்கார் பின்வருமாறு கூறுகிறார்.

“இனி வையைக் கரையின் நெடுமால் என்பதற்கு “அந்தர வானத் தெம்பெருமான்” எனக் கூறியதும் கூடலழகர் விஷயமாகவே கொள்ளல் தகும். என்னை? அத்

திருக்கோயிலின் மேல் விமானத்தில் கிடந்த திருக்கோலத் தோடு அப்பெருமான் எழுந்தருளியிருத்தலால் என்க".

இனி 'வையைக் கரையினெடுமால்' என்று சிலப்பதி காரங் கூறுமாறு, கூடலழகர் கோயில் வையைக் கரைக் கணன்றி மதுரைக்கு மேல்புறமுளவே எனின்: மதுரையின் இரு பக்கங்களிலும் அந்நதி சூழ்ந்து சென்றதாகவே முன்னை வழக்குண்மையால் தென்பக்கத்தும் அதன் போக்கு உள்ளதேயாகும். தென்பாலுள்ள வையைப் பிரிவு இக்காலத்துக் ''கிருதமாலை'' என வழங்கப் பெற் றுக் கூடலழகர் கோயிற் பக்கத்தோடுகின்றது. மதுரைக் கோட்டையைச் சுற்றி மாலைபோல் ஓடுதலின் வையைக்கு இப்பெயர் வழங்கியதென்பர்.

வேகமாதலின் வேகவதியென்றும்
மாகம் (விண்கதி) வாய்ந்ததனால் வையை என்றும்தா
ராக லாற்கிருத மாலைய தாமென்றும்
நாகர் முற்பெயர் நாட்டு நதியரோ

என்பது கூடற்புராணம். கலித்தொகையிலும் (மருதக் கலி 2)

இருநிலம்
தார் முற்றியது போலத் தகைபூத்த வையைதன்
நீர் முற்றி மதில் பொரூஉம் பகையல்லா னேராதார்
போர் முற்றொன் றறியாத புனல்சூழ்ந்த வயலூரன்

என இவ்வையை மாலை சூழ்ந்துள்ளது போல மதுரை யைச் சூழ்ந்து நின்றமை வருணிக்கப்பட்டிருப்பதும் நோக்கத்தக்கது. [25]

மதுரையின் மேற்குத் திசையில் அமைந்ததாகத் திருமுருகாற்றுப்படை கூறும் திருப்பரங்குன்றம் மலையை யும் குறிப்பிடல் தகும். [26]

கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளும் மரப் புணை ஒன்றில் அக்கரையிலிருந்து வையைக் கடந்து

தென் கரையை அடைந்து மதுரைக்குச் சென்றனர். [27] என வருவதாலும் வையை நீர்ப் பரப்பெல்லாம் பூக்கள் நிரம்பிப் புனல்யாறு அன்று இது பூம்புனல்யாறு [28] என்று வருவதாலும் நகரின் வளமான அமைப்புக்கு வையை துணையாயிருந்ததை அறியலாம்.

அக்கால மதுரை நகர மக்கள் வையையைக் கடக்கப் பரிமுக அம்பி கரிமுக அம்பி மரப்புணை போன்றவற்றைப் பயன்படுத்தியுள்ளனர். [29] வையை நதியில் திருமருத முன்துறை என்ற துறை புகழ் பெற்றதாயிருந்துள்ளது. [30]

கோவலனும், கண்ணகியும், கவுந்தியடிகளும் மதுரை நகரின் புறஞ்சேரிக்குச் சென்றதைக் கூறும் சிலப்பதிகார ஆசிரியர்,

அருமிளை யுடுத்த அகழிசூழ் போகிக்
... ... ... ....
.... .... ... ...
... ... .... ...
... ... ... ...
... ... ... ...
போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி
வாரலென் பனபோல் மறித்துக் கைகாட்டப்
புள்ளணி கழனியும் பொழிலும் பொருந்தி
வெள்ள நீர்ப் பண்ணையும் விரிநீ ரேரியும்
காய்க்குலைத் தெங்கும் வாழையும் கமுகும்
வேய்ந்திரட் பந்தரும் விளங்கிய விருக்கை
அறம்புரி மாந்த ரன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர் புக்கனர் புரிந்தென் [31]

என்கிறார். புறஞ்சேரிப் பகுதியில்—காவற்காட்டின் மரங்களடர்ந்த நிலையும், பொழில் வளமும், அகழியின் அமைப்பும், கொடிகள் பறக்கும் மதிலின் நெடுமையும் இப்பகுதியால் தெரியக் கிடைக்கின்றன. [32]

மதிலுக்கு வெளியே இருந்த புறநகரினது நிலை இதனால் குறிப்பிடப்படுகிறது.

அகழி அமைப்பு

மூன்று பக்கங்களில் வையையே அகழி போல அமைந்தது தவிர மதிற் சுவர்களை ஒட்டி மற்றோர் அகழியும் மதுரையில் இருந்துள்ளது. அது மிகவும் ஆழமானதாயிருந்தது என்றும் அடிக்கடி மேலெழுந்து துள்ளும் வாளை மீன்களையும், தன் உறுப்புக்களை விரித்து நீரில் தவழுகின்ற ஆமைகளையும் உடையதாயிருந்தது என்றும், கொடிய கூற்றுவனை ஒத்த முதலையையுடையதாயிருந்தது என்றும் இக்காரணங்களால் அவ்வகழியில் இறங்க மண்ணுலகத்தவர் எவரும் துணிய மாட்டாரென்றும் நூல்கள் கூறுகின்றன. அகழி தவிர அன்னங்களும் தாமரைப் பூக்களும் நிறைந்த பல நீர் நிலைகள் மதிற்புறத்தே காண்போர் கண்களையும் மனத்தையும் கவர்கிற வகையில் இருந்துள்ளன.[33]

மதில் அமைப்பு

வீரர்களே இன்றியும் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ள முடிந்த நுணுக்கப் பொறிகள் நிறைந்த மதிற் சுவர்கள் மதுரை நகரில் அமைந்திருந்தன.

மதிலில் இருந்த இயந்திரப் பொறிகளே பகைவர்களை அண்ட விடாமல் விரட்டும் ஆற்றல் பெற்றிருந்தன. அப்பொறிகளில் சில மழுப்படைகளை வீசி எறியும், நஞ்சு தோய்ந்த வாட்படைகளை வீசி எறியும், மும்முனைகளை உடைய சூலப்படைகளை உமிழ்வதுபோல வீசி எறியும், வேலாயுதங்களையும் சக்கரப்படைகளையும் வீசி எறியும், சில நெடிய கொழுப்படைகளை எறியும் கவண் கயிற்றில் கல்லைக் கட்டி எறியும், வாள் போன்ற கூரிய பற்களையுடைய பாம்புப் பொறிகள் நாவை நீட்டிப் பகைவரை வளைத்துப் பிடித்து அழிக்கும். யானைப் பொறிகள்

எதிரிகள் தலை சிதறுமாறு இரும்பு உலக்கைகளை வீசும். புலிப் பொறிகள் பகைவரை அமுக்கும். குதிரைப் பொறிகள் எதிரிகளின் மார்பு எலும்புகள் முறிய உதைக்கும். அவர்களை அகழியில் வீழ்த்தும் பேய்ப் பொறிகள் தீயுமிழும். சில பொறிகள் ஈயத்தை உருக்கி ஊற்றும். வறுத்த மணலைக் கொட்டும். கன்மழை பொழியும்.

இத்தகைய பொறிகள் மதுரை நகர மதிலிடத்தே இருந்தன. இப்பொறிகள் யாவும் யவனர் வினைத்திறத்தால் இயற்றப்பட்டவை என்றும் கூறப்பட்டுள்ளமை புலனாகிறது. [34]

''இத்தகைய பொறிகள் அமைந்த மதில்கள் நெடியவையாயிருந்தன—எதிரிகள் தாக்க முடியாதவையாயிருந்தன. சுரங்க வழியுடையவையாயிருந்தன. வானுற ஓங்கி நிமிர்ந்தவையாக இருந்தன. கோட்டை வாயில் நிலைகள் நெடிதுயர்ந்தவையாயும் திண்ணிய பெரிய கனமான கதவுகளையுடையவையாயும் இருந்தன.'' [35]

''அம்மதிலின்மீது கட்டப்பட்டிருந்த மாடங்கள் மேகங்கள் படர்ந்த பெரிய மலை முகடுகள் போல் ஓங்கியிருந்தன. மக்களும் பிறவும் இடையறாது சென்று வருதலால் கோட்டை வாயில் இடையறாத நீரோட்டமுடையவையை ஆற்றை ஒத்து உயிரோட்டமுள்ளதாயிருந்தது. [36]

மதில்களின் அமைப்பில் காணும் இப்பொறியியல் நுணுக்கங்கள் தமிழர் நகரமைப்பில் இருந்திருக்கும் பாதுகாப்பு ஆயத்த நிலைக்கு (Defence Preparedness)ச் சான்றாகும்.

**நகரின் அமைப்பு**

புற நகருக்கு அப்பால் மதிலையும் கடந்து அகநகருக்குள் மிகவும் அகலமான பெரிய தெருக்கள் அமைந்திருந்

தன. நகரின் தோரண வாயில்கள், தேரணி வீதிகள், பூரண மாளிகைகள் பற்றி எல்லாம் திருவிளையாடற் புராணம் வர்ணிக்கிறது. [37]

காவிரிப்பூம்பட்டினம் மூன்று பிரிவுகளாக (மருவூர்ப் பாக்கம், பட்டினப்பாக்கம் நாளங்காடி) இருந்தது போல மதுரை மாநகரம் அன்று நான்கு பெரும் பிரிவுகளாக இருந்தது என அறியமுடிகிறது. அவையாவன:

1. திருவாலவாய்
2. திருநள்ளாறு
3. திருமுடங்கை
4. திருநடுவூர் [38]

இவற்றோடு ஐந்தாவதாக இருந்தையூர் (இப்போது கூடலழகர் கோயிலுள்ள பகுதி) ஒரு பகுதியையும் சேர்த்துக் கூறுவர் ஆய்வாளர் மு. இராகவய்யங்கார். [39]

நீடுநீர் வையை நெடுமால் அடியேத்த [40]

என இளங்கோவடிகளும் இதனைக் கூறியுள்ளார். இங்கு வையையாவது நகரின் மேற்றிசையில் தென்பாற் பிரிந்து மாலை போலோடிய வையையின் மற்றொரு பிரிவாகிய கிருத மாலை.

மதுரை நகர் எந்நாளும் மணக்கோலங்கொண்டது போன்ற புதுமை மலர்ச்சியோடுள்ள நகர் என்னும் பொருள்பட 'மணமதுரை' என்றார் இளங்கோ. [41] இதற்கு உரை எழுதிய அரும்பதவுரைகாரர் 'கலியாண மதுரை' [42] என்றே பதசாரம் எழுதினார்.

பத்துப்பாட்டுள் முதலாவதாகிய திருமுருகாற்றுப் படையில்—திருப்பரங்குன்றம் பற்றிக் கூறுகையில் அது மதுரைக்கு மேற்கேயுள்ளதாகக் [43] கூறப்பட்டுள்ளது. ஆனால் இன்றோ மதுரையின் தென்பகுதியான அவனியாபுரத்தின் மேற்கேதான் பரங்குன்று உள்ளது.

இதனால் நக்கீரர் பாடிய காலத்தில் இன்றைய அவனியாபுரம் பகுதியே மதுரையின் நகர் நடுப்பகுதியாக இருந்திருக்கக்கூடும் என்றொரு கருத்தும் உண்டு. ஒரு வேளை அவனியாபுரமே 'நடுவூர்' என்னும் அகநகர்ப் பகுதியாயிருந்திருக்கக் கூடும்.

மதுரை நகரின் கட்டடங்களின் உயரம் புதுமை செல்வ வளம், கோட்டைச் சிறப்பு இவ்வளவையும் ஓரடியிலேயே இணைக்கிறது திருவிளையாடல்.

.... ... .... மதி தபழு
சுதை யிலகு புதுமைதரு நிதிதிகழு
மதில்தழுவு மதுரைநகரே [44]

மதுரையைப்பற்றி பேசும் எல்லா இடங்களிலுமே அதன் கோபுரம் மாடங்களைப் புகழுவது ஒரு சீராக வருகிறது.

திதமுறு மதுரையந்தண் [45]
அலகில் வண்புகழுடைய மதுரை [46]
வாரிஎற்றி முன்மதிப்படை பொருவது வைகை [47]
பெருங்கடல்சூழ் வையத்தைந்து நிலத்தோங்கு
நகர்கட் கெல்லாம் பயனாய் நகர்
பஞ்சவன்தன் மதுரைநகர் [48]
நீள வளர் பொற் கோபுரம் வானிலவும்
வெள்ளி ஒளிமன்றம் [49]

பரந்து ஓடும் பெரிய அகன்ற ஆறுபோல் அத் தெருக்கள் தோன்றின.

மதுரை நகரத் தெருக்களின் வீடுகள் தென்றல் காற்று வழங்கும் பல சாளர ளையுடையவையாயிருந்தன என்கிறது மதுரைக் காஞ்சி.

வகைபெற எழுந்து வான மூழ்கிச்
சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில்
யாறு கிடந்தன்ன அகல்நெடுந் தெருவில்

பல்வேறு குழாஅத் திசைஎழுந் தொலிப்ப
மா காலெடுத்த முந்நீர் போல
முழங்கிசை நன்பணை யறைவனர் நுவலக்
கயங்குடைந் தன்ன இயந்தொட் டிமிழிசை
மகிழ்ந்தோ ராடும் கலிகொள் சும்மை [50]

ஆற்றின் இருபுறமும் கரைகளைப்போல வீடுகள் அமைந்திருந்தன. வீதிகளுக்கு ஆறுகளை உவமை கூறும் முறை இருந்துள்ளது.

நகரின் கடைத்தெருவில் பன்னாட்டு மக்கள் நிறைந்திருந்தனர். பல மொழிகளைப் பேசும் மக்களின் பேச்சொலிகள் கேட்டன. நகரமைப்பில்—பூம்புகாரைப் போல் மதுரையும் பன்னாட்டினர் (International Community) வாழ்ந்த நகரமாயிருந்துள்ளது.

பல்வேறு விழாக்களை மக்களுக்குப் பறையறைந்து தெரிவிக்கும் ஓசை காற்றால் அலைப்புண்ட கடலலையின் ஒலிபோல் ஒலித்தது. கோயில்களிலிருந்து எழும் பலவகை வாத்தியங்களின் ஒலிகளைக் கேட்டு மக்கள் மனமகிழ்ந்து ஆரவாரம் செய்தனர்.

விழாக்களுக்காகக் கட்டப்பட்ட கொடிகளும் பகைவரை வென்றமைக்கு அடையாளமாகக் கட்டப்பட்ட வெற்றிக் கொடிகளும், கடைகளில் கட்டப்பட்ட விற்பனை அடையாளக் கொடிகளும், உயரப் பறந்தவாறு ஒரே கொடிகள் மயமாக அணி செய்தன. யானைகள் செல்லும் தெருக்களிலும் பெண்கள் செல்லும் வீதிகளிலும் கஸ்தூரி மணம் கமழ்ந்தது. [51]

தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரை [52]

என்று சிறுபாணாற்றுப்படை கூறுகிறது. நச்சினார்க்கினியர் இதற்கு விளக்கம் கூறும்போது "தமிழ் வீற்றிருந்த தெருவினை யுடையமதுரை" [53] என்கிறார்.

மதுரை நகரத்து வீதியின் குடியிருப்பு வீடுகளில் முல்லைக்கொடி வளர்க்கும் வழக்கம் இருந்திருக்கிறது.[54] பூக்களின் மணமும் நகரின் சுற்றுப்புறங்களிலும் மணக்கிற அளவு அட்டிற் புகையும் அப்ப வணிகர் அப்பம் சுடும் புகையும், அகிற்புகையும், யாகசாலை ஆவுதிப் புகையும், அரசன் அரண்மனை நறுமணங்களும் பரவும் என்று கூறப்பட்டுள்ளது.[55]

இக்காரணங்களால் பொதிகைத் தென்றல் மதுரையின் மணங்களைச் சுமந்து மதுரைத் தென்றலாக மாறி வந்தது என்றும் கூறப்பட்டுள்ளது.[56]

தெருக்கள்

மதுரை மாநகரின் தெருக்கள் செல்வ வளம் மிக்கவையாயிருந்தன. கணவரோடு ஊடிய மகளிர் வெறுப்புடன் கழற்றி எறிந்த அணிகலன்களும், சுமக்க முடியாமல் சலிப்பில் நீத்த நகைகளும், தாம் இயற்றிய சிற்றில்களைச் சிதைத்த இளைஞர்களோடு முரண்பட்டுச் சினந்த பெண்கள் அறுத்தெறிந்த முத்து மாலைகளும், நகரத் தெருக்களில் குப்பைகள் போல் குவிந்திருந்தன என்கிறார்.[57] இந்திரனது பெட்டகத்தைத் திறந்ததுபோல் செல்வ வளமிக்க நகரம் என்கிறார் இளங்கோ அடிகள்.[58] மாட மாளிகைகளின் வரிசைகள் திங்களைப் பொடி செய்து சேறாகக் குழைத்துப் பூசியது போல வெண்மை மிகுந்து தோன்றின.[59]

மதுரை நகரத் தெருக்களில் தேர்களின் ஒலியும் குதிரைகளின் கனைப்பொலியும், பரிகளின் கழுத்து அணியான கிண்கிணி ஓசையும், யானைகளின் பிளிற்றொலியும் ஐவகை இசைக் கருவிகளின் ஒலியும் நிறைந்திருக்கும். இவ்வொலிகள் மேகத்தின் இடியொலியையும் செவியில் உறைக்காதபடி செய்தன.[60]

**பலவகைப் பிரிவுகள்**

தொழில் பிரிவு—செயற் பிரிவுப்படியே தெருக்கள் தனித் தனியே அமைந்திருந்தன.

"பரத்தையர் தெரு, வேளாளர் தெரு, வணிகர் தெரு, மன்னர் மறுகு, மறையவர் தெரு எனப் பல்வேறு தெருக்கள் மதுரை மாநகரில் அமைந்திருந்தன. இத் தெருக்கள் ஒவ்வொன்றும் எவ்வாறு அமைந்திருந்தன என்று தனித்தனியே விவரிக்கப்பட்டிருக்கின்றன". [61]

**வணிகர் வீதிகள்**

மதுரை நகரமைப்பில் வணிகர் வாழும் கடை வீதிகள் பற்றிச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. வணிகர் கடை வீதிகளில் உள்ள திண்ணைகள் நீல மணிகளால் ஒளி பெற்று விளங்கின. சுவர்கள் பணிங்கின் ஒளியை உமிழ்ந் தன. தூண்கள் வயிரத்தால் செய்யப் பெற்றிருந்தன. அத்தூண்களில் இடையிடையே முத்துத் தாமங்கள் நிரல் படத் தொடுத்துத் தொங்கவிடப்பட்டிருந்தன. கருநிறக் கம்பளம் வேய்ந்த சட்டத்தின் மேல் வரிசை வரிசையாகப் பவளமாலைகளும் முத்து மாலைகளும் பொன் மாலை களும், தொங்கவிடப்பட்டன. அவை கண்கொள்ளாக் காட்சிகளாய்த் தோன்றின. [62]

"வணிகர்களுடைய கடைவீதிகள் இரவு என்றும் பகல் என்றும் பகுப்பற்ற விண்ணுலகம் போல விளங்கின. வணிகச் சிறுமியர் வைத்து விளையாடும் அம்மிகளும், குளவிகளும் மரகதத்தால் உரல்களும், உலக்கைகள் வயிரத்தாலும், அடுப்புகள் வெள்ளியாலும் செய்யப்பட்டி ருந்தன.

வெள்ளி அடுப்பில் வாசனை மிக்க அகிற் கட்டைகள் விறகாகப் பயன்பட்டன.

அங்கே விளையாடும் வணிகச் சிறுவர்கள் பனிநீரை உலை நீராகவும் முத்துக்களை அரிசியாகவும், மாணிக்

கத்தை நெருப்பாகவும் பயன்படுத்தினர். பொன்னாற் செய்த பாத்திரங்களில் சமைத்தனர்.

வணிகர் வீதி வீடுகளின் கதவங்கள் செம்பொன்னாலும், தாழ்ப்பாள்கள் வயிரத்தாலும் செய்யப்பட்டிருந்தன.

வணிகர் வீதிகளில் மணிகளும் பொற்கட்டிகளும் முத்துக்களும், மரகதங்களும், வயிரங்களும் அங்கங்கே சிதறிக் கிடந்தன". [63]

இந்த வருணனை மூலம் மதுரை நகரின் செல்வ வளமும், நகரமைப்பில் வணிகர் வீதியின் செழுமையும் தெரிய வருகின்றன.

அரச வீதிகள்

குடிமக்களின் துன்பமாகிய இருளைப் போக்கும் அரசன் புற இருளை நீக்கும் கதிரவனுக்கு ஒப்பாகக் கருதப்பட்டான். அவ்வாறு கருதப்பட்ட அரசர்தம் தொடர்புடைய வீதிகளும் இடங்களும், மதுரை நகரில் எப்படி எப்படி இருந்தன என்பது நூல்களில் கூறப் பட்டுள்ளது.

அரசர் வீதியில் குதிரைக் கூடங்களும், யானைக் கூடங்களும் மிகுதியாக இருந்தன. மழுவச்சிரம், வில், அம்பு, சூலம், சக்கரம், வேல், நெருஞ்சி முள் போன்ற கருவி, கலப்பை போன்ற ஆயுதம் முதலிய பல்வேறு படைக் கருவிகளைக் கொண்ட—கொற்றவையின் கோயிலுடன் கூடிய படைக் கொட்டாரங்கள் இருந்தன.

அரசிளங்குமரரும், அவரை ஒத்த பிறரும் போர்ப் பயிற்சி பெறும் பல இடங்களும் இருந்தன.

அரச வீதியின் மாட மாளிகைகள், நீல மணிகளும், மாணிக்கமும், பொன்னும், சந்திரகாந்தக் கற்களும் பதிக்கப் பெற்றுப் பளீரென மின்னின.

யானைகளுக்குப் போர்ப் பயிற்சி அளிக்கும் வீரர்களையும் குதிரைகளைத் தேரிற்பூட்டி விரைந்து செத்துலும் வீரர்களையும், சிறுமியர் கட்டிய மணல் வீடுகளை அழிக்கும் தேரோட்டுகிற அரசிளங்குமரரையும் வீதிகளில் காண முடிந்தது. அதனால் சினமுற்ற சிறுமியர் அறுத்தெறிந்த முத்துக்களால் வீதியின் தேரோட்டமே தடைப்பட்டது.[64]

வழிவழியாக அறநெறி பிறழாது ஆட்சி நடத்தும் பாண்டியப் பேரரசர்களது எழுநிலை மாடங்களை உடைய அரண்மனை, நகரின் வடகிழக்குப் பகுதியில் அமைந்திருந்தன.[65] ஈசானிய (வடகிழக்கு) திசையில் மாளிகை அமைப்பது சிறப்பு என்னும் மனைநூல் மரபு இங்கு ஒப்பு நோக்கிக் காணத்தக்கது.[66] மக்களும் மன்னரும் மனைநூல் மரபுகளைக் கடைப்பிடித்தே கட்டடங்களைக் கட்டியும், நகரமைத்தும் வந்துள்ளமை புரிகிறது.

### மதுரைக் கோயில்கள்

இக்கால மதுரைக்குக் கோயில் மாநகரமென்றே ஒரு பெயர் உண்டு. பழங்கால மதுரையும் அவ்வாறே கோயில் மாநகராக அமைந்திருந்தது. சிலப்பதிகார ஊர்காண் காதையில்,

நுதல் விழிநாட்டத் திறையோன் கோயிலும்
உவணச் சேவல் உயர்த்தோ னியமலமும்
மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்
அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்
மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்[67]

என்று வருகிறது. நகரின் உரிமைத் தெய்வமாக மதுராபதி கூறப்படுகிறாள்.[68] ஐயை கோயில் என ஒன்றும் கூறப்படுகிறது.[69]

சிவபெருமான் திருக்கோயிலும், கருடக் கொடி உயர்த்திய திருமால் கோயிலும், மேழிப்படையை

வலமாக ஏந்திய பலதேவர் கோயிலும், சேவற்கொடியை யுடைய முருகவேள் கோயிலும் அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும் என இவை நகரில்அமைந்திருந்தன. பௌத்தப் பள்ளி, அமணப் பள்ளி, அந்தணர் பள்ளி என இமூவகைப் பள்ளிகள் இருந்துள்ளன.[70]

இவற்றுள் திருமால் கோயில் என்பது இருந்தையூர் என்னும் நகரின் உட்பகுதியில் அமைந்திருந்தது என்றும் அதனருகே வையையின் மற்றொரு பிரிவாகிய கிருத மாலை நதி ஓடியது என்றும் கூறுகிறார் மு. இராகவ ஐய்யங்கார்.[71]

## அறங்கூற வையம்

மதுரை நகரில் கோயில்கள், பள்ளிகள், தவிர அறங் கூறும் அவையங்களும் இருந்தன. அறங்கூறும் அவையங் களுக்கு அடுத்தபடி காவிதிப்பட்டம் பெற்ற அமைச்சர் களுடைய வளமனைகள் அமைந்திருந்தன. அவற்றை அடுத்துப் பிற நாடுகளில் இருந்து வந்து வாணிகத்தால் பொருள் திரட்டிய வணிகர் வாழும் வீடுகள், இருந்தன. புரோகிதர், ஒற்றர், தூதுவர், சேனைத் தலைவர் முதலி யோர் வாழும் வீடுகள் அடுத்தடுத்து இருந்தன.[72]

## அங்காடிகள்

இரவுக் கடை வீதிகளும், பகற்கடை வீதிகளும் தனித் தனியே இருந்தன. அவை அந்தி அங்காடி (அல்லங்காடி) நாளங்காடி என அழைக்கப்பட்டன.[73] இன்றைய மதுரை யிலும் கூட 'அந்திக் கடைப் பொட்டல்' என ஒரு பகுதிக் குப் பழங்கால முதலே பெயர் வழங்கி நீடித்து வருகிறது.

சங்கினால் வளையல் முதலியன செய்யும் வினைஞ ரும், மணிகளைத் துளையிடுபவரும் பொற்கொல்லரும், பொன் வாணிகரும், ஆடை விற்பவரும் மணப்பொருள்கள் விற்பவரும், நெய்தற்றொழில் செய்பவரும், ஓவியர்களும்

பிறரும் அந்தி அங்காடியில் நிரம்பியிருந்துள்ளனர்.[74] அவர்கள் ஆரவாரம், அறிஞர் பெருமக்களின் தருக்க ஆரவாரம் போல ஒலித்தது.

இனி நாளங்காடி பற்றி,

மழை கொளக் குறையாது புனல்புக மிகாது
கரைபொரு திரங்கு முந்நீர் போலக்
கொளக் கொளக் குறையாது தரத்தர மிகாது
கழுநீர் கொண்ட எழுநா ளந்தி
ஆடுதுவன்று விழவின் நாடார்த் தன்றே
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்
நாளங்காடி நனந்தலைக் கம்பலை

என்று மதுரைக்காஞ்சி விவரித்துக் கூறுகிறது.[75]

### அறக்கூழ்ச் சாலை

ஏழை எளியவர்க்கு வயிறார உணவிடும் அறக்கூழ்ச் சாலைக்கும் மதுரை நகரமைப்பில் இடம் தரப்பட்டிருக் கிறது.[76]

அத்தகைய அறக்கூழ்ச் சாலையில் பலா, வாழை, முந்திரி முதலிய பழங்களும், பாகற்காய், வாழைக்காய், வழுதுணங்காய் முதலிய காய்களும், கீரைகளும், இறைச்சி கலந்த அடிசிலும், கிழங்கு வகைகளும், பாலும் வறிய வர்க்கு வழங்கப்பட்டிருப்பது தெரிகிறது என்று மதுரைக் காஞ்சி இந்த அறக்கூழ்ச்சாலையைப்பற்றிக் கூறுகிறது.[77] நகரில் அவ்வப்போது வந்து போகும் மக்களுக்கு (Floating Population) இவ்வுணர்வு அறம் பயன்பட்டிருக்கிறது.

### நகரத்தின் காவல் ஏற்பாடு

மதுரை நகரத்தில் காவல் ஏற்பாடு உறுதியாகவும் உரமாகவும் செய்யப்பட்டிருந்தது. காவலர் நள்ளிரவிலும் கண்ணுறங்காமல் காவல் புரிந்து வந்தனர். அஞ்சா

நெஞ்சம் கொண்ட மதுரை நகரக் காவலர் புலி ஒத்த வலிமையை உடைய அவர்கள் திருடர்கள் புரியும் தந்திரங் களை நன்கு உணர்ந்து அதற்கு ஏற்பத் தங்களைத் துணி வுடன் ஆயத்த நிலையில் வைத்திருந்தனர். எந்தச் சூழலிலும் கடமை உணர்வு தவறாத அந்தக் காவலர்கள் மெல்லிய நூலேணியைத் தங்கள் அரையிற் சுற்றியபடி திரிந்தனர். நூலேணியை பயன்படுத்துமளவு கட்டடங்கள் உயர்ந்திருந்தன. காற்றிலும் கடிது விரையும் கள்வரைக் கூடத் துரத்திப்பிடித்துப் பிணித்துவிடும் ஆற்றலுடைய அக்காவலரால் மதுரை மாநகர வாசிகளுக்குக் கள்வர் பயம் அறவே இல்லாதிருந்தது.[78] நகரத்தின் காவலர் பற்றிய இச்செய்தி,

நிறங்கவர்பு புனைந்த நீலக் கச்சினர்
மென்னூல் ஏணிப் பன்மாண் சுற்றினர்
நிலனக முளியர் கலனசைஇக் கொட்கும்
கண்மா றாடவர் ஒடுக்கம் ஒற்றி
வயக்களிறு பார்க்கும் வயப்புலி போலத்
துஞ்சாக் கண்ணர் அஞ்சாக் கொள்கையர்
அறிந்தோர் புகழ்ந்த ஆண்மையர் செறிந்த
நூல்வழிப் பிழையா நுணங்கு நுண்தேர்ச்சி
ஊர்க்காப்பாளர் ஊக்கருங் கணையினர்[79]

என்று மதுரைக் காஞ்சியில் கூறப்பட்டுள்ளது.

பலநூல் கூறும் நகரப்பாங்கு

மதுரை நகரமைப்பையே தாமரைப்பூவுடன் ஒப்பிட்டுக் கூறியுள்ளது பரிபாடல் என்பதைக்கண்டோம்.[80] மதுரைக் காஞ்சியில் நகரமைப்பின் பல்வேறு நிலைகள் சிறப்பாக அங்கங்கே கூறப்பட்டுள்ளன.

அ. பல கற்படைகளை உடைய மதுரை மதில்கள்

விண்ணுற ஓங்கிய பல்படைப் புரிசை[81]

ஆ. மதுரை மாடங்களும் கோட்டை வாயிலும்

மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல் [82]

மழையாடு மலையின் நிவந்த மாடமொடு
வையை அன்ன வழக்குடை வாயில் [83]

மலைபுரை மாடத்துக் கெழு நிழல் இருத்தர [84]

இ. பல சாளரங்களை உடைய வீடுகள்

வகை பெற எழுந்து வான மூழ்கிச்
சில்காற் றிசைக்கும் பல்புழை நல்லில்
யாறு கிடந்தன்ன அகல் நெடுந்தெருவில் [85]

ஈ. ஓவியம் போன்ற வீதியமைப்பு

ஓவுக் கண்டன்ன இருபெரு நியமித்து
சாறயர்ந் தெடுத்த உருவப் பல்கொடி [86]

கடைவீதியின் கொடிகள் உயர்ந்த மாடங்களுடன் மலைமிசை அருவிகள் போல் நுடங்கின என்றும் கூறுகிறார் மாங்குடி மருதனார். [87]

உ. மேனிலை மாடத்து மகளிர் முகங்கள்

நிரை நிலை மாடத்து அரமியந் தோறும்
மழைமாய் மதியிற் றோன்றுபு மறைய [88]

ஊ. சிறப்பான நால் வேறு தெருக்கள் — தெருச்சுருங்கை

கூலிங் குவித்த கூலி வீதியும் [89]
நால்வேறு தெருவினும் காலுற நிற்றர [90]
பெருங்கை யானை யினநிரை பெயரும்
சுருங்கை வீதி மருங்கிற் போகி [91]

யானைகள் பல சேர்ந்து போகலாம்படி கீழ் சுருங்கையாக அதனை மேலிட்ட வீதி. சுருங்கை கரந்துறை; ஒழுகுநீர் புகுகையை ஒருத்தரும் அறியாதபடி மறைத்துப் படுத்த வீதி வாய்த்தலை." [92]

இக்காலத்து இலண்டன், பாரிசு போன்ற பெருநகரங்களில் உள்ள நிலத்தடிச் சாலை (Underground Subway) போன்ற அமைப்பு அன்றைய சிலப்பதிகாரக் காலத்து மதுரையிலேயே இருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பால்வேறு தெரிந்த நால்வேறு தெருவும்
அந்தியும் சதுக்கமும் ஆவண வீதியும்
மன்றமும் கவலையும் மறுகும் [93]

என்னும் சிலப்பதிகார அடிகளிலிருந்து நாற்சதியநான தெருக்கள் (நால் வேறு தெருக்கள் — நால் வருணத்தார் தெரு என்றும்) முச்சந்தியான தெருக்கள் பலவாய் ஒன்றான முடுக்கு, குறுந்தெரு (சந்து) என இவை மதுரை நகரமைப்பில் இருந்துள்ளன.

சதுக்கம் (Square) முடுக்கு (Close) மறுகு (Lane) என்று விதம் விதமாக இருந்த தெருக்கள் நகரமைப்பை வளப்படுத்தியுள்ளன. இங்கிலாந்தில் முன்றிலோடு கூடிய வீடுகள் உள்ள வீதியை மன்று (Court) என்றும் மேலே செல்ல முடியாது முடிந்துவிடும் தெருவை முடுக்கு (Close) என்றும், மரங்கள் வளர்ந்த சாலையைச் (Avenue) சாலை என்றும், நடுவே திறந்தவெளி உள்ள இடங்களை (Place) என்றும் தோட்டமுள்ள படப்பை வீட்டை வளமனை (Grove or Bungalow) என்றும் கூறுகிற வழக்கம் நகரமைப்பு (Town Planning) முறையில் உள்ளது. [94]

19ஆம் நூற்றாண்டின் இந்த ஐரோப்பிய நகரமைப்பு முறைகள் இரண்டாம் நூற்றாண்டிலேயே மதுரை போன்ற தமிழக நகரங்களில் இருத்திருப்பது வியந்து பாராட்டுதற்குரியது.

### எ. நகரின் பங்கா — இளமரக்கா — உய்யாவனம்

வெப்ப நாட்களிலும், வேனிற் காலத்திலும் குளிர்ந்த சோலைகளிலே குடும்பத்தோடு சென்று இளைப்பாறுதலும், காற்று வாங்குதலும் மதுரை நகரில் வழக்கமா

யிருந்துள்ளன. அதற்கென நகரமைப்பில் பூங்காக் களுக்கும் இளமரக்காவுக்கும் உய்யான வனங்களுக்கும் திட்டமிட்டிருந்துள்ளனர். அவை மதுரை நகரத்தினமைப் பில் இருந்துள்ளன. சிலப்பதிகாரம் இதைப் பின்வருமாறு கூறும்

கோடையொடு புகுந்து கூடலாண்ட
வேனில் வேந்தன் வேற்றுப்புலம் படர
ஓசனிக்கின்ற வுறுவெயிற் கடை நாள்
வையமுஞ் சிவிகையும் மணிக்கா லமளியும்
உய்யானத்தி னுறுதுணை மகிழ்ச்சியும் [95]

### நகரப் பெருவிழா

காவிரிப்பூம்பட்டின நகருக்கு எவ்வாறு இந்திர விழா நகரப் பெருவிழாவாக ஆண்டுதோறும் இருந்து வந்ததோ அவ்வாறே மதுரையில் ஓணநாள்விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டிருக்கிறது.

ஓணநாள் விழாவன்று (திருமால் பிறந்த நாள்) நகரின் மறவர் சேரியில் வீரப் போர்களும் விளையாட்டுக் களும் நிறைந்திருந்தன. [96] இதிலிருந்து நகரில் படை வீரர் குடியிருப்புக்கள் தனியே (Contonement or Defence area) இருந்துள்ளமையை அறிய முடிகிறது.

### மதுரையின் சிறப்பு

மதுரை நகர் அளக்க முடியாத பொருள் வளமுடை யது என்கிறார் மாங்குடி மருதனார். தேவர்களும் பூவுல குக்கு விரும்பி வந்து தேடிக் காணும்படியான நகரம் என்றும் அவரே கூறுகிறார். [97]

அளந்து கடை யறியா வளங்கெழு தாரமொடு
புத்தே ளுலகங் கவினிக் காண்வர
மிக்குப் புகழெய்திய மதுரை [98]

பரிபாடல் நூலுள் அகப்படாமல் எஞ்சியபாடல்களிலிருந்து தொகுக்கப்பட்ட திரட்டுப் பகுதியில் மதுரைநகர் பற்றி வருவன குறிப்பிடத் தக்கவையாகும். பரிபாடல் உலகனைத்துமே மதுரை நகருக்கு ஈடாகாது என்கிறது. திருமகளின் திலகம்போல் அமைந்த நகரம் என்கிறது மற்றொரு பாடல்.

உலகம் ஒருநிறையாக தானோர் நிறையாப்
புலவர் புலக்கோலால் தூக்க — உலகெலாம்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்
நான் மாடக்கூட னகர் [99]

செய்யாட் கிழைத்த திலகம்போற் சீர்க்கொப்ப
வையம் விளங்கிப் புகழ்பூத்த லல்லது
பொய்யாத லுண்டோ மதுரை புனைதேரான்
வையை யுண்டாகு மளவு [100]

மதுரை நகரின் அமைப்பு கார்த்திகை மகளிரின் காதில் இடப்பட்ட மகர குண்டலம் போலிருந்தது என்கிறது மற்றொரு பரிபாடல். கார்த்திகை மகளிர் அக்கினியின் மனைவியே அறுவகை அழகிய வடிவாக மாறிய பெண்கள். [101]

கார்த்திகை காதிற் கனமகர குண்டலம் போற்
சீர்த்து விளங்கித் திருப்பூத்தல் அல்லது
கோரத்தை
உண்டாமோ மதுரை கொடித்தேரான் வார்த்தை
யுண்டாகு மளவு [102]

பேரழகியான அங்கியின் மனைவி காதில் குண்டலம்போல் என ஒப்பிட்டது மதுரையின் நகரமைப்புக்குப் பெரிய புகழாரமாகும். சங்கமிருந்து தமிழாய்ந்த நகரமாக இருந்த காரணத்தால் பூம்புகாரைவிட மதுரைக்கு அறிவாளர் நகரமாக அமைந்த (Intellectual city) பெருமையும் கிடைக்கிறது. கடைச்சங்கமும் அதன்

புலவர்களும் மதுரையில் கூடியிருந்திருக்கிறார்கள். இன்றைய ஆலயத்துள்ளும் சங்கத்தார் கோவில் என ஒரு பகுதி உள்ளது. இன்றைய மதுரையிலும் கூடப் பழைய நகரப்பகுதி கோவிலை மையமாகக் கொண்டு அம்போத ரங்கமாக விரிந்து ஆடி வீதி (முதற் சுற்று) சித்திரை வீதி (இரண்டாம் சுற்று) ஆவணி மூலவீதி (மூன்றாம் சுற்று) மாசி வீதி (நாலாம் சுற்று) வெளிவீதி (ஐந்தாம் சுற்று) எனத் தாமரைப் பூப்போலவே அமைந்துள்ளது.ஒவ்வொரு மாதமும் ஒரு திருவிழாவின் பெயராகவே அமைந்துள்ளது மதுரையின் நகரமைப்புச் சிறப்பாகும்.

இன்று சிறிய அளவில் வடகிழக்கு மூலையில் அமைந் துள்ள பழைய சொக்கநாதர் கோயிலும்—கடம்பவனத்திற் கண்ட பழைய கோயிலும் ஒன்றோ என்றும் கருதுவாரு முண்டு.

இப்போது நகர அந்திக்கடைப் பொட்டலருகே கடைவீதியில் இருக்கும் பழைய கோட்டைப் பகுதி அரண் மனையாயிருத்தல் கூடும். மேற்கு வெளி வீதியிலுள்ள இடிந்த கோட்டைப்பகுதி மேற்குமதில் வாயிலாக இருந் திருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

**நகரப் பரப்பும் மக்களும்**

சிலப்பதிகாரத்தில் பூம்புகார் நகர் நிலப்பரப்பு. மக்கள் தொகை பற்றி அகச்சான்று நூலுக்குள் கிடைத் ததுபோல் மதுரையைப்பற்றி நேர்முகச் சான்று எதுவும் கிடைத்திலது எனினும் திருவாலவாய் திருப்பூவணம், திருமுடங்கை, திருவூர்[103] என்ற நான்கு மாட எல்லை களைக் கொண்டு காணும்போது பூம்புகார் நகரின்பரப்பை ஒத்த அளவு மதுரையும் இருந்திருத்தலை உய்த்துணர முடிகிறது. எழுகடல்,[104] மெய்காட்டும் பொட்டல்,[105] வெள்ளியம்பலம்[106] அக்கசாலை, அந்திக்கடை,செம்பியன் கிணறு, கோவலன் பொட்டல் முதலிய வரலாற்றுத் தன்மை வாய்ந்த பழம் பெயர்கள் இன்றும் அப்படியே இடங்களுக்கு வழங்கி வருகின்றன.

நகரமைப்புக் கலையில் பதுமம் என்ற இலக்கணத்திற் கேற்ப அமைந்த மதுரையை அடுத்து மயூரம் என்ற மயில் வடிவ அமைப்பிலிருந்த காஞ்சியையும் பின்பு உறையூர், வஞ்சி ஆகிய நகரங்களைப் பற்றிக் கிடைக்கும் சுருக்க மான தகவல்களையும் எதிர்வரும் இயலில் தொகுத்துக் காண்கிறது இவ்வாய்வு.

□

குறிப்புகள் :

1. இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கையேடு, ப. 229.
2. பரிபாடல் திரட்டு 7.
3. பெரும்பற்றப்புலியூர் நம்பி, திருவிளையாடற் புராணம் 53: 1.
4. ,, ,, பயகரமாலை 36.
5. ,, ,, ,, 53: 7.
6. ,, ,, ,, 53: 8.
7. ,, ,, ,, 53: 10.
8. ,, ,, ,, 53: 11.
9. திருவிளையாடற் புராணம், 53: 12-16.
10. திருவிளையாடல்: திருநகரச் சிறப்பு 2-18.
11. திருவிளையாடற்புராணம், 33:15.
12. ,, மதுரையான திருவிளையாடல், 36 : 13-16
13. ,, நான்மாடக் கூடலான திருவிளை யாடல் 5-6.
14. ,, ,, ,, 7-12.
15. ,, ,, ,, 13.
16. ,, 47 திருவாலவாயான திருவிளை யாடல் 6.

17. திருவிளையாளற்புராணம் 47 திருவாலவாயான திருவிளையாடல் 7.
18. ,, ,, ,, 8-14.
19. கலித்தொகை 92, நாச்சினார்க்கினியர் உரை.
20. கல்லாடம் 62.
21. சிலப்பதிகாரம் 11: 90-92.
22. திருவிளையாடல் புராணம் 36: 16-24.
23. கலித்தொகை - மருதம் 2.
24. மு. இராகவய்யங்கார், செந்தமிழ் தொகுதி 8, ப. 111-114.
25. ,, ஆராய்ச்சித் தொகுதி, ப. 243-244.
26. பத்து, திருமுருகாற்றுப்படை, 70-77.
27. சிலப்பதிகாரம் 2: 13-179
28. ,, 2: 13-174.
29. ,, 2:175-180.
30. ,, 13: 183-196.
31. ,, ,, ,,
32. ,, 13: 195-196.
33. ,, 15: 207.
34. ,, 15: 207-217.
35. ம. ரா. இளங்கோவன், தமிழகத்தின் தலைநகரங்கள், ப. 70.
36. மதுரைக் காஞ்சி 353-356.
37. திருவிளையாடல், திருநகரச் சிறப்பு 7.
38. கலி. 92ம் பாட்டு, நச்சினார் உரை.
39. மு. இராகவய்யங்கார், ஆராய்ச்சித் தொகுதி, ப. 242.
40. சிலப்பதிகாரம் 18: 4.

41. சிலப்பதிகாரம் 24:5.
42. ,, 24.5க்கு அரும்பதவுரை.
43. திருமுருகாற்றுப்படை 72.
44. திருவிளையாடற்புராணம் கடவுள் வாழ்த்து 12.
45. ,, ,, 17.
46. ,, திருநகரச் சிறப்பு 1.
47. ,, ,, 2.
48. ,, ,, 3.
49. ,, ,, 4.
50. மதுரைக் காஞ்சி 357-364.
51. ,, 365-375.
52. சிறுபாணாற்றுப்படை 66-67.
53. ,, நச்சினார்க்கினியர் உரை, ப. 111.
54. சிலப்பதிகாரம் 13:120.
55. ,, 13: 121-130,
56. ,, 13:131-132.
57. மதுரைக்காஞ்சி 680-85.
58. சிலப்பதிகாரம், 14: 68-69 .
59. ம.ரா. இளங்கோவன், தமிழர் தலைநகரங்கள், ப. 72.
60. மதுரைக் காஞ்சி 389-395.
61. ம.ரா. இளங்கோ, தமிழர் தலைநகரங்கள்,ப. 72.
62. மதுரைக் காஞ்சி 500-505.
63. ம.ரா. இளங்கோவன், தமிழர் தலைநகரங்கள், ப. 72.
64. மதுரைக் காஞ்சி 654-686.
65. ம.ரா. இளங்கோவன், தமிழர் தலைநகரங்கள், ப. 73.
66. மனைநூல் 54.

67. சிலப்பதிகாரம் 14: 7-12.
68. ,, 23:22-177.
69. ,, 11: 216.
70. மதுரைக்காஞ்சி 461-488.
71. மு. இராகவய்யங்கார், ஆராய்ச்சித் தொகுதி, ப. 241.
72. மதுரைக்காஞ்சி 489-516.
73. ம.ரா. இளங்கோவன், தமிழர் தலைநகரங்கள், ப. 75.
74. மதுரைக் காஞ்சி 542-544.
75. ,, 424-430.
76. ,, 526-535.
77. ,, 526-535.
78. ,, 645-650.
79. ,, 639-647.
80. பரிபாடல் திரட்டு 7.
81. மதுரைக் காஞ்சி 352.
82. ,, 429.
83. ,, 355-356.
84. ,, 406.
85. ,, 357-359.
86. ,, 365-366.
87. ,, 373-374.
88. ,, 451-452.
89. சிலப்பதிகாரம் 14: 211.
90. மதுரைக் காஞ்சி 522.
91. சிலப்பதிகாரம் 14:64-65.
92. 14, அரும்பதவுரை, ப. 355.

93. சிலப்பதிகாரம் 14: 157-159.
94. Harold P. Clumn, The Face of London, p.10.
95. சிலப்பதிகாரம் 14: 123-127.
96. மதுரைக் காஞ்சி 390-394.
97. ,, 686-698.
98. ,, ,,
99. பரிபாடல் திரட்டு 6.
100. ,, 9.
101. மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப.490.
102. பரிபாடல் திரட்டு 10.
103. திருவிளையாடல் 5:6 நான்மாடக் கூடலான திருவிளையாடல்.
104. ,, 8.
105. ,, 39.
106. சிலப்பதிகாரப் பதிகம் 41.

□

## இயல் எட்டு

# முப்பெரு நகரங்கள்

காவிரிப்பூம்பட்டினம் சோழர் தலைநகரம் என்ற முறையிலும் மதுரை பாண்டியர் தலைநகரம் என்ற முறையிலும் இதுகாறும் ஆராயப்பட்டன. இனிப் பல்லவர் தலைநகரமாக இருந்த காஞ்சியும், முந்திய சோழர் தலைநகராயிருந்த உறையூரும், சேரர் தலைநகராயிருந்துள்ள வஞ்சியும் இந்த இயலில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மதுரை நகரமைப்பைக் கூறும் பரிபாடல் இறுதியில் 'கோழியும் வஞ்சியும் போல்' என உறையூரையும் வஞ்சியையும் சுட்டுகிறது. [1]

மேற்குறித்த கோநகரங்களில் இன்றும் பெருநகரங்களாக இலங்குபவை மதுரையும் காஞ்சியுமே. உறையூர் திருச்சியருகே ஒரு சுற்றுப்புறச் சிற்றூராக மட்டுமே விளங்குகிறது. எது வஞ்சி என்பது பற்றிக் கருத்து வேறுபாடு நிலவுகிறது. [2]

நூற்குறிப்புக்களிலும் சான்றுகளைக் கொண்டுமே ஆராய முடிந்த இந் நகரங்களைக் காஞ்சி, உறையூர், வஞ்சி என இங்கு முறை வகுத்துக் கொள்ள 'இதுவே' காரணம்.

### காஞ்சி நகரமைப்பு

தண்டியலங்காரம் என்னும் அணியிலக்கண நூலில் உருவக அணியின் பிரிவு ஒன்றிற்கு மேற்கோளாகக்

காட்டப்பட்டிருக்கும் பாட்டு ஒன்றில் காஞ்சிநகரம் தோகை விரித்தாடும் மயிலுடைய தோற்றத்திற்கு ஒப்பிடப் பட்டுள்ளது. [3]

நகரமைப்பில் தாமரை வடிவ நகரமைப்பிற்கு (பத்மம்) மதுரை உதாரணமாயமைந்தது போல மயில் வடிவ மயூர பாணி) நகரமைப்பிற்குக் காஞ்சி உதாரணமாக விளங்கி இருக்க வேண்டும். பாரவி என்ற வடமொழிக் கவிஞர் 'ஆண்களில் அழகர் திருமால், பெண்களில் அழகி அரம்பை நகரங்களில் அழகியது காஞ்சி எனச் சிறப்பித்துக் கூறி யிருக்கிறார்.

மலிதேரான் கச்சியும் மாகடலும் தம்முள்
ஒலியும் பெருமையும் ஒக்கும்—மலிதேரான்
கச்சி படுவ கடல் படா கச்சி
கடல் படுவ எல்லாம் படும் [4]

என்னும் தண்டியலங்கார மேற்கோள் பாட்டும் காஞ்சி நகரின் பல்வேறு வளங்களைக் கடலினும் மேலானதாகக் கூறுகிறது.

''காஞ்சி நகரின் இருபாலமைந்திருந்த ஏரிகள் இரண்டும் இருபுறத் தோகைகளாகவும் கோட்டை மதில் வயிறாகவும் பீலி கடிகையாகவும், நீர்வண்ணன் அத்தி யூரை வாயாகவும் உடைய காஞ்சி அழகிய மயில் போன்ற தோற்றமுடையது'' என்பது தண்டியலங்கார உருவக மேற்கோள் பாட்டு ஆகும். இதில் கடிகை என்பது காஞ்சியில் இருந்த கல்லூரியைக் குறிக்கும். [5]

மணிமேகலை காஞ்சியை அடைந்தது பற்றிக் கூறும் போது தேவர்கோனின் 'காவல் நகரமே பூமிக்கு வந்தது போல' எனச் சாத்தனார் கூறுகிறார். [6] மணிமேகலை சென்று தொழும் சேதியும் கூறப்படுகிறது. [7] மதில், பொழில் கூறப்படுகிறது.

காஞ்சி நகரில் அரசன் ஒரு தெய்வத்தின் ஆணைப்படி தான் அமைத்த பீடிகையையும் சோலையையும் மணிமேக

லைக்குக் காட்டுகிறான்.[8] பெரும்பாணாற்றுப்படையில் காஞ்சியின் நகரப்பகுதியாகியதிருவெஃகாகூறப்படுகிறது.[9] 'வெயில் நுழைதலறியாத குயில் நுழையும் சோலை' எனக் காஞ்சி நகரச் சோலை கூறப்படுகிறது.[10] தேர்கள் தடம் பதித்து ஓடிய காஞ்சிநகர வீதிகள் கூறப்படுகின்றன.[11] செங்கலாற் செய்த உயரமான புறப்படை வீடு[12] மிளை சூழ் படப்பை[13] பலர் தொழும் விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர் எனப்படுகிறது. பொற்றிருமாட கூடப் புராதனக் கவின்" எனக் காஞ்சி நகரின் அழகைக் காஞ்சிப் புராணம் கூறுகிறது.[14] தீர்த்தம், தலம், மூர்த்தி என்ற வகையில் காஞ்சியின் சிறப்பை இப்புராணம் கூறும்,

காஞ்சியில் கடிகையும், ஓவிய சிற்ப கலைக்கூடங் களும் பாகூரில் வடமொழிக் கல்லூரியும் பிரம்மபுரிகளும் நிரம்பி இருந்ததைப் பல்லவர் வரலாறு கூறும்.[15]

காஞ்சிநகர் பல்கலை, பல்சமய, பல்மொழி நகராக அன்று விளங்கியுள்ளது.

**உறையூர்**

காவிரிப்பூம்பட்டினத்துக்கு முந்திய சோழர் கோநகர மாக இருந்து உறையூர் திரிசிரபுரத்தின் மேற்கேயும், திருவரங்கத்தின் தெற்கேயும் காவிரியின் தென்கரையில் திரிசிரபுரத்தின் ஒரு பகுதியாக இன்று அடங்கிவிட்டது.

உறையூர் முதுகூத்தனாரின் அகநானூற்றுப் பாட்டில் கூடச் சோழர் தலைநகராகவே இது கூறப்படுகிறது.[16]

கரிகாலன் இந் நகரிலிருந்து ஆட்சி செய்யத் தொடங் கிய பின்பே பூம்புகார் பெயர்ந்தான் என்கிறார் பண்டாரத் தார். துறைமுகம் உள்ள இடமாக வேண்டும் என்ற கருத்திலே உறையூரிலிருந்து புகாருக்கு மாறினான் என்றும் கூறுகிறார்.[17]

உறையூர் பற்றிய குறிப்புகள் நூல்களில் அங்கங்கே கிடைப்பது தவிர நகரமைப்பையும் பிற விவரங்களையும் அறியக் கிடைக்கவில்லை. உறையூரின் ஒரு பகுதி ஏணிச் சேரி என அழைக்கப்பட்டிருத்தல் தெரிகிறது. பல புறப் பாடல்களில் உறையூர் சோழர் தலைநகராகவே கூறப்பட் டுள்ளது. புறநானூற்றுப் பாடல் ஒன்றில் இந் நகரை மதில் வளைத்த நிகழ்ச்சி வருதலால் மதிலுடன் கூடிய அரண் உள்ள நகராயிருந்துள்ளது. ஒரு கோழி யானையை எதிர்த்த வீர மண் என உறையூரைப் பற்றிய வரலாற்று ஒன்று கூறப்படுகிறது.[17] (அ)சிலம்பில் அருகன் கோயில் உறையூரில் இருந்தது கூறப்படுகிறது. நலங் கிள்ளி, நெடுங்கிள்ளி பற்றிய புறப்பாடல்கள் மதில் முற்றுகை யாவும் உறையூருடன் தொடர்புடையவை எனினும் நகரமைப்பை அறிய அப்பாடல்களில் விரிவான செய்திகள் இல்லை. சிலம்பிலும் 'உறையூருக்குக் கோழி என்ற பெயர் வந்த வரலாறு' உறையூர் மதிற்புறத்துள்ள காவற்காடு என்பன போன்ற குறிப்புகள்தான் வருகின்றன.

எனவே புகார் புகழ்பெறு முன்பு நன்கு விளங்கிய பழஞ் சோழர் கோநகர் என்ற கருத்துடன் உறையூரைப் பற்றி இங்கு நிறுத்திக் கொள்ள நேரிடுகிறது. அகநானூற்றிலும் புறநானூற்றிலும் சில செய்திகள் வருகின்றன.[18]

வஞ்சி

சேரர் தலைநகராகிய வஞ்சி ஆன்பொருநை என்னும் ஆற்றங்கரையில் அமைந்திருந்தது.[19] அவ் வஞ்சி மாநக ருக்குக் கருவூர் என்றும் ஒரு பெயர் உண்டு.

வஞ்சி மாநகரம் கோட்டை கொத்தளங்களோடு கூடிய அக நகரையும், கோட்டைக்கு வெளியே புறநகரையும் கொண்டிருந்தது.[20] வஞ்சி முற்றம் என ஒரு பெயர் கூறப்படுகிறது.

புறநகரில் இயந்திர வாவிகளும் மலர்வனங்களும் இருந்திருக்கின்றன. தேவர் கோட்டங்களும், சைவ வைணவக் கோயில்களும், பௌத்த விகாரமும் சமணப் பள்ளிகளும், பொழில்களும், பொய்கைகளும், மிகுந்திருந்தன. அவ்விடங்களில் எல்லாம் முனிவர்களும் சான்றோர்களும் நிரம்பியிருந்தனர்.[21]

குணவாயிற் கோட்டம்

புறநகரில் கிழக்குக் கோட்டை வாயிற்பக்கத்தில் சமண முனிவர்கள் தங்கி வசித்த கோட்டம் ஒன்று இருந்தது. அதற்குக் குணவாயிற் கோட்டம் என்று பெயர். சேரன் செங்குட்டுவனின் தம்பியும் சிலப்பதிகார ஆசிரியருமான இளங்கோவடிகள் இக்கோட்டத்தில்தான் வாழ்ந்திருந்தார்.[22]

வேளாவிக்கோ மாளிகை

புறநகரின் மற்றொரு புறத்தே வேளாவிக்கோ மாளிகை என்னும் மாளிகை இருந்தது. இது வேள் ஆவிக்கோ என்னும் வள்ளலுக்கு உரியது. சேர அரசர்கள் இம்மாளிகையில் அடிக்கடி சென்று தங்குவது உண்டென்று தெரிகிறது.[23]

சமயக் கணக்கர்

புறநகரில் சமயக் கணக்கரும், மதவாதிகளும் தங்கியிருந்தமை தெரிகிறது. அளவை வாதி, சைவ வாதி, பிரம வாதி, வைணவ வாதி, வேத வாதி, ஆசீவகவாதி, நிகண்டவாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி முதலியவர்கள் இருந்தமை தெரிகிறது.[24] அவர்கள் வாதத்திறன் மிக்கார் எனவும் தெரிகிறது.

அரண்மனை

சேர மன்னனது அரண்மனை செல்வ வளமுடையதாகவும் மலைபடு பொருள்கள் மலிந்ததாகவும் விளங்கியது.

அருவிகளும், செய்குன்றுகளும், மலைகளும், மகிழ்வூட்டும் நறுமணச் சோலைகளும், நீர்நிறை பொய்கைகளும் கோநகரில் அரண்மனையைச் சூழ இருந்தன.[25]

அரண்மனை மதில் வாயில் மிக உயர்ந்து காணப்பட்டது.[26] அரண்மனை எல்லைக்குள் பல மாடமாளிகைகள் இருந்தன, அரச மகளிர் வாழும் அந்தப்புரங்கள் இருந்தன. பேரரசன் ஒருவனுக்குரிய பலவகைக் கட்டடங்களும், அரசனது கொலு மண்டபமும், நாடக அரங்கமும் கோவிலும், பிறவும் அரண்மனையில் சிறப்புற்று விளங்கின[27]

### இயற்கை வளம்

மலைபடு பொருள்களின் வளத்தால் இயற்கைச் செல்வங்களைக் குன்றக் குறவர் அரசனுக்குப் பரிசளித்து மகிழ்வது வழக்கமாயிருந்தது.[28]

### துறைமுகம்

தொண்டி, முசிறி இரண்டும் சேரர் தம் துறைமுக நகரங்களாக இருந்துள்ளன. மேலைநாட்டைச் சேர்ந்த பிளைநி முதலியோர் திண்டிஸ் (தொண்டி) முசிரிஸ் (முசிறி) என்றும் இவற்றைக் குறிப்பிட்டுள்ளனர். புகாரைப் போலன்றி இவை சிறிய துறைமுக நகரங்களாகவே இருந்தன.[29]

### கோட்டையும் அகழியும்

வஞ்சி மாநகரின் கோட்டையும் அகழியும் மதுரை நகரமைப்பில் வந்தது போல் அமைந்திருந்தன என்று கூறுவதற்கு ஏற்றபடி ஒரே வகையில் இருந்தது. சேரர் சின்னமாகிய விற்கொடி பறந்தது என்ற ஒன்றே வேறுபாடு.

மலைநாடாகையால் மதிற் சுவர்கள் உயர்ந்திருந்தன. கோட்டை மதிலுக்கும் மக்கள் வாழ் பகுதிக்கும் இடையே பசுமையான காவற்காடு இருந்தது.[30] வீரர்கள் தத்தம் போர்க்கருவிகளுடன் அக்காவற் காட்டில் தங்கியிருந்தனர். பாதுகாப்பு அமைப்புச் சிறப்பாயிருந்தது. அகழி சூழ் வஞ்சிமாநகரம் வானவில் சூழ்ந்தது போல் அழகாயிருந்தது. வெள்ளிமலை நடுவே பிளந்தது போல உயரமான நிலைகளில் சுண்ணாம்புப் பூச்சு நிலவொளி போலிருந்தது.

### பலவகைத் தெருக்கள்

காவற்காட்டை அடுத்திருந்த தெருக்களில் கோட்டை வாயிலைக் காத்துவந்த காவலர்கள் வாழ்ந்து வந்தனர். மதில்கள் அகன்றும் நீண்டும் இருந்தன.

அத்தெருக்களை அடுத்து மீன் விற்போர், உப்பு விற்போர், கள் விற்போர், இறைச்சி விற்போர், அப்பம் விற்போர், பிட்டு விற்போர் முதலியோர் வாழ்ந்த தெருக்கள் இருந்தன. பலவகைத் தானியங்கள் விற்போர் தெருக்கள் புறநகரின் ஒரு பகுதியிலிருந்தன. இவை தவிர மேலும் பல்வகைத் தெருக்கள் வஞ்சி மூதூரை அழகு செய்தன.[31]

வஞ்சி மாநகர் உள்ளே அமைந்திருந்த மறுகுகள், இடங்கள், தொழில்கள், தொழிலாளர்கள் பற்றி விவரித்துள்ளார், சாத்தனார். ஏறக்குறைய மதுரை, புகார் போலவே இந் நகர் வருணனை வருகிறது.[32]

### வேறுபாடு

கோநகரமைப்பு என்கிற முறையில் புகார் மதுரையோடு அதிகம் வேறுபாடுற்றதாகத் தோன்றாவிடினும் மலைநாட்டுக்குரிய மதிலுயரம் போன்ற சில சூழ்நிலைத் தேவைக்குரிய அமைப்புகள் வஞ்சியில் வேறுபட்டிருக்கக் கூடும்.

**வஞ்சி எது ?**

சேரர் தலைநகராகிய வஞ்சி எது என்பது பற்றி அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு உள்ளது. பேராசிரியர் மு. இராகவய்யங்கார் திருச்சிக்கு அருகே யுள்ள கருவூரே வஞ்சி என்கிறார்.

டாக்டர் எஸ். கிருஷ்ணசுவாமி அய்யங்கார், டாக்டர் மா. இராசமாணிக்கனார் ஆகியோர் சேரநாட்டில் இன்றைய எரணாகுளத்திற்கு வடக்கே தள்ளியும் பொன்னாணியிலிருந்து சற்றுத் தொலைவிலுள்ள சேற்றுவாய் என்னும் துறைமுகம் வரை பரவியும் உள்ள பகுதிகளில் ஒரு கருவூர் உள்ளது. அக்கருவூரே சேரர் தலைநகராகிய கருவூர் வஞ்சி என்கின்றனர். அந்தக் கருவூரின் அருகே திருக்கணாமதிலகம் என்னும் இடம் ஒன்று இன்று உள்ளது.[33] அவ்விடமே சிலம்பில் குறிப்பிடப்படும் 'குணவாயில் கோட்டமாக' இருக்கக் கூடும் என்று டாக்டர் எஸ். கிருஷ்ணசுவாமி ஐயங்கார் கருதுவதால் அந்த இடத்தைக் கிழக்கு மதில் வாயிலாகக் கொண்டு சேரர் கோநகரம் இருந்த இடம் உய்த்துணரப்படுகிறது.

பெரியாறு கடலில் கலக்கும் சங்கம முகமாகிய அழிக்கோடுதான் முசிறியாயிருக்க வேண்டும் என்றும் கருதப்படுகிறது. இந்த இடத்திலிருந்து வடமேற்கில் இரண்டு கல் தொலைவிலுள்ள 'சேரமான் பிரம்பா' என்னும் இடமும் திருவஞ்சைக் குளமும் உள்ளது. இன்னும் சிறிது தொலைவில் கொடுங்களூர்க் கோயில் என்னும் இடமுள்ளது. அக்கோயிலிலிருந்து சிறிது தொலைவில் கருவூர்வடக்கு-கருவூர் தெற்கு என இரு பகுதிகள் உள்ளன. வஞ்சி என்ற பெயரும் கருவூர்ப்பட்டினம் என்ற பெயரும் கூட இதே இடத்திற்கு வழங்குகின்றன.

இப்பகுதியே வஞ்சி மாநகரம் இருந்த இடமாயிருத்தல் வேண்டும் என்பர். சேரன் செங்குட்டுவன் நீலகிரி வழியே இமயமலைக்குக் கல் எடுக்கச் சென்ற வழியும்

இதனுடன் பொருந்தி வருகிறது. எனவே பேரியாற்றடை கரையிலுள்ள இதுவே பழங்கால வஞ்சியாயிருக்க வேண்டும் என ஆய்வாளர் முடிவு செய்கின்றனர்.[34] மணிமேகலை வஞ்சி மாநகரத்திற்குச் சென்றது பற்றி மணிமேகலைக் காப்பியத்தில் வருகிறது.

> தேவ குலமும் தெற்றியும் பள்ளியும்
> பூமலர்ப் பொழிலும் பொய்கையும் மிடைந்து
> நற்றவ முனிவரும் கற்றடங்கினரும்
> நன்னெறி காணிய தொன்னூற் புலவரும்
> எங்கணும் விளங்கிய் எயிற்புற இருக்கையில்[35]

என்று வஞ்சி மாநகரின் மதிலுக்கு வெளியே இருந்த புறஞ்சேரிப் பகுதி விவரிக்கப்பட்டுள்ளது. வேதிகை எனப்படும் திண்ணைகளும், அமரும் மேடைகளும், வஞ்சி மாநகரத்தின் சிறப்பாக அமைந்திருந்திருப்பது தெரிகிறது.

## பூவா வஞ்சி

பூக்களில் வஞ்சிப்பூ என ஒன்று உண்டாகையினால் சேரர் கோநகரமாகிய வஞ்சியை அப்பொருளிலிருந்து விலக்கிக் கூறப் 'பூவா வஞ்சி'[36] என்று கூறும் வழக்கம் இருந்தது. 'வஞ்சி மாநகரைப் பொன்னகர்'[37] என்கிறார் சாத்தனார். பொற்கொடியின் (கொடி—வஞ்சி) பெயரையுடைய பொன்னகர் என அவர் கூறுவதிலிருந்து அக் கோநகரின் பொலிவை உணர முடிகிறது.

அறச்செல்வி மணிமேகலை வஞ்சி மாநகரின் உட்பகுதியில் புகுந்து பல தெருக்களையும் வீதிகளையும் கடந்தாள் எனச் சாத்தனார் விவரிக்கிறார். உயரமான இடத்திலிருந்து வீழும் அருவிகள் தாழ்கின்ற செய்குன்றங்களையும், மிக்க ஆர்வத்தைப் பெருகச் செய்யும் நறுமண மலர்ச் சோலைகளும் தேவர்கள் தங்களுக்குரிய விண்ணுலகத்தையும் மறந்து வந்து தங்குவதற்கு விரும்பும் நல்ல நீர் வளமுள்ள இடங்களும், சாலைகளும் பிறவும் இருந்துள்ளன.[38] வஞ்சியில் பௌத்தப் பள்ளி இருந்தது[39] என்றும்

தெரிகிறது. உறையூர் போலவே வஞ்சி மாநகரமும் இன்று சுவடற்றதாகி விட்டதனால் இவ்வளவே அதன் நகரமைப்பை அறிய இயலுகிறது.

இம்மூன்றும் கோநகரங்கள் என்ற பெயரில் வகைப்படுவதால் ஒரோவழி இங்குத் தொகுத்துரைக்கப்பட்டன. நகரமைப்புப் பற்றிக் காஞ்சி தவிர்ந்த மற்ற இரு நகரங்களையும் நன்கு விவரிக்கப் போதுமான நூற்சான்றுகள் கிடைக்கவில்லை. காஞ்சி பற்றிய நகரமைப்பிலும், புகார் மதுரையோடு ஒத்தவை நீக்கி வேறுபடுவன மட்டும் இங்குச் சுட்டிக் காட்டப்பட்டன.

காஞ்சி நகர் மயில் போல் அமைந்திருந்தது என்னும் உருவகத்துக்கு எடுத்துக்காட்டான வரைபடம் ஒன்று இவ்வாய்வில் பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

இனி, இந்நகரங்களில் சமுதாயங்கள் அமைந்த முறை பற்றி அடுத்த இயலில் காணலாம்.

☐

குறிப்புகள் :

1. பரிபாடல் திரட்டு 7.
2. ம.ரா. இளங்கோவன், தமிழர் தலைநகரங்கள், ப. 8.
3. தண்டியலங்கார மேற்கோள் 37 உருவகம்.
4. ,, உயர்ச்சி வேற்றுமை மேற்கோள், நூற்பா 48.
5. மா. ராசமாணிக்கம், பல்லவர் வரலாறு, ப.254
6. மணிமேகலை 28:165-166.
7. ,, 28:175.
8. ,, 28:192-205.
9. பெரும்பாணாற்றுப்படை 393.

10. பெரும்பாணாற்றுப்படை 375.
11. ,, 397.
12. ,, 397-405.
13. ,, 401.
14. காஞ்சிபுராணம் 2:83
15. மா. ராசமாணிக்கனார், பல்லவர் வரலாறு, ப. 253-79.
16. அகநானூறு 137.
17. டி.வி.எஸ்.பண்டாரத்தார், காவிரிப்பூம்பட்டினம், ப. 3

அ. சிலப்பதிகாரம் உரைபெறு கட்டுரை அடியார் உரை, ப. 31.

சிலப்பதிகாரம் 10:241-248 அடியார் உரை, ப. 298.

18. புறநானூறு 60, 67, 69, 78, 127, 170, 202, 212, 220, 264, 321, 325, 331, 352, 395, அகநானூறு 137.
19. புறநானூறு 11:5
20. ம.ரா. இளங்கோவன், தமிழர் தலைநகரங்கள், ப. 2.
21. ,, ,, ப. 4.
22. சிலப்பதிகாரம் பதிகம்
23. ம.ரா. இளங்கோவன், தமிழர் தலைநகரங்கள், ப. 3.
24. மணிமேகலை 27:1-275.
25. பதிற்றுப்பத்து 6:1
26. மணிமேகலை 28:23-28.
27. ,, 28: 63-68.

28. மணிமேகலை 28: 29-61
29. ம.ரா. இளங்கோவன், தமிழர் தலைநகரங்கள், ப. 2.
30. மணிமேகலை 28:26-27
31. ,, 28:31-50.
32. ,, 28:55-61.
33. ம.ரா. இளங்கோவன், தமிழர் தலைநகரங்கள், ப. 8-9.
34. ,, ,, ப. 8-9.
35. மணிமேகலை 26:72-76.
36. ,, 26:78.
37. ,, 26:91.
38. ,, 28:63-68.
39. ,, 28:69-72.

□

## இயல் ஒன்பது

# நகரமைப்பில் சமுதாயங்கள்

தமிழ்க் காப்பியங்களிலும், இலக்கியங்களிலும் புலவர்கள் பாடியிருக்கிற பழந்தமிழர் நகரமைப்பு முறையில் எந்தெந்தச் சமுதாயங்கள் எபபடி எப்படி எங்கு எங்கு வாழ்ந்தன என்பதை ஓரளவு அறிய முடிகிறது. கோயிலை அல்லது அரசனின் அரண்மனையை மையமாக வைத்து நகரமைப்பை வருணிக்கும் நூல்களில் எந்தெந்தச் சமுதாய மக்கள் எந்தெந்தத் தெருக்களில் எப்படி வாழ்ந்தார்கள் என விவரிக்கப்படுவதை ஓர் ஆய்வுக் கண்ணோட்டத்தில் காண முயலலாம்.

ஒரு நாட்டின் எல்லா மக்களும், எல்லா இடங்களிலும் இணைந்து கலந்து வாழும் இன்றைய சமத்துவச் சமுதாய அமைப்போடு ஒப்பிடாமல் அன்றைய முடியாட்சி முறையில் சமுதாயங்கள் அமைந்திருந்த பாங்கை மட்டும் ஆராய்வதே பொருந்துவதாகும். காவிரிப்பூம்பட்டினம், மதுரை முதலிய கோநகரங்களைப் பற்றிய குறிப்புக்கள் இந்த ஆராய்ச்சிக்குப் பயன்படக் கூடும். சிலம்பு காட்டும் பூம்புகார் நகரமைப்பை முதலில் காணலாம்.

> பரதர் மலிந்த பயங்கெழு மாநகர் [1]
> குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வர் [2]

என்று பூம்புகார் நகரில் வெளிநாடுகள் சென்று வாணிபஞ் செய்யும் 'கடலோடிகள்' உண்டென்றும், பெருத்த செல்வர்கள் உண்டென்றும், கோவலன் கண்ணகியின்

இல்லறம் பற்றிக் கூறும் பகுதியில் பொதுவாகக் கூறு கிறார் இளங்கோ அடிகள். வர்த்தக சமுதாயம் (Business Community) என இன்று நாம் பொதுவில் சுட்டிக் கூறு வோரைப் பற்றிய கருத்துக்களாகவே அமைகின்றன இவை. விரிவான செய்திகள் சிலம்பிலேயே பின்னர் வருகின்றன.

பின்னர் இந்திர விழவூரெடுத்த காதையில்தான் காவிரிப்பூம்பட்டின நகரின் அமைப்பில் எங்கெங்கே எந்த எந்தச் சமுதாயத்தினர் அல்லது தொழில்களைச் செய் வோர் வாழ்ந்தனர் என்பது அதிகமாக விவரிக்கப்படு கிறது.

யவனர்கள், புலம்பெயர் மாக்கள் அன்றைய அடிக்கடி பயணம் செய்து இடம் மாறுவோர், வண்ணமும், சுண்ண மும், பூவும், புகையும், என்றிவை விற்கும் வாசனை வணிகர்கள் பட்டு, கம்பளி, பருத்தியாடை நெசவாளிகள், துணிகளில் அச்சுக் கட்டுவோர், பொன்னாலும், மணி களாலும் அணிகலன்கள் செய்வோர், கூலவாணிகம் (தானிய விற்பனை) செய்வோர் உணவுப் பொருளாகிய பிட்டு விற்போர், அப்பம் சுடுவோர், வெற்றைகட்டுவோர், பஞ்சவாசம் விற்போர், தக்கோலம், இலவங்கங்கள், ஏலம், கர்ப்பூரம், சாதிக்காய், ஆட்டிறைச்சி விற்போர், எண் ணெய் விற்போர், வெண்கலம் விற்போர், கன்னார், தச்சர், கொல்லர், ஓவியர், குயவர், பொம்மை செய்பவர், தட்டார், பொற்கொல்லர், பாணர்கள், தோல் வேலை யாளராகிய சக்கிலியர், துணியிலும், மூங்கிலிலும், சடை நெட்டிகளிலும் பல வேலைகள் செய்வோரும், இசைப் பிரிவினரும், கைவேலை, துண் தொழில்களில் ஈடுபடு வோரும் வாழ்கிற மருவூர்ப்பாக்கம் என்கிறார் சிலப்பதி கார ஆசிரியர். நகரின் தொழில் வல்லுநர் குடியிருப்புப் பகுதியே இது. செய்யும் தொழில் அடிப்படையிலான சமுதாய அமைப்பே இங்கு கூறப்பட்டுள்ளது. கனரகத்

தொழில், நுண்கலை, கைவினை எல்லாமே பேரளவு இதில் அடங்கி விடுகிறது.[3]

அடுத்து இனி வருவது பட்டினப்பாக்கம் இராசவீதி (Kingsway) எனப்படும் செண்டு வெளிப்புறத் தெருவும் விழா வீதிகளும் வணிகர் குடியிருப்பும், மறையோர்களாகிய பஞ்சக்கிராமிகள் இருப்பும் வேளாளரும், மருத்துவ நூலாரும், சோதிட நூலாரும் பல முறைமையோடு இருக்கும் இருப்பிடங்களும் முத்துக் கோர்ப்பவர்களும், சங்கு அறுத்து வளை செய்பவர்களும், நின்றேத்துவார், இருந்தேத்துவார் தம் தெருக்களும் வைதாளியாடுவாரும், கடிகையார், சாந்திக் கூத்தர், களத்தாடும் கணிகையர், அகத்தாடும் பதியிலார், பூவிலைமடந்தையர் மடைப்பள்ளியாரடியார் தோற்கருவிகளை இசைப்பர், படைக்கும் உற்சவத்துக்கும் கொட்டுவார், நகைவேழம்பர், குதிரை செலுத்துவோர், யானைப் பாகர்கள், தேர்ப்பாகர்கள், காலாட்படைத் தலைவர்கள் ஆகியோர் அடங்கிய பட்டினப்பாக்கம் என விவரிக்கப்படுகிறது. பல்வேறு சமுதாய மக்களை இன்றுபோல் சாதி வகைப்படுத்தாமல் தொழிற் சமுதாயமாக வகைப்படுத்தியுள்ள சிறப்புக் கூர்ந்து நோக்கத்தக்கது.[4]

இரு பாக்கத்திற்கும் நடுவே இருந்த நெருங்கிய மிடைமரச் சோலையில் 'நாளங்காடி'[5] இருந்தது எனக் கூறி மேலே போகிறது. காப்பியம், நாளங்காடியின் கூட்டமும் ஓசைகளும் வருணிக்கப்படுகின்றன.

மேலும் இதே சிலம்பின் புறஞ்சேரியிறுத்த காதையில் மதுரை நகரமைப்பு அகநகர்—புறநகர் என இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது தெரிகிறது.[6] ஆயர்—ஆடுமாடுகளை வளர்ப்போர்—பால் தயிர் நறுநெய் தருவோர் புறஞ்சேரியில் ஆயர்பாடி என்ற தனிப்பகுதியில் வாழ்ந்ததும் தெரிய வருகிறது. அரசர், மறையோர், வீரர், பொற்கொல்லர் முதலியோர் அக நகரில்[7] இருந்தமையும் கூறப்பட்டு

உள்ளது. பட்டினப்பாலை மதுரைக் காஞ்சி முதலிய சங்க நூல்களில் கூறப்பட்டுள்ள இந்நகரங்களின் அமைப்பு முறையும் சமுதாயவாரியான குடியிருப்புக்களும்கூட இதே வகையில்தான் உள்ளன.

சம்பிரதாயமான பிரம்ம சத்திரிய வைசிய எனத் தொடங்கும் சாதி முறைப்படியோ நால்வருண முறைப்படியோ சமுதாய அமைப்புக்கள் பழைய காவிரிப்பூம்பட்டின நகரிலும், மதுரையிலும் இருந்ததாகத் தோன்றும்படி கூறாமல் தொழில் முறை இயைபுக்கேற்ற வகையில் சங்க நூல்களும், சிலப்பதிகாரம் முதலிய காப்பியங்களும் கூறிய இந்நிலை பின்நாளில் காவிய புராண பிரபந்தக் காலங்களில் மெல்ல மெல்ல மாறியிருப்பதைக் காண்கிறோம்.

வெண்பா உத்தமசாதிக்கு, ஆசிரியப்பா அடுத்த சாதிக்கு என்று பிற்காலப் பட்டியல் நூல்கள் பாட்டுக்களையும் சாதி சமுதாயங்களையும் முடிச்சுப் போட்டதைப் போல எல்லாக் காப்பியங்களிலும் புராணங்களிலும் நாட்டுப்படலம் நகரப்படலம் என்ற பெயர்களில் விரிவான பகுதிகள் சாதி அடிப்படையில் குடியிருக்கும் முறைகள் பழைய நகரங்களில் இருந்தாற்போல வருணனைகள் இடம் பெறத் தொடங்கி விட்டன. நாளடைவில் இம்முறை விவரிப்போ புதிய காப்பியங்களிலும் புராணங்களிலும் ஒருவகை மரபு போலவே ஆகிவிட்டது. கம்பராமாயணம், திருவிளையாடற் புராணம், காவிரிப்பூம்பட்டினம் பற்றிய சில புராண நூல்கள், பெரிய புராணம் ஆகியவற்றில் இம்முறை வந்துவிட்டது.

சங்க நூல்களிலும், பழங்காப்பியங்களிலும் கோநகர அமைப்புக்களில் அந்தந்தச் சமுதாய மக்கள் வசித்தமுறை அவரவர் தொழில்களின் அடிப்படையில் ஓரளவு நாகரிகமாகக் கூறப்பட்டதற்கும் பிற்காலக் காப்பியங்களிலும்,

புராணங்களிலும் அதே கோநகரங்களைச் சார்த்தி அவை வெறும் சாதி சமய அடிப்படையில் மட்டும் கூறப்பட்டதற்கும் உள்ள வேறுபாடு நோக்கத்தக்கது. காஞ்சி, உறையூர், வஞ்சி போன்ற பிற கோநகரங்களிலும் இதே சமுதாய அமைப்பு முறைதான் நிலவியிருந்திருக்கிறது.

சில நகர்கள் தொழில் முறைப்படி சமுதாயக் குடியிருப்புக்களைக் கொண்டிருந்திருக்கின்றன. வேறு சில நால் வருண முறைப்படி கொண்டிருந்திருக்கின்றன.

பூம்புகார், மதுரை போன்ற நகரங்கள் வீதிகளின் அமைப்பு முறையிலேயே அங்கங்கே குடியிருந்த சமுதாயங்களின் இயைபு பொருந்தும்படி இருந்துள்ளன.[8] பால் வேறு தெரிந்த நால் வேறு வகைத் தெரு[9] எனவும் மதுரையில் சார்த்திக் கூறப்படுகிறது.

பூம்புகாரில் நாளங்காடியும் பல மன்றங்களும் வீதிகளைத் தவிர மக்கள் கூடும் சமுதாயப் பொது இடங்களாக (Community Center or Public Places) வாய்த்திருந்திருக்கின்றன.

இவ்வாறு பழந்தமிழர் நகரங்களில் சமுதாயப் பொருந்துமுறை நகரமைப்புக்கு இயைந்து அழகுற வாய்த்திருந்துள்ளமையை அறிகிறோம்.

எல்லாத் தமிழ் நகரங்களிலும் பெரும்பாலும் இதில் ஒரே வகைமை (Pattern) காணப்படுவது போற்றற்குரியதாகும்.

இனி இவ்வாய்வினின்றும் புலனாகும் செய்திகளை அடுத்துக் காணலாம்.

☐

குறிப்புகள் :

1. சிலம்பு, 2:2.
2. ,, 2:8.
3. ,, 5:9-39
4. ,, 5:40-58.
5. ,, 5:59-63.
6. ,, 6:189-195,
7. ,, 15:109.
8. ,, 14:183.
9. ,, 22:110.

□

# ஆய்வினின்றும் புலனாகும் செய்திகள்

1. ஐரோப்பியக் (கிரேக்க, உரோமானிய) கட்டடக் கலைக்கு இணையான உயர்த்திறன் தமிழர் கட்டடக் கலைக்கு இருந்துள்ளது.

2. ஒரு கட்டடத்துக்கு மனை, மரம், திசை, நாள், கோள் முதலிய அனைத்தும் ஆய்ந்து, தேர்ந்து கொண்டு செயற்படும் திறனைத் தமிழர் பெற்றிருந்தனர்.

3. கட்டடக் கலை மரபு பற்றியே தமிழகத்தில் பல்வேறு நூல்கள் தோன்றிச் சிறந்துள்ளன. திராவிடக் கட்டடக்கலை என்ற தனிப் பிரிவே உருவாகியிருந்துள்ளது.

4. கோயில்களை அமைப்பதில் கலையழகும், நுணுக்கமும் சிற்ப வேலைப்பாட்டுத் திறனும், படிப்படியான வளர்ச்சியும், தமிழர் பெற்றுயர்ந்துள்ளனர். வானுயர மாடங்களும், கோபுரங்களும், தமிழரின் கட்டடக் கலைச் சிறப்பின் மகுடமாயிருந்துள்ளன.

5. அரண்மனைகளை அவற்றுக்குரிய உட்பிரிவுகளுடன் வகுத்து அமைக்கும் வல்லமையும் திறனும் தமிழர் கட்டடக் கலைக்கு இருந்துள்ளன.

6. கோட்டை, கொத்தளம், அகழி முதலியவற்றைப் பாதுகாப்புபடை வளத்துக்கு ஏற்பச் செம்மையாகத்தமிழர் அமைத்துள்ளனர்.

7. மதில்களில் பகைவரை எதிர்த்தழிக்கும் பொறி நுணிக்கங்களைப் பண்டைப் பழங்காலத்திலேயே தமிழர் அறிந்துள்ளனர் என்ற செய்தி பெருமிதம் கொள்ளச் செய்கிறது.

8. கோயில், அரண்மனை, வீடு ஆகிய முப்பிரிவுகளி லும் ஓவியம், சிற்பம் முதலிய துணை நுண்கலைகளையும் இணைத்து அழகு சேர்த்துள்ளமை வியப்புக்குரியது.

9. கரிகாலன், கல்லணை முதலியவற்றைக் கட்டிய திறத்தால் நீர்ப்பாசனக் கட்டடக்கலையிலும் மிகப் பழங் காலத்திலேயே தமிழர் வல்லுநராயிருந்தனர் என்பதும், பளுவைத் தூக்கும் கருவிகள் இல்லாமலே தஞ்சைக் கோபுர மேல்தளக் கல்லைச் சாரம் கட்டித் தூக்கியுள்ளனர் என்பதும் தமிழரின் பொறியியல், அறிவியல் திறனுக்குச் சான்று பகர்கின்றன.

10. அரங்கமைப்பு, கூத்து மேடை சமைத்தல், நாடக மேடை உருவாக்கல் போன்ற நிருமாணக் கலையிலும் (Recreational Architecture) தமிழர் வல்லவராயிருந்தனர் என்பது நாடகத் தமிழில் தமிழர் நனி சிறந்திருந்ததோடு நாடக அரங்கமைப்புக் கலை நுணுக்கத்திலும் தன்னிக ரற்று விளங்கினர் என்பதை நன்கறிய முடிகிறது.

11. கட்டிய கட்டடங்களுக்குள் உள்ளணி செயல் (Interior Decoration) எனப்படும் சுவர்களை அழகு செய்தல், திரைச்சீலை, ஓவியங்கள் வரைதல், முத்து மாலை, மணிமாலைகள் தோரணங்களால் அலங்கரித்தல் ஆகிய ஒப்பனைக் கலையிலும் உயர்ந்திருந்துள்ளனர்.

12. நகரமைப்புக் கலையில் இந்நாளைய மேலை நாட்டுப் பாணியையும் விஞ்சி இருந்துள்ளனர்.

13. பூம்புகார் நகரம் மிகச் சிறந்த நகரமைப்பிற்கு எடுத்துக்காட்டாக மருவூர்ப்பாக்கம், நாளங்காடி, பட்டினப்

பாக்கம் என்ற பிரிவுகளுடன் ஆயிரங்கண்ணோன் அருங் கலச் செப்புப் போல அமைந்திருந்துள்ளது.

14. மதுரை நகரம் அகநகர், புறநகர் என்ற பிரிவு களுடன், தாமரைப்பூப் போன்ற வடிவில் சிறப்பாக அமைக் கப்பட்டிருந்தது.

15. தெருக்களின் கீழே யானைகள் நுழைந்து செல்லுமளவு பெரிய நீர் செல்லும் வழிகள் (Underground ways) அமைக்கப்பட்டிருந்துள்ளமை வியந்து பாராட்டுதற் குரியது.

16. நகரங்கள் அமைப்பில் பெரும்பகுதி மரக்கூட் டங்கள், சோலைகள், இளமரக்காக்கள், உய்யான வனங்கள் ஆகிய காற்றோட்டம், சுற்றுப்புறத் தூய்மை (Ecology) ஆகியவற்றுக்கு ஏற்ப ஒழுங்கு செய்யப்பட்டிருந் தமையும் ஏரிகள், நீர்நிலைகள் நீரூற்று ஆகியன தக்க வாறு அமைக்கப்பட்டிருந்தமையும் தமிழரின் ஆரோக்கிய வாழ்வின் நாட்டத்தைக் காட்டுகின்றன.

17. நகரமைப்பில் நாளங்காடி (பகல் நேரக் கடை) அல்லங்காடி (இரவுநேரக் கடை) என வகுக்கப்பட்டு அவ்வவற்றிற்கேற்ற வடிவத்தில் வெவ்வேறு வகையான வீதிகள் ஒதுக்கப்பட்டிருந்தமை வீதியமைப்புக் கலையில் தமிழரின் தனித்திறனைக் காட்டுகிறது.

18. பூம்புகார் வர்த்தக நகரமாகவும், மதுரை புலவர்கள் நகரமாகவும், காஞ்சி கலைகளின் நகரமாகவும் கண்டோர் கருதத் தக்கவாறு முறையுற அமைந் திருந்தது.

19. நகரமைப்புக் கலை நூல்களின் கண், தாமரை போல், சாமரம் போல், இரத்தினக்கல்லின் ஒளிபோல், நந்தியா வர்த்தப் பூப்போல் சுவஸ்திகம் போல் ஊர்களை அமைத்தல் வேண்டும் என்று இலக்கணமுறை வகுத்திருந்

தமையும் அம்முறை வழுவாது அவை அமைக்கப்பட்டுள் ளமையும் தெளிவாய்த் தெரிகின்றன.

20. சூழ்நிலைக்கேற்பத் திட்டமிடல் (Planning the Environment) பயன் கருதித்திட்டமிடல்(Planning for use) பொருள் நிலைக் கருதித்திட்டமிடல் (Economic planning) ஆகிய மூவகையிலும் பண்டைத் தமிழர் கட்டடக் கலை பெரிதும் பொருத்தமுற அமைந்திருந்துள்ளது.

21. வாழுமிடம், குடியிருப்பிடங்கள் (Domestic) வழிபடும் இடங்களான கோயில், விகாரம், கோட்டம், அரசு நிர்வாகக் கட்டடங்கள், கேளிக்கை அரங்குகள், தொழிற்கூடங்கள், வாணிகக் கூடங்கள் ஆகியன அவ் வவற்றிற்குரிய தனியமைப்பு முறைப்படி கட்டப்பட்டன.

இவையனைத்தும், பண்டைத் தமிழர் தன்னிகரற்ற தனி நாகரிக மக்களாய் வாழ்ந்தனர் என்ற உண்மையை எண்ணியெண்ணி நாம் உவப்புறச் செய்வன.

□

# நிறைவுரை

மனித நாகரிகத்தில் கட்டடக் கலையும், நகரமைப்பும் முறையான பரிணாம வளர்ச்சிகளாம். இவற்றில் ஒரு சமுதாயம் திறமை பெற்று உயர்வது என்பது பிற நலன்களுக்கும் பிற மேம்பாடுகளுக்கும் சான்றிதழ் பெறுவது போலாகும்.

உலகின் பழம்பெரும் இனங்களுள் தமிழினம் முதன்மையானது. தமிழினத்தின் தொன்மைக்குச் சிறந்த சான்று சிந்துவெளி நாகரிகமாகும்.

வரலாற்றுப் பெருமை

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர் சிந்துவெளியில் பெரும் சிறப்புமிக்க நாகரிகத்தோடு வாழ்ந்த மக்கள் இன்றைய தமிழர்களின் மூதாதையர்களே என்பதை மேனாட்டறிஞர்களும் இந்திய அறிஞர்களும் சான்றுகள் தந்து நிறுவியுள்ளனர்.

சிந்துவெளியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட நகர்ப் பகுதிகள், கட்டடப்பகுதிகள், வாய்க்கால், தொட்டி போன்றவை, அங்கு வாழ்ந்த மக்களது பண்பட்ட வாழ்க்கைக்குச் சான்றுகளாக அமைபவை. அத்தகு மக்களின் வழிவந்த தமிழர்கள் கட்டடம் கட்டுவதிலும், நகரமைப்பதிலும் சிறப்புப் பெற்றிருத்தல் வேண்டும் என்னும் அவாவே இவ்வாய்விற்குத் தூண்டுதல்.

அந்த அவாவின் விளைவாகவே சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய

நூல்களிலும் பிறவற்றிலும் கட்டடக் கலைக்கும், நகரமைப்புக்கும் எடுத்துக்காட்டாக அமையும் பலவற்றைத் தொகுக்க ஊக்கப்படுத்தியது.

மனை மரபுகள்

பல்வேறு பெயர்களில் தென்னாட்டில் நிலவும் மனையடி நூல்கள் ஆய்வுக்குப் பெரிதும் உதவியாய் அமைந்ததோடு அவற்றிற்கு இணையான செய்திகள் சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு முதலிய நூல்களில்பொதிந்திருப்பதை அறியவும் பயன்பட்டன. அக்கருத்துக்கள் பழைய இலக்கியங்களில் வேரூன்றி இருப்பது புரிந்தது.

அரண்மனை, கோயிற் கட்டடக்கலை மதில், கோட்டை முதலிய பாதுகாப்புக் கட்டடக் கலை என்று, தமிழ் மூவேந்தர் நகரங்களில் இவை ஒரு சீராக வளர்ந்து திறன் பெற்றிருப்பதை அடுத்தடுத்து முதல் மூன்று இயல்களில் காண முடிந்தது.

தற்காலப் பொறியியலின் புது விளைவுகள் என்று கருதப்படும் அணை கட்டுவரை ஏரிகளை அமைப்பது பூமிக்கடியில் பாதைகள் சாலைகளை அமைப்பது போன்றவற்றில்கூட ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் திறன் பெற்றிருந்தமையை அறிந்து வியப்படைய முடிகிறது.

தில்லை, மதுரை, திருவரங்கம், இராமேச்சுரம் கோயில்களின் வரைபட அமைப்புக்கள் ஒரு பெரிய நகரமைப்புக்கு ஈடாக உள்ளன. அவற்றின் சிற்ப-கட்டட-ஓவிய நயங்கள் உலகளாவிய பெருமைக்குரியவையாக உள்ளன.

வடிவ அழகுகள்

தாமரைப்பூ வடிவம், மயில் வடிவம், சுவத்திக வடிவங்களில் நகர்களை அமைப்பது என்பது இன்றைய பொறியியலிலும் நினைத்துப் பார்க்க அரிய செய்திகள்.

அவற்றைப் பழந்தமிழர் செய்திருக்கின்றனர். செஞ்சிக் கோட்டை, மதுரை திருமலை நாயக்கர் மகால், தஞ்சை சரசுவதி மகால் போன்ற கட்டடங்களின் மழமழப்பான சுவர்கள், தூண்கள், விட்டங்கள், மாடங்கள், உரோமாபுரியிலும், ஏதென்சிலும் (கிரேக்க நாட்டுத் தலைநகரம்) உள்ளவை போன்ற பார் புகழும் கட்டடங்களை நினைவூட்டுவதை அறிஞர் உணர்வர்.

உலகப் புகழ் ஒப்புநோக்கு

ஏதென்சு அருகிலுள்ள அக்ரோபோலிசு மாளிகைச் சிதைவின் தூண்களை ஒத்த அழகிய தூண்களை மதுரை மகாலில் காண முடிகிறது.

மாட வீதி, தேரோடும் வீதி, சிறு தெருக்கள், மறுகு, கவலை, சந்தி, சதுக்கம் எனத் தெருவமைப்பிலேயே நகரங்களைப் பயனுற அமைத்துள்ளனர் தமிழர்.

பின் மூன்று இயல்களில் புகார், மதுரை, வஞ்சி, காஞ்சி, உறையூர் போன்ற தமிழர் கோநகரங்களைப் பற்றியும் அவை அமைந்த சிறப்புப் பற்றியும் நூற்சான்றுகளுடன் காண முடிந்திருக்கிறது. கிடைக்கும் சான்றுகள் வியக்கச் செய்கின்றன.

மனைநூல் மரபு, சான்றுகளிலிருந்து உய்த்துணர்ந்து வரைய முயன்ற சில விளக்கப்படங்களையும் இவ்ஆய்வின் பின்னிணைப்பில் தர முடிந்திருக்கிறது. தமிழகச் சிற்பக் கலை வளர்ந்து சிற்பிகள் பெருக வேண்டும். இன்று சிற்பிகள் அருகி வருகின்றனர். இந்நிலை மாற வேண்டும்.

எதிர்காலத்தில்

கட்டடக் கலையையும் கோநகரங்களையும் மட்டுமே ஆய்ந்த இவ்வாய்வைத் தொடர்ந்து வருங்கால ஆய்வாளர் தமிழக ஊர்கள், சிற்றூர்கள், சிற்றூர் மக்கள் பயன்படுத்

திய கலப்பை, உழவுக் கருவிகள், சிறு கோயில்கள், திருக் குளங்கள், தேர்கட்டுதல், சிலைவார்ப்படம், சிலை செதுக்கல், கோபுரங்களின் பலவகை, விமானங்களின் பலவகை, கோயில்களின் தூண் வகைகள், பல்வேறு வகை மண்டபங்கள், கோயில்களில் பயன்படும் பாத் திரங்கள், வாகனங்கள், அணிகலன்கள், ஆடை அலங் காரங்கள், தோரணங்கள் பற்றி எல்லாம் ஆராய வேண்டும். ஒவ்வோர் ஆய்வும் தமிழ்ப் பண்பாட்டுக்குப் பெருமை சேர்க்கும்.

தமிழகப் பழங்கோட்டைகளை ஒப்பிட்டு ஆராய வேண்டும். ஊர்களோடும், நகர்களோடும் அவற்றருகே உள்ள மலை பாயும் ஆறு, நிலப்பரப்பு என்பனவற்றை ஒப்பிட்டு ஆராயக்கூடும். எதிர்கால ஆய்வாளர்கள் இவ் வகையில் தொடர்ந்து முயல்வார்களாக.

☐

# நா. பா. வின் படைப்புக்களில் சில

## நாவல்கள்

| | | |
|---|---|---|
| சத்திய வெள்ளம் | 66 | 00 |
| அறத்தின் குரல் (மகாபாரதம்) | 60 | 00 |
| அநுக்கிரகா | 15 | 00 |
| ஆத்மாவின் ராகங்கள் | 33 | 00 |
| சுலபா | 20 | 00 |
| மணிபல்லவம் | 60 | 00 |
| நித்திலவல்லி | அச்சில் | |
| பாண்டிமா தேவி | 100 | 00 |
| சுந்தரக் கனவுகள் | 34 | 00 |
| பொன்விலங்கு | 75 | 00 |
| குறிஞ்சி மலர் | 63 | 00 |
| சாயங்கால மேகங்கள் (தமிழ்நாடு அரசு பரிசு) | | |
| சமுதாய வீதி (சாகித்ய அகாதமி பரிசு பெற்றது) | 34 | 00 |
| துளசி மாடம் (ராஜா சர் அண்ணாமலை பரிசு) | 40 | 00 |
| ராணி மங்கம்மாள் | 32 | 00 |
| வஞ்சி மாநகரம் | 16 | 00 |
| மலைச்சிகரம் | 4 | 50 |

## சிறுகதைகள்

| | | |
|---|---|---|
| கொத்தடிமைகள் | 10 | 00 |
| ஒரு கவியின் உள் உலகங்கள் | 9 | 00 |
| பிரதிபிம்பம் | 5 | 00 |
| புத்த ஞாயிறு (நாடகம்) | 9 | 00 |
| பூமியின் புன்னகை (கவிதை) | 7 | 50 |
| தீபச்சுடர்—II (கேள்வி-பதில்) | 10 | 00 |

*Wrapper Printed by :*
***Zulaika Printers, Madras-600 005.***